# பகுதி II

# பகுதி II

## இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

பக்கம்


1. கணக்குகளும் நிதியும் 1
2. வங்கி மேற்பார்வை 86
3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 89
4. தொடர்பூட்டல் 90
5. நாணயம் 92
6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் 93
7. பொருளாதார ஆராய்ச்சி 96
8. ஊழியர் சேம நிதியம் 99
9. வசதிகள் முகாமைத்துவம் 103
10. நிதி 103
11. நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் 105
12. நிதியியல் உளவறிதல் பிரிவு 105
13. வெளிநாட்டுச் செலாவணி 108
14. வெளிநாட்டு பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் 112
15. ஆளுநர் செயலகம் 112
16. மனித வளங்கள் 113
17. தகவல் தொழில்நுட்பம் 119
18. உள்ளகக் கணக்காய்வு 121
19. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் 121
20. சட்டம் மற்றும் இணங்குவிப்பு 124
21. பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு 125
22. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் 127
23. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு 129
24. பொதுப்படுகடன் 130
25. பிரதேச அபிவிருத்தி 133
26. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் 139
27. இடர்நேர்வு முகாமைத்துவம் 140
28. செயலகம் 141
29. பாதுகாப்புப் பணிகள் 141
30. அலுவலர் பணிகள் முகாமைத்துவம் 142
31. புள்ளிவிபரவியல் 143
32. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை 146

# 1. கணக்குகளும் நிதியும்

## 2021ம் ஆண்டுகாலப்பகுதி மற்றும் நிதியியல் ஆண்டுடன் தொடர்புடைய நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயற்பாட்டு அறிக்கை

### 1. அறிமுகம்

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு என்பது நாணயச் சபையின் துணைக் குழுவொன்றாகும். நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது நிதியியல் அறிக்கையிடலுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் கருமங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள், உள்ளகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு அத்துடன் நாணயச் சபையினால் அதற்கு குறித்தொதுக்கப்படுகின்ற வேறு ஏதேனும் விடயங்கள் மீது நாணயச் சபைக்கு மதியுரைகளை வழங்குகின்றது. நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது அதன் பரிந்துரைகளை நாணயச் சபைக்கு கிரமமாக அறிக்கையிடுகின்றது.

### 2. நாணயச்சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு, நாணயச் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரால் தலைமை வகிக்கப்படுவதுடன் இரு வேறு கணக்காய்வுத் தொழில்சார் நிபுணர்களையும் கொண்டுள்ளது.

2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் உள்ளமைப்பு பின்வருமாறு காணப்பட்டது:

i. முனைவர். ராணி ஜயமகா - தலைவி

ii. திரு. எச். எம். ஏ. ஜயசிங்க - உறுப்பினர் (2021.09.30 வரை)

iii. திருமதி. ஏ. ஐ. மொஹொட்டி - உறுப்பினர்

iv. திரு. ஏ. ஐ பெர்னான்டோ - உறுப்பினர் (2021.12.22இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில்)

நாணயச் சபைக்கான செயலாளர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் செயலாளர் ஆவார் அத்துடன் உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் உதவிச் செயலாளர் ஆவார். நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவுக்கான செயலக வசதிகளை உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் வழங்குகின்றது. நிதித் திணைக்களத்திற்குப் பொறுப்பாகவுள்ள உதவி ஆளுநர், இணங்குவித்தல் அலுவலர், இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளர் மற்றும் முதன்மை இடர்நேர்வு அலுவலர், இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரி கணக்காய்விற்குப் பொறுப்பாகவுள்ள தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வுக் கண்காணிப்பாளர் ஆகியோர் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்களில் அவதானிப்பாளர்களாகச் சமூகமளிக்கின்றனர். தேவைப்படுகின்றவாறும் தேவைப்படும்போதும், கலந்துரையாடல்களுக்கும் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலிறுப்பதற்கும் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களத் தலைவர்களை நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு அழைக்கின்றது. இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் கலந்துரையாடப்படுகின்ற போது, இலங்கை மத்திய வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வினைக் கொண்டு நடாத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனத்தின் ஈடுபாட்டுப் பங்காளரும் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்களுக்கு அழைப்பின் பேரில் சமூகமளிக்கின்றார்.

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது ஆண்டொன்றுக்கு குறைந்தது ஆறு (06) தடவைகள் சந்திப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. நாணயச் சபை, வெளிவாரி கணக்காய்வாளர்கள் அல்லது உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பாளர் ஆகியோரின் கோரிக்கைக்கமைவாக தலைவரின் ஒப்புதலுடன் குழுவுக்கான செயலாளரினால் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுக் கூட்டங்கள் கூட்டப்படுதல் வேண்டும். தலைவர் உள்ளடங்கலாக கூட்டமொன்றிற்கான கூட்டநிறைவெண் இரண்டு (02) ஆகும்.

### 3. 2021ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் 2021ஆம் நிதியியல் ஆண்டு தொடர்பிலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவானது 2021இல் பதினான்கு (14) கூட்டங்களை நடாத்தியதுடன் ஆண்டுகாலப்பகுதியிலும் நிதியியல் ஆண்டு தொடர்பிலும் நாணயச் சபை மதியுரைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அ. நிதி அறிக்கையிடல் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு:

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு பின்வருவனவற்றை மீளாய்வு செய்தது.

i. 2020.12.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கேபிஎம்ஜி நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால முகாமைத்துவக் கடிதம் மற்றும் இறுதி முகாமைத்துவக் கடிதம் அத்துடன் முகாமைத்துவ கருத்துக்கள்.

ii. 2020.12.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள்.

iii. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 154(6)ஆம் இலக்க உறுப்புரையின் நியதிகளுக்கமைவாக 2020.12.31அன்று முடிவுற்ற ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் விவகாரங்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை அத்துடன் முகாமைத்துவக் கருத்துக்கள்.

iv. 2020.12.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள்.

v. 2020.12.31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

vi. 2020.12.31 அன்றுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் ஐந்து (05) ஓய்வூதிய நிதியங்களின் நிதியியல் கூற்றுக்கள் (ஓய்வூதிய நிதியம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம், விதுரர்கள் மற்றும் அநாதைகளின் ஓய்வூதிய நிதியம், புதிய ஓய்வூதிய நிதியம், விதவைகள் மற்றும் அநாதைகளின் அத்துடன் விதுரர்கள் மற்றும் அநாதைகளின் புதிய ஓய்வூதிய நிதியம்).

vii. 2020.12.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள்.

viii. 2021ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வுடன் தொடர்புடைய கேபிஎம்ஜி நிறுவனத்தின் கணக்காய்வுத் திட்டம்.

ix. கேபிஎம்ஜி நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான இடைக்கால முகாமைத்துவக் கடிதம்.

x. 2021.12.31 அன்று முடிவுற்ற ஆண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள்.

xi. 2021.12.31 அன்று முடிவுற்ற ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள்.

ஆ. உள்ளகக் கட்டுப்பாடுகள்:

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு,

i. நாணயச் சபை மதியுரைக் குழுவிற்கு அறிக்கையிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் செயன்முறைகள் தொடர்பாக மீளாய்வு செய்து ஆலோசனை வழங்கியது.

ii. நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழுவின் பரிந்துரைகள் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் மூலமான நடைமுறைப்படுத்தல் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தது.

இ. உள்ளகக் கணக்காய்வு;

நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வு குழு பின்வருவனவற்றை மீளாய்வு செய்தது,

i. உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்.

ii. புதிய ஒதுக்கு முகாமைத்துவ முறைமையின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய உள்ளகக் கணக்காய்வு அவதானிப்புக்கள்.

iii. செயன்முறைப்படுத்தும் உரிமையாளர்களால் வழங்கப்படும் கணக்காய்வுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நிலைமைகள்.

iv. 2022 - 2024ஆம் ஆண்டிற்கான உபாய கணக்காய்வுத் திட்டம் மற்றும் 2022ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்காய்வுத் திட்டம்.

## சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் 2021 நிதியாண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை

கொள்கை குறிக்கோள்களை தொடர்கின்ற வேளையில், இலங்கை மத்திய வங்கி பல்வேறுபட்ட இடர்நேர்வுகளை அதாவது நிதியியல் மற்றும் நிதியியலல்லாத இரண்டு வித தன்மைகளையும் கொண்ட இடர்நேர்வுகளையும் எதிர்கொள்கிறது. அத்தகைய இடர்நேர்வுகளில் ஏதேனுமொன்று நிகழ்வதானது மத்திய வங்கியின் நிதியியல் நிலைமை மீதும் அதன் கீர்த்தியின் மீதும் மோசமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என்பதனால் சரியான முறையில் வடிவமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று நடைமுறையில் இருக்க வேண்டியது மிக அவசியமானதாகும். இடர்நேர்வு முகாமைத்துவத்தினை ஒருங்கிணைந்த முறையில் அணுகுவதன் உபாய முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் இடர்நேர்வுகளைத் தனித்தனியாக நோக்குகின்ற பாரம்பரிய முகாமைத்துவத்தினை வெற்றி கொள்வதற்காக 2015இல் தனியான இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டது. இதற்கமைய, இடர்நேர்வு முகாமைத்துவம் இலங்கை மத்திய வங்கியின் முக்கிய உபாய முன்னுரிமையொன்றாக அங்கீகரிக்கப்பட்டதுடன் வங்கியானது தொழில்முயற்சி வாரியான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை இலங்கை மத்திய வங்கிக்காக நடைமுறைப்படுத்துகின்ற செய்முறையில் ஈடுபட்டுள்ளது.

நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது, இலங்கை மத்திய வங்கியினால் எதிர்நோக்கப்படுகின்ற நிதியியல் மற்றும் நிதியியல்லா இடர்நேர்வுகளை உள்ளடக்கிய இடர்நேர்வு ஆளுகை அமைப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பு ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியிருக்கிறது. இடர்நேர்வு ஆளுகை அமைப்பு நாணயச் சபை மற்றும் இரண்டு சபை துணைக்குழுக்களான சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் நாணயச் சபை மதியுரைக் கணக்காய்வுக் குழுவினையும் உள்ளடக்கியுள்ளது. நாணயச் சபை வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வுத் தொழிற்பாட்டிற்கு இறுதியில் பொறுப்பாக இருப்பதுடன் "தரமான தலைமைத்துவத்தினையும்" ஏற்படுத்துகிறது.

2018இல் ஏற்படுத்தப்பட்ட சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவிற்கு தற்பொழுது நாணயச் சபையின் சுயாதீன உறுப்பினரான திரு. சன்ஜீவ ஜயவர்த்தன தலைமை தாங்குவதுடன் இரண்டு சுயாதீனமான வெளிவாரி நிபுணர்களையும் ஐநித்தியா பங்காளர்களின், பங்காளரான திரு. நோமல் குணவர்த்தன 2019 மாச்சு 01 இலிருந்து நியமிக்கப்பட்டதுடன் திரு. சுசந்த ரத்னாயக்கா, தலைவர், இலங்கை முதலீட்டுச் சபை (2020 நவெம்பர் 30 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இப்பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்) 2020 ஒத்தோபர் 06 இலிருந்து நியமிக்கப்பட்டார்ஸ உள்ளடக்கியிருந்தது. சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மத்திய வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் இணங்குவிப்புத் தொழிற்பாடுகளையும் நாணயச் சபையிலிருந்தான வழமையான பிரதிநிதிகளூடாக மேற்பார்வை செய்வதுடன் இது வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு தொழிற்பாடுகளுக்கான பரந்துபட்ட உபாயத்தினையும் கொள்கைகளையும் நிர்ணயிப்பதற்கும் பொறுப்பாக இருக்கிறது. சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு மீதான அர்ப்பணிப்பு மிக்க கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கும் நாணயச் சபைக்கு உதவுகிறது.

நடைமுறைக்கிடப்பட்டுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பு மூன்று அடுக்குப் பாதுகாப்பு மாதிரியினைப் பின்பற்றுகிறது. முதலாவது அடுக்குப் பாதுகாப்பில் இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் தொழிற்பாட்டுத் திணைக்களங்கள் அவற்றின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட நிதியியல் அத்துடன்/ அல்லது தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பிடல், செய்முறைப்படுத்தல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடலுக்குப் பொறுப்பாக இருக்கின்றன. இரண்டாவது அடுக்குப் பாதுகாப்பின் ஒரு பகுதியாக இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியை நெறிப்படுத்தி வழிகாட்டுவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் தொடர்பான இடர்நேர்வு முகாமைத்துவச் செய்முறைகளுக்கு வசதியளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. மூன்றாவது அடுக்குப் பாதுகாப்பான, உள்ளகக் கணக்காய்வு, கணக்காய்வூடாக இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான சூழலுக்குப் பெறுமதியினைக் கூட்டுவதற்காகவும் கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் சுயாதீனமான குறிக்கோள் உத்தரவாதத்தினையும் விதந்துரைப்புக்களையும் வழங்குவதற்கும் பொறுப்பாகவுள்ளது. இம்மூன்று 'கட்டங்கள்' ஒவ்வொன்றும் வங்கியின் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பிற்குள் தனித்துவமான வகிபாகத்தினை ஆற்றுகின்றன.

மூன்றடுக்குப் பாதுகாப்பு மாதிரியின் கீழ், அனைத்துத் திணைக்களங்களினதும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்கு மேலதிகமாக, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் உள்ளக முதலீட்டு நிதியம் அதேபோன்று அரசாங்கத்திற்கான முகவர் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஊழியர் சேம நிதியத்தின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளின் நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் அனைத்து மூன்று நிதியங்களுக்குமான முதலீட்டுக் கொள்கை அறிக்கை, உபாயச் சொத்து ஒதுக்குகள் மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் என்பனவற்றை வடிவமைத்திருக்கிறது. இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இந்நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகளையும் சுயாதீனமாகக் கண்காணிப்பதுடன் இவற்றிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளை தொடர்பான முதலீட்டு மேற்பார்வைக் குழுக்களுக்கும் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் நாணயச் சபைக்கும் காலாந்தர அடிப்படையில் அறிக்கையிடுகிறது.

புதிய கட்டமைப்புடன் இசைந்து ஒழுகும் விதத்தில், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி முழுவதிலும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை எடுத்துரைக்கும் இலங்கை மத்திய வங்கிக்கான இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை அறிக்கையொன்றினைத் தயாரித்திருக்கிறது. இச்செய்முறையில் இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவ இடர்நேர்விற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுகின்ற வேளையில், வேறுபட்ட ஆர்வலர்களிடையே தெளிவான பொறுப்புக்கூறல்களுடன் இடர்நேர்வு சொத்துடமை மற்றும் முகாமைத்துவத்தினை ஒப்படைக்கிறது.

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வு வகுப்பு தொகுப்பு முறையினை வருடாந்தம் மீளாய்வு செய்து இடர்நேர்வு வகைகளை உள்ளடக்குதல்/ நீக்குதல் தொடர்பில் இற்றைப்படுத்தல்களையும் நிலவுகின்ற இடர்நேர்வு சூழலுக்குப் பொருத்தமான தேவைப்படும் ஏதேனும் மற்றைய மாற்றங்களை உள்ளீடு செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறது. மேலும், மத்திய வங்கியின் முகாமைத்துவத்தினிடையே, இலங்கை மத்திய வங்கியைப் பாதிக்கின்ற வங்கி முழுவதற்குமான முன்னுரிமையளிக்கப்பட்ட தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் மீதான அவர்களின் கண்ணோட்டத்தினைத் தீர்மானிப்பதற்காக இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை கண்ணோட்ட அளவீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வு வகுப்பு தொகுப்பு முறையினை மீளாய்வு செய்யும் போது

இவ்வளவீட்டின் பெறுபேறுகள் பரிசீலனையில் கொள்ளப்படுவதுடன் இது மத்திய வங்கியைப் பாதிக்கக்கூடிய மற்றும் முகாமைத்துவத்தின் கவனத்தினையும் தேவைப்படுத்தும் முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு வகைகளுக்கு முன்னுரிமையளிக்க உதவும்.

வங்கிக்குள் இடர்நேர்வுக் கலாச்சாரத்தினை மேம்படுத்துவதற்காக, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்காக அநேக இடர்நேர்வு விழிப்புணர்வு அமர்வுகளை வேறுபட்ட அரங்குகளில் நடத்துகின்றது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாடுகளை வலுப்படுத்தும் பொருட்டு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் உலக வங்கியின் தொழில்நுட்ப உதவித் தூதுக்குழுவுடன் ஒத்துழைப்புக்களை மேற்கொண்டது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக உலக வங்கியின் தொழில்நுட்ப தூதுக்குழுவின் உதவியினை 2020 ஆண்டுப்பகுதியில் பெற்றுக்கொள்வது சாத்தியமாகவில்லை.

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இடர்நேர்வு பதிவேடுகளின் உருவாக்கத்திற்கு வசதியளிப்பதற்கு திணைக்களங்களுடன் பணியாற்றியதுடன் விரிதாளினை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வு பதிவேட்டுப் படிவத்தினை பயன்படுத்தி கட்டம் கட்டமான முறையில் இவ்விடர்நேர்வுப் பதிவேடுகளை மெருகூட்டியது. இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு தோற்றப்பாடு இத்திணைக்கள ரீதியான இடர்நேர்வுப் பதிவேடுகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படுவதுடன் இது தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையினையும் மேம்படுத்துகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் சம்பவ அறிக்கையிடல் முறைமையினூடாக அறிவிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தொடர்ந்தும் நிருவகித்ததுடன் நிகழ்வுகளின் மத்திய கருவூலமொன்றினை அபிவிருத்தி செய்வதனையும் சரிசெய்யும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மீதான கண்டறியும் முன்னேற்றங்களையும் இயலுமைப்படுத்தியது. இம்முறைமைகளினூடாகத் திரட்டப்பட்ட தகவல்கள் சாத்தியமான இடர்நேர்வுப் போக்குகளையும் பாதிக்கப்படும் தன்மைகளையும் அடையாளம் காணவும் தொடர்பான இடர்நேர்வுச் செயற்பாட்டு வழிமுறைகளை மேம்படுத்தவும் உதவும்.

நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஒவ்வொரு நிதியத்திற்குமான முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை மீளாய்வு செய்கின்ற வருடாந்தச் செய்முறையினூடாக இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தும். இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் இணைத்தரப்புக்கள், வழங்குநர்கள் மற்றும் கட்டுக்காப்பாளர் என்போரை உள்ளடக்கிய இலங்கை மத்திய வங்கியின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளில் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை மேம்படுத்துகின்ற செய்முறைகளில் ஈடுபட்டிருக்கின்றது. அதேநேரம் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உபாய சொத்து ஒதுக்கு, முதலீட்டுக் கொள்கை அறிக்கைகள் மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களினால் இக்குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட வரையறைக்குள் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கையாக முதலீடுகள் தொடர்பான கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதுடன் அனைத்து நேரங்களிலும் இடர்நேர்வுகளை முகாமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டியும் வருகிறது.

# இலங்கை மத்திய வங்கி

**முகாமைத்துவக் கூற்று**

**2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரியது**

## இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களுடன் தொடர்பான பொறுப்புடைமையும் நிதிச் செயலாற்றமும்

இலங்கை மத்திய வங்கியானது இலங்கையின் நாணய, நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கு பொறுப்பான நிறுவனமாக நாணய விதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இச்சட்டத்திற்கிணங்க, வங்கியானது பிரதானமான குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுகின்ற பொறுப்பை ஏற்றுள்ளது.

ஆதலால், மத்திய வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகளின் வெற்றிகரத் தன்மைக்கான பொறுப்பபுடைமையின் அடிப்படையானது அதன் பிரதான குறிக்கோள்களை அடையப் பெறுவதை முன்னிட்டான அதன் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் நற்பயன் தொடர்பாகவேயன்றி அதன் இலாபகரத்தன்மை தொடர்பில் அத்தியாவசியமானதாயிராது. இக் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து மத்திய வங்கியை பிரித்துக் காட்டுகின்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட அடிப்படைப் பண்புகளாக உள்ளன. இதற்கிணங்க மத்திய வங்கிக்கு வட்டி வீதத்திலும் செலாவணி வீதத்திலும் செல்வாக்குச் செலுத்தக்கூடிய அதன் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளினூடாக அதற்கே உரியதான இலாபத்தை உருவாக்கிக் கொள்ளும் சிறப்புமிக்க ஆற்றல் அதற்குள்ள போது, இலாபகரத் தன்மையுடன் தொடர்புடைய அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் அதன் பெறுபேறாக பிரதானமான குறிக்கோள்களை விட்டுக் கொடுத்து இலாபத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆதலால் தற்காலிகமானதாக அல்லது புலமை வாய்ந்தததாக மட்டும் இருந்தாலன்றி மத்திய வங்கியின் குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணுதல் சிறப்புமிக்கதாகவும் தனியே இலாபத்தைப் பெறும் குறிக்கோள்களிலிருந்து விலகியதாக இருத்தலும் அவசியமாகின்றது

இப்பின்னணியில், மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள், செலாவணி வீத முகாமைத்துவம், நாணயங்களை வெளியிடல் ஆகியவற்றை அமுலாக்குகின்ற போது உருவாகின்ற இலாபம் மற்றும்/ அல்லது நட்டம் உணர் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதால், இக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகையானது இச்சூழலமைவிற்கிணங்க வரைவிலக்கணம் அளிக்கப்படுதலும் புரிந்து கொள்ளப்படுதலும் அவசியமாகும்.

வங்கியானது, நாணய விதிச் சட்டத்தின் 42 மற்றும் 43ஆம் பிரிவுகளின் கீழ் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளிவாரிக் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதற்கமைய பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்கியொழுகுதலை உறுதி செய்யும் பொருட்டு பன்னாட்டு கணக்காய்வு நியமங்களின் கீழ் கணக்காய்வை மேற்கொள்வதற்கு கேபிஎம்ஜி பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சேவையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெற்றுள்ளார். உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறை மீளாய்வுகள் ஆகிய இரண்டிலும் மேற்கொள்ளப்படும் இக்கணக்காய்வுகள் நிதி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } பீஏஎன்/ஜீ/சீபிஎஸ்எல்/1/21/1

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2022 மார்ச் 29

கௌரவ நிதி அமைச்சர்

**இலங்கை மத்திய வங்கியின் 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

## 1. நிதியியல் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் ('வங்கி') 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதியியல் கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் 13(1) ஆம் பிரிவு மற்றும் நாணய விதிச் சட்டத்தின் (422ஆம் அத்தியாயம்) 42(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

எனது அபிப்பிராயத்தின்படி வங்கியின் 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் காசுப்பாய்ச்சல் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ப.நி.அ.நி) இணங்க அனைத்துப் பொருண்மையான விடயங்களையும் நியாயமாகப் பிரதிபலிக்கின்றன.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏஎஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**1.3 நாணயச் சபையினதும் நிதியியல் கூற்றுக்களின் ஆளுகைக்குப் பொறுப்பான தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதியியல் கூற்றுக்களை ப.நி.அ.நி இற்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாகவுள்ளது.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்வதற்கான வங்கியின் இயலுமையை மதிப்பிடுதல், பொருத்தமானவிடத்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கீட்டுக்காகத் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவைப் பயன்படுத்துதல் என்பவற்றுக்கு நாணயச் சபை பொறுப்பாகவுள்ளது.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக இருப்பார்கள்.

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)ஆம் பிரிவின் பிரகாரம் வங்கி வருடாந்த மற்றும் காலாந்தரமான நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கப்பட வேண்டியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

**1.4 நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதியியல் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

**2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii)ஆம் பிரிவின்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பொருண்மையான பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை:

2.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வியாபாரச் செயற்பாடுகளிற்கு வெளியே வங்கி செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் வங்கியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் வங்கி இணங்கியொழுகாதுள்ளமையைக் குறிப்பிடுதல்.

2.2.3 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கிணங்க செயலாற்றியிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

2.2.4 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

**(ஒப்பம்)**

**டபிள்யூ. பி. சி. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் நாயகம்

# இலங்கை மத்திய வங்கி
## நிதியியல் நிலைமைக் கூற்று

| திசெம்பர் 31இல் உள்ளவாறானது | குறிப்பு | 2021 ரூ.000 | 2020 ரூ.000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 8 | **512,762,452** | 403,307,304 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 9 | **-** | 40,564,323 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 9 | **8,818,244** | 703,435,463 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 10 | **54,022,836** | 3,370,353 |
| பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி) தொடர்பான சொத்துக்கள் | 11 | **188,045,837** | 158,958,185 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | | **-** | 1,702,247 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **763,649,369** | 1,311,337,875 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 12 | **1,377,820,347** | 714,531,527 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 13 | **567,532,312** | 2,728,412 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 14 | **150,128,800** | 153,061,900 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | 15 | **1,671,218** | 1,615,356 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 16 | **90,572,746** | 111,487,526 |
| ஏனைய சொத்துக்கள் | 17 | **34,063,770** | 23,097,189 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **2,221,789,193** | 1,006,521,910 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | **2,985,438,562** | 2,317,859,785 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| தங்கம் | 18 | **35,151,981** | 76,220,055 |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 19 | **4,928,533** | 6,301,819 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | | **961,456** | 651,804 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 20 | **19,235,994** | 20,455,452 |
| அருவச் சொத்துக்கள் | 21 | **561,632** | 108,252 |
| **மொத்த நிதியல்லாச் சொத்துக்கள்** | | **60,839,596** | 103,737,382 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **3,046,278,158** | 2,421,597,167 |
| பொறுப்புக்களும் பங்குரிமை மூலதனமும் | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 22 | **13,701** | 208,337,221 |
| **பெறுதி நிதியியல் சாதனங்கள்** | 10 | **1,139,323** | 574,182 |
| **ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்** | 23 | **104,764,616** | 63,864,652 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 24 | **670,065,243** | 509,925,278 |
| ஏனையவை | 25 | **357,295,676** | 74,870,325 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **1,133,278,559** | 857,571,658 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 26 | **300,704,162** | 129,601,521 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 27 | **1,392,301** | 1,460,512 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 28 | **101,062,880** | 209,507,898 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 29 | **1,005,099,066** | 834,807,859 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 30 | **19,163,882** | 14,742,792 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | **1,427,422,291** | 1,190,120,582 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | **2,560,700,850** | 2,047,692,240 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 31 | **1,178** | 789 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | 32 | **17,929,737** | 25,385,193 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 33 | **4,027,349** | 1,353,373 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | | **21,958,264** | 26,739,355 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **2,582,659,114** | 2,074,431,595 |
| **பங்குரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 50,000,000 |
| ஏனைய ஒதுக்குகள் | 34 | **315,128,226** | 282,012,023 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | | **98,490,818** | 15,153,549 |
| **மொத்தப் பங்குரிமை மூலதனம்** | | **463,619,044** | 347,165,572 |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம்** | | **3,046,278,158** | 2,421,597,167 |

8ஆம் பக்கம் தொடக்கம் 89ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

நாணயச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2022 மார்ச்சு 23ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

..................................................
அஜித் நிவாட் கப்ரால் - ஆளுநர்

.................................................................
டி.எஸ்.எல் சிறிமான்ன - முதன்மைக் கணக்காளர்

# இலங்கை மத்திய வங்கி
## வருமானக் கூற்று

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021<br>ரூபா 000 | 2020<br>ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 36 | **11,815,701** | 26,254,216 |
| தேறல் செய்யப்படாத விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான இலாபம் | 37 | **41,859,703** | 23,524,861 |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம் | | **14,855,788** | 6,524,368 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **68,531,192** | 56,303,445 |
| வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவினம் | | | |
| வட்டிச் செலவினம் | 38 | **(5,609,176)** | (5,293,852) |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் திருப்புதல்/ கட்டணம் | 39 | **2,282,695** | (2,046,205) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவினம்** | | **(3,326,481)** | (7,340,057) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் | | **34,041,805** | 7,123,733 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **99,246,516** | 56,087,121 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 36 | **68,612,928** | 25,342,029 |
| தேறல்செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/ (நட்டம்) | | **(387,202)** | 197,559 |
| வட்டிச் செலவினம் | 38 | **(8,469,897)** | (8,320,294) |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | 39 | **(808,696)** | (259,194) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்** | | **58,947,133** | 16,960,100 |
| ஏனைய வருமானம் | 40 | **16,280,370** | 1,589,329 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | **174,474,019** | 74,636,550 |
| **தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | | |
| ஆளணிச் செலவினங்கள்: | 41 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | **(7,116,223)** | (5,298,938) |
| - நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவினம் | | **(1,717,811)** | (707,129) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டச் செலவினம் | | **(1,891,272)** | (851,435) |
| | | **(10,725,306)** | (6,857,502) |
| பெறுமானத் தேய்வும் பதிவழிப்பும் | | **(526,675)** | (452,353) |
| இருப்புச் செலவினம் (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவினம்) | | **(2,780,250)** | (2,396,894) |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள் | 42 | **(2,279,122)** | (1,497,040) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | **(16,311,353)** | (11,203,789) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **158,162,666** | 63,432,761 |
| **வரி** | 43 | **-** | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **158,162,666** | 63,432,761 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

8ஆம் பக்கம் தொடக்கம் 89ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| | | 2021<br>ரூபா 000 | 2020<br>ரூபா 000 |
|---|---|---|---|
| **ஆண்டுக்கான இலாபம்** | | **158,162,666** | 63,432,761 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | |
| **இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்வகைப்படுத்தக்கூடிய விடயங்கள்** | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | 34 | **(16,108,192)** | 9,910,943 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான அரச பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 34 | **(11,641,542)** | 3,547,766 |
| | | **(27,749,734)** | 13,458,709 |
| **இலாபம்/ (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு மீதான இலாபம் | | **-** | 3,671,689 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | 32 | **1,293,721** | (13,394,058) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 34 | **55,862** | 108,379 |
| | | **1,349,583** | (9,613,990) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/ செலவினம் | | **(26,400,151)** | 3,844,719 |
| **மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | **131,762,515** | 67,277,480 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

8ஆம் பக்கம் தொடக்கம் 89ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி

## பங்குரிமை மூலதன மாற்றல் கூற்று

## திசெம்பர் 31இல் உள்ளவாறானது

| | பங்களிக் கப்பட்ட மூலதனம் ரூபா 000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூபா 000 | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் ரூபா 000 | மொத்தம் ரூபா 000 |
|---|---|---|---|---|
| **2020 சனவரி 01இல் உள்ளவாறு** | 50,000,000 | 212,493,432 | 41,691,960 | 304,185,392 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | 63,432,761 | 63,432,761 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | 418,783 | (422,163) | (3,380) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | - | - | (13,394,058) | (13,394,058) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | 7,123,733 | (7,123,733) | - |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல் | - | - | (284,802) | (284,802) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி இலாபம் | - | 9,910,943 | - | 9,910,943 |
| பிடித்துவைத்திருக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | 43,356,467 | (43,356,467) | - |
| பொது ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | 638,355 | (638,355) | - |
| 2019ஆம் ஆண்டிற்கான இலாப ஒதுக்கு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2019ஆம் ஆண்டிலிருந்து அறவிடுதல் | - | - | (24,008,977) | (24,008,977) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | - | (141) | (141) |
| தொழிலுக்குப் பின்னரான நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கத்திற்கான மாற்றல் | - | 742,476 | (742,476) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடகிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீடு மீதான இலாபம் | - | 108,379 | - | 108,379 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான இலாபம் | - | 3,547,766 | - | 3,547,766 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு மீதான இலாபம் | - | 3,671,689 | - | 3,671,689 |
| **2020 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **282,012,023** | **15,153,549** | **347,165,572** |
| **2021 சனவரி 01இல் உள்ளவாறான நிலுவை** | 50,000,000 | 282,012,023 | 15,153,549 | 347,165,572 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | 158,162,666 | 158,162,666 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | - | 369,008 | (369,008) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | - | - | 1,293,721 | 1,293,721 |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தின் மாற்றல் | - | 34,041,805 | (34,041,805) | - |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல் | - | - | (291,870) | (291,870) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி நட்டம் | - | (16,108,192) | - | (16,108,192) |
| பிடித்துவைத்திருக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | 23,574,367 | (23,574,367) | - |
| பொது ஒதுக்கத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | 2,859,208 | (2,859,208) | - |
| 2020ஆம் ஆண்டிற்கான இலாப ஒதுக்கு - வெளிநின்ற இலங்கை அரச கடப்பாடுகளை 2020ஆம் ஆண்டிலிருந்து அறவிடுதல் | - | - | (15,016,745) | (15,016,745) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல் | - | - | (72) | (72) |
| தொழிலுக்குப் பின்னரான நன்மைகளின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கத்திற்கான மாற்றல் | - | 757,613 | (757,613) | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகளின் சந்தை மீள்மதிப்பீடு மீதான இலாபம் | - | 55,862 | - | 55,862 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான நட்டம் | - | (11,641,542) | - | (11,641,542) |
| விற்பனையிலிருந்து கிடைத்த மீள்மதிப்பீட்டு இலாபம் | - | (791,926) | 791,570 | (356) |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **50,000,000** | **315,128,226** | **98,490,818** | **463,619,044** |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

8ஆம் பக்கம் தொடக்கம் 89ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# இலங்கை மத்திய வங்கி
## காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2021 ரூபா 000 | 2020 ரூபா 000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **16,510,461** | 29,058,738 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | **2,433,655** | 1,448,144 |
| திரவ முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | **14,468,586** | 6,721,927 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி நட்டம் | | **(13,003,097)** | (10,303,437) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | **1,572,512** | 1,445,544 |
| | | **21,982,117** | 28,370,916 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | **5,841,243** | 5,574,007 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | **6,571,438** | 6,863,137 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | **8,295,030** | 6,476,946 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | **498,361** | 2,631,670 |
| | | **21,206,072** | 21,545,760 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | 44 | **776,045** | **6,825,156** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள்:** | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு | | **(3,542,041)** | (3,068,543) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதல் தொகை அறவீடுகள் | | **5,534** | 5,767 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான பெறுகைகள் | | **338,246** | 134 |
| மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **(108,445,017)** | 166,209,573 |
| | | **(111,643,278)** | 163,146,931 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய குறைவு | | **(755,979,008)** | (57,023,608) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **22,242,111** | (901,434) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | **218,313,967** | (202,532,008) |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் செலுத்தத்தக்கவையிலான அதிகரிப்பு/ (குறைவு) | | **489** | (1,590) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள், தேறிய கொடைகள் | | **686,469** | 348,150 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | **72,928** | 126 |
| குத்தகை ஆதனங்களின் கொள்வனவு | | **9,113** | 4,838 |
| தங்க இருப்புக்களிலான தேறிய குறைவு | | **(38,743,707)** | (121,876,566) |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள் | | **-** | 6,489 |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட (அவற்றிலிருந்து அறவிடப்பட்ட) கடன்களும் முற்பணங்களும் | | **(30,118,054)** | 111,353,276 |
| | | **(583,515,692)** | (270,622,327) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட/ (முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்** | | **471,872,414** | 433,769,258 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| **பெறுகைகள் :** | | | |
| சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல் | | **390,975,631** | 697,310,625 |
| சுற்றோட்ட நாணயத்தினை எடுப்பனவு செய்தல் | | **(220,684,424)** | (540,469,916) |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் | | **170,291,207** | 156,840,709 |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வெளியீடு | 45 | **1,172,364,801** | 479,681,618 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு | 46 | **(171,102,641)** | 124,980,099 |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்கள் | | **1,001,262,160** | 604,661,717 |
| **சுற்றோட்ட நாணயத்தின் தேறிய குறைவு** | | **(830,970,953)** | (447,821,008) |
| **பகிர்ந்தளிப்புக்கள்:** | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் கொடை/ (மீள்கொடுப்பனவு) | | **(145,925,443)** | 2,658,806 |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **72** | 141 |
| ஓய்வூதிய நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | **7,547,179** | 329,689 |
| திரட்டிய நிதியத்திற்கு இலாபங்களை மாற்றல் | | **15,000,000** | 24,000,000 |
| | | **(123,378,192)** | 26,988,636 |
| **நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(707,592,761)** | (474,809,644) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | | **(234,944,302)** | (34,215,230) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **28,871,146** | 16,861,445 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **403,577,642** | 420,931,427 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | 8 | **197,504,486** | 403,577,642 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்

8ஆம் பக்கம் தொடக்கம் 89ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

**இலங்கை மத்திய வங்கி**
**நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகள்**

## 1. அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி (வங்கி அல்லது இ.ம.வங்கி) இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகள் என்பனவற்றின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு பொறுப்பான அதிகாரசபையாக இருக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளதோடு இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01இல் அமைந்துள்ளது.

இந்நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கு நாணயச் சபையின் சார்பில் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் 2022 மாச்சு 31ஆம் திகதி அதிகாரமளிக்கப்பட்டது.

### 1.1 முதன்மை நடவடிக்கைகள்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் பின்பற்றப்படுவதற்கு அல்லது மேற்கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கொள்கைகள் அல்லது வழிமுறைகளைத் தீர்மானிப்பதற்குப் புறம்பாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இதனிடம் பொதுவாக வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வங்கியானது இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு முதன்மைப் பொறுப்பாக இருப்பதுடன் அரசாங்கத்தின் இறை முகவராகவும் தொழிற்படுகின்றது. வங்கியின் நடவடிக்கைகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன:

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்
- நாணயத்தை வெளியிடுதல்
- அலுவலக ரீதியான பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைப்படுத்தல்
- நிதியியல் முறைமையை மேற்பார்வை செய்தல்
- வங்கிகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமமளித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- தீர்ப்பனவு வசதிகளை வழங்குதல் மற்றும் கொடுப்பனவு முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்தல்
- பொருளாதாரத் தரவு மற்றும் புள்ளிவிபரங்களைத் தொகுத்தல், பரப்புதல் மற்றும் பகுப்பாய்தல்
- பல்வேறுபட்ட வசதிகளின் கீழ் அரசாங்கம், வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குதல்.
- அரசாங்கம் மற்றும் அதன் முகவர்களுக்கு வங்கியாளராகச் செயற்படுதல் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் அரச பிணையங்களுக்காக வர்த்தக வங்கியல்லாத முதனிலை வணிகர்களுக்கு நடைமுறைக் கணக்கு வசதிகளை வழங்குதல்

இலங்கையின் உற்பத்தியாக்க வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கில் அதன் பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதித்தன்மை குறிக்கோள்களை அடையும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரந்தளவில் வேறுபடுத்தலாம். இந்நடவடிக்கைகளின் பெறுபேறுகள் வருமானக் கூற்றினைப் பொறுத்தவரை தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் அடிப்படை

### 2.1. இணக்கக் கூற்று

2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந்நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு (ப.நி.அ.நி) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டிற்கான அடிப்படை

கீழ்வருவனவற்றிற்குத் தவிர்ந்து, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- தங்கமானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.
- பெறுதி நிதியியல் சாதனங்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட பெறுதியல்லா நிதியியல் சாதனங்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டன.
- காணி மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நேரத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் மீள்மதிப்பிட்ட தொகையிலிருந்து ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் பெறுமதியிழப்பு நட்டங்களைக் கழித்த தொகையில் அளவிடப்படுகின்றன.
- நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டிற்கான பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியைக் கழித்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

### 2.3 அறிக்கையிடல் வடிவம்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் நிதியியல் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி காட்டுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் பரந்தளவில் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்குவரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறையானது குறிப்பு 7இல் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

### 2.4 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

இந்நிதியியல் கூற்றுக்கள் வங்கியின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன. மீளாய்வுக்குரிய ஆண்டில் வங்கியின் சமர்ப்பித்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 2.5 பொருண்மை மற்றும் ஒன்றுசேர்ப்பு

ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைப் பிரிவும் நிதியியல் கூற்றுக்களில் வேறுவேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மைத்தன்மை அற்றதாக இருந்தாலன்றி வேறு வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.6 எதிரீடு

வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருந்து ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கோ அல்லது சொத்துக்களை தேறல் செய்து அதேநேரத்தில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கோ விரும்பும் சந்தர்ப்பங்களில் மட்டும் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதியியல் நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.7 ஒப்பீட்டுத் தகவல்

ஒப்பீட்டுத் தகவலானது நடப்பாண்டின் சமர்ப்பிப்புடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

## 3. மதிப்பீடுகள் மற்றும் திறனாய்வுகளின் பயன்பாடு

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவத்தின் திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன் இவை வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையான அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிர்கால நோக்கில் இனங்காணப்படுகின்றன. நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளினைக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துவதில் செய்யப்பட்ட திறனாய்வு முடிவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### 3.1 நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி இழப்பு

சொத்துக்கள் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியை மதிப்பிடுகையில் வங்கியானது திறனாய்வுகளை மேற்கொண்டதுடன் நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகையின் மீதான முதல் மற்றும் வட்டியின் கொடுப்பனவு மட்டுமா என்பதை மதிப்பிட்டது. வங்கியானது மேலும் நிதியியல் சொத்துக்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வானது அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அதிகரித்துள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக பிரமாணங்களை உருவாக்குதல், எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் அளவீட்டிற்கு முன்னோக்கிய தகவல்களை உள்ளடக்குவதற்கான வழிமுறையை தீர்மானித்தல் மற்றும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளப்பதற்கான மாதிரிகளின் தெரிவு மற்றும் ஒப்புதலுக்கும் திறனாய்வுகளைப் பயன்படுத்தியது. வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கணப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட எறிவுகள் மற்றும் திறனாய்வுகள் தொடர்பில் கொவிட்-19இன் தாக்கம் பற்றி குறிப்பு 3.4இல் விளக்கப்பட்டுள்ளது.

### 3.2 ஓய்வூதியமும் தொழில்நிலைக்குப் பின்னரான ஏனைய நன்மைத் திட்டங்களும்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கிரயமானது ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத்திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. ஆயுட்கால மதீப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளன.

### 3.3 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சீர்மதிப்புப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும். உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிப்பதற்காக வழங்கப்பட்ட கடன்களைச் சீர்மதிப்பிடுகையில் எறிவுகள் மற்றும் திறனாய்வுகளின் பயன்பாடு தொடர்பில் கொவிட்-19இன் தாக்கம் பற்றி குறிப்பு 3.4இல் விளக்கப்பட்டுள்ளது.

### 3.4 கொவிட்-19இன் பொதுவான விளைவுகள்

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில் வங்கி கொவிட்-19இன் தாக்கத்தைக் கவனத்திற் கொண்டது. திறனாய்வுகளின் குறிப்பிட்ட விடயங்களில் மாற்றமில்லை என்ற போதிலும் கொவிட்-19இன் தாக்கமானது, முக்கியமாக, வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் நிதியியல் கூற்றுக்களிலுள்ள எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மதிப்பீடு தொடர்பில் மேலதிகமான திறனாய்வுகளையும் மதிப்பீடுகளையும் தோற்றுவித்தது..

கொவிட்-19 நோய்ப்பரவலினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக இலங்கை மத்திய வங்கி பல்வேறுபட்ட நிவாரண மற்றும் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இவற்றுள், வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் மீது நிதியியல் தாக்கத்தைக் கொண்டிருந்த மிக முக்கியமான நிவாரண வழிமுறையாகக் காணப்பட்டவை பொருளாதாரத்தின் மீட்சியை ஆதரவளிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களாகும். இதன்படி, 6 மாதங்களிலிருந்து 2 ஆண்டுகள் வரை முதிர்ச்சிக் காலத்துடன் சலுகை வட்டி வீதங்களில் சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளிப்பு வசதிக் கட்டம் I, II, III மற்றும் கட்டுமானத் துறைக்கான திரவத்தன்மை ஆதரவு என்ற பெயர்களில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளூடாக மீள்நிதியிடல் மற்றும் கொடுகடன் திட்டங்களை ஆரம்பித்ததுடன் இவை உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளால் கடன் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும். சீர்மதிப்புப் பெறுமதியானது அவதானிக்க முடியாத உள்ளீடுகள் மற்றும் திறனாய்வுகளைப் பயன்படுத்தும் மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி, குறிப்பாக, இம்மதிப்பீட்டு நுட்பங்களும் உள்ளீடுகளும் தொடர்புபட்டவையாகவும் பொருத்தமானதாகவும் இருப்பதை உறுதிசெய்து, தீர்மானிக்கப்பட்டன. இதன்படி, சொல்லப்பட்ட கடன் திட்டங்களின் மீள்கொடுப்பனவு நியதிகள் மற்றும் ஆரம்ப அங்கீகரிப்பு சீர்மதிப்புப் பெறுமதியைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சந்தை வட்டி வீதங்களைத் தீர்மானிக்கும் போது காத்திரமான திறனாய்வுகள் பயன்படுத்தப்பட்டன.

வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கணிப்பீட்டிற்கு ஆதாரமாக அமைந்த அடிப்படை கொடுகடன் இழப்பு மாதிரிப் பொறிமுறை மற்றும் ஆராய்ச்சி முறை என்பன முன்னைய காலங்களுடன் தொடர்ந்தும் ஒத்திருந்த போதும், வங்கியானது கொவிட்-19இன் தாக்கத்தைக் கணிப்பீட்டுச் செயன்முறையில் பயன்படுத்தப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரி உள்ளீடுகள், கருதுகோள்கள் மற்றும் முன்னோக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகள் என்பவற்றினூடாகக் கருத்திலெடுத்தது. மேலும், கொவிட்-19இன் விளைவாக பேரண்டப் பொருளாதாரத் தரவு அசைவுகளின் காரணமாக ஏற்படும் முன்னொருபோதும் நிகழ்ந்திராத புள்ளிவிபர வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்காக எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியில் பயன்படுத்தப்பட்ட முன்னோக்கிய பேரண்டப் பொருளாதாரத் தரவுகளில் நியமப்படுத்தலை வங்கி பயன்படுத்தியது.

எனினும், நிதியல்லாச் சொத்துக்களைப் பொறுத்தவரை வங்கியின் மதிப்பீடு என்னவெனில், கொவிட்-19 தொடர்பான நிலைமைகள் கொண்டு செல்லும் பெறுமதியில் எவ்வித தாக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன் 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களில் பொருத்தமாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**4. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளிலான மாற்றங்கள்**

கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் இல்லையென்பதுடன், பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய நிதியியல் ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

**5. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

**5.1 வெளிநாட்டு நாணயமாற்று வீதங்கள் மற்றும் நிலுவைகள்**

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. நாணய விடயங்கள் மீதான வெளிநாட்டு நாணயமாற்று வீத இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான இலங்கை ரூபா நாணயமாற்று வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | **145.5851** | 143.4225 |
| 1 கனேடிய டொலர் | **158.6150** | 146.4840 |
| 1 யூரோ | **227.8832** | 227.7256 |
| 1 யப்பானிய யென் | **1.7417** | 1.8055 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | **280.9312** | 272.6200 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | **271.2270** | 254.8200 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | **200.4338** | 186.4082 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | **31.5294** | 28.6661 |

வெளிநாட்டு நாணயத்தின் வரலாற்றுக் கிரய அடிப்படையில் அளவிடப்படும் நிதியல்லாத விடயங்கள் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டுள்ளன.

**5.2 சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு**

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் தங்கம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுகின்றது. பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பு 50இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களின் போது சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்பட்ட அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்பட்ட விலை எனப் பொருள்படும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அநுகூலம் நிறைந்த சந்தை

முதன்மை அல்லது மிக அநுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் சொத்து அல்லது பொறுப்பினை விலையிடும் போது தமது சிறந்த பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர் என்ற கருதுகோளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதியல்லாச் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கருத்தில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமானதும் சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளதும் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான மதிப்பீட்டு நுணுக்கங்களை பயன்படுத்துகின்றது.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், பொதுவாக சீர்மதிப்புப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில், கீழே விபரிக்கப்பட்டவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலைக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்

மட்டம் 2 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவதானிக்கக் கூடியவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மட்டம் 3 - சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை அவதானிக்க முடியாதவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் படிநிலையிலுள்ள மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாவென வகையிடலை மீளமதிப்பிடுவதன் மூலம் (முழுமையான சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) நிர்ணயிக்கிறது.

**5.3 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்**

வங்கியானது, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன் இணைந்த வருமானம் மற்றும் செலவினங்களையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது.

வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக அறிக்கையிடுவது வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் முன்வைப்பதாகக் கருதப்படுகின்றது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களின் நடவடிக்கைகளை இணைத்து அறிக்கையிடுதல் நிதியியல் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுறச் செய்யுமென வங்கி கருதுகின்றது.

**5.3.1 அங்கீகரித்தல் மற்றும் ஆரம்ப அளவீடு**

அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் முதலில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீட்டுடன் தொடர்புபட்ட கொள்வனவுக் கட்டணங்கள் உள்ளடங்கலாக செலுத்தப்பட்ட விலையின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அனைத்து கிரமமான வழி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் அவற்றிற்குரிய வர்த்தகத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. கிரமமான வழி கொள்வனவு அல்லது விற்பனை என்பது பொதுவாக ஒழுங்குமுறைப்படுத்தலினால் அல்லது சந்தையின் மரபினால் உருவாக்கப்பட்ட காலவரம்பிற்குள் சொத்துக்களின் கையளிப்பை தேவைப்படுத்தும் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையாகும்.

**5.3.2 வகைப்படுத்தல்**

**நிதியியல் சொத்துக்கள்**

ஆரம்ப அங்கீகரிப்பில், வங்கியானது கீழ்வருவனவற்றில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்துகிறது:

- பதிவழிக்கப்பட்ட செலவு
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து இலாபம் மற்றும் நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகிறது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிப்பதற்காக சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடைய வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப்பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துகளை விற்றல் இரண்டின் மூலமும் குறிக்கோளை அடைந்துகொள்ளும் வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்; மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப் பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத பங்குரிமை முதலீட்டின் ஆரம்ப அங்கீகரிப்பின் போது வங்கியானது சீர்மதிப்புப் பெறுமதியில் அடுத்துவரும் மாற்றங்களை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டுவதற்கு மாற்றமுடியாதபடி தெரிவுசெய்யலாம். ஏனைய அனைத்து நிதியியல் சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு வகைப்படுத்தப்படுகின்றன.

**வியாபார மாதிரி மதிப்பீடு**

வங்கியானது சொத்தொன்று சொத்துப்பட்டியல் மட்டத்தில் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியின் குறிக்கோளின் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்கின்றது. ஏனெனில் இது வியாபாரம் முகாமை செய்யப்படும் விதம் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்கப்படும் விதம் பற்றி சிறப்பாக பிரதிபலிக்கின்றது. கவனத்திலெடுக்கப்படும் தகவலானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருப்பதோடு இது இதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- வியாபார மாதிரியின் செயலாற்றம் மற்றும் அவ்வியாபார மாதிரியில் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றன.
- வியாபார மாதிரியின் (மற்றும் அவ்வியாபார மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள்) செயலாற்றத்தினைப் பாதிக்கும் இடர்நேர்வுகள் மற்றும், குறிப்பாக இவ்வுடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்.
- முன்னைய காலங்களின் விற்பனையின் தடவைகள், அளவு மற்றும் காலக்கிரமம் அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை தொடர்பான அதன் எதிர்பார்ப்புகள். எனினும், விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவலானது தனியாக கருத்திற்கொள்ளப்படுவதில்லை, மாறாக இது நிதியியல் சொத்துக்களை முகாமை செய்வதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் காசுப்பாய்ச்சல்கள் எவ்வாறு தேறல் செய்யப்படுகின்றன என்பது தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டு அல்லது முகாமைப்படுத்தப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதியில் அவற்றின் செயலாற்றம் மதிப்பிடப்படும் நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதற்கான காரணம் அவை ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அல்லது ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதுடன் நிதியியல் சொத்துக்களை விற்பதற்காகவோ வைத்திருக்கப்படாமையாகும்.

**ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவா என்பதை மதிப்பிடுதல்**

நிதியியல் சொத்துக்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவு பரீட்சிப்பை பூர்த்திசெய்வதனை கண்டறிவதற்காக நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளை வங்கி மதிப்பிடுகின்றது. இம்மதிப்பீட்டு நோக்கத்திற்காக 'முதல்' என்பது ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதியியல் சொத்தின் சீர்மதிப்புப் பெறுமதி எனவும் "வட்டி" என்பது பணத்தின் காலப்பெறுமதி, குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் வெளிநின்ற முதல் தொகையுடன் தொடர்புபட்ட கொடுகடன் இடர்நேர்வு மற்றும் ஏனைய அடிப்படை கடன்வழங்கல் இடர்நேர்வுகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கான கைமாறு எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

ஒரு கடன் வழங்கல் உடன்படிக்கையினுள் காணப்படும் வட்டியினது மிக முக்கியமான கூறாகக் காணப்படுவது பணத்தின் காலப்பெறுமதி மற்றும் கொடுகடன் இடர்நேர்வாகும். முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவின் மதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்கு, வங்கியானது மதிப்பாய்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டிருக்கும் நாணயம் மற்றும் வட்டிவீதம் தீர்மானிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதி போன்ற தொடர்புடைய காரணிகளைக் கருத்திற்கொள்கின்றது.

மாறாக, அடிப்படையான கடன்வழங்கல் ஒழுங்கிற்கு தொடர்புபடாத ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களின் இடர்நேர்வு அல்லது தளம்பல்களுக்கு குறைந்தபட்ச வெளிப்படுத்துகையை விட அதிகமாக தேவைப்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள் வெளிநின்ற தொகை மீதான முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவுகளைக் கொண்ட ஒப்பந்த ரீதியான

காசுப்பாய்ச்சலை தோற்றுவிக்காது. அத்தகைய சந்தர்ப்பங்களில், நிதியியல் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

**மீள்வகைப்படுத்தல்**

நிதியியல் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்காக வங்கி அதன் வியாபார மாதிரியை மாற்றியதற்கு பின்னரான காலப்பகுதி தவிர, நிதியியல் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

**5.3.3 விலக்குதல்**

**நிதியியல் சொத்துக்கள்**

வங்கியானது நிதியியல் சொத்திலிருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்தின் உடமையினது குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் மாற்றல் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலினை பெறுவதற்கான உரிமையை மாற்றல்செய்யும் போது அல்லது வங்கி உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமல் அல்லது மாற்றல் செய்யாமல் இருப்பதுடன் நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டை கொண்டிருக்காத போது நிதியியல் சொத்தொன்றினை அங்கீகரிப்பிலிருந்தும் விலக்குகின்றது.

நிதியியல் சொத்தொன்றின் விலக்கலின்போது சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கும் (அல்லது விலக்கப்படும் சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதிக்கும்) (i) பெறப்பட்ட விலை (பெறப்பட்ட ஏதாவது புதிய சொத்திலிருந்து அனுமானிக்கப்பட்ட ஏதாவது பொறுப்பை கழித்தவை உள்ளடங்கலாக) மற்றும் (ii) ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பங்குரிமை முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள், அத்தகைய பிணையங்கள் விலக்கப்படும்போது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படமாட்டா. வங்கியினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட, விலக்கல்களுக்கு தகுதியான மாற்றல் செய்யப்படும் நிதியியல் சொத்தில் இருக்கும் ஏதாவது வட்டியானது தனியான சொத்தொன்றாக அல்லது பொறுப்பொன்றாக காட்டப்படுகின்றது.

வங்கியானது கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதன் மூலம் அதன் நிதியியல் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சொத்துக்களை மாற்றல் செய்கின்றது. எனினும், அது ஒன்றில் மாற்றல் செய்யப்படும் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வைத்துக்கொள்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்கள் விலக்கப்படுவதில்லை. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு உதாரணங்களாக பிணையங்களின் கடன்வழங்கல் மற்றும் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை குறிப்பிடலாம். வங்கியானது நிதியியல் சொத்தொன்றின் உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமலோ அல்லது மாற்றல் செய்யாமலோ இருந்து அச்சொத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதியிலான மாற்றங்களுக்கு அது வெளிப்படுத்தப்படும் அளவினால் தீர்மானிக்கப்பட்டவாறு அதன் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு வங்கி தொடர்ந்து அங்கீகரிக்கும்.

**நிதியியல் பொறுப்புக்கள்**

நிதியியல் பொறுப்பின் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் இடைநிறுத்தப்படுகையில் அல்லது நிறுத்தப்படுகையில் அல்லது காலாவதியாகையில் வங்கி நிதியியல் பொறுப்பொன்றினை அங்கீகரிப்பில் இருந்தும் விலக்கும்.

**5.3.4 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு**

இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத பின்வரும் நிதியியல் சாதனங்கள் தொடர்பிலான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான நட்ட படிகளை வங்கி அங்கீகரிக்கின்றது.

- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்
- பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள்
- பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்

பங்குரிமை முதலீடுகள் தொடர்பில் பெறுமதியிழப்பு அங்கீகரிக்கப் படுவதில்லை.

வங்கியானது முதலீட்டுத் தரத்திலுள்ள (Baa3/BBB- மற்றும் மேற்பட்ட தரமிடப்பட்டவை) முதலீடுகளுக்காக 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்குச் சமமான தொகையில் நட்டப்படியை அளவிடுகின்றது. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் வகைப்படுத்தப்படும் வங்கியின் பெரும்பாலான முதலீடுகள் Baa3/BBB- தரத்திற்கு மேற்பட்டவையாகவே இருக்கின்றன. 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் "கட்டம் 1 நிதியியல் சாதனங்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகரிப்பின் போது முதலீட்டுத் தரத்திற்கு கீழ் இருக்கும் அல்லது Baa3/BBB- இற்கு கீழ் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வு தேய்வடையும் அல்லது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகிய சாதனங்களுக்கு ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படுகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்பட்டு கொடுகடன் பெறுமதியிழக்காத நிதியியல் சாதனங்கள் 'கட்டம் 2 நிதியியல் சாதனங்கள்' எனக் குறிப்பிடப்படுகின்றன. "கட்டம் 3 நிதியியல் சாதனங்கள்" எனக் குறிப்பிடப்படும் கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சாதனங்களுக்கும் ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படும்.

**எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் அளவீடு**

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டின் பொறிமுறையானது முக்கிய கூறுகளுடன் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

**தவணை தவறுதல் நிகழ்தகவு:** தவணை தவறுதல் நிகழ்தகவு என்பது தரப்பட்ட காலப்பகுதியொன்றில் தவணை தவறுதல்களின் சாத்தியத்தன்மையின் மதிப்பீடொன்றாகும். வசதியானது முன்னர் விலக்கப்படாமலிருந்து இன்னமும் சொத்துப்பட்டியலில் காணப்படுமாயின், தவணை தவறுதலானது மதிப்பிடப்படும் காலப்பகுதியில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மாத்திரம் ஏற்பட முடியும். வங்கியானது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் பதிவழிக்கப்பட்ட செலவிலான அதன் அனைத்து வெளிநாட்டு முதலீடுகளுக்காக புளூம்பேர்க்கிடமிருந்தான வழங்குநர்கள் அல்லது இணைத்தரப்பினரின் குறிப்பிட்ட பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துவதுடன், பங்குரிமை தவணை தவறல் நிகழ்தகவு காணப்படாத சந்தர்ப்பத்தில் தரப்பட்ட அறிக்கையிடல் திகதியில் புளூம்பேர்க் பொதுவான தவணை தவறல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட வழங்குநர் அல்லது இணைத்தரப்பின் தரமிடலுக்கு பிரயோகிக்கத்தக்க தவணை தவறல் நிகழ்தகவைப் பயன்படுத்துகின்றது.

**செலுத்தத் தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் அளவு:** செலுத்தத் தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தன்மையின் அளவு என்பது ஒப்பந்தத்தின் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் மூலம் அட்டவணையிடப்பட்டுள்ள முதல் மற்றும் வட்டியின் மீள்கொடுப்பனவு, ஒப்புக்கொண்ட வசதிகள் மீது எதிர்பார்க்கப்படும் குறைப்புக்கள் மற்றும் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தான அட்டுறு வட்டி போன்றவை உள்ளடங்கலாக அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் வெளிப்படுத்துகையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கவனத்திற்கொண்டு எதிர்கால தவணை தவறுதல் திகதியில் வெளிப்படுத்துகையின் மதிப்பீடொன்றாகும்.

**இழப்பினைத் தருகின்ற தவணை தவறுதல்கள்:** இழப்பினைத் தருகின்ற தவணை தவறுதல்கள் என்பது குறிப்பிட்டதொரு நேரத்தில் தவணை தவறுதல் ஒன்று இடம்பெறுவதினால் ஏற்படும் இழப்பின் மதிப்பீடொன்றாகும். இது வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலுக்கும் ஏதாவது பிணையத்திலிருந்து தேறப்படும் தொகையுட்பட கடன்வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்க்கும் தொகைக்குமிடையிலான வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். வங்கியானது நிதியியல் சொத்துக்களின் வேறுபட்ட வகைகளுக்கு இழப்பினைத்தருகின்ற தவணைத் தவறல்களைப் பிரயோகிக்கையில் அவற்றின் வங்கிக்கான இடர்நேர்வு வெளிப்படுத்துகையின் அடிப்படையில் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையைக் கொண்டிருக்கின்றது.

**பொருளியல் காரணி சீராக்கம்:** வங்கியானது சுழற்சி முழுவதுக்குமான தவணை தவறுதல் நிகழ்தகவிலிருந்து குறிப்பிட்ட நேரத்திலுள்ள தவணை தவறுதல் நிகழ்வுகளுக்கு மாற்றுவதற்காக பொருளியல் காரணி சீராக்கத்தைப் பயன்படுத்துவதுடன் தவணை தவறுதல் நிகழ்தகவினை சீராக்கும் முக்கிய பொருளியல் காரணியாக வங்கி மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவைப் பயன்படுத்துகின்றது.

**கொடுகடன் இடர்நேர்விலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பை மதிப்பிடல்**

வங்கியானது ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் தவணை தவறுதல் நிகழ்தகவு இரட்டிப்பாகும் போதும் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் BBB- இற்குக் கீழான ஏதாவது தரமிடலில் கீழ்நோக்கிய திருத்தம் மேற்கொள்ளப்படுகையிலும் நிதியியல் சாதனம் குறிப்பிடத்தக்க அதிகரித்த இடர்நேர்வைக் கொண்டிருப்பதாகக் கருதுகின்றது. இது தவணை தவறுதல் நிகழ்தகவின் இரண்டு மடங்கு அல்லது அதற்கு அதிகமான அதிகரிப்பை தோற்றுவிக்கும் Baa3 இலிருந்து Ba1 இற்கான மிகச் சிறிய கீழ்நோக்கிய தரமிடல் உட்பட, முதலீட்டுத்தரத் தரமிடலிருந்து முதலீட்டுத் தரமல்லாத கீழ்நோக்கிய தரமிடல்களின் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**கொடுகடன் பெறுமதியிழந்த நிதியியல் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பதிவழிக்கப்பட்ட செலவிலும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலும் கொண்டு செல்லப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதங்கள் கொடுகடன் பெறுமதியிழந்திருக்கின்றனவா ("கட்டம் 3 நிதியியல் சொத்துக்கள்" எனக் குறிப்பிடப்படும்) என்பது தொடர்பில் வங்கி மதிப்பிடும். ஒரு நிதியியல் சொத்தானது, நிதியியல் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களுக்கு தீங்கான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்று அல்லது மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் "கொடுகடன் பெறுமதி இழந்ததாக" கருதப்படும். நிதியியல் சொத்தொன்று கொடுகடன் பெறுமதி இழந்தற்கான சான்றுகள் பின்வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கும்:

- கடன்பெறுநர் அல்லது வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடு;
- தவணை தவறல் அல்லது காலந்தவறல் நிகழ்வு போன்ற ஒப்பந்த மீறல்;
- கடன்பெறுநர் வங்குரோத்துக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள்கட்டமைப்பிற்குள்ளாகப் போகிறார் என சாத்தியமாகத் தெரிதல்.

**நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான படியை சமர்ப்பித்தல்**

எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான நட்டப்படியானது நிதியியல் நிலைமைக்கூற்றில் பின்வருமாறு காட்டப்படுகின்றது:

- பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள்: சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்தான குறைப்பொன்றாக;
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும் முதலீடுகள்: நிதியியல் நிலைமைக்கூற்றில் நட்டப்படி அங்கீகரிக்கப்படுவதில்லை ஏனெனில் இச்சொத்துக்களில் கொண்டுசெல்லல் பெறுமதி அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். எனினும், நட்டப்படி வெளிப்படுத்தப்படுவதுடன் இது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது;
- கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்: பொதுவான ஏற்பாடொன்றாக.

**பதிவழிப்பு**

நிதியியல் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் பகுதியொன்றினையோ அறவிடுவதற்குப் போதுமான எதிர்பார்ப்புக்கள் இல்லாதவிடத்து கடன்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் பதிவழிக்கப்படுகின்றன (ஒன்றில் பகுதியளவில் அல்லது முழுமையாக). பதிவழித்தலுடன் தொடர்புபட்ட தொகையை மீளச்செலுத்துவதற்கு போதுமான காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய வருமான மூலங்களையோ அல்லது சொத்துக்களையோ கடன்பெறுநர் கொண்டிருக்கவில்லை என வங்கி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இது பொதுவான வழமையாகும். இம்மதிப்பீடானது தனிப்பட்ட சொத்து மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னர் பதிவழிக்கப்பட்ட தொகைகளின் அறவிடலானது இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றின் 'நிதியியல் சாதனங்கள் மீதான பெறுமதி இழப்பு நட்டம்' இல் உள்ளடக்கப்படுகின்றன.

**5.4 இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்**

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவையினுள் வகைப்படுத்தப் பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் "இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பின் போது தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் அவை இடம்பெறும் பொழுது அங்கீகரிக்கப்படுகின்றன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

பிணையம் இப்பொழுதும் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம்/(நட்டமானது) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ/ நட்டமோ தேறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது "தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/ (நட்டமாக)" அறிக்கையிடப்படும்.

**5.5 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்**

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடுகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியாக குறித்துரைக்கப்பட்ட

பெறுதியல்லா முதலீடுகள் அல்லது நிதியியல் சொத்துக்களின் ஏனைய வகையொன்றாக வகைப்படுத்தப்படாதவையாகும். ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் பங்குரிமைப் பிணையங்களையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான வெளிநாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக்கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள முதலீடுகளின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாக அல்லது குறைவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் கிடைப்பனவின்மை காரணமாக தொடர்பான நிறுவனங்களின் தேறிய சொத்துக்களின் அடிப்படையில் பெறுமதியிடப்படுகின்றன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகளிலான சந்தைப் பெறுமதி மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் நேரடியாக பங்குரிமையில் (ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்) அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீடு விற்கப்படும் வரை, சேகரிக்க அல்லது வேறுவகையில் அகற்றப்படும் வரை அல்லது முதலீடு பெறுமதியிழக்கப்பட்டது என்று தீர்மானிக்கப்படும் வரை நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படுவதுடன் முன்னர் கூறப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று இடம்பெறும் நேரத்தில், அகற்றப்படுகையில் வருமானக்கூற்றுக்கு சுழற்சிப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்களின் விதிவிலக்குடன், முன்னர் பங்குரிமையில் அறிக்கையிடப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது பயனுறு வட்டி முறைமையைப் பயன்படுத்தி வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**5.6 பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள்**

ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிக்கும் பொருட்டு நிதியியல் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடனான வியாபார மாதிரியினுள் இருப்பதுடன் ஒப்பந்த நியதிகள் முதல் மற்றும் வட்டியை மட்டும் கொண்ட காசுப்பாய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இச்சாதனங்கள் பின்னர் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

**5.7 பெறுதிச் சாதனங்கள்**

வங்கி, குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்ற பெறுதிகளை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. பெறுதிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சீர்மதிப்புப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும். பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் “தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபத்தில்/ (நட்டத்தில்)” உள்ளடக்கப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான தரவை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டை (1 நாள் வேறுபாடு) “தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/ (நட்டம்)” ஆக அங்கீகரிக்கும். அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

**5.8 பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி.) தொடர்புடைய நிலுவைகள்**

வங்கியானது இலங்கை அரசின் வைப்பாளர் என்ற அடிப்படையைக் காட்டிலும் அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றது. அந்த அடிப்படையிலேயே ப.நா.நிதியத்துடனான வங்கியின் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதிய அனுமதிப் பங்கு சொத்தும் சிறப்பு எடுப்பனவு உரிமை வைத்திருப்பும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதுடன் ஏனைய அனைத்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்மதிப்பீட்டிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

**5.9 காசும் காசுக்குச் சமமானவைகளும்**

காசும் காசுக்கு சமமானவையும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள காசு, குறுங்கால வைப்புகள் மற்றும் சந்தைப் பெறுமதி மாற்றங்களால் குறிப்பிடத்தக்க இடர்நேர்வில்லாததும் மூன்று மாதங்களுக்கு குறைந்த ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட உயர்ந்தளவு திரவத்தன்மையான நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை குறுங்கால கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படுகின்றன. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நாணயக் கொள்கைப் பொறிமுறையொன்றாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும்

திறைசேரி முறிகளின் கொள்வனவை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந்நிதியியல் கூற்றில் 45 மற்றும் 46ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வெளியிடுகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது. இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளூடாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகள் அல்லது மத்திய வங்கியின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் என்பன வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்காக வழங்குநர்கள் மற்றும் ஊழியர்கள் என்போரை உள்ளடக்கிய பல்வேறுபட்ட பணம் கொடுபட வேண்டியோருக்கு காசு பகிர்ந்தளிக்கிறது. இது ஒன்றில் சுற்றோட்டத்திலுள்ள நாணயப் பொறுப்புடன் அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் வைப்புக்களுடன் சேர்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு நோக்கங்களுக்கான நாணயப் பயன்பாட்டின் அத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளிப்பாய்ச்சலில் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, காசு/ கொடுப்பனவுக் கட்டளைகளின் வெளிப்பாய்ச்சல் நீங்கலான, காசு மற்றும் காசிற்குச் சமமானவற்றை உள்ளடக்கியுள்ளன.

### 5.10 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது. மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டு கொடுக்கல்வாங்கல்களும் அட்டுறு வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி பதிவழிக்கப்பட்ட செலவில் அறிக்கையிடப்படுகின்றன.

### 5.11 துணைநில் வைப்பு மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகள்

2014 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது [முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி (மீள்கொள்வனவு)] பிணை ஒதுக்கங்கள் இல்லாத "தூய வைப்புக்கள்" ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை தூய வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் துணைநில் வைப்பு வசதியின் நாளாந்த அடிப்படையில் முதலிடுகின்றன.

துணைநில் கடன்வழங்கல் வசதியின் [முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு (நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி)] நடைமுறைகள் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றதுடன் இரண்டும் நிதியியல் நிலைமைக்கூற்றில் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 5.12 இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்

வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கீழ் சந்தையிலுள்ள மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொள்ளும் பொருட்டு காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குகின்றது. வழங்கப்படும் பிணையங்கள் பொறுப்புகளாகப் பதிவு செய்யப்படுகின்றன.

### 5.13 இலங்கை அரச பிணையங்கள்

இலங்கை அரச பிணையங்கள் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரச பிணையங்களிலான முதலீடுகள் நிதியியல் நிலைமை கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் பதியப்படுகிறது.

### 5.14 அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்ட நேரடி தற்காலிக முற்பணங்களை அரசிற்கான கடன்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவை பின்னர் பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன.

### 5.15 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

### 5.16 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன் வழங்குதலும்

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கீழ் காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது பிணையங்களைத் திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத கடன்பட்ட பிணையங்களினது சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட தரகு அட்டுறு அடிப்படையில் செலவிடப்படுகின்றது.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றல் செய்யப்பட்டால் மட்டுமே நிதியியல் நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

**5.17 அலுவலர்களுக்கான கடன்கள்**

வங்கியின் அலுவலர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இக்கடன்கள் ப.நி.அ.நி. 9 இன்படி "கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியில்" பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம்** - நிறையேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதம் மீதான நீண்ட காலப் பணவீக்க இலக்கிடலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு இடர்நேர்வுக் கட்டணத்திற்காக 1 சதவீதத்தைச் சேர்த்த வீதம் கழிவு வீதமாகப் பயன்படுத்தப்படுவதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலுள்ள வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் பதிவழிக்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக்கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் ஈட்ட முடியுமாயிருக்கும் வருமானத்தைப் பதிவு செய்யும் பொருட்டு, அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சீர்மதிப்பு பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01 ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

**5.18 தங்கம்**

பன்னாட்டு ஒதுக்கத்தின் உள்ளடக்கத்தினைக் குறித்துரைக்கின்றதான நாணய விதிச் சட்டத்தின் 67(1) ஆம் பிரிவு மேற்படி ஒதுக்கத்தின் ஒரு பகுதியாக இ.ம.வ. தங்கத்தை வைத்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 67 (2) ஆனது, நாணயச் சபை, குறைந்ததொரு அணு ஒதுக்காவது தங்க வடிவிலோ அல்லது மத்திய வங்கியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலகுவாக தங்கமாக மாற்றக்கூடிய நாணய வடிவிலோ வைத்திருப்பதனைத் தேவைப்படுத்துகின்றது. மேற்படி தங்கமானது பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருப்பதோடு பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படாததால் தங்கமானது சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுக்கு மாற்றப்படுகின்றன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.

**5.19 நாணய இருப்பு**

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வழங்கப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்திற்கு வழங்கப்பட்ட புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வழங்கப்படும் வேளையில் வருமானக்கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு படி மேற்கொள்ளப்படுகின்றது.

**5.20 ஏனைய இருப்புக்கள்**

ஏனைய இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயமானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

**5.21 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

காணி மற்றும் கட்டடம் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம், கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் பெறுமதி இழப்பு கழித்த தொகையில் கூறப்பட்டுள்ளது. அங்கீகரிப்பு பிரமாணம் பூர்த்தி செய்யப்படும் பொழுது இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவினங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது.

காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்படும் திகதியில் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து பின்னர் ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வுகளும், பின்னர் ஒன்றுசேர்ந்த பெறுமதி இழப்பு நட்டங்களும் கழித்த தொகையான மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

இறையிலி காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது.

| சொத்தின் வகை | பயனுள்ள ஆயுட்காலம் |
|---|---|
| இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகள் அல்லது குத்தகைக் காலம் இவற்றில் குறைந்தது |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| 2014 இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உந்து ஊர்திகள் | 10 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் | 4 ஆண்டுகள் |
| ஏனையவை | 3 ஆண்டுகள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் பெறுமதி இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

வங்கியின் காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும். எந்த மீள்மதிப்பீட்டு மிகையும் வருமானக்கூற்றிலே முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியை மறுதலையாக்கும் சந்தர்ப்பம் நீங்கலாக நிதியியல் நிலைமைக் கூற்றின் பங்குரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு வரவு வைக்கப்படும். அவ்வாறு மறுதலையாக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையானது, அப்பற்றாக்குறை அதே சொத்தின் முன்னைய மிகையை நேரடியாக எதிரீடு செய்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள மதிப்பீட்டு மிகையை நேரடியாக எதிரீடு செய்யும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. விற்கப்படுகையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், பிடித்துவைக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விடயமொன்று விற்கப்படுகையில் அல்லது அதன் பாவனை அல்லது விற்பனையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அது அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனைப் பெறுகைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்பட்ட ஆண்டின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. பொருத்தமானவிடத்து சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட் காலங்கள் மற்றும் முறைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

மூலதன நடப்பு வேலைகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டிடங்கள், பாரிய பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முறைமை அபிவிருத்திகளின் கட்டுமானத்தின் போது நேரடியாக ஏற்படும் மூலதனத்தன்மை கொண்ட செலவுகளாகவும் மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

### 5.22 குத்தகைகள்

ஒப்பந்தமொன்றை ஆரம்பிக்கும் போது வங்கியானது அவ்வொப்பந்தம் குத்தகையா அல்லது அவ்வொப்பந்தம் குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பிடுகின்றது. ஒரு ஒப்பந்தமானது, வெகுமதி ஒன்றிற்கு பரிமாற்றாக, குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குக் கொண்டிருக்குமாயின், அது குத்தகையாக அல்லது குத்தகையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். ஒரு ஒப்பந்தமானது குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு, வங்கியானது ப.நி.அ.நி 16இலுள்ள குத்தகையின் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்துகின்றது.

#### குத்தகையாளராக வங்கி செயற்படுதல்

| தேய்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | 78,113 | - |
| தேய்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | (84,788) | - |
| சம்பள உயர்வு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 103,400 | 148,414 | 7,419 | 2,619 | 53,383 | 12,890 | - |
| சம்பள உயர்வு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (101,255) | (136,699) | (7,271) | (2,565) | (49,275) | (12,233) | - |
| மருத்துவச் செலவு பணவீக்கத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | - | 183,813 |
| மருத்துவச் செலவு பணவீக்கத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | - | - | - | - | - | - | (168,811) |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "+" இன் மாற்றத்தின் தாக்கம் | 2,002,827 | - | 512,871 | 92,252 | - | - | - |
| ஓய்வூதிய அதிகரிப்பு வீதத்தில் "-" இன் மாற்றத்தின் தாக்கம் | (1,877,358) | - | (474,960) | (85,220) | - | - | - |

## 33. நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்

நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் செலுத்த வேண்டிய குத்தகைகள், கொடுகடன் உத்தரவாதம் மீது பிற்போடப்பட்ட வருமானம், கணக்குகளில் செலுத்தத்தக்க நிலுவைகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள் மற்றும் மீளளிக்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| குத்தகைப் பொறுப்பு (குறிப்பு 33.1.4) | **61,144** | 52,038 |
| கொடுகடன் உத்தரவாதங்களுக்கான ஏற்பாடு (குறிப்பு 33.2) | **1,117,492** | 162,628 |
| ஏனைய பொறுப்புக்கள் | **2,848,713** | 1,138,707 |
| | **4,027,349** | 1,353,373 |

### 33.1 குத்தகைகள்

வங்கியானது 2 இலிருந்து 30 வரையான ஆண்டு கால குத்தகைக் காலப்பகுதிகளைக் கொண்ட காணி மற்றும் கட்டடங்களை குத்தகைக்கு எடுத்திருப்பதுடன் இக்குத்தகைகளில் சில அத்திகதிக்குப் பின்னர் புதுப்பிக்கக்கூடிய தெரிவைத் கொண்டிருக்கின்றன. சில குத்தகைகளைப் பொறுத்தவரையில், சந்தை வாடகைகளைப் பிரதிபலிப்பதற்காக ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கொரு தடவை கொடுப்பனவுகள் மீள இணங்கப்படுகின்றன. வங்கி குத்தகையாளராக இருக்கும் குத்தகை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

#### 33.1.1 சொத்துப் பாவனை உரிமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் காட்டப்பட்டுள்ள குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பான சொத்துப் பாவனை உரிமை **(குறிப்பு 20)**.

#### 33.1.2 வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| குத்தகைப் பொறுப்பு மீதான வட்டி | **5,482** | 6,311 |
| சொத்துப் பாவனை உரிமையின் பதிவழிப்பு | **6,501** | 6,643 |

#### 33.1.3 காசுப்பாய்ச்சல் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| குத்தகைகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் | **5,489** | 8,049 |

#### 33.1.4 குத்தகைப் பொறுப்புக்கள்

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | **52,038** | 48,938 |
| ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **9,114** | - |
| ஆண்டுகாலப்பகுதியில் மீள்அளவீடு | **-** | 4,838 |
| ஆண்டுகாலப்பகுதியிலான வட்டிக் கட்டணங்கள் | **5,481** | 6,311 |
| ஆண்டுகாலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் | **(5,489)** | (8,049) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **61,144** | **52,038** |

#### 33.1.5 குத்தகைப் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| நடைமுறையல்லாத | **58,815** | 49,460 |
| நடைமுறை | **2,329** | 2,578 |
| திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை | **61,144** | **52,038** |

#### 33.1.6 ஒப்பந்த ரீதியான கழிவிடப்படாத காசுப்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| ஒரு ஆண்டிற்குக் குறைவானவை | **8,359** | 7,990 |
| ஒன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டவை | **20,836** | 14,580 |
| ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | **130,157** | 135,219 |
| **மொத்தக் கழிவிடப்படாத குத்தகைப் பொறுப்புக்கள்** | **159,352** | **157,789** |

### 33.2 கொடுகடன் உத்தரவாதங்களுக்கான ஏற்பாடு

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் மீதான பிற்போடப்பட்ட வருமானம் | **105,760** | 162,628 |
| கொடுகடன் உத்தரவாதங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு **(குறிப்பு 33.2.1)** | **1,011,732** | - |
| **திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை** | **1,117,492** | **162,628** |

#### 33.2.1 கொடுகடன் உத்தரவாதங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2021 நிலை 1 ரூ. 000 | 2020 நிலை 1 ரூ. 000 |
|---|---|---|
| சனவரி 1இலுள்ளவாறான நிலுவை | **-** | - |
| ஆண்டு காலப்பகுதியில் கட்டணம் | **1,011,732** | - |
| **திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை** | **1,011,732** | **-** |

## 34. பங்குரிமை மூலதனம்

**பங்குரிமை மூலதன விடயங்களின் தன்மை**

### 34.1 மூலதனம் நிதியம்

**பங்களிப்பு மூலதனம் -** நாணய விதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின்படி மூலதனக் கணக்கு, வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50.00 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ.50.00 பில்லியனுக்கு அதிகரித்தது.

**34.2 நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கு**

இவ்வொதுக்கமானது ப.க.நி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின்படி மீள்மதிப்பீட்டு மிகையினால் உருவாக்கப்பட்டுள்ளது.

**34.3 ஏனைய ஒதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:**

**i) பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு** - பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு என்பது, நாணய விதிச் சட்டத்தின் 41ஆம் பிரிவின்படி நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்காகும். இதன்படி, தங்கம் அல்லது வெளிநாட்டு நாணயங்களிலுள்ள மத்திய வங்கியின் தேறிய சொத்துக்களும் பொறுப்புக்களும் மீளக் கணிப்பிடப்படுவதனூடாக உருவாகின்ற தேறல் செய்யப்படாத இலாபம் அல்லது நட்டம் வங்கியின் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படலாகாதென்பதுடன், அதற்குப் பதிலாக இவ்விலாபம் அல்லது நட்டம் பன்னாட்டு மீள் மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

**ii) சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு** - வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான அசைவிற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலிருந்து கிடைக்கும் விலை மதிப்பீட்டு இலாபங்களை மாற்றல் செய்வதற்காக 2003 சனவரி 30ஆம் நாளன்று நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு ஏற்படுத்தப்பட்டது. நாணயச் சபையானது இந்த ஒதுக்கினை இலங்கை மத்திய வங்கியின் மொத்த வெளிநாட்டு ஒதுக்கில் உயர்ந்தபட்சம் 10 சதவீதத்திற்கு கட்டியெழுப்புவதற்கு தீர்மானித்தது.

மேலும், 2016 பெப்புருவரி 29இல் திகதியிடப்பட்ட வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை தொடர்பில் பிரேரிக்கப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் MB/DG(W)/7/1/2016 இற்கமைய, நாணயச் சபையானது அவசியம் எனக் கருதும் பட்சத்தில், குறிப்பிடத்தக்க தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டத்தின் காரணமாக பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் எதிர்மறையாகக் காணப்படுமிடத்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலிருந்து பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றல் செய்யமுடியும்.

2019ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட சந்தைப்படியான இலாபத்தை கருத்திற்கொண்டு, 2020 பெப்புருவரி 26ஆம் திகதியிடப்பட்ட நாணயச் சபையின் தீர்மானம் BP MB/F/6/28/2020இன்படி ரூ.43.36 பில்லியன் தொகை பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களிலிருந்து சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டது.

**iii) ஏனைய ஒதுக்குகள்** - பொது ஒதுக்கு, கட்டட ஒதுக்கு மற்றும் கொடுகடன் உத்தரவாத ஒதுக்கு என்பவற்றை உள்ளடக்குகிறது. பொது ஒதுக்கு, நாணயச் சபையினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் வருவாய்களிலிருந்து வேறாக வைத்திருக்கப்படும் தொகையினை உள்ளடக்குகின்றது.

**iv) ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்பு இலாபம்/(நட்டம்):** ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்கள் மற்றும் அலகு முதலீடுகளின் மீள்மதிப்பீடு தொடர்பான தேறல் செய்யப்படாத இலாபங்களும் நட்டங்களும் இவ்வொதுக்கிற்கு மாற்றப்படுகின்றன.

**v) அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கடன்கரைப்பு நிதியம்** - அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதற்காக பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந்நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

**vi) ஓய்வூதிய நிதிய ஒதுக்கு** - வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் பாதிப்பினால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை உருவாகுமாயின், அதனை ஈடுசெய்யும் பொருட்டு 2007ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து மேலதிகமாக ரூ.3 பில்லியன் மாற்றப்பட்டதன் மூலம் இவ்வொதுக்கு உருவாக்கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து மேலும், ரூ.1 பில்லியன் தொகை இவ்வொதுக்கத்திற்கு மாற்றப்பட்டது. 2015 யூனில் நாணயச் சபை பத்திர இலக்கம் MB/HR/11/12/2015 இன்படி புதிய ஓய்வூதியத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஓய்வூதிய நிதிய ஒதுக்கிலிருந்து, புதிய ஓய்வூதிய பொறுப்புக் கணக்கிற்கு ரூ.2 பில்லியன் மாற்றல் செய்யப்படடது.

**vii) தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கு** - குறிப்பாக தொழில்நுட்ப மேம்பாட்டுத் தேவைப்பாடுகள், நவீனமயமாக்கல் அல்லது இ.ம.வங்கியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொதுப்பேரேடு, அ.நே.மொ. தீர்ப்பனவு முறை, திறைசேரி முகாமைத்துவ முறைமை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை ஆகிய தகவல் தொழில்நுட்ப முறைமையைத் தரமுயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இவ்வொதுக்கு 2007 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து உருவாக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு மாச்சு மாத காலப்பகுதியில் 2017ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து ரூ.2.0 பில்லியன் இவ்வொதுக்கிற்கு மேலதிகமாக மாற்றப்பட்டது.

**viii) மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம்** - 2010ஆம் ஆண்டுப்பகுதியில், நடுத்தர மற்றும் நீண்ட கால அபிவிருத்தி நோக்கங்களுக்காக வங்கி இலாபத்திலிருந்து உருவாக்கிய நிதியத்தின் மூலம் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாகாணங்களுக்கு ரூ.2.90 பில்லியன் பெறுமதியான இலாபத்திலிருந்தான நிதியத்தின் மூலம் மீள்நிதியிடல் கொடுகடன் திட்டமொன்றினை வங்கி ஆரம்பித்தது. அத்தகைய கடன்கள் இலங்கை வங்கியூடாகவும் மக்கள் வங்கியூடாகவும் வழங்கப்பட்டன. 2019 ஏப்பிறல் காலப்பகுதியில் மாகாண அபிவிருத்தி கொடுகடன் திட்டம் நிறைவடைந்தமையினால் நிலுவையான ரூ.2.90 பில்லியன் நடுத்தர மற்றும் நீண்ட கால ஒதுக்கிற்கு மாற்றப்பட்டது.

**ix) சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கு** - இவ்வொதுக்கு நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து ரூ.2 பில்லியனை மாற்றல் செய்ததன் மூலம் 2014இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் ரூ.1 பில்லியன் வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் சௌபாக்கியா கடன் திட்டம், வடக்கின் எழுச்சிக் கடன் திட்டம் (கட்டம் II), கிழக்கில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குதல் (கட்டம் II) மற்றும் வடக்கு, கிழக்கில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தல் என்பனவற்றின் மீளமைத்தலுக்கு ஆதரவளிப்பதற்காக ஒதுக்கப்பட்டது. எஞ்சிய ரூ.1 பில்லியன் வர்த்தக வங்கிகளின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலுக்கு உதவியளிப்பதற்கான சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தினை நடைமுறைக்கிடுவதற்காக ஒதுக்கப்பட்டது.

**x) தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களினை நிதியிடும் நோக்கத்திற்கான ஒதுக்கு** - 2016.12.16ஆம் திகதியிடப்பட்ட MB/F/39/20/2016ஆம் இலக்க நாணயச் சபையின் தீர்மானத்திற்கமைய ஆயுட்கால நட்டங்கள் மற்றும் நன்மைச் செலவுகள் காரணமாக பங்குரிமை மூலதனத்திற்கு எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கும் போது அதனை ஈடுசெய்ய தேவையான அளவு பகிரக்கூடிய இலாபம் இருக்குமெனில் கொடுக்கப்பட்ட ஆண்டின் (2016ஆம் ஆண்டிலிருந்து) உண்மையான நன்மைச் செலவுகளின் 50 சதவீதத்தினை குறித்த ஒதுக்கத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டது. 2020ஆம் ஆண்டிற்குரிய பகிரத்தக்க இலாபங்களிலிருந்து இந்நிதியத்திற்கு 2021 மாச்சில் ரூ.757.61 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

**xi) நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கு** - 2020 ஏப்பிறல் 15ஆம் திகதியிடப்பட்ட MB/FD/11/14/2020 இலக்க நாணயச் சபைத் தீர்மானம் மற்றும் 2020 யூன் 11ஆம் திகதியிடப்பட்ட MB/

RD/19/28/2020 இலக்க நாணயச் சபைத் தீர்மானங்களுக்கமைய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காக வங்கியினால் முன்னெடுக்கப்படும் மீள்நிதியிடல் கடன்வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக, பொது ஒதுக்கு மற்றும் கட்டட ஒதுக்கத்திலிருந்து ரூ.15.46 பில்லியன் சிறப்புக் கொடுகடன் உத்தரவாத திட்ட ஒதுக்கிலிருந்து ரூ.1.96 பில்லியன், தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கிலிருந்து ரூ.3.00 பில்லியன் மற்றும் தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களை நிதியிடும் நோக்கத்திற்கான ஒதுக்கிலிருந்து ரூ.4.33 பில்லியன் 2020 காலப்பகுதியில் நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கிற்கு மாற்றப்பட்டன.

ஏனைய ஒதுக்கங்களிலான அசைவுகள் பின்வருமாறு:

| | நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கு | சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | ஏனைய ஒதுக்கங்கள் | சிறப்புக் கொடுகடன் உத்தரவாதத் திட்ட ஒதுக்கம் | அ.நே. மொ. தீ. கடன் கரைப்பு நிதியம் | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | ஏனைய அனைத்தை உள்ளடக்கிய வருமானத்திலூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/ (நட்டம்) | ஓய்வூதிய நிதிய ஒதுக்கம் | தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கம் | தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் நிதியிடல் தேவைகளுக்கான ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **2021 சனவரி 01இல் உள்ளவாறு** | 29,577,739 | 63,463,145 | 1,142,018 | 40,000 | 2,870,918 | 147,994,227 | 12,694,596 | 21,483,407 | 2,000,000 | - | 745,973 | 282,012,023 |
| அ.நே.மொ.தீ. கடன்கரைப்பு நிதியத்திற்கு மாற்றல் | - | - | - | - | 369,008 | - | - | - | - | - | - | 369,008 |
| இலாபங்களைப் பொது ஒதுக்கிற்கு மாற்றல் | - | - | 2,859,208 | - | - | - | - | - | - | - | - | 2,859,208 |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டத்தினை மாற்றல் | - | - | - | - | - | 34,041,805 | - | - | - | - | - | 34,041,805 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | - | - | - | - | - | - | - | (16,108,192) | - | - | - | (16,108,192) |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல் | - | 23,574,367 | - | - | - | - | - | - | - | - | - | 23,574,367 |
| தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்ட நிதியிடலுக்கான ஒதுக்கிற்கு மாற்றல் | - | - | - | - | - | - | - | - | - | - | 757,613 | 757,613 |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்கள் | - | - | - | - | - | - | - | (11,641,542) | - | - | - | (11,641,542) |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கம் - அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை முதலீடுகள் | - | - | - | - | - | - | - | 55,862 | - | - | - | 55,862 |
| விற்பனைகள் மீதான தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டு இலாபம் | - | - | - | - | - | - | (791,926) | - | - | - | - | (791,926) |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **29,577,739** | **87,037,512** | **4,001,226** | **40,000** | **3,239,926** | **182,036,032** | **11,902,670** | **(6,210,465)** | **2,000,000** | **-** | **1,503,586** | **315,128,226** |

**35. இலாபப் பகிர்ந்தளிப்பு**

நாணய விதிச்சட்டத்தின்படியும் நாணயச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை (2018 இலிருந்து நடைமுறைக்குவரும்) இன்படியும் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் பொருட்டு ஆண்டுக்கான தேறிய இலாபத்திற்கு பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

**அ)** செலாவணிவீத இலாபத்தை முழுமையாக நீக்குதல் மற்றும் நட்டத்தினை இல்லாமல் செய்வதற்கு தேவையானளவு ஒன்றுசேர்ந்த செலாவணிவீத இலாபம் காணப்படும் வரை வெலாவணிவீத நட்டங்களை அகற்றுதல். எந்தவொரு மேலதிக செலாவணிவீத நட்டத்தையும் உள்ளடக்குதல் (இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்பு கொள்கையின்படி).

**ஆ)** தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிருந்தான இலாபத்தினை நீக்குதல் (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான இலாபங்கள்). எனினும் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நட்டங்களை (தேறல் செய்யப்படாத சந்தைப்படியான நட்டங்கள்) விதித்தல் (இலங்கை மத்திய வங்கியின் இலாப பகிர்ந்தளிப்புக் கொள்கையின்படி).

**இ)** நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38 இன்படியான வேறு ஏதேனும் மாற்றல்கள் மற்றும் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 இலிருந்து எழும் வேறு ஏதேனும் சீராக்கங்கள்.

மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் பொருட்டு சீராக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட சீராக்கங்களின் அடிப்படையில், 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பகிரத்தக்க இலாபம் பின்வருமாறு:

| விடயம் | 2021<br>ரூ. 000 |
|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்** | **158,162,666** |
| **கூட்டுக:** | |
| விற்பனைகள் மீதான தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டு இலாபம் | 791,570 |
| **கழிக்குக:** | |
| நாணயவிதிச் சட்டத்தின்படி செலாவணி வீத நட்டங்களை பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் | 34,041,805 |
| வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான சந்தைப்படியான இலாபத்தை சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் | 49,638,590 |
| ஏனைய கணக்கீட்டுச் சீராக்கங்கள் | 660,938 |
| **நாணய விதிச் சட்டம், வங்கியினுடைய இலாபப் பகிர்ந்தளிப்புக் கொள்கை மற்றும் ஏனைய சீராக்கங்கள் என்பவற்றின்படியான பகிரத்தக்க இலாபம்** | **74,612,903** |
| **கழிக்குக: ஒதுக்குகளிற்கான மாற்றல் (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 38)** | |
| - பிரதேச அபிவிருத்தித் திணைக்களத் தொழிற்பாடுகளுக்கான நடுத்தர மற்றும் நீண்ட காலக் கொடுகடன் ஒதுக்க நிதியத்திற்கான மாற்றல் | 15,000,000 |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டத்தின் நிதியிடல் நோக்கத்திற்கான ஒதுக்கிற்கு மாற்றல் | 1,051,039 |
| - பொது ஒதுக்கிற்கான மாற்றல் | 27,526,076 |
| - வெளிநின்ற இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளை அறவிடல் (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39) | 1,035,788 |
| **திரட்டிய நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட தொகை (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39)** | **30,000,000** |

**36. நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்**

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | **274,786** | 454,878 |
| நிதியியல் சொத்துக்கள் | **4,104,262** | 13,771,910 |
| பெறுதிகள் | **7,436,653** | 12,027,428 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **11,815,701** | 26,254,216 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | **55,718,603** | 20,969,883 |
| மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **8,806,814** | 1,685,965 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | **4,087,511** | 2,686,181 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **68,612,928** | 25,342,029 |
| **நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம்** | **80,428,629** | **51,596,245** |

2021 காலப்பகுதியில் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட மொத்த வட்டி வருமானம் ரூ.58,662.72 மில்லியனாக இருந்தது (2020 - ரூ.34,714.14 மில்லியன்).

**37. தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)**

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| வெளிநாட்டுப் பிணையங்கள் | **(302,953)** | (30,440) |
| தங்கம் | **(7,475,934)** | 21,785,511 |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **49,638,590** | 1,725,932 |
| நாணயத் தேர்வுகள் | **-** | 43,858 |
| **தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான மொத்த இலாபம்** | **41,859,703** | 23,524,861 |

## 38. நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்** | | |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | **78,207** | 269,910 |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **2,946,797** | 3,245,651 |
| பெறுதிகள் | **1,974,648** | 912,259 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்தத்தக்கவை | **609,524** | 866,032 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **5,609,176** | 5,293,852 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்** | | |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **890,946** | 114,379 |
| துணைநில் வைப்பு வசதி | **5,668,475** | 6,766,330 |
| கைவிடப்பட்ட ஆதனம் | **623,593** | 600,757 |
| நானாவித வட்டிச் செலவினங்கள் | **1,286,883** | 838,828 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **8,469,897** | 8,320,294 |
| **நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம்** | **14,079,073** | 13,614,146 |

மிகை திரவத்தன்மை நிலை காரணமாக, சந்தையிலிருந்து திரவத்தன்மையை உள்ளீர்க்கும் விதமாக வங்கியின் நடவடிக்கைகளில் ரூ.3,050.59 மில்லியன் (2020 - ரூ.1,126.15 மில்லியன் செலவு) தேறிய உள்நாட்டு நாணயப் பெறுமதியைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு காணப்பட்டது. உள்நாட்டு நாணயப் பெறுமதியைக் கட்டுப்படுத்துவதற்கான செலவானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், முறிகளின் கடன்பாடு மற்றும் துணைநில் வசதி ஆகியவற்றின் மீது ஏற்பட்ட வட்டிச் செலவுகளிலிருந்து, இலங்கை அரச பிணையங்களிலிருந்தான வட்டி வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம் மற்றும் தேறப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/(நட்டம்) இல் உள்ளடக்கப்பட்டவாறான ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகளின் இலாபம் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்ட தேறிய தொகையை உள்ளடக்குகிறது.

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீது ஏற்பட்ட வட்டிச் செலவினம் | **890,946** | 114,379 |
| துணைநில் வைப்பு வசதி மீதான வட்டிச் செலவினம் | **5,668,475** | 6,766,330 |
| **கழிக்குக:** | | |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீது உழைக்கப்பட்ட வட்டி வருமானம் | **8,806,814** | 1,685,965 |
| ஐ.அ.டொலர்/ இல.ரூபா பெறுதி இலாபம் | **803,202** | 4,068,592 |
| | **3,050,595** | (1,126,152) |

## 39. நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் திரும்பல்/ (கட்டணம்)

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | |
| பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள் | | |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவை **(குறிப்பு 8.2)** | **184,970** | (48,380) |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள் **(குறிப்பு 11.4)** | **(1)** | 2 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் **(குறிப்பு 9.2)** | **2,097,726** | (1,997,827) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் திரும்பல்/ (கட்டணம்)** | **2,282,695** | (2,046,205) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | |
| பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள் | | |
| வங்கிகளுக்கான கடன்கள் **(குறிப்பு 16.2)** | **123,745** | (154,333) |
| உள்ளக நிதியங்களின் முதலீடுகள் **(குறிப்பு 17.1)** | **79,291** | (63,939) |
| ஏனைய பெறத்தக்கவைகள் **(குறிப்பு 17.2)** | **-** | (8,001) |
| கொடுகடன் உத்தரவாத ஏற்பாடு **(குறிப்பு 33.2)** | **(1,011,732)** | - |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | **-** | (32,921) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கட்டணம்** | **(808,696)** | (259,194) |
| **நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் திரும்பல்/ (கட்டணம்)** | **1,473,999** | (2,305,399) |

குறிப்பு 40 இல் விளக்கப்பட்டவாறு பிரதேச அபிவிருத்தி திணைக்கள தேறிய சொத்துக்கள் ஒருங்கிங்கிணைப்பின் தாக்கத்தின் காரணமாக, வங்கிகளுக்கான கடன்களுடனும் உள்முக நிதியங்களின் மூலமான முதலீடுகளுடனும் தொடர்புடைய எதிர்பார்க்கபடும் கொடுகடன் இழப்பானது நிதியியல் நிலைமைக் கூற்றிலுள்ள தொடர்புடைய பெறுமதிகளிலிருந்து வேறுபடுகின்றது.

## 40. ஏனைய வருமானம்

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்பான தரப்பினர் | **153,987** | 154,381 |
| கொடைகளிலிருந்து பெறப்படும் சொத்துக்களின் பதிவழிப்பு | **28** | 1 |
| நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம் | **609,050** | 620,902 |
| வாடகை வருமானம் | **282,174** | 321,821 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் | **54,237** | 99,585 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்கள தேறிய சொத்து ஒருங்கிணைப்பிலிருந்தான ஏனைய வருமானம் **(குறிப்பு 40.1)** | **14,705,875** | - |
| நானாவித வருமானம் | **475,019** | 250,249 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள்மதிப்பீடு தொடர்பான தேறிய இலாபம் | **-** | 142,390 |
| **மொத்த ஏனைய வருமானம்** | **16,280,370** | 1,589,329 |

**40.1 பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் தேறிய சொத்துக்களின் ஒருங்கிணைப்பு**

பொதுத் திறைசேரியின் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட சம்மதத்துடன் 2021 திசெம்பர் 31இன் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மீள்நிதியிடல் மற்றும் கொடுகடன் உத்தரவாத திட்டங்களுடன் தொடர்புடைய நிலுவைகளை ஒருங்கிணைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை ஒப்புதலளித்துள்ளது. இந்நிலுவைகளின் சொத்துடமை நிறுவப்படுவதற்கு, வழியமைத்த செய்முறைகள் முடிவடைந்ததன் பின்னர் மாத்திரமே, 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டன.

மேலும், மத்திய வங்கிக்கும் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்திற்குமிடையிலான ஆலோசனையின் பின்னர், திறைசேரி தொழிற்பாடுகளின் திணைக்களமானது 2021 திசம்பர் 31 முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் இத்தகைய திட்டங்களின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அங்கீகரிப்பதற்கு வங்கிக்கு சம்மதத்தை வழங்கியது.

**41. ஆளணிச் செலவினங்கள்**

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | **7,116,223** | 5,298,938 |
| நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவு | **1,717,811** | 707,129 |
| தொழிலுக்குப் பின்னரான நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டச் செலவு | **1,891,272** | 851,435 |
| **மொத்த ஆளணிச் செலவினங்கள்** | **10,725,306** | 6,857,502 |

**42. நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள்**

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | **879,065** | 823,229 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விற்பனை மீதான இழப்பு | **669,923** | - |
| ரொயிட்டர், புளூம்பேர்க், சுவிப்ற் போன்றவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | **205,041** | 213,666 |
| பயணம் | **22,008** | 9,581 |
| அச்சிடல் | **41,699** | 59,306 |
| சட்ட ரீதியான கணக்காய்வுக் கட்டணம் | **9,225** | 9,225 |
| நாணயச் சபை/ துணைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான ஊதியம் | **3,975** | 4,325 |
| விளம்பரச் செலவு | **48,796** | 28,248 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள் | **210,337** | 118,744 |
| குத்தகைப் பொறுப்புகள் மீதான வட்டிச் செலவினம் | **5,482** | 6,311 |
| நானாவிதச் செலவினம் | **183,571** | 224,405 |
| **மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள்** | **2,279,122** | 1,497,040 |

**43. வரி**

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 9ஆம் பிரிவு மற்றும் அதனைத் தொடர்ந்து திருத்திய 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்திற்கமைவாக வங்கியானது வருமானவரி செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில், வங்கி எந்த வரியையும் செலுத்தவில்லை (2020-ஏதுமில்லை).

**44. தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலுடன் இணக்கப்படுத்தல்**

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட இலாபம்** | **158,162,666** | 63,432,761 |
| **கூட்டுக/ (கழிக்குக): காசல்லா விடயங்கள்** | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | **526,675** | 452,353 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | **(64,504,574)** | (22,657,914) |
| நிர்ணயிக்கப்பட்ட ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கான தேறிய ஏற்பாடுகள் | **2,290,446** | 211,855 |
| மொத்தத் தேறல் செய்யப்படாத வெளிநாட்டுச் செலாவணி இலாபம் | **(43,638,970)** | (16,414,833) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான நட்டம்/ (இலாபம்) | **669,924** | (5) |
| ஏற்பாடுகள் மற்றும் அட்டுறுக்கள் | **3,144,366** | 1,862,265 |
| நிதியியல் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடுகள் | **(1,473,999)** | 2,272,478 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | **389** | 785 |
| மீள்மதிப்பீடு மீதான இலாபம் | **-** | (142,390) |
| வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பின் பதிவழிப்பு | **(2,372)** | (2,174) |
| நடைமுறையிலுள்ள கட்டுமானப் பதிவழிப்பு | **(356)** | - |
| நிலையான வருமான பிணையங்களின் பதிவழிப்புச் செலவினங்கள் | **877,761** | 2,246,629 |
| பிரதேச அபிவிருத்தித் திணைக்கள தேறிய சொத்து ஒருங்கிணைப்பிலிருந்தான ஏனைய வருமானம் | **(14,705,875)** | - |
| **கூட்டுக/ (கழிக்குக): ஏனைய தொழிற்படு மூலதன விடயங்களின் அசைவு** | | |
| இருப்புக்களின் குறைவு | **1,373,286** | 996,573 |
| பெறத்தக்க வட்டியின் குறைவு | **3,593,983** | 338,516 |
| நானாவிதப் பொறுப்புக்களின் அதிகரிப்பு | **1,539,342** | 811,504 |
| செலுத்தத்தக்க வட்டியின் அதிகரிப்பு | **425,395** | 392,801 |
| ஏனைய பெறத்தக்கவற்றின் அதிகரிப்பு | **(2,236,407)** | (2,438,850) |
| **கூட்டுக/ (கழிக்குக): முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | **(45,265,635)** | (24,537,198) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **776,045** | 6,825,156 |

**45. அரச கொடுக்கல்வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்)**

| | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | **1,218,291,655** | 581,555,020 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - இலங்கை அரச பிணையங்கள் | **(43,061,965)** | (17,365,458) |
| இலங்கை அரசுக்கான முற்பணங்களின் குறைவு | **(2,933,100)** | (83,547,071) |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/ குறைவு | **68,211** | (960,873) |
| | **1,172,364,801** | 479,681,618 |

**46. வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வெளியீடு/ (மீளப்பெறல்)**

| | 2020 ரூ. 000 | 2019 ரூ. 000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | **(171,102,641)** | 124,980,099 |
| | **(171,102,641)** | 124,980,099 |

**47. நிதியிடலின் திரட்சி**

**47.1 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை**

| | இலங்கை அரசு | இலங்கை பொதுமக்கள் | இலங்கை வர்த்தக வங்கிகள் | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | - | 13,701 | **13,701** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | 1,139,323 | - | - | **1,139,323** |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 104,764,616 | - | **104,764,616** |
| ப.நா.நிதியம் | - | - | - | 670,065,243 | - | **670,065,243** |
| ஏனையவை | 1,501,522 | - | - | 178,312 | 355,615,842 | **357,295,676** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **1,501,522** | **-** | **1,139,323** | **775,008,171** | **355,629,543** | **1,133,278,559** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | 289,396,174 | - | 11,307,988 | **300,704,162** |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 1,392,104 | 197 | - | - | - | **1,392,301** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | 99,426,206 | - | 1,636,674 | **101,062,880** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | 1,005,099,066 | - | - | - | **1,005,099,066** |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 26,525 | - | 8,947,739 | - | 10,189,618 | **19,163,882** |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **1,418,629** | **1,005,099,263** | **397,770,119** | **-** | **23,134,280** | **1,427,422,291** |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **2,920,151** | **1,005,099,263** | **398,909,442** | **775,008,171** | **378,763,823** | **2,560,700,850** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | - | - | - | - | 1,178 | **1,178** |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | - | - | - | - | 17,929,737 | **17,929,737** |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | - | - | - | - | 4,027,349 | **4,027,349** |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | **-** | **-** | **-** | **-** | **21,958,264** | **21,958,264** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **2,920,151** | **1,005,099,263** | **398,909,442** | **775,008,171** | **400,722,087** | **2,582,659,114** |

**47.2 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை**

| | இலங்கை அரசு | இலங்கை பொதுமக்கள் | இலங்கை வர்த்தக வங்கிகள் | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | - | 208,337,221 | 208,337,221 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | 124,237 | - | 449,945 | 574,182 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 63,864,652 | - | 63,864,652 |
| ப.நா.நிதியம் | - | - | - | 509,925,278 | - | 509,925,278 |
| ஏனையவை | 15,529 | - | - | 48,468 | 74,806,328 | 74,870,325 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 15,529 | - | 124,237 | 573,838,398 - | 283,593,494 | 857,571,658 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | 118,686,595 | - | 10,914,926 | 129,601,521 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 1,460,338 | 174 | - | - | - | 1,460,512 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | 196,901,340 | - | 12,606,558 | 209,507,898 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | 834,807,859 | - | - | - | 834,807,859 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 25,474 | - | 2,905,314 | - | 11,812,004 | 14,742,792 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **1,485,812** | **834,808,033** | **318,493,249** | **-** | **35,333,488** | **1,190,120,582** |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **1,501,341** | **834,808,033** | **318,617,486** | | **318,926,982** | **2,047,692,240** |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | - | - | - | - | 789 | 789 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | - | - | - | - | 25,385,193 | 25,385,193 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | - | - | - | - | 1,353,373 | 1,353,373 |
| **மொத்த ஏனைய பொறுப்புக்கள்** | - | - | - | - | 26,739,355 | 26,739,355 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,501,341** | **834,808,033** | **318,617,486** | **573,838,398** | **345,666,337** | **2,074,431,595** |

## 48. இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியானது (இ.ம.வ) கொள்கைக் குறிக்கோள்களை பின்பற்றுவதில் நிதி மற்றும் நிதியல்லா இயல்புகளையுடைய பல்வேறுபட்ட இடர்நேர்வுகளை எதிர்நோக்குகின்றது. இதில் எந்தவொரு இடர்நேர்வினதும் பொருண்மைத் தன்மையானது இ.ம.வங்கியின் குறிக்கோள்களை அடைதல், நற்பெயர் மற்றும் நிதி நிலைமைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனால் இ.ம.வங்கிக்கான முறையாக வடிவமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாகும். இதற்கமைய, மத்திய வங்கியால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றதா என்பதை உறுதிசெய்வதற்கு நிறுவன அடிப்படையிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டது.

நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வங்கி எதிர்நோக்கிய நிதி மற்றும் நிதியல்லா இடர்நேர்வுகள் இரண்டையும் உள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பு மற்றும் இடர்நேர்வு ஆளுகை அமைப்பு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. இவ்விடர்நேர்வு ஆளுகை அமைப்பில் நாணயச் சபை மற்றும் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு அத்துடன் நாணயச் சபை ஆலோசனை கணக்காய்வுக் குழு ஆகிய இரண்டு சபையின் உப குழுக்களும் உள்ளடங்கியுள்ளது. வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவப் பணிகளில் இறுதிப் பொறுப்பாண்மையை நாணயச் சபை கொண்டிருப்பதுடன் “முகாமைத்துவத்தின் பொறுப்புடமை” யையும் நிர்ணயிக்கின்றது.

நாணயச் சபையிலிருந்து முறையாக ஒப்படைக்கப்பட்ட குழுவாக சபை இடர்நேர்வு மேற்பார்வை குழுவானது இ.ம.வங்கியினுடைய ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடுகளை மேற்பார்வையிடுவதுடன் வங்கியினுடைய இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடு ஆகியவற்றிற்கான பரந்த தந்திரோபாயம் மற்றும் கொள்கைகளை அமைப்பதற்கான பொறுப்பையும் கொண்டிருக்கின்றது. மேலும், சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல்களுக்கு ஒரு பிரத்தியேக கவனம் செலுத்துவதற்கு நாணயச் சபைக்கு உதவிபுரிகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது நிதியியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, முதலீட்டு மேற்பார்வைக் குழு மற்றும் அனைத்து

திணைக்களங்களையும் உள்ளடக்குகின்றது. இலங்கை மத்திய வங்கியானது "மூன்று அடுக்குப் பாதுகாப்பைப்" பின்பற்றுகின்றது. இதில் அனைத்து திணைக்களங்களும் முதலாவது அடுக்குப் பாதுகாப்பை உருவாக்குகின்றன. முதலாவது அடுக்குப் பாதுகாப்பில் தொழிற்பாட்டுத் திணைக்களங்களானது இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் அவற்றின் தொடர்புடைய அறிக்கையிடும் வழிகளூடாக அதன் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய நிதியியல் மற்றும்/அல்லது தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அடையாளங்காணுதல், பகுப்பாய்தல், மதிப்பிடுதல், கையாளுதல், கண்காணித்தல், மீளாய்வு செய்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக இருக்கின்றது. இரண்டாவது அடுக்குப் பாதுகாப்பு மாதிரியின் ஒரு பகுதியாக, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியைப் பணிப்பதற்கும் வழிகாட்டுவதற்குமான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுடன் தொடர்புடைய இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையை வசதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருக்கின்றது. இடர்நேர்வு முகாமைாத்துவத் திணைக்களமானது தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் தொடர்பில் காலந்தர அடிப்படையில் நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக்குழுவினூடாக சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவிற்கு அறிக்கையிடுவதுடன் நிதியியல் இடர்நேர்வுகள் தொடர்பில் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவிற்கு அறிக்கையிடுகின்றது. மூன்றாவது அடுக்குப் பாதுகாப்பான உள்ளகக் கணக்காய்வானது கணக்காய்வுகளினூடாக இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான கட்டுப்பாட்டுச் சூழலை மேம்படுத்துவதற்கும் பெறுமதியைக் கூட்டுவதற்கும் சுயாதீனமான பாரபட்சமற்ற உறுதிப்படுத்தலையும் விதந்துரைப்புக்களையும் வழங்குவதற்குப் பொறுப்பாகவிருக்கின்றது. உள்ளகக் கணக்கு திணைக்களமானது கணக்காய்வுகளை நாடாத்துவதின் செயன்முறையை நாணயச்சபைக்கும் நாணயச் சபை ஆலோசனைக் கணக்காய்வுக் குழுவுக்கும் காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடுவதுடன் கணக்காய்வு அறிக்கைகள் மீதான தகவல்களை காலாண்டு அடிப்படையில் கணக்காய்வு தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கின்றது.

கட்டமைப்பிற்கிணங்க இலங்கை மத்திய வங்கி முழுவதும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்கும் வகையில் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிக்குரிய இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை அறிக்கையொன்றினை தயாரித்தது. இச்செயற்பாட்டில், இலங்கை மத்திய வங்கியானது தெளிவான பொறுப்புக்களுடன் பல்வேறுபட்ட பங்குபற்றுனர்களிடையே இடர்நேர்வு உரிமை மற்றும் முகாமைத்துவத்தை வழங்குகின்றவேளை இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களையும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றுகின்றது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது பன்னாட்டு ஒதுக்குகள், அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் உள்முக முதலீட்டு நிதியங்கள், அதே போன்று அரசாங்கத்தின் முகவராக தொழிற்படும் இலங்கை மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றின் நிதிய முகாமைத்துவச் செயற்பாடுகளிலுள்ள நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்கு பொறுப்பாக இருக்கின்றது. இதற்கமைய, நிதியியல் மேற்பார்வைத் திணைக்களமானது அனைத்து முதலீட்டுக் கொள்கைக் கூற்றுக்கள், உபாயச் சொத்து ஒதுக்கீடு, முதலீட்டு வழிகாட்டல்கள் வடிவமைத்துள்ளதுடன் ஏதேனும் தேவைப்படும் மாற்றங்களை ஒருங்கிணைப்பதற்கு ஒழுங்குமுறையாக மீளாய்வு செய்கின்றது. உபாயச் சொத்து ஒதுக்கீடு, முதலீட்டு கொள்கைக் கூற்றுக்கள், முதலீட்டு வழிகாட்டல் என்பவற்றை ஒப்புதலளித்த நாணயச் சபையினால் குறிக்கபட்ட நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்குள் முதலீடுகள் உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கு இத்தகைய நிதிய முகாமைத்துவ செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகளை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் சுயாதீனமாக கண்காணிப்பதுடன் தொடர்புடைய முதலீட்டு மேற்பார்வைக் குழு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு அத்துடன் நாணயச்சபை என்பவற்றிற்கு காலாந்தர அடிப்படையில் அறிக்கையிடுகின்றது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வுப் பகுப்பியலை வருடாந்தம் மீளாய்வு செய்ததுடன், இடர்நேர்வு வகைகளை உள்ளடக்கி/ அகற்றி அத்துடன் நிலவுகின்ற இடர்நேர்வுச் சூழலுக்குப் பொருந்தும் விதத்தில் தேவையான ஏனைய மாற்றங்களையும் உள்ளடக்கி அதனை இற்றைப்படுத்தியது. வங்கியினுள் இடர்நேர்வு கலாசாரமொன்றை ஊக்குவிப்பதற்கு, இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது பல்வேறு மன்றத்தில் ஆண்டு முழுவதும் எண்ணற்ற இடர்நேர்வு விழிப்புணர்வுத் தொடர்களை நடாத்துகின்றது. இதற்கு மேலதிகமாக, தற்போதுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ பொறிமுறையுடன் தொடர்புடைய விழிப்புணர்வின் மட்டத்தை தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்கள் மத்தியில் ஆண்டிற்கு இரு தடவையான அளவீடு நடாத்தப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியினுள் இடர்நேர்வு கலாசாரத்தை மேம்படுத்தவதற்கு வழிவகுத்து, எதிர்கால விழிப்புணர்வு தொடர்களை பொருத்தமாக வடிவமைப்பதற்கும் தற்போது பயன்பாட்டிலுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்வுப் பொறிமுறையை மேலும் வலுப்படுத்தவும் இவ்வளவீட்டு பெறுபேறுகள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், இடர்நேர்வுப் பதிவேடுகளை உருவாக்க வசதியளிப்பதற்கும் இத்தகைய இடர்நேர்வுப் பதிவேடுகளை விரிதாளை அடிப்படையாகக் கொண்ட பதிவேட்டு வடிவத்தை கட்டம் கட்டமான விதத்தில் புதுப்பிப்பதற்கும் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது ஏனைய திணைக்களங்களுடன் செயற்படுகின்றது. தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையை மேம்படுத்தி இத்தகைய திணைக்கள இடர்நேர்வு பதிவேடுகளைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வுத் தோற்றப்பாடு உருவாக்கப்படுகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது நிகழ்வுகளின் மத்திய சேமிப்பக உருவாக்கத்தை இயலுமைப்படுத்தியும் சரியான வழிமுறைகளின் நடைமுறை மீதான செயன்முறையை கண்காணித்தும் நிகழ்வு அறிக்கையிடல் முறைமையூடாக அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளை தொடர்ச்சியாக நிருவகிக்கின்றது.

### 48.1 கொடுகடன் இடர்நேர்வு

#### (அ) புவியியல் பிரதேசங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு உள்ளாகும் தன்மையின் திரட்சி

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறான வங்கியின் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி புவியியல் பிரதேசங்களுக்கேற்ப (நிறுவனத்திற்கு உரித்தான நாட்டை அடிப்படையாகக் கொண்டு) பின்வருமாறு:

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| இலங்கை | **2,275,756,176** | 1,009,892,263 |
| ஐக்கிய அமெரிக்கா | **130,712,211** | 457,822,320 |
| யப்பான் | **9,457,390** | 85,262,633 |
| பிரித்தானியா | **1,008,405** | 6,492,727 |
| ஐரோப்பா | **1,582,664** | 110,462,895 |
| பல்தேசிய | **190,963,416** | 477,101,616 |
| ஏனையவை | **375,958,300** | 170,825,331 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **2,985,438,562** | **2,317,859,785** |

**(ஆ) நிறுவனங்களுக்கேற்ப கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி**

அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறான வங்கியின் குறிப்பிடத்தக்க கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மையின் திரட்சி நிறுவனங்களின் வகைக்கேற்ப வருமாறு:

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| அரசு | **2,014,470,178** | 1,554,039,564 |
| பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் | **227,180,460** | 477,101,616 |
| வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **15,187,326** | 147,194,059 |
| இலங்கை வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **718,635,801** | 118,372,002 |
| ஏனையவை | **9,964,797** | 21,152,544 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **2,985,438,562** | **2,317,859,785** |

**(இ) கொடுகடன் தரமிடலின்படி கொடுகடன் இடர்நேர்வுகளுக்குள்ளாகும் தன்மை**

பின்வரும் அட்டவணை ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் மற்றும் பிச் றேட்டிங்ஸ் கொடுகடன் தரமிடல்களின் அடிப்படையில் குறிப்பிட்ட நிதியியல் சொத்துக்களின் அல்லது வெளியிடுபவர்களின் கொடுகடன் தரமிடல்களை காட்டுகின்றது. AAA குறியீடு அதியுயர் கொடுகடன் தரத்தினைக் கொண்ட தரமிடுதல்களையும் மிக மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பினையும் காட்டுகின்றது. நிதியியல் கடப்பாடுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய சிறப்பான பலம் பொருந்திய இயலளவைக் கொண்டவற்றுக்கே இது வழங்கப்படுகின்றது. AA குறியீட்டின் மூலம் உயர் தரமிடுதல் காட்டப்படுவதோடு மிகக் குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பு காட்டப்படுகின்றது. A குறியீட்டின் மூலம் உயர் மத்திய தரம் காட்டப்படுவதோடு குறைந்த கொடுகடன் இடர்நேர்வு எதிர்பார்ப்பு காட்டப்படுகிறது. BBB குறியீட்டின் மூலம் கீழ்மட்ட முதலீட்டுத் தரமிடுதலும் கொடுகடன் இடர்நேர்வு தொடர்பில் நடைமுறையில் குறைந்த எதிர்பார்ப்பு உள்ளதென்பதும் காட்டப்படுவதோடு, பாதுகாப்பு அளவீடுகளின் தேவையை வலியுறுத்துகிறது. AAA குறியீட்டுக்குக் குறைவான தரங்களை பிரதானமான வகைகளுக்கு இடையிலுள்ள நிலைகளைக் காட்டும் பொருட்டு + அல்லது - அடையாளத்தின் மூலம் வகைப்படுத்திக் காட்டலாம். NR குறியீட்டின் மூலம் நிறுவனம், ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ் அல்லது பிச் றேட்டிங்ஸ் தரமிடலுக்கு உள்ளாக்கப்படவில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

| கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | கொடுகடன் தரமிடல் | 2021<br>ரூபா 000 | % | 2020<br>ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | | | | | |
| பெடரல் றேசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ றேசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றேசேர்வ் வங்கி/ இந்திய றேசேர்வ் வங்கி/ சீன மக்கள் வங்கி | | **497,630,980** | **16.67%** | 320,842,614 | 13.84% |
| ஏனைய இணைத்தரப்பினர் | **AAA** | **4,009,562** | **0.13%** | 17,985,741 | 0.78% |
| | **AA-** | **2,004,771** | **0.07%** | 31,186,235 | 1.34% |
| | **A+** | **8,094,146** | **0.27%** | 29,920,960 | 1.29% |
| | **A** | **-** | **0.00%** | 2,789,210 | 0.12% |
| | **A-** | **768,180** | **0.03%** | 140,847 | 0.01% |
| | **BBB+** | **-** | **0.00%** | 172,614 | 0.01% |
| | **BBB** | **40,255** | **0.00%** | 40,470 | 0.00% |
| | **NR** | **214,558** | **0.01%** | 228,613 | 0.01% |
| | | **512,762,452** | **17.18%** | 403,307,304 | 17.40% |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்** | | | | | |
| | **AAA** | **2,830,756** | **0.09%** | 189,785,053 | 8.19% |
| | **AA+** | **5,987,488** | **0.20%** | 437,986,572 | 18.90% |
| | **AA** | **-** | **0.00%** | 15,360,081 | 0.66% |
| | **AA-** | **-** | **0.00%** | 27,998,253 | 1.21% |
| | **A+** | **-** | **0.00%** | 32,305,504 | 1.39% |
| | | **8,818,244** | **0.29%** | 703,435,463 | 30.35% |
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள்** | | | | | |
| | **AAA** | **-** | **0.00%** | 30,034,475 | 1.29% |
| | **AA+** | **-** | **0.00%** | 4,785,108 | 0.21% |
| | **AA** | **-** | **0.00%** | 5,140,913 | 0.22% |
| | **AA-** | **-** | **0.00%** | 603,827 | 0.03% |
| | | **-** | **0.00%** | 40,564,323 | 1.75% |
| **பெறுதி நிதியியல் சாதனங்கள்** | | | | | |
| | **A** | **55,853** | **0.00%** | - | 0.00% |
| உள்நாட்டு ரீதியாகத் தரமிடப்பட்டவை | **AA+** | **-** | **0.00%** | 1,423,629 | 0.06% |
| | **AA-** | **34,088,798** | **1.14%** | 1,360,976 | 0.06% |
| | **A+** | **19,788,494** | **0.67%** | 46,825 | 0.00% |
| | **A** | **33,378** | **0.00%** | 62,960 | 0.00% |
| | **BBB-** | **2** | **0.00%** | 33 | 0.00% |
| | **BB+** | **56,311** | **0.00%** | 65,189 | 0.01% |
| | **NR** | **-** | **0.00%** | 410,741 | 0.02% |
| | | **54,022,836** | **1.81%** | 3,370,353 | 0.15% |
| **ப.நா.நி தொடர்பான சொத்துக்கள்** | | **188,045,837** | **6.30%** | 158,958,185 | 6.86% |
| | | **188,045,837** | **6.30%** | 158,958,185 | 6.86% |
| **ஏனைய பெறத்தக்கவைகள்** | **AAA** | **-** | **0.00%** | 1,702,247 | 0.07% |
| | | **-** | **0.00%** | 1,702,247 | 0.07% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | **763,649,369** | **25.58%** | 1,311,337,875 | 56.58% |

| **கொடுகடன் தரமிடல் மூலம் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை** | **கொடுகடன் தரமிடல்** | 2021 ரூபா 000 | % | 2020 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | CCC+ | 1,377,820,347 | 46.15% | 714,531,527 | 30.83% |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | AA- | 557,856,718 | 18.69% | - | 0.00% |
| | A+ | - | 0.00% | 318,048 | 0.01% |
| | A | 5,656,932 | 0.19% | - | 0.00% |
| | BBB- | - | 0.00% | 2,410,364 | 0.11% |
| | NR | 4,018,662 | 0.14% | - | 0.00% |
| அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் | CCC+ | 150,128,800 | 5.03% | 153,061,900 | 6.60% |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | NR | 1,671,218 | 0.06% | 1,615,356 | 0.07% |
| வங்கிகளுக்கான கடன்கள் | AAA | 24,917 | 0.00% | 147,319 | 0.01% |
| | AA+ | - | 0.00% | 61,475,682 | 2.65% |
| | AA- | 51,999,491 | 1.74% | 9,094,883 | 0.39% |
| | A+ | 16,372,930 | 0.55% | 19,966,369 | 0.86% |
| | A | 9,977,843 | 0.33% | 13,458,641 | 0.58% |
| | A- | - | 0.00% | 937,978 | 0.05% |
| | BBB+ | 6,201,554 | 0.21% | 105,757 | 0.00% |
| | BBB- | 2,933,926 | 0.10% | 3,092,924 | 0.13% |
| | BB+ | 2,688,669 | 0.09% | 2,599,883 | 0.11% |
| | NR | 373,416 | 0.01% | 608,090 | 0.03% |
| ஏனைய சொத்துக்கள் | AAA | 325,579 | 0.01% | 137,785 | 0.00% |
| | AA+ | - | 0.00% | 709,281 | 0.03% |
| | AA- | 5,699,123 | 0.19% | - | 0.00% |
| | A+ | 727,308 | 0.02% | 190,126 | 0.01% |
| | A | - | 0.00% | 19,752 | 0.00% |
| | A- | - | 0.00% | 98,293 | 0.00% |
| | CCC+ | 19,206,430 | 0.64% | 12,680,416 | 0.55% |
| | NR | 8,105,330 | 0.27% | 9,261,536 | 0.40% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 2,221,789,193 | 74.42% | 1,006,521,910 | 43.42% |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | 2,985,438,562 | 100.00% | 2,317,859,785 | 100.00% |

**(ஈ) பிரதானமான கொடுகடன் வகைப்படுத்தலின்படியான சுருக்கம்**

| | **கொடுகடன் தரமிடல்** | 2020 ரூபா 000 | % | 2019 ரூபா 000 | % |
|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| பெடரல் றேசேர்வ் வங்கி - ஐ.அமெரிக்கா/ றேசேர்வ் வங்கி - அவுஸ்திரேலியா/ பன்னாட்டுத் தீர்ப்பனவுக்கான வங்கி/ யப்பான் வங்கி/ டியூச் புண்டெஸ் வங்கி/ இங்கிலாந்து வங்கி/ சுவேரிஸ் ரிக்ஸ் வங்கி/ கனடா வங்கி/ நியூசிலாந்து றேசேர்வ் வங்கி/ இந்திய றேசேர்வ் வங்கி/ சீன மக்கள் வங்கி | | 497,630,980 | 16.67% | 320,842,614 | 13.84% |
| ப.நா. நிதியம் தொடர்பான சொத்துக்கள் | | 188,045,837 | 6.30% | 158,958,185 | 6.86% |
| | AAA | 6,840,318 | 0.22% | 239,507,516 | 10.33% |
| | AA+/- | 7,992,259 | 0.27% | 523,060,989 | 22.57% |
| | A+/- | 8,918,179 | 0.30% | 65,156,521 | 2.81% |
| | BBB+/- | 40,255 | 0.00% | 213,084 | 0.01% |
| | NR | 214,558 | 0.01% | 228,613 | 0.01% |
| உள்நாட்டு ரீதியாக தரமிடப்பட்டவை | AA+/- | 34,088,798 | 1.14% | 2,784,605 | 0.12% |
| | A+/- | 19,821,872 | 0.67% | 109,785 | 0.01% |
| | BBB+ | 2 | 0.00% | 33 | 0.00% |
| | BB+ | 56,311 | 0.00% | 65,189 | 0.00% |
| | NR | - | 0.00% | 410,741 | 0.02% |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 763,649,369 | 25.58% | 1,311,337,875 | 56.58% |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | AAA | 350,496 | 0.01% | 285,104 | 0.01% |
| | AA+/- | 615,555,332 | 20.62% | 71,279,846 | 3.07% |
| | A+/- | 32,735,013 | 1.09% | 34,989,207 | 1.51% |
| | BBB+/- | 9,135,480 | 0.31% | 5,609,045 | 0.24% |
| | BB+/- | 2,688,669 | 0.09% | 2,599,883 | 0.11% |
| | CCC+ | 1,547,155,577 | 51.82% | 880,273,843 | 37.99% |
| | NR | 14,168,626 | 0.48% | 11,484,982 | 0.49% |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | 2,221,789,193 | 74.42% | 1,006,521,910 | 43.42% |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | 2,985,438,562 | 100.00% | 2,317,859,785 | 100.00% |

**(உ) கொடுகடன் தரப் பகுப்பாய்வு**

**கொடுகடன் தரமிடலின்படி கொடுகடன் இடர்நேர்விற்கான அதிகபட்ச வெளிப்படுத்தல்**

கீழேயுள்ள அட்டவணையானது பதிவழிக்கப்பட்ட செலவு மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்துக்களின் கொடுகடன் தரம் தொடர்பான தகவலைத் தருகின்றது.

| | | எதிர்பார்க்கப் படும் கொடு கடன் இழப்பிற்குட் படாதவை | 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு | ஆயுட்கால கொடுகடன் இழப்பு | | 2021 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 7,669,197 | 7,624,371 | 20,303,019 | 11,393,477 | - | **46,990,064** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 73,114,024 | 90,062,578 | 201,465,928 | 338,787,647 | 4,807,787 | **708,237,964** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 13,539,094 | - | - | 208,076 | 145,211,015 | **158,958,185** |
| ஏனைய பெறத்தக்கவைகள் | 1,702,247 | - | - | - | - | **1,702,247** |
| **மொத்தக் கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் சொத்துக்கள்** | **499,331,866** | **97,686,949** | **221,768,947** | **350,389,200** | **150,018,802** | **1,319,195,764** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 463,313,921 | 405,150,819 | 5,524,792 | 26,202,317 | 317,849 | **900,509,698** |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 2,728,412 | - | - | - | - | **2,728,412** |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | 153,061,900 | - | - | - | - | **153,061,900** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | - | - | 1,615,356 | **1,615,356** |
| வங்கிகளுக்கான கடன்கள் | 96,083,289 | 7,331,102 | 8,150,872 | - | - | **111,565,263** |
| ஏனைய சொத்துக்கள் | 4,948,189 | 1,395,674 | 2,255,604 | 9,040,665 | 14,669,924 | **32,310,056** |
| **மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | **720,135,711** | **413,877,595** | **15,931,268** | **35,242,982** | **16,603,129** | **1,201,790,685** |
| **மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்** | **1,219,467,577** | **511,564,544** | **237,700,215** | **385,632,182** | **166,621,931** | **2,520,986,449** |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 208,337,221 | - | - | - | - | **208,337,221** |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 63,864,652 | - | - | - | - | **63,864,652** |
| ப.நா. நிதியம் | 6,883,538 | 6,864,314 | 31,133,271 | 127,514,224 | 350,966,277 | **523,361,624** |
| ஏனையவை | 74,870,325 | - | - | - | - | **74,870,325** |
| **மொத்தக் கழிவிடப்படாத வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | **353,955,736** | **6,864,314** | **31,133,271** | **127,514,224** | **350,966,277** | **870,433,822** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 129,601,521 | - | - | - | - | **129,601,521** |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 1,460,512 | - | - | - | - | **1,460,512** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 209,507,898 | - | - | - | - | **209,507,898** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 834,807,859 | - | - | - | - | **834,807,859** |
| ஏனைய செலுத்தத்தக்கவை | 14,742,792 | - | - | - | - | **14,742,792** |
| **மொத்தக் கழிவிடப்படாத உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | 1,190,120,582 | - | - | - | - | **1,190,120,582** |
| **மொத்தக் கழிவிடப்படாத நிதியியல் பொறுப்புக்கள்** | 1,544,076,318 | 6,864,314 | 31,133,271 | 127,514,224 | 350,966,277 | **2,060,554,404** |
| **தேறிய கழிவிடப்படாத நிதியியல் சொத்துக்கள்/ (பொறுப்புக்கள்)** | **(324,608,741)** | **504,700,230** | **206,566,944** | **258,117,958** | **(184,344,346)** | **460,432,045** |

| 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 6 மாதங்களுக்குக் குறைவானவை ரூ. 000 | 6 மாதங்கள் தொடக்கம் 1 ஆண்டு ரூ. 000 |
|---|---|---|
| பெறுதி நிதியியல் சொத்துக்கள் | 117,285,065 | 30,027,810 |
| பெறுதி நிதியியல் பொறுப்புக்கள் | 115,556,701 | 30,011,720 |

### 48.5 திரவத்தன்மை இடர்நேர்வு

நிதியியல் சாதனங்களுக்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைக் குறுகிய கால அறிவித்தலில் பெற்றுக் கொள்கின்ற போது நிறுவனமொன்று முகம் கொடுக்கின்ற இடர்ப்பாடு திரவத்தன்மை இடர்நேர்வாகும். நிறுவனம் தனது நிதியியல் சொத்துக்களை விரைவாக, சீர்மதிப்புப் பெறுமதியைவிட மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டி நேரிடுவதும் திரவத்தன்மை இடர்நேர்வொன்றாகும்.

(அ) வங்கியின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் உள்ளமைப்பைத் தீர்மானிக்கின்ற போது முக்கியமாக திரவத்தன்மை தொடர்பாகவே கவனம் செலுத்தப்படுகிறது. தேவையான சந்தர்ப்பங்களில் தலையீடு செய்கின்ற நோக்கம் மற்றும் அரச கடன்கள் மற்றும் ப.நா.நிதியக் கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக வெளிநாட்டு ஒதுக்கங்களை காசாக மாற்றுவதற்கான சாத்தியமான தேவைப்பாட்டை இது பிரதிபலிக்கின்றது. நிதியங்கள் விரைவாக பெறப்படுவதை உறுதிசெய்து கொள்ளும் நோக்கத்துடன் வங்கியானது பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது:

- வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் திரவத்தன்மை இயல்புகளை அடிப்படையாகக் கொண்ட திரவச்சொத்து விகிதங்கள்

- ஒரு இணைத்தரப்பினருடன் மற்றும் ஒரு நாணயத்தில் வைத்திருக்கப்படக் கூடிய ஒதுக்குகளின் உச்சமட்ட விகிதத்தின் மீதான வரையறை

**(ஆ)** உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் போது, குறிப்பாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் போது உருவாகின்ற திரவத்தன்மை இடர்நேர்வு மட்டத்தைக் குறைக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியானது, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற அதிக திரவத்தன்மையுடனான சந்தைப்படுத்தக்கூடிய சாதனங்களை பிணையங்களாகப் பயன்படுத்துகிறது. வங்கியானது, மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு, மத்திய வங்கிப் பிணையங்கள் மற்றும் ஐ.அ.டொலர்/ ரூபா பரஸ்பர பரிமாற்றல்கள் போன்ற நிதியியல் சாதனங்களைப் பயன்படுத்தி முறைமையினுள் நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் அல்லது அதிலிருந்து மீளப்பெறுவதன் மூலம் வங்கி முறைமையின் நாளாந்த திரவத்தன்மை நிலையை முகாமைப்படுத்துகிறது.

**(இ) எதிர்கால நிதியிடலுக்கு உதவுவதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்கள்**

கீழேயுள்ள அட்டவணை எதிர்கால நிதியிடலுக்கு உதவுவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வங்கியின் நிதியியல் சொத்துக்களைக் காட்டுகின்றது.

| | கட்டுப்பாடுகளுடன் பிணையிடப்பட்ட பிணை உறுதிகள் | கட்டுப்பாடுகளின்றி கிடைக்கத்தக்க தாகவுள்ள பிணை உறுதிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| **2021 திசெம்பர் 31இலுள்ளவாறு** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | 512,762,452 | **512,762,452** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 2,830,756 | 5,987,488 | **8,818,244** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 54,022,836 | **54,022,836** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | 188,045,837 | **188,045,837** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 1,377,820,347 | **1,377,820,347** |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | 567,532,312 | **567,532,312** |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | 150,128,800 | **150,128,800** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | 1,671,218 | **1,671,218** |
| வங்கிகளுக்கான கடன்கள் | - | 90,572,746 | **90,572,746** |
| ஏனைய சொத்துக்கள் | - | 34,063,770 | **34,063,770** |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **2,830,756** | **2,982,607,806** | **2,985,438,562** |

| | கட்டுப்பாடுகளுடன் பிணையிடப்பட்ட பிணை உறுதிகள் | கட்டுப்பாடுகளின்றி கிடைக்கத்தக்க தாகவுள்ள பிணை உறுதிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| **2020 திசெம்பர் 31இலுள்ளவாறு** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | 403,307,304 | **403,307,304** |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | - | 40,564,323 | **40,564,323** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 201,461,348 | 501,974,115 | **703,435,463** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 3,370,353 | **3,370,353** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | - | 158,958,185 | **158,958,185** |
| ஏனைய பெறத்தக்கவைகள் | - | 1,702,247 | **1,702,247** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 714,531,527 | **714,531,527** |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | 2,728,412 | **2,728,412** |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | 153,061,900 | **153,061,900** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | 1,615,356 | **1,615,356** |
| வங்கிகளுக்கான கடன்கள் | - | 111,487,526 | **111,487,526** |
| ஏனைய சொத்துக்கள் | - | 23,097,189 | **23,097,189** |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **201,461,348** | **2,116,398,437** | **2,317,859,785** |

## 49. நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகள்

### 49.1 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தல்கள்

நிதியியல் சாதனங்களின் வகைகள் மற்றும் நிதியியல் நிலைளமைக் கூற்றிலுள்ள வரிசை விடயம் என்பவற்றிற்கிடையேயான இணங்குவித்தல்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| | இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான சாதனங்கள் | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான படுகடன் சாதனங்கள் | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை சாதனங்கள் | பதிவழிக்கப்பட்ட செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **2021 திசெம்பர் 31இலுள்ளவாறு** | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | - | - | 512,762,452 | **512,762,452** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | - | 8,818,244 | - | - | **8,818,244** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 54,022,836 | - | - | - | **54,022,836** |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 162,603,548 | - | - | 188,045,837 | **350,649,385** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | 216,626,384 | 8,818,244 | - | 700,808,289 | **926,252,917** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 1,377,820,347 | - | - | **1,377,820,347** |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 567,532,312 | **567,532,312** |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | - | - | 150,128,800 | **150,128,800** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | 1,671,218 | - | **1,671,218** |
| வங்கிகளுக்கான கடன்கள் | - | - | - | 90,572,746 | **90,572,746** |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | 34,063,770 | **34,063,770** |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | - | 1,377,820,347 | 1,671,218 | 842,297,628 | **2,221,789,193** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 13,701 | **13,701** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,139,323 | - | - | - | **1,139,323** |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 104,764,616 | **104,764,616** |
| ப.நா. நிதியம் | - | - | - | 670,065,243 | **670,065,243** |
| ஏனையவை | - | - | - | 357,295,676 | **357,295,676** |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | 1,139,323 | - | - | 1,132,139,236 | **1,133,278,559** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 300,704,162 | **300,704,162** |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 1,392,301 | **1,392,301** |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 101,062,880 | **101,062,880** |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | - | - | 1,005,099,066 | **1,005,099,066** |
| ஏனைய செலுத்தத்தக்கவை | - | - | - | 19,163,882 | **19,163,882** |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | - | - | - | 1,427,422,291 | **1,427,422,291** |

| 2020 திசெம்பர் 31இலுள்ளவாறு | இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான சாதனங்கள் ரூ.000 | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான படுகடன் சாதனங்கள் ரூ.000 | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை சாதனங்கள் ரூ.000 | பதிவழிக்கப்பட்ட செலவு ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | - | - | - | 403,307,304 | 403,307,304 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 40,564,323 | - | - | - | 40,564,323 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | - | 703,435,463 | - | - | 703,435,463 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 3,370,353 | - | - | - | 3,370,353 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | 157,793,346 | - | - | 1,164,839 | 158,958,185 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | - | - | - | 1,702,247 | 1,702,247 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | **201,728,022** | **703,435,463** | **-** | **406,174,390** | **1,311,337,875** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | - | 714,531,527 | - | - | 714,531,527 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 2,728,412 | 2,728,412 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | - | - | - | 153,061,900 | 153,061,900 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | 1,615,356 | - | 1,615,356 |
| வங்கிகளுக்கான கடன்கள் | - | - | - | 111,487,526 | 111,487,526 |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | 23,097,189 | 23,097,189 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | **-** | **714,531,527** | **1,615,356** | **290,375,027** | **1,006,521,910** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | - | - | - | 208,337,221 | 208,337,221 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 574,182 | - | - | - | 574,182 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | - | - | - | 63,864,652 | 63,864,652 |
| ப.நா. நிதியம் | - | - | - | 509,925,278 | 509,925,278 |
| ஏனையவை | - | - | - | 74,870,325 | 74,870,325 |
| **மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **574,182** | **-** | **-** | **856,997,476** | **857,571,658** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 129,601,521 | 129,601,521 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | - | - | - | 1,460,512 | 1,460,512 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | - | - | - | 209,507,898 | 209,507,898 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | - | - | - | 834,807,859 | 834,807,859 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | - | - | - | 14,742,792 | 14,742,792 |
| **மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | **-** | **-** | **-** | **1,190,120,582** | **1,190,120,582** |

## 50. சீர்மதிப்புப் பெறுமதி வெளிப்படுத்தல்கள்

### 50.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி

"சீர்மதிப்புப் பெறுமதி" என்பது அளவிடுகின்ற திகதியில் முதன்மைச் சந்தையில் அல்லது அது இல்லாத சந்தர்ப்பத்தில் அத்திகதியில் வங்கிக்கு அணுகக்கூடியதாகவுள்ள மிக அநுகூலமான சந்தையில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களில் சொத்தொன்றை விற்பது தொடர்பில் பெறப்படுகின்ற விலை அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவு எனப் பொருள்படும். பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதி அதன் செயலாற்றமற்ற இடர்நேர்வைப் பிரதிபலிக்கின்றது.

சந்தை விலைகளை அவதானிக்க முடியாத நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு 5.2 இல் விபரிக்கப்பட்டவாறு மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. அடிக்கடி வர்த்தகப்படுத்தப்படாத மற்றும் குறைந்தளவான விலை வெளிப்படைத்தன்மையைக் கொண்ட நிதியியல் சாதனங்களுக்கு சீர்மதிப்புப் பெறுமதி குறைந்தளவு பாரபட்சமற்றதாக இருப்பதுடன் இது திரவத்தன்மை, செறிவு, சந்தைக் காரணிகளின் நிச்சயமற்ற தன்மை, விலையிடல் எடுகோள்கள் மற்றும் குறிப்பிட்ட சாதனங்களைப் பாதிக்கும் பிற இடர்நேர்வுகள் ஆகியவற்றைப் பொறுத்து பல்வேறுபட்ட விதங்களில் திறனாய்வுகளைத் தேவைப்படுத்துகின்றது. நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும் படிநிலைகள் பின்வருமாறு:

**மட்டம் 1:** ஒத்த தன்மையான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்காக செயற்படும் சந்தைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) விலைகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

**மட்டம் 2:** மட்டம் 1 இல் குறிப்பிடப்பட்ட விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட விலைகளைத் தவிர வேறு நுட்பத்தின்படி ஒன்றில் நேரடியாக (அதாவது விலைகள்) அல்லது மறைமுகமாக (அதாவது விலைகளிலிருந்து பெறப்பட்டவை) சொத்து அல்லது பொறுப்பிற்காக அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

**மட்டம் 3:** சொத்து அல்லது பொறுப்பிற்காக அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்காத (அதாவது அவதானிக்க முடியாத உள்ளீடுகள்) உள்ளீடுகளைப் பயன்படுத்திய சீர்மதிப்புப் பெறுமதி அளவீடுகள்.

பின்வரும் அட்டவணை சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையில் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வொன்றினை தருகின்றது.

| 2021 திசெம்பர் 31இலுள்ளவாறு | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 8,818,244 | - | - | **8,818,244** |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 54,022,836 | - | **54,022,836** |
| ப.நா.நிதியம் தொடர்பான சொத்துக்கள் | 162,603,548 | - | - | **162,603,548** |
| | 171,421,792 | 54,022,836 | - | **225,444,628** |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 35,151,981 | - | - | **35,151,981** |
| | 35,151,981 | - | - | **35,151,981** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 1,377,820,347 | - | - | **1,377,820,347** |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | 1,671,218 | **1,671,218** |
| | 1,377,820,347 | - | 1,671,218 | **1,379,491,565** |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 10,855,725 | **10,855,725** |
| கட்டடம் | - | - | 7,099,239 | **7,099,239** |
| | - | - | 17,954,964 | **17,954,964** |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 1,139,323 | - | **1,139,323** |
| | - | 1,139,323 | - | **1,139,323** |

| 2020 திசெம்பர் 31இலுள்ளவாறு | மட்டம் 1 ரூ.000 | மட்டம் 2 ரூ.000 | மட்டம் 3 ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 40,564,323 | - | - | 40,564,323 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 703,435,463 | - | - | 703,435,463 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 3,370,353 | - | 3,370,353 |
| ப.நா.நிதியம் தொடர்பான சொத்துக்கள் | 157,793,346 | - | - | 157,793,346 |
| | 901,793,132 | 3,370,353 | - | 905,163,485 |
| **வெளிநாட்டு நாணய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| தங்கம் | 76,220,055 | - | - | 76,220,055 |
| | 76,220,055 | - | - | 76,220,055 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 714,531,527 | - | - | 714,531,527 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள் | - | - | 1,615,356 | 1,615,356 |
| | 714,531,527 | - | 1,615,356 | 716,146,883 |
| **ஏனைய நிதியல்லாச் சொத்துக்கள்** | | | | |
| காணி | - | - | 11,334,725 | 11,334,725 |
| கட்டடம் | - | - | 7,832,238 | 7,832,238 |
| | - | - | 19,166,963 | 19,166,963 |
| **நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 574,182 | - | 574,182 |
| | - | 574,182 | - | 574,182 |

**நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்**

பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது பங்கிற்கான தேறிய சொத்தின் மதிப்பீட்டு நுட்பத்தினை உபயோகித்து கணக்கிடப்பட்டது.

**பயன்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க அவதானிக்க முடியாத உள்ளீடுகள்**

பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி

**உணர்திறன் பகுப்பாய்வு**

பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி 10 சதவீதத்தால் அதிகரித்தால் சீர்மதிப்புப் பெறுமதியும் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும்

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| **சனவரி 1இல் உள்ளவாறு நிலுவை** | **1,615,356** | 1,500,487 |
| ஆண்டுகாலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **-** | 6,490 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | **55,862** | 108,379 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **1,671,218** | 1,615,356 |

**காணி மற்றும் கட்டடங்கள்**

**மதிப்பிடப்படும் முறை**

காணியானது நேரடி ஒப்பீட்டு முறையுடன் சந்தை அணுகுமுறையைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டதுடன், இம்முறையில் மேம்படுத்தப்பட்ட பெறுமதி பெயரளவு கூட்டப்படாத அல்லது கூட்டப்படாத அண்மைய விற்பனையுடன் சொத்துக்கள் ஒப்பிடப்பட்டு வேறுபாடுகளுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதி பெறப்படுகின்றது.

சமூகத்திற்குச் சேவை வழங்குகின்ற பொதுத்துறை நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் திறந்த திரவத்தன்மை சந்தையில் விற்பனை செய்யப்படுவதில்லை என்பதைக் கருத்திற்கொண்டு, சென்றல் பொயின்ற், வைற் எவேய்ஸ் மற்றும் லொயிட்ஸ் கட்டடங்கள் தவிர்ந்த அனைத்துக் கட்டடங்களுக்கும் மதிப்பீடு செய்யப்படும் பொழுது பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறைப் பதிலீட்டுக் கிரயமுறை பயன்படுத்தப்பட்டது.

ஏனைய கட்டடங்களை மதிப்பிடுவதற்கு வருமான அணுகுமுறை பயன்படுத்தப்பட்டதுடன் இம்முறையானது ஆதனங்களை எதிர்கால மதிப்பிடப்பட்ட வருமானம், இலாபம் அல்லது காசுப் பாய்ச்சலை தனியொரு நடைமுறைத் தொகைக்கு மாற்றுவதன் (கழிவிடப்படுவதன்) மூலம் மதிப்பிடுகின்றது.

**சந்தை அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்):**

பேர்ச் ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)

சதுர அடி ஒன்றுக்கான விலை அதிகரித்தல்/ (குறைதல்)

கட்டடங்களிற்கான பெறுமானத்தேய்வு வீதம் குறைதல்/ (அதிகரித்தல்)

**வருமான அணுகுமுறையின் கீழ், மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதியானது பின்வருமாறு அதிகரிக்கலாம்/ (குறைவடையலாம்)**

மொத்த வருடாந்த வாடகை வருமானம் அதிகரித்தல்/ (குறைதல்)

கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுகள் அதிகரித்தல்/ (குறைதல்)

**பெறுதிகள்**

பெறுமதி மதிப்பீட்டு மாதிரிகள் முன்னோக்கிய விலைகளை (சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னோக்கிய புள்ளிகளுக்கு மேலதிக நிறைகளை அறிவிப்பதன் மூலம் கணக்கிடப்பட்டது) பயன்படுத்தியதுடன் பெறுமதித் திகதியிலுள்ளவாறு தொடர்பான நாணயங்களில் பூச்சிய நறுக்கு விளைவு வளைகோட்டினை அடிப்படையாகக் கொண்டு கழிவின் வீதம் கணிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட சாதனமானது இலாபத்தை உள்ளடக்கியிருப்பின் இலாபத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுவதற்காக முன்னோக்கிய விலைகள் மற்றும் அல்லது வட்டி வீதங்களுக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**50.2 மீள்கொள்வனவு மற்றும் மீள்விற்பனை உடன்படிக்கைகள்**

உடன்படிக்கைகளின் குறுகிய கால இயல்பின் காரணமாக மீள்கொள்வனவு மற்றும் மீள்விற்பனைகளின் அறிக்கையிடப்பட்ட பெறுமதி சீர்மதிப்புப் பெறுமதியை அண்மித்ததாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு வழங்கப்பட்ட துணைநில் வைப்பு வசதியின் கொண்டு செல்லல் பெறுமதி ரூ.101,062.88 மில்லியனாகவும் (2020 - ரூ.209,507.90 மில்லியன்) 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இலங்கை அரச பிணையங்களின் கொண்டு செல்லல் பெறுமதி ரூ.567,532.31 மில்லியனாகவும் (2020 - ரூ.2,728.41 மில்லியன்) இருந்தது. 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட வெளிநின்ற அரச பிணையங்கள் எதுவும் காணப்படவில்லை (2020 - ஏதுமில்லை).

**50.3 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

சுற்றோட்டத்திலுள்ள நாணயங்களின் சீர்மதிப்புப் பெறுமதியானது, நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அவற்றின் முகப்புப் பெறுமதியாகக் கருதப்படுகிறது.

**50.4 வைப்புக்கள்**

கோரப்படுகின்ற போது செலுத்தப்பட வேண்டுமாதலால் வைப்புக்களின் கொண்டு செல்லல் பெறுமதியானது சீர்மதிப்புப் பெறுமதியை அண்மித்ததாக இருக்குமென கருதப்படுகின்றது.

### 50.5 சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படப்படாத நிதியியல் சாதனங்கள்

சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படப்படாத நிதியியல் சாதனங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | கொண்டு செல்லும் தொகை | | சீர்மதிப்புப் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | 2021 ரூ.000 | 2020 ரூ.000 | 2021 ரூ.000 | 2020 ரூ.000 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | **512,762,452** | 403,307,304 | **512,762,452** | 403,307,304 |
| ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் | **188,045,837** | 1,164,839 | **188,050,305** | 1,171,285 |
| ஏனைய பெறத்தக்கவை | **-** | 1,702,247 | **-** | 1,702,247 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **567,532,312** | 2,728,412 | **567,532,312** | 2,728,412 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் | **150,128,800** | 153,061,900 | **150,128,800** | 153,061,900 |
| வங்கிகளுக்கான கடன்கள் | **90,572,746** | 111,487,525 | **88,468,648** | 108,722,785 |
| ஏனைய சொத்துக்கள் | **34,063,770** | 23,097,190 | **33,614,096** | 21,334,664 |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | **13,701** | 208,337,221 | **13,701** | 208,337,221 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | **104,764,616** | 63,864,652 | **104,764,616** | 63,864,652 |
| ப.நா. நிதியம் | **670,065,243** | 509,925,278 | **670,065,243** | 509,925,278 |
| ஏனையவை | **357,295,676** | 74,870,325 | **357,295,676** | 74,870,325 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | **300,704,162** | 129,601,521 | **300,704,162** | 129,601,521 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | **1,392,301** | 1,460,512 | **1,392,301** | 1,460,512 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **101,062,880** | 209,507,898 | **101,062,880** | 209,507,898 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | **1,005,099,066** | 834,807,859 | **1,005,099,066** | 834,807,859 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **19,163,882** | 14,742,792 | **19,163,882** | 14,742,792 |

பன்னாட்டு நாணய நிதிய வைப்புக்கள், வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் உள்ளக நிதிய முதலீடுகளுடன் தொடர்புபட்ட நிலுவைகளின் சீர்மதிப்புப் பெறுமதியானது அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்து வேறுபடுகின்றது.

வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள், உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மற்றும் அரசிற்கான தற்காலிக முற்பணங்கள், வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம், பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் ஏனையவை அத்துடன் உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள், அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள், மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் சீர்மதிப்புப் பெறுமதிகள் அவற்றின் கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து வேறுபடவில்லை.

### 51. ஒப்பிட்டு ரீதியான தகவல்கள்

பின்வரும் ஒப்பீட்டுத் தரவுகள் நடப்பாண்டு சமர்ப்பிப்புடன் ஒத்திருக்கும் விதத்தில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

### 51.1 சொத்து, பொறி மற்றும் உபகரணத்திலிருந்து அருவச் சொத்துக்களுக்கு மூலதனமாக்கப்பட வேண்டிய மென்பொருளை மீள்வகைப்படுத்தல்

| | 2020 | | |
|---|---|---|---|
| | முன்னதாக அறிவிக்கப் பட்டவாறு ரூ. 000 | சீராக்கம் ரூ. 000 | மீள்வகைப் படுத்தப்பட்ட நிலுவை ரூ. 000 |
| **நிதியியல் அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணம் | 20,539,377 | (83,925) | 20,455,452 |
| அருவச் சொத்துக்கள் | 24,327 | 83,925 | 108,252 |

2020இல் நிதியியல் நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கீழ் காட்டப்பட்ட ரூ.83.93 மில்லியன் தொகை கொண்ட முன்னெடுப்புச்செயன்முறையிலுள்ள சிறந்த சமர்ப்பித்தல் நோக்கங்களுக்காக அருவமல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### 52. தொடர்பான தரப்பினர்கள்

### 52.1 அரச மற்றும் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

மத்திய வங்கியின் வழமையான வியாபாரத்தின் போது தொடர்புடைய தரப்பினர்களோடு கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றது. தொடர்புடைய தரப்பினருள் இலங்கை அரசாங்கம் (அரசு, இ.ம. வங்கியின் உரிமையாளர் என்ற ரீதியில்), பல்வேறு அரச திணைக்களங்கள், அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் 24 - திருத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினரின் வெளிப்படுத்தல்களுக்கமைய வங்கியினால் அரசுடனும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தனித்தனியாக முக்கியத்துவமில்லாத ஆனால் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரங்கள் பின்வருமாறு:

| கொடுக்கல்வாங்கலின் இயல்பு | 2021 ரூ. 000 | 2020 ரூ. 000 |
|---|---|---|
| **கொடுக்கல்வாங்கல்கள்:** | | |
| அரச பிணையங்களின் உடனடிக் கொள்வனவு | - | 14,044,912 |
| அரச பிணையங்களின் உடனடி விற்பனைகள் | **980,906** | - |
| மீள்கொள்வனவு/ விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு/ விற்பனை செய்யப்பட்ட இ.ம.வ. மற்றும் அரச பிணையங்கள் | **68,218,243,292** | 19,598,940,269 |
| மீள்கொள்வனவு/ மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட/ விற்பனை செய்யப்பட்ட இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்க பிணையங்கள் மீதான வட்டி வருமானம்/ செலவினம் | **8,378,432** | 4,569,328 |
| அரசாங்கத்தின் சார்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியங்கள் | **365,111,003** | 441,954,041 |
| அரசாங்கத்தின் சார்பாக பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்கள் | **362,223,823** | 35,987,068 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நாணயத் தாள்களை அச்சிடுவதற்கான செலவு **(குறிப்பு 52.1.3)** | **1,086,655** | 1,195,295 |
| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் **(குறிப்பு 52.1.4)** | **1,129,790** | 270,783 |
| ஆண்டினுள் மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் **(குறிப்பு 52.1.6)** | | |
| விற்பனை | **225,597,381** | 17,749,013 |
| கொள்வனவு | **61,515,180** | 57,158,110 |
| ஐ.அ.டொலர்/ இல. ரூபா பெறுதிகள் | **651,697,925** | 448,596,460 |
| இவ்வாண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட ஆதனம் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | **914,309** | 1,073,398 |
| வாடகை வருமானம் | **282,173** | 321,821 |
| பங்கிலாப வருமானம் | **115,786** | 154,381 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் **(குறிப்பு 52.1.9)** | **1,088,948** | 1,076,897 |
| **நிலுவைகள்:** | | |
| மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் **(குறிப்பு 52.1.7)** | **1,377,820,347** | 714,531,527 |
| அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் **(குறிப்பு 14)** | **150,128,800** | 153,061,900 |
| கொவிட்-19 புத்துயிரளித்தல் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் | **11,817,950** | 23,059,946 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | **15,938,729** | 12,914,495 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான அ.நே.மொ.தீ. நிலுவைகள் **(குறிப்பு 26)** | **221,738,927** | 81,586,946 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | **243,388** | 228,665 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தக்கவை | **4,087,983** | 597,774 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு செலுத்தத்தக்கவை **(குறிப்பு 25)** | **1,484,824** | - |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் | **(1,107,407)** | (1,215,313) |
| கைவிடப்பட்ட ஆதன நிலுவைகள் | **5,998,940** | 5,057,128 |
| ஏனைய நிலுவைகள் **(குறிப்பு 52.1.9)** | **292,917** | 175,813 |

**52.1.1** நாணய விதிச் சட்டத்தின் 28 - 33 பிரிவுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான மேற்பார்வைத் தொழிற்பாட்டினையும் ஒழுங்குபடுத்தலையும் மேற்கொண்டு வருகிறது. 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கைக் கொண்ட 07 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 01 சிறப்பியல்பு வாய்ந்த வங்கி இலங்கை மத்திய வங்கியின் தொடர்புடைய தரப்பினர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களமானது வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் ஒழுங்குபடுத்துகையையும் மேற்கொண்டு வருகிறது. இதற்கிணங்க, அரச கட்டுப்பாட்டிலுள்ள தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அரசினால் நிதியிடப்பட்ட வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் இத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**52.1.2** நாணய விதிச் சட்டத்தின் 113ஆம் பிரிவின்படி நாணயச் சபையும் இலங்கை மத்திய வங்கியும் பொதுப்படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை ஆற்ற அதிகாரம் பெற்றுள்ளன. இதற்கிணங்க, அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் பொதுப்படுகடன் திணைக்களமானது, வரவு செலவுத்திட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உள்நாட்டுச் சந்தைக்குப் பிணையங்களை வழங்குவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தீர்ப்பனவுகளையும் மேற்கொள்கின்றது. பொதுப்படுகடன் திணைக்களமானது பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் படுகடன் சந்தை அபிவிருத்தி என்பவற்றைக் கையாளுகின்றது. அரசாங்கத்தினுடைய நிதியிடல் தேவைகள் மற்றும் அதனுடைய பணம் செலுத்துதல் கடப்பாடுகள் என்பவை பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுவதற்காக அரசாங்கக் கடனை இது முகாமைத்துவம் செய்கிறது.

**52.1.3** நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் ஏக உரிமையையும் அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க இ.ம. வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஏக அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டி லா ரூ லங்கா கரன்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

**52.1.4** வங்கியின் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

**52.1.5** மத்திய வங்கியானது, குறிப்பு 55 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் பிற காப்பாளர் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

**52.1.6** நாணய விதிச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வங்கியின் பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் வர்த்தக வங்கிகளின் ஓரிரவுக்கான தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைச் செலாவணி அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறங்களிலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின்

மிகை மாற்றமுறும் தன்மையினை மிதமான நிலைக்குக் கொண்டு வருகின்றது. அத்தகைய கண்காணிப்பு நடவடிக்கையின் பெறுபேறுகளாக வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு மற்றும் விற்பனைத் தொகைகள் விளங்குகின்றன.

**52.1.7** வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 1949ஆம் ஆண்டு 58ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் 90 - 92ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 93 - 98 பிரிவுகளின் படியான நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதுடன், அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகளினதும் வேறும் சில நிதியியல் நிறுவனங்களினதும், அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2021 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு இத்தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள், குறிப்பு 12இல் தரப்பட்டுள்ளன. அரச பிணையங்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 36இல் தரப்பட்டுள்ளது.

**52.1.8** வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது, அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

**52.1.9** ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றன.

**52.2 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்**

ஆளுநர், துணை ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள் உள்ளடங்கலாக நாணயச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**52.3 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான கொடுப்பனவு**

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நன்மைகள் | **180,218** | 204,508 |

மேற்படி கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அவர்களுடனான தொழில் ஒப்பந்தங்களுக்கமைய வங்கியினால் காசல்லாத நன்மைகளும் வழங்கப்படுகின்றன.

**52.4 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான வெளிநின்ற கடன்கள் | **98,648** | 90,847 |
| இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | **6,699** | 10,000 |
| இவ்வாண்டுப்பகுதியில் மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் | **10,038** | 31,758 |

அனைத்துக் கடன்களும் கடன் வகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பிணையத்தைக் கொண்டுள்ளதுடன் மாதாந்தம் மீளச் செலுத்தப்படுகின்றன.

**52.5 தொழில்நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்**

| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **73,517** | 73,173 |

குறிப்பு 32இல் தரப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத்திற்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளைப் பங்களித்ததுடன் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.717.59 மில்லியன் (2020இல் ரூ.709.46 மில்லியன்) பங்களிப்புச் செய்துள்ளது. வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது வங்கியானது அதன் தொழிலுக்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்கியது. அத்தகைய திட்டங்களுடனான நிலுவைகளின் தொகைகள் குறிப்பு 30.2இல் தரப்பட்டுள்ளன.

**53. எதிர்பாராப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும்**

**53.1 நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்**

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் இ.ம. வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய வெளிநின்ற உத்தரவாதங்கள் எதுவுமிருக்கவில்லை.

**53.2 கொடுகடன் உத்தரவாதங்கள்**

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வெளியக கொடுகடன் மூலங்களிலிருந்தான கடன் பெறுகைகளிலிருந்து மீள்நிதியிடலை வழங்குதல், அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு கடன்கள் மீதான கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குதல், உத்தரவாத தவணைத் தொகைகளைச் சேகரித்தல், கொடுகடன் உத்தரவாத நிதியங்களை நிருவகித்தல், கடன் செலுத்தத் தவறுகைகளைத் தடுக்கும் நோக்குடன் கடன் நிதியங்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக கொடுகடனுக்குப் பின்னரான சோதிப்புக்கள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தொழிற்பாடுகளை வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது. ஆண்டுகாலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன்களை வழங்கிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ஏழக்கூடிய இழப்புக்களுக்கெதிராக வங்கி உத்தரவாதங்களை வழங்கியது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுகைகளுக்கான ஒரு உத்தரவாதமல்ல என்பதோடு இழப்புக்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற இழப்புக்களுக்காக மாத்திரம் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

**உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கொடுகடன் உத்தரவாதங்கள் தொடர்பானது:**

| | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை | |
|---|---|---|
| | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
| தொடர்பான தரப்பினர்கள் | **21,742,330** | 20,898,328 |
| ஏனையவை | **526,405** | 539,315 |
| மொத்தக் கொடுகடன் உத்தரவாதங்கள் | **22,268,735** | 21,437,643 |

2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு குறிப்பு 39இல் பதியப்பட்டுள்ளது.

**53.3 நம்பகமான செயற்பாடுகள்**

நாணய விதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வங்கியானது நம்பகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ்வகையான இயலுமையில் செயற்படுவதானது பல்வேறு தரப்பினரது சார்பாக நிதியங்களை வைத்திருக்க அல்லது வழங்கச் செய்கின்றது. ஆனாலும் அச்செயற்பாடுகளின் நிமித்தமாக எழும் எந்தப் பொறுப்பையும் வங்கி எதிர்பார்க்கவில்லை.

**53.4 சட்ட ரீதியான கோரல்கள்**

2021 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால், எவ்வித ஏற்பாடுகளும் மேள்கொள்ளப்படவில்லை.

**53.5 கடப்பாடுகள்**

அ) 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.309.17 மில்லியன் பெறுமதியான மூலதனக் கடப்பாட்டைக் கொண்டிருந்தது.

ஆ) 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | 2021<br>ரூ. 000 | 2020<br>ரூ. 000 |
|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி விற்பனைகள் | | |
| ஐ.அ.டொலர் | **734,550** | 986,500 |
| யப்பான் யென் | **2,800,000** | 33,260,000 |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | | |
| ஐ.அ.டொலர் | **225,145** | 208,000 |

**54. நிதியியல் சொத்துக்களின் மாற்றல்கள்**

வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது நிதியியல் சொத்துக்களின், முக்கியமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பிணையங்களின் மாற்றலுக்கு வழிவகுக்கக்கூடிய கொடுக்கல்வாங்கல்களில் வங்கி ஈடுபடுகின்றது. குறிப்பு 5.3.3இல் குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கையின்படி மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் தொடர்ச்சியாக முழுமையாக அல்லது வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படலாம் அல்லது அவை முழுமையாக அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படலாம்.

வங்கியானது முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத அல்லது முக்கியமாக பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மூலம் வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டைக் கொண்டிருக்கும் நிதியியல் சொத்துக்களை மாற்றல் செய்கின்றது.

- மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்
- கடன் பிணையங்கள்
- பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்

**54.1 முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள்**

**அ) மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்**

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் வங்கியின் நாணயக் கொள்கை செயற்பாட்டின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்படுவதுடன் இவை உடமையின் குறிப்பிடத்தக்களவு அனைத்து இடர்நேர்வுகளையும் வெகுமதிகளையும் கொண்டுள்ளமையால் நிதியியல் நிலைமைக் கூற்றில் “இலங்கை அரச பிணையங்கள்” இன் கீழ் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கப்பட்டன. செலுத்தப்பட வேண்டிய காசு பிரதிபலன்கள் மற்றும் அதனுடன் தொடர்பான அட்டுறு வட்டி என்பன நிதியியல் நிலைமைக் கூற்றின் உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்களின் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**ஆ) கடன் பிணையங்கள்**

கடன் பிணையங்கள் விபரிப்பது யாதெனில் கட்டணத்தினால் உருவாக்கப்பட்ட சந்தை நடைமுறைகளில் பிணையங்கள் தற்காலிக அடிப்படையில் ஒரு தரப்பினரிடமிருந்து (கடன்கொடுப்பவர்: உதாரணம் இ.ம.வ) இன்னொரு தரப்பினருக்கு (கடன்பெறுபவர்) மாற்றல் செய்யப்படுவதாகும். கடன்வாங்கியவர் ஒப்பந்த தவணை முடிவில் அல்லது கேட்கப்படும் போது திரும்பச் செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும். தற்போது பல்வேறு வழங்குநர்களினால் வழங்கப்படும் முறிகள் மற்றும் பல்தேசிய முறிகள் ஆகியவற்றின் கூட்டுக்காப்பாளராக தெரிவுசெய்யப்பட்ட கிளியரிங் ஹவுஸ் செயற்படுகின்றது. அந்த முறிகளின் கேள்வியின் அடிப்படையில் அவற்றை கடன்கொடுப்பதற்கு கிளியரிங் ஹவுசினை ஏதுவாக்குவதற்காக அதனுடன் இலங்கை மத்திய வங்கி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி கடன் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடாது கிளியரிங் ஹவுஸ் நேரடியாக கடன்படுநர்களுக்கு அவற்றைக் கொடுப்பதனால் இச்செயற்பாடு தன்னியக்க முறி கடன்வழங்கல் என அழைக்கப்படும். ஒவ்வொரு மாத இறுதியிலும் தன்னியக்க கடன்வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறிகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் தன்னியக்க முறி கடன்வழங்கலின் கட்டண வருமானத்தினைக் கட்டுக்காப்பாளர் அனுப்பி வைப்பார். இது உடமையின் குறிப்பிடத்தக்களவு முழுமையான இடர்நேர்வு மற்றும் வெகுமதிகளை கொண்டிருப்பதனால் வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களைத் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கின்றது. இந்தப் பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் “ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்களாகக்” காட்டப்படுகின்றன.

**இ) பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்**

பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு அவுஸ்திரேலியா டொலர் 35.0 மில்லியன் பெறுமதியுடைய பிணையங்கள் வங்கியினால் யூரோ கிளியர் வங்கியில் பிணையிடப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 30 மில்லியன் பெறுமதி கொண்ட கொடுகடன் வசதி பெறப்பட்டது. தற்பொழுது, யூரோ கிளியர் வங்கியில் வைத்திருக்கபடும் பிணையிடப்பட்ட பிணையங்கள் ஐ.அ.டொலர் 13.5 மில்லியனாகும். பிணையிடப்பட்ட பிணையங்கள் யூரோ கிளியரில் தனியான கணக்கில் வைத்திருக்கப்படுகின்றன.

வங்கிக் கணக்கிலான நடவடிக்கையின் மீளாய்வு மற்றும் யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் நீட்டிப்பை ஆளுகை செய்யும் பொது நிபந்தனைகளின் குறிப்பு என்பனவற்றைத் தொடர்ந்து வங்கியின் கொடுகடன் வசதியானது 2017 சனவரி 31 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஐ.அ.டொலர் 20.0 மில்லியனுக்குக் குறைவடைந்தது..

யூரோ கிளியர் முறைமையிலுள்ள பங்கேற்பாளர்களுக்கான கொடுகடன் நீட்டிப்பை ஆளுகை செய்யும் பொது நிபந்தனைகளில் குறிபடபிடப்பட்டவாறு 2018 நவெம்பர் 5 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொடுகடன் வசதி இடைநிறுத்தப்பட்டதென யூரோ கிளியரினால் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்டது.

இடைநிறுத்தப்பட்ட கொடுகடன் வசதியை மீளப்பெறுவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் யூரோ கிளியர் வங்கியின் பதிலிறுப்பானது 2020 ஓகத்து 12 இலிருந்து நிலுவையிலுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்து 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறான ஐ.அ.டொலர் 1,013.10 மில்லியன் பெறுமதியான நிலையான வருமானப் பிணையங்களைப் பிணையாக வைத்ததன் மூலம் 2020 செத்தெம்பர் 28இல் ஐ.அமெரிக்கா பெடரல் ரிசேர்வ் பாங்க் ஒவ் நியூயோர்க்கினால் வழங்கப்படும் வெளிநாட்டு மற்றும் பன்னாட்டு நாணய அதிகாரசபைகளுக்கான மீள்கொள்வனவு வசதியின் கீழ் ஐ.அ.டொலர் 1,000.0 மில்லியன் தொகை திரட்டப்பட்டது. இவ்வசதி 2021 மாச்சு இறுதியில் இலங்கை மத்திய வங்கியால் முற்றாக எடுப்பனவு செய்யப்பட்டது.

| | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள் 2021 ரூ. 000 | ஏனைய அனைத்தையு முள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான 2020 ரூ. 000 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| கடன் பிணையங்கள் | - | 430,965 |
| யூரோ கிளியருடன் பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள் | **2,830,756** | 5,258,986 |
| பெடரல் ரிசேர்வ் உடன் பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள் | - | 196,202,362 |
| சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி | **2,830,756** | 201,892,313 |

## 55. நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

மத்திய வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நம்பகத் தகுதிகளிலும் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

**55.1** வங்கியானது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதியிடப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் கொடுகடன் திட்டங்களின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைத்தரப்பினர் நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

**55.2** வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் கட்டுக்காப்பாளர் ஆகும். சட்ட நியதிகளின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல், மற்றும் அங்கத்தவர்களுக்கு நன்மைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பன நாணயச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

**55.3** மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களிற்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழிலை மேற்கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படையதான தன்னார்வ வைப்புக் காப்புறுதித் திட்டமாக விளங்கும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கியே நிருவகிப்பதுடன் 2010 ஒத்தோபர் 01ஆம் நாள் தொடக்கம் நிதிகள், 2010 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி உருவாக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கு மாற்றல் செய்யப்பட்டுள்ளன.

**55.4** 2010 செத்தெம்பர் 28ம் நாளிடப்பட்ட 1673/ 11 இலக்க அரச வர்த்தமானியின்படி வங்கி 2010 ஒத்தோபர் 01 ஆம் நாள் தொடக்கம் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என்ற பெயரில் வைப்பாளர்களின் நிதியினைப் பாதுகாக்கும் தேசிய நல நடவடிக்கையொன்றாக கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றினை ஏற்படுத்தியது.

2013 நவெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இத்திட்டம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்” என மீளப்பெயரிடப்பட்டதுடன் வைப்பு காப்புறுதி நிதி “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதி” என மீளப்பெயரிடப்பட்டது.

மேலும், 2239/52ஆம் இலக்க வர்த்தமானி இலக்கத்திற்கமைவாக, 2010 செத்தெம்பர் 28ஆம் திகதியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஆரம்ப ஒழுங்குவிதிகளை இரத்துச்செய்து மாற்றீடு செய்வதன் மூலம் 2021 ஓகத்து 06ஆம் திகதியிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டமாக புதிய ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் என்பன இத்திட்டத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். இதன்படி, 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு 69 நிறுவனங்கள் இத்திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ளனர். காப்புறுதி செய்யப்பட வேண்டிய வைப்புக்கள் மேலே சொல்லப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் 5.1 இன்படி விசேட விலக்கல்கள் மற்றும் அனைத்துக் கடன் சாதனங்களும் நீங்கலான உறுப்பினர் நிறுவனங்களின் கேள்வி, தவணை மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் ஆரம்பத்தில் வைப்பாளர்களாகயிருந்து 2012 சனவரி 01இற்கு முன்னர் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நாணயச் சபையின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வியாபார மீளமைத்தல் திட்டங்களின் ஒரு பகுதியாக உரிமை மூலதனமாக மாற்றப்பட்ட பங்குதாரர்களின் பங்குகளின் பெறுமதி என்பவற்றை உள்ளடக்கப்படுவதுடன் 5.2ஆம் ஒழுங்குவிதிகளில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்துப் படுகடன் சாதனங்களையும் வைப்புப் பொறுப்புக்களையும் நீக்குகின்றது.

வைப்புக் காப்புறுதி நிதியமானது, சுய விருப்பு வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் முதலீடான ரூ.350.20 மில்லியன் மாற்றலின் மூலமும் மற்றும் கைவிடப்பட்ட சொத்தாக உரிமம் பெற்ற வர்த்தக

வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட ரூ.1,168.31 மில்லியன் முதலீட்டின் மூலமும் உருவாக்கப்பட்டது. 2021 திசெம்பர் 31இல் நிதியத்தின் அளவு ரூ.67,887.33 மில்லியனாக (கணக்காய்வு செய்யப்படாதவை) இருந்தது. தற்பொழுது, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றுக்கு கொடுபடத்தக்க இழப்பீட்டுத் தொகை ரூ.1,100,000.00 அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களாக இருக்குமிடத்து அதற்குச்சமனான தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இழப்பீட்டுக் கொடுப்பனவிற்கு நாணயச் சபையோ அல்லது இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட கடன்பாடுகள் மற்றும் பெறப்பட்ட உதவுதொகைகள் உட்பட வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியம் அல்லது ஒதுக்கப்பட்ட நிதியத்திற்கு ஏற்றவாறு மட்டுப்படுத்தப்படும். நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள மொத்தத் தொகைக்கு மேலதிகமாக ஏற்படும் ஏதாவது பொறுப்பிற்கு நாணயச் சபையோ இலங்கை மத்திய வங்கியோ பொறுப்பேற்க மாட்டாது.

வைப்புக் காப்புறுதிப் பிரிவு தற்பொழுது தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன், இது, காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறான பணிப்புரைகள்/ ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளின் நியதிகளுக்கிணங்க தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் இத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாக இருக்கின்றது. வைப்புக் காப்புறுதிப் பிரிவானது வங்கியின் நிதியியல் கூற்றுக்களிலிருந்தும் தெளிவாகவும் தனியாகவும் ஏடுகளையும் கணக்குகளையும் பேணல் வேண்டும். அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் இப்பிரிவின் கணக்காய்வாளாராக இருத்தல் வேண்டும்.

**55.5** நாணயச் சபையினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் விடயத்தில் வங்கியானது ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்கின்றது. இத்தொழிற்பாடுகளை நிறைவேற்றும் அதேவேளையில் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் நிதிக் கம்பனிகள் சார்பாக வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதுடன் கடன் தீராற்றலற்ற முறிவு நிலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆட்களினுடைய சொத்துக்களை கையகப்படுத்தல் உட்பட பிணையத்தின் ஒரு வடிவமாக நாணயச் சபையைக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**55.6** வங்கியின் நாணயச் சபை சார்பில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியாலும் வெளிநாட்டு நன்கொடையாளர்களினாலும் நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பிரத்தியேக முகவராக தொழிற்படுகின்றது.

I. **இ.ம.வங்கியினால் நிதியிடப்படும் செயற்றிட்டங்கள்**

(i) **முடிவடைந்த செயற்றிட்டங்கள்**

| செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர் | நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.) | | குறிக்கோள்கள் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.) |
|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 24.50 | தேயிலை சிறு உடமையாளர் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்டப் பிரதேசங்களில் இயற்கைச் சூழலை மேம்படுத்துதல் | 2,550.90 |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஉை | 11.56 | நீண்ட கால பயிர் துறையினை வர்த்தகப்படுத்தல், உற்பத்தியை அதிகரித்தல், நாற்றுமேடை அபிவிருத்தி, அறுவடைக்குப் பின்னரான கையாளல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் | 1,453.11 |
| பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 40.00 | உற்பத்தித்திறனையும் இலாபத்தன்மையினையும் அதிகரிக்கும் அதேவேளை இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் துறையில் அநுகூலங்களைப் பேணுவதற்காக பெருந்தோட்டத் துணைத் துறைகளில் கொள்கை மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உதவியளித்தல் | 5,200.00 |
| சிறிய வியாபாரங்களை மீள எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 2,656.00 | சிறிய வியாபாரங்களை மீட்பதன் மூலம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 2,663.40 |
| சிறிய வியாபாரங்களை மீள் எழுச்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் -சுழலும் நிதியம் | இல.ரூ | 150.00 | சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீளத் தொடங்குதல் | 122.72 |
| தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் | இல.ரூ | 94.31 | உயர்தர தொழிற்படையை உருவாக்குவதற்காகவும் தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மையை நீக்குவதற்காகவும் தேர்ச்சிப் பயிற்சியின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மேம்படுத்தல் | 94.59 |
| நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 4.00 | நகரத்திலும் நகர்ப்புறங்களிலும் வசிக்கும் மக்களின் சூழல் வசதிகள், நலம் மற்றும் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துதல் | 369.15 |
| வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான வீடமைப்பு புகலிடச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 25.00 | நாட்டிலுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளைக் கட்ட, புதுப்பிக்க, வாழிடங்களை விரிவாக்க உதவுதல் | 1,362.00 |
| நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | சிஉை | 15.10 | வீடுகளைக் கட்டுவதனூடாக வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு குறைந்த வருமானச் சமூகத்தினருக்கு உதவுதல் | 1,915.76 |
| வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 1.80 | வடமேல் மாகாணத்திலுள்ள மக்களின் பொருளாதார, சமூக, ஊட்டச்சத்து நலனோம்புகைகளை மேம்படுத்துதல் | 102.76 |

| | | | | |
|---|---|---|---|---|
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் | சிஎஉ | 2.00 | சிறிய தொழில்முயற்சியாளர்களின் வருமானத்தினை நிரந்தரமாக உயர்த்துதல் மற்றும் வலுப்படுத்தல் | 249.06 |
| மத்திய நாட்டு நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 11.56 | மத்திய நாட்டுப் பகுதியில் நீண்ட காலப் பயிர்களின் உற்பத்தி இயலளவை அதிகரித்தல் | 642.00 |
| வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம் | சிஎஉ | 17.05 | ஐந்து எல்லை மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கும் சொத்துக்களின் புனரமைப்பிற்கும் உதவுதல் | 843.00 |
| சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 12.60 | சிறு உடமையாளர் தேயிலை துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேயிலைக்கான வசதிகளை புனரமைத்தல் | 645.93 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் | யென் | 1,368.00 | வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்காக முறையான கொடுகடன் வழிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறையொன்றினை ஏற்படுத்துதல் | 1,402.45 |
| சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் | ஐ.அ. டொலர் | 17.40 | குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே தொழில் உருவாக்கத்தினையும் சேமிப்புப் பழக்கத்தினையும் மேம்படுத்தலும் செலவுச் சிக்கனமானதும் உறுதியானதுமான நுண்பாக கொடுகடன் விநியோக முறைமையை நிறுவுதலும் | 345.69 |
| கேகாலை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 1.50 | வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளினை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கை நிலைமைகளைத் தரமுயர்த்துதல் | 148.00 |
| தென் மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் | சிஎஉ | 27.90 | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் வாழ்க்கைத்தரத்தினை முன்னேற்றுதல் | 564.00 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் ஒப்பந்தம் பீ | யூரோ | 10.00 | சுனாமியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலா மற்றும் அதன் பணித் துறைகள் உள்ளடங்கலாக சிறிய மற்றும் நடுத்தரளவு செயற்றிட்டங்களை மீளக் கட்டியெழுப்புதல் | 1,553.27 |
| **செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர்** | **நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.)** | | **குறிக்கோள்கள்** | **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.)** |
| இரண்டாவது நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,200.00 | நாட்டின் நீண்ட காலப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்தல் | 1,199.82 |
| மாத்தளை பிரதேச பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 77.00 | மாத்தளை மாவட்டத்தில் கிராமிய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமானத்தினை உயர்த்துதல், பண்ணையல்லாத தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்காக நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியங்களை வழங்குதல் அத்துடன் ஏற்கனவேயிருக்கும் செயற்றிட்டங்களை விரிவாக்குதல் | 77.00 |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 100.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் | 100.00 |
| கட்டுமானத் துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | யூரோ | 9.00 | சுனாமிக்குப் பின்னைய மீள்கட்டுமானங்களில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனுடன் பங்கேற்பதற்காக தனியார் உள்நாட்டு வியாபாரங்களின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலுமைகளை உறுதிப்படுத்துதல் | 1,399.73 |
| சப்பிரகமுவா மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் II | இல.ரூ | 70.00 | சப்பிரகமுவா மாகாணத்தில் புதிய வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் மேலும் மேம்படுத்துவதற்கும் | 70.00 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) | யென் | 2381.00 | மாத வருமானம் ரூ.15,000 இற்கும் குறைவாகக் கொண்ட குடியிருப்பாளர் அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 3,213.20 |
| சுய வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு முயற்சி | இல.ரூ | 250.00 | நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தில் சித்தியடைந்து பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புச் செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு நிதியியல் உதவிகளை வழங்குதல் | 232.39 |
| வரண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் | இல.ரூ | 252.95 | அநுராதபுரம், மொனராகலை, குருணாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வேளாண்மையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளூடாக கூடிய வருமானம் ஈட்டுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல் | 252.95 |
| தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஐ.அ. டொலர் | 32.90 | சந்தை/ பெறுமதிச் சங்கிலித் தொடர் அபிவிருத்தி மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு சிறுஉடமை உற்பத்தியாளர்கள் மற்றும் நிலமற்றோரின் குறிப்பாக இளைஞர்களுக்கு உதவியளித்தல் மற்றும் அவர்களது வருமானத்தினை மேம்படுத்தும் விதத்தில் நிதியினையும் பயிற்சியையும் வழங்குதல் | 113.13 |
| சிறிய பெருந்தோட்டத் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்றிட்டம் | சிஎஉ | 2.60 | மொனராகல, கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் | 487.66 |
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - நுண்பாக நிதி | இல.ரூ | 1,049.84 | தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்ட பிரதேசங்களின் வசதி குறைந்தோரின் வருமான மட்டம் மற்றும் சமூக நிலையை முன்னேற்றுதல். | 1,049.84 |

| | | | | |
|---|---|---|---|---|
| தேசிய வேளாண் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி மூலதன வேளாண் கடன் திட்டம் | இல.ரூ | 135.69 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் திறன், தரம் மற்றும் கூட்டப்பட்ட பெறுமதியை அதிகரித்தல் | 135.69 |
| தேசிய வேளாண்மை வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வெளிப்பயிர் வேளாண்மையாளர் கடன் திட்டத்தின் கீழான பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி பருவகால வேளாண்மை கடன் திட்டம். | இல.ரூ | 302.04 | வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித் திறன், தரம் மற்றும் கூட்டப்பட்ட பெறுமதியை மேலும் மேம்படுத்தல் | 302.04 |
| "தருண திரிய" இளைஞர்களுக்கு வலுவளித்தல் மற்றும் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | இல.ரூ | 288.48 | சிறிய வியாபாரங்கள் மற்றும் ஏனைய வடிவங்களிலான சுயமுயற்சி செயற்றிட்டங்களை உள்ளடக்கி, தேர்ச்சி மட்டங்களை மேம்படுத்தவும் இயலளவைக் கட்டியெழுப்பவும் கிராம மட்டத்திலான வறிய இளைஞர்களுக்கு உதவுதல் | 288.48 |
| வறண்ட வலய வாழ்வாதார உதவி மற்றும் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 252.90 | அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் வருமானமீட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தல் | 252.89 |
| சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் திட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 345.69 | சிறு வேளாண்மையாளர்கள் மற்றும் சிறு அளவு வேளாண்மையல்லா கிராமிய தொழில்முயற்சி நிறுவனங்களினாலும் வேளாண்மை உற்பத்தியை செறிவுபடுத்துவதற்கு ஊக்குவித்தல். | 1,564.75 |
| **செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர்** | **நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.)** | | **குறிக்கோள்கள்** | **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.)** |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II (பிரபோதினி) - சுழலும் நிதி | இல.ரூ | 2,764.84 | குறைந்த வருமான சமூகத்தினரின் மட்டத்தை மேம்படுத்தல் மற்றும் முறையான நிதியியல்பணிகளின் உள்ளடக்கத்தினை மேம்படுத்தல் மற்றும் அத்தகைய மக்களின் வருமானமீட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்தல் | 7,016.86 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4 பீ மூலதனம் | ஐ.அ. டொலர் | 30.29 | உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி அவற்றின் இயலளவைக் கட்டியெழுப்புதல், தனியார் துறையுடனான பங்குடமையுடன் வலையமைப்பை அமைத்தல் மற்றும் வலுப்படுத்தல் செயன்முறையைப் பயன்படுத்தி வர்த்தக ரீதியான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையினூடாக சிறு உடமையாளர்களின் வறுமையைக் குறைத்தல் மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல் மற்றும் 57,500 சிறு உடமையாளர்களின் வருமான மட்டம் மற்றும் உணவுத் தரத்தை அதிகரித்தல் போன்றவற்றிற்குப் பங்களித்தல் | 125.85 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4 பீ பருவகாலம் | | | | 854.05 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் இளைஞர் | | | | 14.45 |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் வருமான உருவாக்கம் | | | | 106.42 |

(ii) **நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | இல.ரூ | 1,100.00 | தொழில் துறையிலுள்ள தேயிலைத் துறையை அபிவிருத்தி செய்தல் | 964.87 |
| சுவசக்தி கடன் திட்டம் | இல.ரூ | 4,000.00 | புதிய மற்றும் தற்போதுள்ள முயற்சியாளர்களுக்கு உதவி வழங்கும் அதேவேளை வேலைவாய்ப்புக்களை விரிவுபடுத்தல் | 2,877.39 |
| "அத்வெல" - அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைத்தல் | இல.ரூ | 2,000.00 | இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டவாறு எந்தவொரு அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட எந்தவொரு தகுதிவாய்ந்த பொருளாதாரச் செயற்பாடுகளை மீளமைக்க ஆதரவளித்தல் | 1,687.52 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் மீள் நிதியிடல் (பிரபோதினி) | இல.ரூ | 1,031.00 | முறைமை சார்ந்த நிதியியல் துறை வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத குறைந்த வருமானமீட்டும் குழுக்கள் அல்லது சமூகத்தினரால் மேற்கொள்ளப்படும் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு காத்திரமான கொடுகடன் வழங்கல் பொறிமுறையை உருவாக்குவதற்கு உதவியளித்தல் | 5,418.36 |

| | | | | |
|---|---|---|---|---|
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பீ வேளாண் வியாபாரம் | ஐ.அ. டொலர் | 30.29 | வேளாண் உற்பத்தியின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டலை அதிகரித்தல் | 419.48 |
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பீ இளைஞர் | | | | 359.31 |
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் இளைஞர் | | | | 132.26 |
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் வேளாண் வியாபாரம் | | | | 11.98 |
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதிய வருமான உருவாக்கம் | | | | 38.19 |
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் 4பீ நிதியியல் நிறுவனங்களின் தொகை வடிவிலான கடன் | | | | 58.85 |
| சிறு உடமையாளர் வேளாண் வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் நிதியியல் நிறுவனங்களின் தொகை வடிவிலான கடன் | ஐ.அ. டொலர் | 30.29 | வேளாண் உற்பத்தியின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டலை அதிகரித்தல் | - |
| சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சுழலும் நிதியம் ஊக்குவிப்பாளர் தொகை வடிவிலான கடன் | | | | - |
| **செயற்றிட்டம் அல்லது கடன் திட்டத்தின் பெயர்** | **நிதியத்தின் மொத்த ஒதுக்கம் (மில்.)** | | **குறிக்கோள்கள்** | **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியம் (ரூ. மில்.)** |
| சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்பு - கட்டம் II | இல.ரூ | 950.00 | தேசிய தொழிற்பயிற்சி தகைமையின் சான்றிதழை அல்லது டிப்ளோமை பூர்த்தி செய்த இளைஞர்களுக்கு புதிய வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவேயிருக்கும் வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு உதவியளித்தல் | 491.13 |
| சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்தெழுச்சி | இல.ரூ | 500.00 | மீள்நடப்பட்ட தேயிலை மற்றும் புதிதாக நடப்பட்ட இறப்பர் தோட்டங்களிலிருந்தான வருமான உருவாக்கத்தில் தாமதத்தை எதிர்நோக்கும் சிறுஉடமையாளர் வேளாண்மையாளர்களுக்கு சலுகை ரீதியான நிதியியல் வசதிகளை வழங்குதல் | 201.75 |

**56. அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

கீழே குறிப்பிடப்பட்டவை தவிர நிதியியல் கூற்றுக்களைச் சீர்செய்தல் அல்லது நிதியியல் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியதாகவுள்ள பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் நிதியியல் அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெறவில்லை.

குறிப்பு 48.3 இல் காட்டப்பட்டவாறு, வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியானது ஆண்டிறுதி உடனடி செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. அறிக்கையிடும் திகதியைத் தொடர்ந்து, நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்பு 48.3 இல் காட்டப்பட்ட நாணயங்களுக்கான செலாவணி வீதங்களானது இலங்கை ரூபாவிற்கெதிராக உயர்வடைந்துள்ளதுடன் இது 2021 திசெம்பர் இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட தொகைகளுடன் ஒப்பீடுசெய்கையில் வெளிநாட்டுச் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் அதனைத்தொடர்ந்து எழுகின்ற பெறுமதிகளுக்கு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

## 2. வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நாணய விதிச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டதுடன் இது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் மற்றும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொடர்ச்சியான மேற்பார்வையையும் காலாந்தரப் பரீட்சிப்புக்களையும் நடாத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்காக ஒழுங்குவிதிகளை வழங்குவதற்குமான விசேட அதிகாரங்களையும் கடமைகளையும் கொண்டதாகும். வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்த தன்மையையும் உறுதிசெய்தல் மற்றும் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் வைப்பாளர்களினதும் ஏனைய ஆர்வலர்களினதும் நலன்களைப் பாதுகாத்தல் என்பவற்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்கள் நோக்காகக் கொண்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடையும் பொருட்டு, உரிமம்பெற்ற வங்கிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்; வங்கித்தொழில் வியாபாரங்களைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமங்களை வழங்குதல்; முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை உருவாக்கி வழங்குதல்; உரிமம்பெற்ற வங்கிகளில் தொடர்ச்சியான மேற்பார்வையையும் காலாந்தர நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களையும் நடாத்துதல்; உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியை நியமிப்பதற்கான பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமை ஆகியவற்றை மதிப்பீடுசெய்து ஒப்புதலளித்தல்; நாணயச் சபை மூலம் விதந்துரைக்கப்பட்டவாறு ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை தொடங்குதல் அத்துடன் வங்கித்தொழில் துறை பற்றிய விழிப்புணர்வையும் இயலாற்றலையும் கட்டியெழுப்புவதில் ஈடுபடுதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொள்கின்றது.

2021ஆம் ஆண்டின் இறுதியில், 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் இலங்கை வங்கித்தொழில் துறை உள்ளடக்கியிருந்தது. இதற்கு மேலதிகமாக, 3 வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்களும் இலங்கையில் தொழிற்பட்டன. மேலும், இந்திய ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் ஒரு பிரதிநிதித்துவ அலுவலகத்தை அமைப்பதற்குரிய ஒப்புதலை நாணயச் சபை 2021 மார்ச்சில் வழங்கியது. சனவரி 2022இல் ஐசிஐசிஐ வங்கியினுடைய பிரதிநிதித்துவ அலுவலகம் செயற்பாடுகளை ஆரம்பித்தது. உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் பிரதிநிதித்துவ அலுவலகங்களின் பட்டியல் இணைப்பு II - 1 இல் தரப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் தொகுப்பு பின்வருமாறு:

### 2.1 முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வழங்குதல்

வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டினையும் தாக்குபிடிக்கும் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் செயலாற்றல்மிக்க முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வழங்கிய அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் உரிமம்பெற்ற வங்கிகளின் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகளை தொடர்ந்தும் வழங்கியது. 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட சில முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன. ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி III இல் தரப்பட்டுள்ளன.

(அ) உரிமம்பெற்ற வங்கிகளில் கொடுகடன் வசதிகளையும் ஏனைய நிதியியல் சொத்துக்களையும் வகைப்படுத்துதல், அங்கீகரித்தல் அத்துடன் அளவீடு செய்தல்

(ஆ) தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குபிடிக்கும்தன்மை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

(இ) உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மீட்புத் திட்டங்கள்

(ஈ) நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறைக்கான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கென முன்னுரிமை துறை கடன்வழங்கள் இலக்குகள்

(உ) உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

(ஊ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மூலம் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீதான கட்டுப்பாடுகள்

(எ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி மூலம் மேற்கொள்ளப்படும் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடுகள் மீதான கட்டுப்பாடுகள்

(ஏ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் ஈட்டினால் பிணையளிக்கப்பட்ட வீடமைப்பு கடன்கள் மீதும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதுமான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்

(ஐ) கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறைக்கும் கடன்பெறுநர்களுக்குமான சலுகைகளை நீடித்தல்

(ஒ) கொவிட்-19 உலகளாவிய நோய்ப்பரவலுக்கு மத்தியில் வங்கித்தொழில் பணிகளை வழங்குதல்

(ஓ) லங்கா ரேடிங் ஏஜென்சி லிமிடெட்டை ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் தரமிடல் முகவரொருவராக அங்கீகரித்தல்

(ஔ) உரிமம்பெற்ற வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்

### 2.2 புதிய வங்கித்தொழில் சட்டத்தை வரைதல்

உரிமம்பெற்ற வங்கிகளின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் புதிய வங்கித் தொழில் சட்டத்தை இறுதிசெய்யும் செயன்முறையில் ஈடுபடுகின்றது. விகிதாசாரத்தன்மையை வசதியளித்தல், நிறுவன ஆளுகையை வலுப்படுத்தல், ஒருங்கிணைந்த மேற்பார்வை, உரிமம்பெற்ற வங்கிகள் பற்றிய தீர்மானம், நிதியியல் அபராதங்களை/தண்டங்களை விதித்தல், பரவும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான வங்கிகளின் பாதுகாப்பு வளையம் அத்துடன் ஒன்றிணைப்புக்கள், கையகப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தலுக்கான ஏற்பாடுகளை வலுப்படுத்தல் என்பவற்றிற்கு வேறுபடுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கான ஏற்பாடுகளை முன்மொழியப்பட்ட புதிய வங்கித்தொழில் சட்டம் உள்ளடக்குகின்றது. புதிய வரைபை 2022ஆம் ஆண்டின் இறுதியளவில் சட்டமாக்குவதற்கு இலங்கை மத்திய வங்கி எதிர்பார்த்துள்ளது.

### 2.3 நாணயச் சபையினாலும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினாலும் வழங்கப்பட்ட ஒப்புதல்கள்

**(அ) உரிமம்பெற்ற வங்கிகளின் ஒன்றிணைப்புக்கள், கையகப்படுத்தல்கள் மற்றும் மூடுதல்கள்**

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கும் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்குமிடையில் 2018ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றிணைப்புச் செயன்முறை 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

**(ஆ) உரிமம்பெற்ற வங்கிகளின் கிளைகளும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களும்**

2021 இறுதியில், 586 கோரிக்கைகள் செயன்முறைப்படுத்தப்பட்டதுடன் 484 ஒப்புதல்கள் வழங்கப்பட்ட வேளையில் 102 கோரிக்கைகள் முன்மதியுடைய காரணங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்டன /நிராகரிக்கப்பட்டன (அட்டவணை II-1). அதற்கமைய, 2021

திசெம்பர் இறுதியளவில், 3,621 வங்கிக் கிளைகளும், 3,783 மாணவர் சேமிப்புப் பிரிவுகளும் 6,342 தன்னியக்கக் கூற்றுப் பொறிகளும் தொழிற்பட்டன.

அட்டவணை II- 1
**கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் தொடர்பான ஒப்புதல்கள்**

| ஒப்புதல்களின் வகைகள் | ஒப்புதல்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | செயன் முறைப்படுத்தப் பட்டவை | ஒப்புதல் வழங்கப் பட்டவை |
| **திறத்தல் மற்றும் நிறுவுதல்** | **428** | **366** |
| கிளைகள் | 32 | 13 |
| சுயமாக சேவையைப் பெற்றுக்கொள்ளும் பொறிகள் | 205 | 166 |
| மாணவர் சேமிப்புப் பிரிவுகள் | 0 | 0 |
| நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் ஊர்திகள் | 0 | 0 |
| ஏனைய வங்கித்தொழில் நிலையங்கள் | 35 | 35 |
| உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்கள் | 156 | 152 |
| **அமைவிட மாற்றம்** | **111** | **80** |
| கிளைகள் | 94 | 67 |
| சுயமாக சேவையைப் பெற்றுக்கொள்ளும் பொறிகள் | 12 | 8 |
| ஏனையவை | 5 | 5 |
| **கிளைகளுக்கும் ஏனைய வங்கித்தொழில் நிலையங்களுக்கும் வழங்கப்பட்ட மூடுதல் மற்றும் இரத்துச்செய்தல் ஒப்புதல்கள்** | **7** | **5** |
| **தன்னியக்கக் கூற்றுப் பொறிகளுக்கும் ஏனைய தன்னியக்கக் கூற்றுப் பொறிகளுக்கும் வழங்கப்பட்ட இடைநிறுத்துதல் மற்றும் இரத்துச்செய்தல் ஒப்புதல்கள்** | **7** | **5** |
| **உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களுக்கு வழங்கப்பட்ட இடைநிறுத்துதல் மற்றும் இரத்துச்செய்தல் ஒப்புதல்கள்** | **33** | **28** |
| **மொத்தம்** | **586** | **484** |

**(இ) ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில், மொத்தமாக 502 ஒருங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன (அட்டவணை II–2).

அட்டவணை II- 2
**வழங்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்**

| ஒப்புதல்களின் வகை | ஒப்புதல்களின் எண்ணிக்கை |
|---|---|
| புதிய/தொடர்ந்திருக்கின்ற பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், பிரதான முகாமைத்துவ ஆளணி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நபர்கள் ஆகியோரை நியமிப்பதற்கான பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பீடு செய்தல் | 268 |
| வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் | 32 |
| சந்தைப் பெறுமதிக்குக் குறைவாக சொத்துக்களை கையுதிர்த்தல் | 18 |
| அடுக்கு 2 மூலதனத்தில் தொகுதிக் கடன்களை உள்ளடக்குதல் | 8 |
| கடன் வசதியின் உயர்ந்தபட்ச தொகையை விஞ்சுதல் | 5 |
| கைவிடப்பட்ட சொத்துக்களின் மீள் செலுத்துகை | 1 |
| உரிமையாண்மையில் கணிசமானளவு அக்கறையைப் பெற்றுக்கொள்ளல் | 1 |
| வெளிநாட்டு ஊழியர்களின் வீசா பரிந்துரைகளுக்கான/புதுப்பித்தல்களுக்கான கோரிக்கைகள் | 20 |
| ஏனைய ஒப்புதல்கள் | 149 |
| **மொத்தம்** | **502** |

**(ஈ) ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்**

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கித்தொழில் சட்டம் மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்கியொழுகாமை தொடர்பில் 18 சம்பவங்கள் தொடர்பில் சீராக்க வழிமுறைகளை எடுக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் கோரப்பட்டன.

**2.4 தொடர்ச்சியான மேற்பார்வையை நடாத்துதல்**

(அ) தொடர்ச்சியான மேற்பார்வை என்பது தனிப்பட்ட வங்கிகளின் அலுவல்கள் மீது தொடர்ந்து கண்காணிக்கின்ற பொறிமுறையொன்றாகும். இது உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாட்டு செயற்றிறனையும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு முன்கூட்டிய எச்சரிக்கை முறைமையொன்றாக தொழிற்படுவதுடன் வைப்பாளர்களின் நிதியின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு தேவைப்படுமிடத்து திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதையும் இயலச்செய்கின்றது.

(ஆ) பெரும்பாலும், வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்-நெற் முறைமையூடாக வாராந்த/மாதாந்த/காலாண்டு/வருடாந்த அடிப்படையில் ஒவ்வொரு வங்கியினாலும் சமர்ப்பிக்கப்படும் காலாந்தர நிதியியல் மற்றும் முன்மதியுடைய தகவல்களின் அடிப்படையில் தொடர்ச்சியான மேற்பார்வை நடாத்தப்பட்டு வருகின்றன. திணைக்கள நடவடிக்கைத் திட்டத்திற்கமைவாக, தற்போதுள்ள வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்ட தளத்திற்கு வெளியேயான வங்கிகளின் கண்காணிப்பு அறிக்கையிடல் முறைமையானது புதிய கணக்கீட்டு நியமங்களின் அறிமுகத்தையும் அதாவது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9 - நிதியியல் சாதனங்கள் மற்றும் புதிய வகைப்படுத்தல் பணிப்புரைகளுக்கமைவாக (2021ஆம் ஆண்டின் 13 மற்றும் 14ஆம் இலக்கத்தைக் கொண்ட வங்கித்தொழில்

சட்டப் பணிப்புரை) ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் மாற்றங்களையும் அத்துடன் ஏனைய அபிவிருத்திகளையும் கருத்திற்கொண்டு, நிதியியல் தரவுகளை சீரமைத்து ஒன்றுதிரட்டும் நோக்கில் மீளாய்வுசெய்யப்பட்டு வருகின்றன. அதற்கமைய, இரண்டு புதிய பின்-நெற் திரட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளை, இரண்டு வேறு திரட்டுக்களும் திருத்தப்பட்டன.

(இ) சட்டஇசைவுத் தாமதத்திலிருந்து திரவத்தன்மை அழுத்தங்களையும் வெளிநாட்டு நாணய நிதியங்களை திரட்டும் போது/காலத்தை நீடிக்கும் போது உரிமம்பெற்ற வங்கிகளால் முகங்கொடுக்கப்படுகின்ற சவால்களையும் கருத்திற்கொண்டு, விசேட சபைப் பத்திரங்கள் நாணயச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, கொள்கைத் தீர்மானங்களுக்கும் அறிக்கைகள் உருவாக்கத்திற்கும் வசதியளிக்கும் பொருட்டு, வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த தரவுகளும் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களுடனும் அரச நிறுவனங்களுடனும் பகிரப்பட்டன. மேலும், நாணயச் சபையானது வங்கித்தொழில் துறை செயலாற்றத்தை காலாண்டு அடிப்படையில் மதிப்பீடுசெய்த அதேவேளை, பல்வேறு மன்றங்களுக்காக வங்கித்தொழில் துறை செயலாற்றத்துடன் தொடர்புடைய 13 எடுத்துரைப்புக்களைத் தயாரித்தது.

(ஈ) வங்கி ஊழியர்களால் அல்லது வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள், வங்கி ஊழியர்களது துர்நடத்தைகள் போன்றன தொடர்பில் வாடிக்கையாளர்களால்/பொதுமக்களால் நேரடியாக வழங்கப்பட்ட அல்லது நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளுக்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. மேலும், 2021 காலப்பகுதியில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தகவல் அறிவதற்கான 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க உரிமைச் சட்டத்தின் கீழ் ஏறக்குறைய 22 கோரிக்கைகளைக் கையாண்டது.

(உ) காலாண்டு அடிப்படையில், மூத்த பிரசைகளுக்கான விசேட வட்டித் திட்டத்துடன் தொடர்புடைய வட்டி மீள்பெறுகை தொடர்பான தரவுகளின் சேகரித்தலும் அதனை நிதியமைச்சிற்கு சமர்ப்பித்தலும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தால் வசதிப்படுத்தப்பட்டது. மேலும், மூத்த பிரசைகளுக்கான விசேட வட்டித் திட்டத்தில் காணப்படும் முறைகேடுகளை கண்டறிவதற்கு தொலைநிலை அடிப்படையில் 2 விசேட பரீட்சிப்புக்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொண்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகளை அம்முறைகேடுகளை சரிப்படுத்துமாறு அறிவுறுத்தியது.

(ஊ) வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது வங்கிகளின் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களின் போது கண்டறியப்பட்ட மேற்பார்வைக் கரிசனைகளை காலாண்டு அடிப்படையில் குறித்தொதுக்கப்பட்ட கால இலக்கினுள் நிவர்த்திசெய்தல் தொடர்பான முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணித்திருந்தது.

### 2.5 காலாந்தரப் பரீட்சிப்புக்களை நடாத்துதல்

(அ) 2021ஆம் ஆண்டில், முழு நோக்கெல்லை பரீட்சிப்புக்கள் மற்றும் பின்தொடர் பரீட்சிப்புக்கள் ஆகியன உள்ளடங்கலாக 22 நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நடாத்தியது. நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 நோய்ப்பரவலின் மூன்றாம் அலையின் காரணமாக, வங்கிகளுக்கு நேரடியாக வருகைத்தருதல் மீதான மட்டுப்படுத்தல்களை கருத்திற்கொண்டு, 2021 ஏப்பிறல் தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் தொலைநிலை அடிப்படையிலான 12 நியதிச்சட்டப் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன.

(ஆ) இதற்கு மேலதிகமாக, ஏனையவற்றுக்கு மத்தியில் ஏற்றுமதிப் பெறுகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள், வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள், தந்தி பரிமாற்றல்கள், தன்னியக்க கூற்றுப் பொறிகளில் எடுப்பனவுகள், அத்துடன் கொவிட்-19 நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தில் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களின் மற்றும் முற்பணங்களின் வகைகள் என்பன தொடர்பான விடயங்களை சரிபார்ப்பதற்காக 11 அதே இடத்திலான பரீட்சிப்புக்கள் பல்வேறு உரிமம்பெற்ற வங்கிகளில் நடாத்தப்பட்டன. இத்தகைய உடனடிப் பரீட்சிப்புக்களின் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, அறிக்கைகளானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை/ ஆளுநர்/மூத்த முகாமைத்துவத்திற்கு பொருத்தமானவாறு சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளை, அத்தகைய அறிக்கைகளின் விதந்துரைப்புக்களும் நடைமுறைப்படுத்தலுக்காக உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அல்லது தொடர்புடைய திணைக்களங்களுக்கு தொடர்பூட்டப்பட்டன. 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்ட 4 வங்கிகளின் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்கள் தொடர்பான அறிக்கைகள் 2021இல் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கமைய 2020ஆம் ஆண்டில் நடைபெற்ற நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களின் அனைத்து அறிக்கைகளும் 2021இன் முதல் மூன்று மாத காலப்பகுதிகளில் நிறைவுசெய்யப்பட்டன. மேலும், 2021ஆம் ஆண்டில் தொலைநிலை அடிப்படையில் நடைபெற்ற 3 வங்கிகளின் இடைக்கால அறிக்கைகள் மற்றும் 5 நியதிச்சட்டப் பரீட்சிப்புக்கள் அடங்கிய 11 வங்கிகளின் 14 நியதிச்சட்டப் பரீட்சைகளின் அறிக்கைகள் நடாத்தப்பட்டதுடன் ஏனைய அறிக்கைகள் நிறைவுபெறும் நிலையில் உள்ளன.

(இ) வங்கி மேற்பார்வைத் திணைக்களம், குழும நிறுவனங்களுக்கு நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களின் நோக்கெல்லையை விரிவுபடுத்தி ஒருங்கிணைந்த இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வை தொடர்பான 4 வங்கிகளின் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை நடாத்தியது. 2021ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வையில் கண்டறியப்பட்ட விடயங்கள் அடங்கிய பரீட்சிப்பு அறிக்கை ஒன்றை நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஒருங்கிணைந்த மேற்பார்வை தொடர்பான 3 அறிக்கைகள் நிறைவுபெறும் நிலையில் உள்ளன.

(ஈ) 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரத்தியேகமாக உள்ளக நோக்கங்களுக்காக வங்கிகளின் வினைத்திறன் மற்றும் உறுதிப்பாடு அத்துடன் வங்கிகளின் ஒட்டுமொத்த மதிப்பீட்டிற்கு தோதான அளவுசார் மற்றும் பண்புசார் குறிகாட்டிகளின் ஒருங்கிணைப்பினை அடிப்படையாகக் கொண்ட வங்கி உறுதிப்பாட்டு தரமிடல் குறிகாட்டி கட்டமைப்பிற்கமைவாக, அனைத்து 30 உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் தரமிடல்கள் குறித்தொதுக்கப்பட்டன. வங்கி உறுதிப்பாட்டு தரமிடல் குறிகாட்டி கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட உரிமம்பெற்ற வங்கிகளுக்காக ஒதுக்கப்பட்ட தரமிடல்கள் தொடர்பான விரிவான அறிக்கை காலாந்தர தொழிற்துறை மீளாய்வு அறிக்கையின் பகுதியொன்றாக நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நாணயச் சபையினால் பணிக்கப்பட்டவாறு, 2021.10.01 அன்றிலிருந்து தொடங்கி 4 நியதிச்சட்டப் பரீட்சிப்புக்கள் உறுதிப்பாட்டு தரமிடல் குறிகாட்டி கட்டமைப்பிற்கமைவாக நடாத்தப்பட்டன. மேலும், ஆண்டு காலப்பகுதியில், அளவுசார் குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்ட அனைத்து வங்கிகளுக்குமான குறித்தொதுக்கப்பட்ட தரமிடல்களின் மீளாய்வு காலாண்டு அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது.

### 2.6 வங்கித்தொழில் துறை பற்றிய விழிப்புணர்வு மற்றும் திறன் விருத்தி

#### (அ) திறன் விருத்தி

2021ஆம் ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கித்தொழில் துறையின் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளவாளர்களை வழங்கியதுடன் அதேபோன்று அதன் ஊழியர்களுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி

வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டங்களில் பெரும்பாலானவை மெய்நிகராக நடாத்தப்பட்டதுடன் வங்கித்தொழில் மற்றும் நிதி, ஒழுங்குமுறைப்படுத்தல், இணங்குவிப்பு, இடர்நேர்வு முகாமைத்துவம், தொழில்நுட்பம்/ இணைய பாதுகாப்பு இடர்நேர்வு, காலநிலை இடர்நேர்வு தாக்குப்பிடிக்கும்தன்மை மற்றும் நிலைபெறத்தக்க நிதி போன்ற துறைகளை உள்ளடக்கியிருந்தது. மேலும், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் அலுவலர்கள் பல்வேறு குழுக்களில் குழு உறுப்பினர்களாக தொடர்ந்தும் பணியாற்றினர்.

**(ஆ) வங்கிகள் மற்றும் வேறு ஆர்வலர்களுடனான கூட்டங்கள்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது ஆளுநர் தலைமையிலான உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான மாதாந்த கூட்டங்களுக்கான செயலகமாக தொடர்ந்தும் செயற்பட்டது. இக்கூட்டங்கள், இலங்கை மத்திய வங்கிக்கும் வங்கித் துறைக்கும் இடையில் தொடர்ச்சியான கலந்துரையாடலைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. அதற்கமைய, இலங்கைப் பொருளாதாரம், வங்கித்தொழில் துறை அத்துடன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பில் காணப்படும் அபிவிருத்திகள் தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கு 2021ஆம் ஆண்டில் நேரடியாக/மெய்நிகராக 11 மாதாந்த கூட்டங்கள் மற்றும் 2 விசேட கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, வங்கித்தொழில் துறையின் செயலாற்றம், பொருளாதாரம், உள்நாட்டு மற்றும் உலகளாவிய ஒழுங்குமுறைக் கட்டமைப்புகளில் காணப்படுகின்ற முன்னேற்றங்கள் மற்றும் அசாதாரண சூழ்நிலைகளின் போது ஒழுங்குமுறைப்படுத்துனர் பற்றிய எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக மதிப்பீடுசெய்வதற்கு வங்கிகளின் தலைவர்களுடனான கூட்டம் ஒன்று நடைபெற்றது.

வங்கி குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும், முறையான மேற்பார்வை மற்றும் சீராக்க நடவடிக்கைகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுதலை உறுதிசெய்யவும், வங்கித்தொழில் துறையின் நிலைபெறும்தன்மையை உறுதிசெய்யவும் சம்பந்தப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளின் மூத்த முகாமைத்துவம் மற்றும் சபை நியமித்த குழுக்களுடன் கிரமமான கூட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும், வங்கி கணக்காய்வுகளில் கவனம் செலுத்தப்பட வேண்டிய குறித்தப் பகுதிகள் மற்றும் கொவிட்-19இன் நோய்ப்பரவலுக்கு மத்தியில் உரிமம்பெற்ற வங்கிகளின் கணக்கீட்டு நியமங்களின் தொடர்ச்சியான பிரயோகம் தொடர்பான கருமங்களை கலந்துரையாடுவதற்கு வங்கி மேற்பார்வைத் திணைக்களம் உரிமம்பெற்ற வங்கிகளின் வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஆகியவற்றுடன் கூட்டங்களை நடாத்தியது.

நிதியியல் முறைமையின் வினைத்திறன், ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் அங்கத்துவ நிறுவனங்களிடையே ஒத்துழைப்பை வசதிப்படுத்துவதற்கும் மைய நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்துநரின் பிரதிநிதிகளை உள்ளடக்குகின்ற நிதியியல் துறை மேற்பார்வை சபையின் இரு கூட்டங்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒழுங்கமைத்தது.

**இணைப்பு II - 1**

**2021.12.31 இல் உள்ளவாறான உரிமம்பெற்ற வங்கிகளின் பட்டியல்**

| | |
|---|---|
| **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | |
| 1. | அமானா பாங்க் பிஎல்சி |
| 2. | இலங்கை வங்கி |
| 3. | பாங்க் ஒவ் சைனா லிமிடெட் |
| 4. | கார்கிள்ஸ் பாங்க் லிமிடெட் |
| 5. | சிற்றி பாங்க் என்.ஏ. |
| 6. | கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி |
| 7. | டொயிஷ் பாங்க் ஏஜி |
| 8. | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி |
| 9. | ஹபீப் பாங்க் லிமிடெட் |
| 10. | அட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி |
| 11. | இந்தியன் பாங்க் |
| 12. | இந்தியன் ஓவசீஸ் பாங்க் |
| 13. | எம்சிபி பாங்க் லிமிடெட் |
| 14. | நஷனல் டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 15. | நேஷன் ரஸ்ட் பாங்க் பிஎல்சி |
| 16. | பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி |
| 17. | மக்கள் வங்கி |
| 18. | பப்ளிக் பாங்க் பெர்காட் |
| 19. | சம்பத் பாங்க் பிஎல்சி |
| 20. | செலான் பாங்க் பிஎல்சி |
| 21. | ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க் |
| 22. | ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா |
| 23. | த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் |
| 24. | யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி |
| **உரிமம்பெற்ற சிறப்பியல்வாய்ந்த வங்கிகள்** | |
| 1. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 2. | தேசிய சேமிப்பு வங்கி |
| 3. | பிரதேசிய சங்வர்த்தன பாங்க் |
| 4. | சணச டெவலப்மென்ற் பாங்க் பிஎல்சி |
| 5. | சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட் |
| 6. | அரச ஈட்டு முதலீட்டு வங்கி |
| **வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்கள்** | |
| 1. | டோகா பாங்க் கியுபிஎஸ்சி |
| 2. | ஜேபி மோர்கன் ஷேஷ் வங்கி என்ஏ |
| 3. | எம்யுஎவ்ஜீ பாங்க் லிமிடெட் |

## 3. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்

1981 செத்தெம்பர் 15ஆம் திகதியன்று தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பயிற்சிப் பிரிவான வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், 2021ஆம் ஆண்டில் அதன் 40ஆவது ஆண்டுநிறைவை கொண்டாடியதுடன் நிதியியல் பணிகள் தொழிற்துறையின் மனித மூலதனத்தை அபிவிருத்திசெய்கின்ற உபாயமிக்க வகிபாகத்தை தொடர்ந்தும் ஆற்றியது. 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையமானது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தொடர்ச்சியினால் ஏற்பட்ட சவால்களின் மத்தியிலும் கூட நிதியியல் துறையின் கேள்விகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு முன் அட்டவணைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளை நடாத்துதல் தொடர்பில் கவனம்செலுத்தியது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையமானது தொழில்சார் நிபுணர்களின் தொழில்நுட்ப மற்றும் மென் திறன்கள் ஆகிய இரண்டும் மேம்படுத்தப்படுகின்றதை உறுதிசெய்யும் பொருட்டு வங்கித்தொழில் மற்றும் நிதித் தொழிற்துறையுடன் தொடர்புடைய பரந்தளவிலான

துறைகளை உள்ளடக்கி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியது. இவற்றுள், தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையம், டொயிஷ் புண்ட்ஸ்பாங்க் உள்ளடங்கலாக கீர்த்திமிக்க பன்னாட்டு நிதியியல் பயிற்சி நிறுவனங்களுடனான கூட்டிணைப்புடன் பல கற்கைநெறிகளை வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் வழங்கியது. மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையமானது அதன் தரப்படுத்தப்பட்ட சான்றிதழ் கற்கைநெறிகளை விரிவுபடுத்துவதற்கான முயற்சியில் “நிதியியல் சந்தைகள்” பற்றிய புதிய சான்றிதழ் கற்கைநெறியொன்றைத் தொடங்கியது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆதரவுடன் இலங்கையில் நிலைபேறான நிதியை நடைமுறைப்படுதலுக்கான திறன் விருத்தியில் செயலூக்கமிக்க பங்காளராக தொடர்ந்துமிருந்தது. 2021 ஆண்டுகாலப்பகுதியில், வங்கித்தொழில் கற்கைள் நிலையமானது 118 நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்தியது. இது, 48 முன்-அட்டவணைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், 27 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள், 43 பொது நிகழ்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. ஆண்டுகாலப்பகுதியில், 4,741 பங்கேற்பாளர்கள் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ள அதேவேளை 6,802 பங்கேற்பாளர்கள் வங்கித்தொழில் கற்கைள் நிலையத்தின் பொது நிகழ்வுகளில் இணையவழித் தளங்களூடாக பங்கேற்றனர். இதற்கு மேலதிகமாக, உயர்தர மாணவர்களை இலக்காகக் கொண்டு “தக்சிலாவ” மற்றும் “அறிவூற்று” என்ற தலைப்பிலான இரு தொலைக்காட்சி நிகழ்ச்சித்தொடர்களை வழங்குவதில் முக்கிய ஏதுவாகக் காணப்பட்டது.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை குறிக்கும் முகமாக, பல்வேறு விசேட நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டன. “அறிவுசார் இடைவெளியைக் குறைத்தலும் தொழில்சார் கல்வி முறைமையில் நம்பிக்கையைப் பாதுகாத்தலும்” தொடர்பான ஆண்டுநிறைவு சொற்பொழிவு அத்துடன் “டிஜிட்டல் ரீதியான நிதியியல் நிலைமாறுதல்” தொடர்பான உயர் மட்ட கருத்தரங்கு போன்ற இரு நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்தகைய இரு நிகழ்வுகளும் பாராட்டுக்குரிய கவனத்தைப் பெற்றதுடன் தொடர்புடைய ஆர்வலர்கள் அத்துடன் பொது மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க உத்வேகத்தை தோற்றுவித்தது. மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையமானது முதன்முறையாக 2022 அரசாங்க வரவுசெலவுத்திட்டம் தொடர்பான வரவுசெலவுத்திட்டத்திற்கு பிந்திய மன்றத்தை ஏற்பாடு செய்ததுடன் இது வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலைத்தின் புதிதாக தொடங்கப்பட்ட நிபுணர் குழு கலந்துரையாடல் தொடர்களில் முதலாவதாக அமைந்திருந்தது. இவற்றுக்கு மேலதிகமாக, 40ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், அதிநவீன செயற்திறன் ஊடாடும் அம்சங்களுடன் அதன் மறுசீரமைக்கப்பட்ட வெப்தளத்தை (www.cbs.cbsl.lk) தொடங்கியது. இத்தகைய தொழில்நுட்ப ரீதியான மேம்பாடுகளுக்கு இணையாக, வங்கித்தொழில் கற்கைள் நிலையத்தின் கைகள் மூலமான தொழிற்பாடுகளை தன்னியக்க, பாதுகாப்பு அத்துடன் பயன்படுத்துவதற்கு இலகுவான தீர்வொன்றுடன் மாற்றீடுசெய்யும் குறிக்கோளுடன் 2022இன் தொடக்கத்தில் நிறுவன முகாமைத்துவ முறைமையொன்று வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் வெப்தளத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இறுதியில் இது வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தின் அனைத்து ஆர்வலர்களுக்கும் நன்மைபயக்கும்.

வங்கித்தொழில் கற்கைள் நிலையம் அதன் கற்கைநெறி பாடத்தொகுதிகள், விரிவுரைகள் அத்துடன் அது வழங்கும் ஏனைய பணிகளை மேம்படுத்தும் பொருட்டு விரிவான பிந்திய மதிப்பீட்டு செயன்முறையை நடாத்தியது. எதிர்காலப் பயிற்சி தலையீடுகளை உருவாக்குகையில், இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதியியல் தொழிற்துறை போன்றவற்றிலிருந்தான அனுபவம்வாய்ந்த மற்றும் தகைமையுடைய நிபுணர்களை உள்ளடக்குகின்ற வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலைத்தின் புதிதாக தாபிக்கப்பட்ட பீட மதியுரை குழுவின் தொடர்ச்சியான ஈடுபாட்டுடன் தீவிரமான ஆலோசனை செயன்முறை மேற்கொள்ளப்பட்டது. மேலும், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம், நிதியியல் தொழிற்துறையின் பயிற்சித் தேவைப்பாடுகளை உறுதிசெய்ததுடன் பகுப்பாய்வுசெய்யும் அதன் செயன்முறையை மறுசீரமைத்தது. தொழிற்துறையில் ஈடுபடுபவர்கள் அத்துடன் மனித வள தொழில்சார் நிபுணர்களை பரந்தளவில் சென்றடையும் வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி தேவைப்பாடுகளின் கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டதுடன் பின்னூட்டலும் பெறப்பட்டது அத்துடன் 2022ஆம் ஆண்டுக்கான கற்கைநெறி அட்டவணையை தயாரித்தலில் கணக்கெடுப்பு பெறுபேறுகள் கவனத்திற்கொள்ளப்பட்டன. இத்தகைய தொழிற்துறை நிபுணர்களுடனான தொடர்ச்சியானதும் காத்திரமானதுமான ஈடுபாடுகளின் விளைவாக, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம் அதன் பயிற்சி நோக்கெல்லையை நிதித் தொழிற்துறையைத் தாண்டி ஏனைய முக்கிய பொருளாதார துறைகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளது.

## 4. தொடர்பூட்டல்கள்

தொடர்பூட்டல் திணைக்களமானது 2021இல் படிப்படியாக பரவிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றைக் கருத்திற்கொண்டு விதிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏனைய தடைகளைத் தொடர்ந்த சவால்மிக்க சூழ்நிலைகளுக்கு மத்தியில் பல்வேறு ஊடகத் தளங்களினூடாக ஊடக மாநாடுகளை ஒருங்கிணைத்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் போன்றவற்றின் மூலம் அதன் பல்வேறு ஆர்வலர்கள் மத்தியிலும் தகவல்களை உரிய நேரத்தில் பரப்புவதனூடாக வங்கியின் மைய மற்றும் ஏனைய குறிக்கோள்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றது.

### 4.1 மையத் தொடர்பூட்டல்கள்

நாணயக் கொள்கை, நிதியியல் நிறுவனங்கள் அத்துடன் நிதியியல் சந்தைகள் தொடர்பில் நாணயச் சபையின் தீர்மானங்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்தமாக 1961 ஊடக அறிக்கைகளை தேசிய மொழிக் கொள்கையுடன் இணங்கியொழுகும் விதத்தில் அனைத்து மூன்று மொழிகளிலும் தொடர்பூட்டல் திணைக்களம் வெளியிட்டது. இலங்கை மத்திய வங்கியின் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கின்ற ஒரு முக்கிய கருவியாக விளங்குகின்ற ஊடகங்கள் வாயிலாக அது எதைச் செய்கின்றது ஏன் செய்கின்றது என்பது பற்றி பொதுமக்களின் புரிந்துகொள்ளலை அதிகரிப்பதற்கு 14 ஊடக மாநாடுகளை தொடர்பூட்டல் திணைக்களம் ஒழுங்கமைத்தது. இலங்கைப் பொருளாதாரத்தின் முன்னோக்கிய பாதையை தொடர்பூட்டுவதற்கு 2021ஆம் ஆண்டின் சனவரி மற்றும் ஒத்தோபர் மாதத்தில் இடம்பெற்ற “வழிகாட்டல் 2021: 2021ஆம் ஆண்டிற்கும் அதற்கப்பாலுக்குமான நாணய மற்றும் நிதியியல் துறை கொள்கைகள்”, அத்துடன் முற்கூட்டிய நாட்டிகாட்டிக்கமைவாக 8 நாணயக் கொள்கை ஊடக மாநாடுகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. இதில் அரைவாசிக்கு மேற்பட்ட மாநாடுகள் மெய்நிகர் வழியினூடாக இடம்பெற்றன. ஒவ்வொரு ஊடக மாநாட்டின் பின்னர் ஒரு வாரத்திற்குள் பொதுமக்களின் கண்ணோட்டத்தினையும் எதிர்பார்க்கைகளையும் நாணயக் கொள்கை சென்றடைவு அறிக்கையையும் அளவிடுவதற்கும் அத்துடன் நாணயக் கொள்கை மீளாய்வின் மையச் செய்திகள் சென்றடைகின்ற செயல்திறனை மதிப்பிடுவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கு ஊடங்களின் மூலம் காட்டப்படுகின்ற எதிர்வினைகளை இனங்காண்பதற்கும் உள்ளூர் செய்தித்தாள்களில் வெளியிடப்படுகின்றவாறு உள்நாட்டு ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமான கொள்கைவீத முற்கணிப்புகளையும் அவற்றின் எதிர்வுகூறல்களையும் நியாயப்படுத்தல்களையும் தொகுப்பதன் மூலம் நாணயச் சபை கூட்டங்களுக்கு முன்னர் நாணயக் கொள்கை எதிர்பார்க்கைகளை பகுப்பாய்வு செய்வதனூடாக இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை முயற்சிகளுக்கும் தொடர்பூட்டல் திணைக்களம் ஆதரவளித்தது.

தேவைப்படும் போதும் தேவைப்படுகின்றவாறும் ஊடகங்கள் மூலமான கவனக்குறைவான தவறான அறிக்கையிடல்கள் வேண்டுமென்ற செம்மை பேணாமை போன்ற அனைத்தையும் நிவர்த்தி செய்வதற்கு சீராக்கல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொடர்பூட்டல் திணைக்களமானது, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம் என்பவற்றுடன் கூட்டிணைந்து பொதுமக்களின் நாணயக்கொள்கை பற்றிய புரிந்துணர்வை அதிகரிப்பதற்கும் சந்தை எதிர்பார்க்கைகளை வழிநடத்திச் செல்வதற்கும் நாணயக் கொள்கை மீளாய்வின் அறிவிப்பின் பின்னர் ஒரு வாரத்திற்குள் காலண்டு அடிப்படையில் பிரதேச மட்டத்தில் நாணயக் கொள்கை மீதான மெய்நிகர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்பாடுசெய்தது. 2021 காலப்பகுதியில் அத்தகைய நான்கு நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்தறை, திருகோணமலை, அநுராதபுரம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதேச அலுவலகங்களில் நடாத்தப்பட்டது.

சமூக வலைத்தள கண்காணித்தல் பிரிவை தாபிப்பதனூடாக இலங்கை மத்திய வங்கியின் சமூக வலைத்தள பிரசன்னத்தினை தொடர்பூட்டல் திணைக்களம் பலப்படுத்தியதுடன் இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சமூக வலைத்தள வினவல்களுக்குப் பதிலளிக்கும் செயன்முறையை ஒழுங்குமுறைப்படுத்தியது. குடித்தொகையின் தொழில்நுட்ப ரீதியாக அறிவு சார்ந்த வகுப்பினருக்கு மத்தியில் இலங்கை மத்திய வங்கி மூலம் வழங்கப்படுகின்ற செய்திகளின் சென்றடைவை மேம்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகளை விளம்பரபடுத்தும் தளங்களையும் 2021இல் இணையவழி செய்தி வலைத்தளங்களுக்கு நீடித்தது. மேலும், நிதியியல் நிறுவனங்கள் தொடர்பில் பொதுமக்களின் முறைப்பாடைச் சமர்ப்பிக்கும் செயன்முறையினை வசதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிறுவன வலைத்தளத்தில் தனியான வலைப்பக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கு நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்துடன் தொடர்பூட்டல் திணைக்களம் இணைந்தது.

### 4.2 ஏனைய தொடர்பூட்டல்கள்

வெளிநாட்டு பணவனுப்பல்கள், டிஜிட்டல் பொருளாதாரம் போன்ற பரந்தளவான விடயங்களை உள்ளடக்குகின்ற பல்வேறு மேலதிக ஊடக மாநாடுகளையும் தொடர்பூட்டல் திணைக்களம் வசதிப்படுத்தியது. 2021 காலப்பகுதியில், வேறு திணைக்களங்களின் தேவைப்பாடுகளிற்கமைவாக விளம்பரங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளடங்கலாக ஊடக அறிவித்தல்களை தொடர்பூட்டல் திணைக்களம் வெளியிட்டது. தந்தி மாற்றல் (செலாவணி) வீதங்கள், இலங்கை வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதங்கள் மற்றும் கொள்கை வீதங்கள் தொடர்பில் குறுஞ்செய்தி விழிப்பூட்டல்களைத் தொடர்பூட்டல் திணைக்களம் தொடர்ந்தும் அனுப்பியது. தொடர்பூட்டல் திணைக்களமானது பொருளாதாரத்தின் உள்நாட்டு வெளிநாட்டு ஆர்வலர்களின் நன்மைக்காக முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகளை நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் பரவச்செய்தது. பல்வேறு இலக்கு வைக்கப்பட்ட சமூகங்களுக்கிடையில் தனது செய்திகளைக் கொண்டு சேர்ப்பதற்கு விளம்பரப்படுத்தல் வழிகளைத் தொடர்பூட்டல் திணைக்களம் மேம்படுத்தியது. வர்த்தக வங்கிகளினூடாக வெளிநாட்டு நாணயங்களை மாற்றும் செயன்முறையை ஊக்குவிப்பதற்கும் முறைசாரா வழிகளில் வெளிநாட்டு பணவனுப்பல்களை பெற்றுகொள்ளும் செயன்முறையை தவிர்ப்பதற்கும் பொதுமக்களைக் கோரி மேற்கொள்ளப்படுகின்ற பத்திரிகை விளம்பரங்களுக்கு மேலதிகமாக, மாற்றுவழியான இணையவழி செய்தி தளங்களையும் வானொலி துணுக்குச் செய்திகளையும் உள்ளடக்குவதற்காக தொடர்பூட்டல் திணைக்களம் அதன் அனைத்து வளங்களையும் விரிவுபடுத்தியது.

கடன் சுமையை கட்டுப்படுத்துவதற்கு வீட்டலகுத் துறையின் நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கு பாரிய அளவில் ஊடகத்தை பயன்படுத்தி தொடர்பூட்டல் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் ஆகியவை கூட்டிணைந்து இலங்கை மத்திய வங்கியின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கெல்லையை மேம்படுத்தின. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்த நேரலை வானொலி கலந்துரையாடல்களொன்றையும் துணுக்குச்செய்தி பிரச்சாரங்களையும் உள்ளடக்குகின்ற வானொலி நிகழ்ச்சிகள் இப்பிரச்சாரத்தின் ஒரு அங்கமாக மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் தொலைக்காட்சி கலந்துரையாடல்கள், துண்டுப்பிரசுரப் பிரச்சாரம், சுவரொட்டி, பத்திரிகைகள் இலங்கை மத்திய வங்கியின் பருவகால சஞ்சிகைகளின் கட்டுரை வெளியீடு, பிரத்தியேகமான ஒரு சமூக வலைத்தள பிரச்சாரம், ஊடக அறிக்கைகளின் வெளியீடுகள் என்பன நிதியியல் அறிவு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் பாகமாக அமைந்திருந்தன. இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்காக அவர்களது எழுதும் திறனை மேம்படுத்தும் பொருட்டு தொடர்பூட்டல் திணைக்களம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அனைத்து மூன்று மொழிகளிலும் நடாத்தியது.

ஓய்வுபெற்ற தொடர்பூட்டல் பணிப்பாளரான செல்வி. எஸ். எச் குணவர்த்தன மற்றும் நுவரெலிய பிரதேச அலுவலகத்தின் ஓய்வுபெற்ற மூத்த முகாமையாளரான திரு. டபிள்யு.எம்.கே வீரகோன் ஆகியோர் இணைந்து எழுந்திய "70 ஆண்டு நாணய வழங்கல் மற்றும் முகாமைத்துவப் பயணம்" எனும் தலைப்பில் நாணயம் மீதான விசேட வெளியீடொன்றையும் தொடர்பூட்டல் திணைக்களம் வெளியிட்டது. இவை பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை வெளியீடுகள் விற்பனை கருமபீடம், இராஜகிரியவிலுள்ள வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம் வெளியீடுகள் விற்பனை கருமபீடம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் விற்பனை கருமபீடம் ஆகியவற்றினூடாக விற்பனை செய்யப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் அமுல்படுத்தப்பட்ட முடக்கல் சூழ்நிலைகள் மற்றும் பயணக்கட்டுப்பாடு காரணமாக வெளியீடுகள் விற்பனை கருமபீடங்கள் மூடப்பட்ட போதிலும், இலங்கை மத்திய வங்கியின் 2020இன் ஆண்டறிக்கை உள்ளடங்கலாக பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச் சாலையினூடாக புத்தகசாலைகளுக்கு வசதியளிக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் வெளியீடுகளின் மொத்த விற்பனைகளானது முடக்கல் சந்தர்ப்பங்களுக்கு மத்தியில் அத்தகைய வெளியீடுகள் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் கிடைக்கச்செய்வதை இயலச்செய்யப்பட்டுள்ளது. வினைத்திறனான கொடுக்கல்வாங்கல்களை உறுதிசெய்வதற்காகவும் பணத்தை பௌதீக வடிவில் கையாள்வதை குறைப்பதற்காவும் பொருளாதார வரலாற்று அரும்பெருங்காட்சிச்சாலை வெளியீடுகள் விற்பனை கருமபீடத்திற்கு கடன் அட்டை, பற்று அட்டை மற்றும் கியூஆர் குறியீடு மூலமான கொடுப்பனவுத் தெரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நாடுமுழுவதும் உயர்தரத்தில் பொருளியல் பாடத்தைக் கற்பிக்கின்ற அரச பாடசாலைகளுக்கும் பொதுநூலகங்களுக்கும் பல்வேறு வெளியீடுகளின் பிரதிகளையும் தொடர்பூட்டல் திணைக்களம் இலவசமாக பகிர்ந்தளித்தது. இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களுடன் கூட்டிணைந்து உயர்தரத்தில் பொருளியல் பாடத்தைக் கற்பிக்கின்ற பாடசாலைகளுக்கு மத்தியில் 2020ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பகர்ந்தளிக்கப்பட்டது.

உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் தோன்றிய சவால்களுக்கு மத்தியல், தொடர்பூட்டல் திணைக்களத்தின் புகைப்பட மற்றும் காணொளி பிரிவு 2021ஆம் ஆண்டில் வங்கியில் இடம்பெற்ற நிகழ்வுகளை தொடர்ந்தும் பதிவுசெய்வதுடன் அத்தகைய நிகழ்வுகளின் காணொளி பதிவை வங்கியின் நிறுவன வலைத்தளத்திலும் யூடியுப் தளத்திலும் காலந்தவறாமல் பதிவேற்றம் செய்தல் உள்ளடங்கலாக அனைத்து தொடர்புடைய பணிகளையும் வழங்கியது. 2021இலிருந்து இலங்கை மத்திய வங்கியின் அனைத்து அச்சிடல் வேலைகளுக்கும் தொடர்பூட்டல் திணைக்களம் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொண்டதுடன் ஆண்டறிக்கை-2020, காலாந்தர வெளியீடுகளான சடஹான, செய்தி அளவீடு மற்றும் வைப்பகம், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரங்கள்-2021, இலங்கையின் சமூகப் பொருளாதார தரவு ஏடுகள்-2021 போன்ற இலங்கை மத்திய வங்கியின் அனைத்து அச்சிடல் தேவைப்பாடுகளுக்கும் இலங்கை மத்திய வங்கியின் பெறுகைப் பிரிவு வசதியளித்தது.

### 4.3 உள்ளக தொடர்பூட்டல்

உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அரங்கில் நாணய மற்றும் நிதியியல் துறையிலுள்ள சமகால விடயங்களையும் அதேபோன்று இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களையும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு நன்கு தெரியப்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு உள்ளக தொடர்பூட்டல்கள் வலுப்படுத்தப்பட்டது. அனைத்து மூன்று மொழிகளிலும் வெளியிடப்படும் தேசியப் பத்திரிகைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் பொதுமக்களின் கருத்துக்களும் மாதாந்த அடிப்படையொன்றில் மூத்த முகாமைத்துவத்திற்கு தொகுத்து வழங்கப்பட்டன. அதேபோன்று, இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய இணையவழிச் செய்திகளின் தொகுப்பானது மின்னஞ்சல் ஊடாக மூத்த முகாமைத்துவத்திற்கு பகிரப்பட்டது. அலுவல்சார் உள்ளக செய்திக் கடிதமான “கவுலுவ” டிஜிட்டல் முறையில் வெளியிடப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் உள்ளக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

நூலக மற்றும் தகவல் நிலையமானது இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களை தொழில்சார் ரீதியாக உருவாக்க உதவுவதற்கும் துரிதமாக மாறி வரும் சூழலில் நடைமுறை விடயங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுடன் அவர்கள் இணைந்து செயற்படுவதை இயலச் செய்யும் பொருட்டும் அறிவினைப் பெற்றுகொள்ளுதல் மற்றும் பரப்புவதலூடாக உள்ளக தொடர்பூட்டல்களில் தொடர்ந்தும் முக்கிய வகிபாகத்தை வகித்தது. நூலக மற்றும் தகவல் நிலையமானது புத்தகங்கள், அறிக்கைகள், சஞ்சிகை வெளியீடுகள் மற்றும் பல்வேறு இணையவழி தரவுத்தளங்கள் போன்றவற்றுக்கான அனைத்து வளங்களையும் அதிகரித்தது. பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் நிதியியல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தலைப்புக்கள் மீதான வெளியீடுகளின் பரந்த எல்லைக்கான அணுகுதலை இது வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, இத்தகைய மூலவளங்களுக்கு அலுவலர்களின் அணுகுதலை வழங்குவதற்காக மத்திய வங்கியுடன் தொடர்புடைய விடயங்கள் மீதான இணையவழி மூலவளங்களுக்கு (உ+ம் www.centralbanking.com, www.economist.com) நூலகம் மற்றும் தகவல் நிலையம் சந்தா செலுத்தியுள்ளது.

நூலகம் மற்றும் தகவல் நிலையமானது அச்சு வடிவிலுள்ள “போர்ச்சூன்” சஞ்சிகை, “டைம்” சஞ்சிகை, “சவுத் ஏசியா எகொனொமிக் ஜேர்னல்” மற்றும் “த எகொனொமிஸ்ட்” போன்ற பன்னாட்டு சஞ்சிகைகளுக்கும் அச்சு மற்றும் இலத்திரனியல் வடிவிலுள்ள “ஏசியா மொனிடர்”, “பேமன்ட் கார்ட்ஸ் அன்ட் மொபைல்ஸ் பேமன்ட்”, “ஜேர்னல் ஒப் பைனானஸ்சியல் கிறைம்”, “பைனானஸ்சியல் ரெகுயுலேசன்ஸ் அன்ட் கொம்பிளயன்ஸ்”, “மொனிடரி லோன்றிங் கொன்ரோல்”, “ஜேர்னல் ஒப் கியூமன் ரிசோசர்ஸ்” போன்ற சஞ்சிகைகளுக்கும் சந்தா செலுத்தியுள்ளது. “நடைமுறை விடயங்களின் உள்ளடக்கம்”, “உள்நாட்டு ஊடகத்திலிருந்தான செய்திகள்”, (Central Baking.com) நியூஸ் டெஸ்க் போன்ற இலத்திரனியல் அறிவித்தல்களை நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொடர்ந்தும் தொகுத்தது. அதேவேளை, பொருளாதாரம், வங்கித்தொழில், மற்றும் நிதியியல் மீதான குறிப்புக்களும் அறிக்கைகளும் உள்ளக வலையமைப்பினூடாக. அலுவலர்கள் மத்தியில் பகிரப்பட்டன. அத்துடன் ஆவணகாப்பு நோக்கங்களுக்காக அனைத்து நாளாந்த செய்திப் பத்திரிகைகளின் பதிவொன்றையும் நூலகம் மற்றும் தகவல் நிலையம் தொகுத்தது.

## 5. நாணயம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 49ஆம் பிரிவிற்கமைவாக, இலங்கை மத்திய வங்கி இலங்கையில் நாணயத்தினை வெளியிடுகின்ற ஏகபோக உரிமையையும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது. நாணயத்தை வெளியிடுதல் மற்றும் முகாமை செய்தல் மீதான நாணயச் சபையின் இந்நியதிச்சட்ட பொறுப்புடன் தொடர்புடைய கருமங்களை கையாளுகின்ற பொறுப்பு இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில், இலங்கையில் சட்ட ரீதியான நாணயம் கேள்வியை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் தரத்திலும் போதியளவான அளவுகளிலும் கிடைக்கப்பெறுகின்றது அத்துடன் கொவிட்-19இன் சவால்களின் மத்தியில் போலிபுனைதலிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் நாணயத் திணைக்களம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு தொடர்ந்தும் பங்களித்தது.

### 5.1 நாணய முகாமைத்துவம்

சிறந்த தரத்திலான நாணயத்தாள்களையும் குற்றிகளையும் சுற்றோட்டத்திற்கு விடுதல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் அத்துடன் பொருத்தமற்ற (பயன்படாத) நாணயத்தாள்கள் மற்றும் நாணயக் குற்றிகளை சுற்றோட்டத்தில் இருந்து திரும்பப் பெறுதல் ஆகியவை நாணய முகாமைத்துவத்தின் முக்கிய தொழிற்பாடுகளாகும். செயல்திறன்வாய்ந்த நாணய முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, 2021ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

#### (அ) நாணய அச்சிடலும் வார்த்தலும்

கேள்வியினை நிறைவுசெய்வதற்கும் போதுமான கையிருப்புக்களைப் பேணுவதற்கும் 2021ஆம் ஆண்டுக்காக நாணயத் திணைக்களம் ரூ. 262.4 பில்லியன் பெறுமதியுடைய புதிய நாணயத் தாள்களின் 185 மில்லியன் துண்டுகளுக்கு கட்டளைகளை முன்வைத்தது. 2021ஆம் ஆண்டில் நாணயக் குற்றிகளை சுற்றோட்டத்தில் விடுவதற்கான கட்டளைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

#### (ஆ) நாணய வழங்கல்

நாணயத் திணைக்களம், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் புதிய இயல்பு முறையை வெற்றிகரமாக தழுவிக்கொண்ட அதேவேளை நாணயத்திற்கான எதிர்ப்பாராத உயர்வான கேள்வியை நிவர்த்திசெய்தது.

நாணயத் திணைக்களம், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடையே பயன்படுத்தக்கூடிய நாணயத் தாள்களின் நேரடிப் பரிமாற்றத்திற்கு வசதிப்படுத்தி ஊக்குவித்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021ஆம் ஆண்டில் நாணயத் தாளின் வெளியீடுகளை குறைத்தது. அதற்கமைய, மொத்தமாக ரூ.390.9 பில்லியன் தொகையுடைய நாணயங்களை சுற்றோட்டத்தில் விட்டது. இது ரூ.172.7 பில்லியன் கொண்ட பொருத்தமான நாணயத் தாள்களையும் ரூ.217.3 பில்லியன் கொண்ட புதிய நாணயத் தாள்களையும் மற்றும் 0.9 பில்லியன் கொண்ட நாணயக் குற்றிகளையும் உள்ளடக்கியிருந்தது.

அட்டவணை II - 3
நாணயத் தாள்களையும் குற்றிகளையும் வழங்குதல்

| வழங்கல் | பெறுமதி (ரூ.பில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
| பொருத்தமான நாணயத் தாள்கள் | 504.6 | 467.0 | 526.5 | 467.1 | 172.7 |
| புதிய நாணயத் தாள்கள் | 123.3 | 328.4 | 248.7 | 229.5 | 217.3 |
| குற்றிகள்(அ) | 1.4 | 1.1 | 1.0 | 0.7 | 0.9 |
| மொத்தம் | 629.3 | 796.5 | 776.2 | 697.3 | 390.9 |

(அ) நாணயக்குற்றி வழங்கல்களிலிருந்து ஞாபகார்த்த நாணயக்குற்றிகள் நீக்கப்பட்டுள்ளன

#### (இ) நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்

நாணயத் திணைக்களமானது முக்கியமாக இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்படும் நியதிச்சட்ட ஒதுக்கு தேவைப்பாட்டினைப் பேணுவதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றது. மேலும், நாணயத் திணைக்களம், பொருத்தமற்ற நாணயத் தாள்களை சுற்றோட்டத்திலிருந்து நீக்குவதற்கு சேதமடைந்த நாணயத் தாள்கள் உள்ளடங்கலாக பொருத்தமற்ற நாணயத் தாள்களை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து

ஏற்றுக்கொள்கின்றது. முக்கியமாக, நியதிச்சட்ட ஒதுக்கு விகிதத்தைக் குறைத்தல் மற்றும் பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்களை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடையே நேரடியாகப் பரிமாற்றுவதனை வசதிப்படுத்தல் காரணமாக 2021ஆம் ஆண்டில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வைப்புச் செய்யப்பட்ட பயன்படுத்தத்தக்க நாணயத் தாள்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்களவு குறைவாகவே பதிவாகியுள்ளன.

அட்டவணை II - 4

நாணயத்தாள்களின் வைப்பு

| வைப்புகள் | பெறுமதி (ரூ.பில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
| பொருத்தமான நாணயத் தாள்கள் | 464.2 | 524.1 | 606.9 | 445.0 | 144.6 |
| பொருத்தமற்ற நாணயத் தாள்கள் | 119.9 | 229.6 | 132.1 | 95.4 | 76.1 |
| மொத்தம் | 584.1 | 753.7 | 739.0 | 540.4 | 220.7 |

குறிப்பு: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட நாணயக் குற்றிகளின் பெறுமதி குறிப்பிடத்தக்களவானவையல்ல.

**(ஈ) பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழித்தல்**

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாணயத் திணைக்களமானது பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழிப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதன் நியதிச்சட்ட அதிகாரத்தினைப் பிரயோகித்து ரூ.44.3 பில்லியன் (அட்டவணை II – 4) பெறுமதியுடைய பொருத்தமற்ற நாணயத் தாள்களின் 108.2 மில்லியன் துண்டுகளை அழித்துள்ளது.

அட்டவணை II- 5

பொருத்தமற்ற நாணயத் தாள்களை அழித்தல் தாள்கள்

| விடயம் | பெறுமதி (ரூ.பில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
| துண்டுகள் (மில்லியன்) | 177.1 | 343.8 | 235.0 | 127.3 | 108.2 |
| பெறுமதி (ரூ. பில்லியன்) | 94.2 | 252.2 | 139.8 | 62.2 | 44.3 |

**5.2 ஏனைய நடவடிக்கைகள்**

**(அ) நாணயக் கருமபீடங்களைத் தொழிற்படுத்தல்**

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில், நாணயத் திணைக்களமானது ரூ.93 மில்லியன் பெறுமதியுடைய சேதமடைந்த நாணயத் தாள்களை பரிமாற்றுவதன் மூலம் நாணயக் கருமபீடங்கள் ஊடாக பொதுமக்களுக்கு சேவையளித்துள்ள அதேவேளை முறையே ரூ.655 மில்லியன் பெறுமதியுடைய நாணயத் தாள்களையும் ரூ.39.1 மில்லியன் பெறுமதியுடைய குற்றிகளையும் வழங்குவதனூடாக இலங்கை வங்கியின் புறக்கோட்டை கிளையில் தாபிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கான விசேட பரிமாற்றுக் கருமபீடத்திற்கு வசதியளித்தது.

**(ஆ) பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையை செயற்படுத்தல்**

நாட்டில் நிலவிய உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலையின் காரணமாக, முன்னைய ஆண்டுகளைப் போல பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை அதன் முழுமையான இயலாற்றலில் செயற்படவில்லை. எனினும், 2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையானது ஞாபகார்த்த நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளை விற்பனை செய்தல், ஏனைய சேகரிப்பாளர் பொருட்களின் விற்பனை மற்றும் அறிவார்ந்த எடுத்துரைப்புகளை நடத்துதல் மூலம் நாணயவியல் தொடர்பில் 3,663 நபர்களுக்கு அதன் பணிகளை வழங்கியது.

**(இ) நாணயம் பற்றி பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாத்தல்**

நாணயத் திணைக்களமானது போலி நாணயத்தாள்களைத் தயாரிப்பதற்கான முயற்சிகளைக் குறைப்பதற்கும் நாணயத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயப் பணியகத்துடன் கூட்டிணைந்து இணைந்து பணியாற்றியது.

அதற்கமைய, கண்டுபிடிக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 1,065 போலி நாணயத்தாள்களின் சான்றுப்படுத்தலுக்கு நாணயத் திணைக்களம் வசதியளித்தது. கண்டுபிடிக்கப்பட்ட போலி நாணயத் தாள்களின் வீதம் சுற்றோட்டத்திலுள்ள ஒரு மில்லியன் நாணயத் தாள்களுக்கு ஏறத்தாழ 0.8 தாள்களாகக் காணப்பட்டு வேறு பல நாடுகளுடன் ஒப்பிடும்போது கணிசமாக போலிபுனைதல் குறைந்த மட்டத்தில் நிகழ்வதனை எடுத்துக்காட்டுகின்றது. நாணய விதிச் சட்டத்தின் 59ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக, ஆண்டுகாலப்பகுதியில் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கு போலி நாணயத் தாள்களின் தீர்மானச் சான்றாக 63 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் போலிபுனைதலுடன் தொடர்புடைய 03 நீதிமன்ற வழங்குகளில் நாணயத் திணைக்களம் சமூகமளித்தது.

**(ஈ) ஞாபகார்த்த நாணயக் குற்றி வெளியீடு**

2021ஆம் ஆண்டில், இலங்கை மத்திய வங்கியானது இலங்கைக்கும் சீன மக்கள் குடியரசிற்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 65ஆவது ஆண்டுநிறைவையும் அத்துடன் சீனப் பொதுவுடமைக் கட்சியின் 100ஆவது ஆண்டுநிறைவையும் குறிக்கும் முகமாக ரூ.1000 பெறுமதியுடைய தங்கம் மற்றும் வெள்ளி ஞாபகார்த்த நாணயக் குற்றிகளை வெளியிட்டது.

**(உ) நாணயத் தாள்களின் மீள் உற்பத்திக்கான அனுமதிகள்**

நாணயச் சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கை நியதிகளுக்கமைவாக, 2021ஆம் ஆண்டில் நாணயத் தாள்களை மீள உற்பத்தி செய்வதற்கான 02 கோரிக்கைகளுக்கான அனுமதிகள் நாணயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

**5.3 அபிவிருத்திகள் மற்றும் புதிய கருத்திட்டங்கள்**

**(அ) நாணய தொழிற்பாடுகளை மறுசீரமைத்தல்**

நாணய தொழிற்பாடுகளை மறுசீரமைப்பதற்கான பெறுகைக்கான முதல் கட்டத்தின் நிறைவு செய்வதற்கிணங்க, சமர்ப்பிக்கப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் பெறுகைக்கான இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் ஊடாக நாணயத் தாள் செயன்முறைப்படுத்தலின் இயலளவினையும் தொழிற்பாட்டு வினைத்திறனையும் அதிகரித்தல் உள்ளடங்கலாக பல தொழிற்பாட்டுப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நாணயத் திணைக்களம் எதிர்பார்க்கின்றது.

## 6. உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

### 6.1 உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தொழிற்பாடுகள்

1949ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களை எய்துவதற்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திடம் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இதற்கமைய, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின்

நியதி ஒதுக்குகளை ஒழுங்குமுறைப்படுத்தல், அரசாங்கத்தின், அரச முகவராண்மைகளின் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வங்கியாளராகவும் அலுவல்சார் வைப்பகமாகவும் செயற்படுதல், வணிகர் நேரடி பங்கேற்பாளர்களுக்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளின் ஏற்பாடு மற்றும் லங்காசெட்டில் முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களை ஒழுங்குமுறைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன.

### 6.2 நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

#### 6.2.1 திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

தற்போதைய நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்கிடலை குறைவான தளம்பல்களுடன் விரும்பத்தக்க மட்டமொன்றில் பேணுகின்ற விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினைப் பேணும் பொருட்டு, உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துகின்றது.

**அ. பணச் சந்தைத் திரவத்தன்மையினை மதிப்பிடல்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், பொருத்தமான சந்தைத் தொழிற்பாடுகளூடாக, நாயணச்சந்தை பங்கேற்பு நிறுவனங்களின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த அடிப்படையில் உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மை மதிப்பிடப்படுகிறது. இது தொடர்பில், மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட நாணயத் தொழிற்பாடுகளின் தாக்கம், அதேபோன்று சுற்றோட்டத்திலுள்ள நாணயம், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள், வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்கள், மத்திய வங்கியுடனான அரசாங்கத்தின் கொடுக்கல்வாங்கல்கள் போன்ற சுயாதீனமான காரணிகளின் திரவத்தன்மைத் தாக்கமும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.

**ஆ. சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவிற்கான விதந்துரைப்புக்கள்**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை நிலையினை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவிற்கு உள்ளீடுகளை வழங்கியது. இதற்கமைய, உள்நாட்டுப் பணச் சந்தையிலும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளிலும் இடம்பெறும் அபிவிருத்திகளை நாளாந்த அடிப்படையில் மீளாய்வு செய்வதனைத் தொடர்ந்து, மதிப்பிடப்பட்ட திரவத்தன்மை நிலைமைகள், தொழிற்பாட்டு இலக்கின் விரும்பத்தக்க மட்டம், பணச் சந்தைப் பங்கேற்பாளர் நிறுவனங்களிடையேயான திரவத்தன்மைப் பரம்பல், மற்றையவர்களிடையேயான பொருத்தமான சந்தை சமிக்ஞைகளுக்கான திட்டமிடல் தேவை என்பனவற்றை பரிசீலனையில் கொண்டு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் பணச் சந்தையின் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதில் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு பரிசீலனையில் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முன்மொழிந்தது.

**இ. திறந்த சந்தை ஏலங்களை நடத்துதல்**

ஒட்டுமொத்த திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில், தேவையின் அடிப்படையில் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்கும் ஈர்த்துக் கொள்வதற்குமான ஏலங்கள் நடத்தப்பட்டன. அத்தகைய ஏலங்கள் நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்கினை விரும்பத்தக்க மட்டத்தில் பேணுவதற்கு உதவின.

**(i) மீள்கொள்வனவு ஏலங்கள்**

2021 ஒகத்து நடுப்பகுதியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை திரும்பியமையினைத் தொடர்ந்து, உள்நாட்டு பணச் சந்தையிலிருந்து மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக குறுங்கால மற்றும் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன. இதற்கமைய, திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக ஓரிரவு மீள்கொள்வனவு ஏலங்கள் ஓரிரவு அடிப்படையில் நடத்தப்பட்ட வேளையில், குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள் ஒரு வாரம் வரையிலான காலப்பகுதிக்கு திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக அதேநாள் தீர்ப்பனவு அடிப்படையில் நடத்தப்பட்டன. கணிசமானதொரு காலப்பகுதிக்கு விடாப்பிடியாகக் காணப்பட்ட மிகையான சந்தைத் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்ளும் நோக்குடன் அடுத்த வியாபார நாளன்று தீர்ப்பனவு செய்யும் ஒழுங்குடன் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன.

**(ii) நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்**

குறிப்பிட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் குறிப்பிடத்தக்களவு திரவத்தன்மை பற்றாக்குறையினை பூர்த்திசெய்யும் பொருட்டு, நீண்டகால அடிப்படையில் உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் நடத்தப்பட்டன.

**(iii) உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள்**

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு பிணையங்களை விற்பனை செய்வதன் மூலம் பணச் சந்தையிலிருந்து நிரந்தர அடிப்படையில் மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல் ஏலங்களின் உடனடி விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை II - 6**

**2021ஆம் ஆண்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஏலங்கள்**

| ஏலங்களின் வகை | ஏலங்களின் எண்ணிக்கை | (ரூ.பில்லியன்) முன்வைக்கப்பட்ட மொத்தத் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை |
|---|---|---|---|
| **மீள்கொள்வனவு ஏலங்கள்** | | | |
| ஓரிரவு | 46 | 1,594.0 | 1,182.7 |
| குறுங்காலம் | 47 | 870.0 | 423.0 |
| நீண்ட காலம் | 11 | 180.0 | 60.0 |
| **நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்** | | | |
| நீண்ட காலம் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் | 2 | 250.0 | 203.5 |
| **உடனடி ஏலங்கள்** | | | |
| திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனைகள் | 5 | 55.0 | 14.4 |

**ஈ. துணைநில் வசதியின் ஏற்பாடு**

வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களினூடாக தமது குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்ய இயலாத பங்கேற்கும் நிறுவனங்களுக்கு துணைநில் வசதிகள் வழங்கப்பட்டன. துணைநில் வைப்பு வசதி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் மிகையான திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஓரிரவு அடிப்படையில் துணைநில் கடன்வழங்கல் வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன. 2021இல், துணைநில் வைப்பு வசதியின் கீழ் ஈர்த்துக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ.29,450.3 பில்லியனாக இருந்த வேளையில் துணைநில் கடன்வழங்கல் வசதியாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.30,095.2 பில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை II - 7**

**2021 ஆண்டுப்பகுதியில் துணைநில் வசதிகள்**

| துணைநில் வசதி | (ரூ.பில்லியன்) | | | |
|---|---|---|---|---|
| | மிகக் குறைந்த | மிகக் கூடிய | சராசரி | மொத்த அளவு |
| துணைநில் வைப்பு வசதி | 59.3 | 266.6 | 122.2 | 29,450.3 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி | 0.01 | 534.6 | 124.9 | 30,095.2 |

### 6.2.2 நியதி ஒதுக்கு விகிதத்தினை நிருவகித்தல் மற்றும் கண்காணித்தல்

நியதி ஒதுக்கு விகிதமானது, நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில் ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியும் மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்கில் உரிய வங்கியின் மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்களின் விகிதமாக வைத்திருக்கப்பட வேண்டிய ஒதுக்குகளின் குறைந்தபட்ச தொகையினைத் தீர்மானிக்கிறது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் நியதி ஒதுக்கு விகிதத்தின்படி, நியதி ஒதுக்குகள் பேணப்படுவதனை நிருவகித்தல் மற்றும் இது தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் இணங்குவிப்புக்களைக் கண்காணித்தல் என்பனவற்றிற்குப் பொறுப்புடையதாகும். நாணயச் சபையின் தீர்மானத்திற்கிணங்க, 2021 செத்தெம்பர் 01 இலிருந்து ஆரம்பமாகின்ற ஒதுக்குப் பேணல் காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நியதி ஒதுக்கு வீதத்தினை 2.00 சதவீதப் புள்ளியினால் 4.00 சதவீதப் புள்ளிக்கு அதிகரிக்கின்ற விதத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 2021 ஓகத்து 19ஆம் நாளன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுத்தது.

### 6.2.3 வங்கி வீதம்

இறுதிக் கடன் ஈவோன் வீதம் என அழைக்கப்படும் வங்கி வீதமானது நாணய விதிச் சட்டத்தின் 86 மற்றும் 87ஆம் பிரிவுகளின் கீழ் வங்கித்தொழில் நிறுவனங்களுக்கு அவசர காலக் கடன்கள் வழங்கப்படுமொரு வீதமாகும். வங்கி வீதமானது துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இசையும் விதத்தில் 300 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட எல்லையுடன் தன்னியக்கமாகவே சீராக்கம் செய்யப்பட்டது. 2021 ஓகத்து நடுப்பகுதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கி வீதம் 2021 ஓகத்து 19ஆம் நாள் 9.00 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி எந்தவொரு வங்கித்தொழில் நிறுவனத்திற்கும் வங்கி வீதத்தில் கடன்களை வழங்கவில்லை.

## 6.3 வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் அரசாங்கத்துடனான தொழிற்பாடுகள்

### 6.3.1 நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் தனியான முதனிலை வணிகர்களும் மத்திய வங்கியுடனான தீர்ப்பனவுக் கணக்குகளினூடாக நாணய முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கணக்குகள், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களிடையேயான பத்திரங்களற்ற பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு என்பனவற்றிற்கு வசதியளிப்பதற்காக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் நியதி ஒதுக்கு விகிதத்தின்படியான தமது ஒதுக்குகளைப் பேணும் நோக்கத்திற்காகவும் இக்கணக்குகளைப் பயன்படுத்துகின்றன. 2021 இறுதியிலுள்ளவாறு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காகவும் 8 தனியான முதனிலை வணிகர்களுக்காகவும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்குகளைப் பேணியது.

### 6.3.2 அரச கணக்குகள்

அரசாங்கத்திற்கான வங்கியாளர் என்ற ரீதியில் மத்திய வங்கியின் வகிபாகம் தொடர்பிலான தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற விதத்தில், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அரசாங்கத்தின் சார்பில் அரச திணைக்களங்கள், முகவராண்மைகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் என்பனவற்றிற்கு தொடர்ந்தும் வங்கித்தொழில் வசதிகளை வழங்கியது. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அத்தகைய 49 கணக்குகளைப் பேணியது. அத்தகைய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல் அளவுகளில் 87 சதவீதத்திற்கும் கூடுதலானவை துணைச் செயலாளரின் திறைசேரிக் கணக்கிற்கும் பொதுப்படுகடன் திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கிற்கும் உண்ணாட்டரசிறை ஆணையாளரின் பெறுமதிசேர் வரி மீளளிப்புக் கணக்கிற்கும் சனாதிபதி நிதியக் கணக்கிற்கும் உரியனவாகக் காணப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, குறிப்பிட்டதொரு நிதியியல் ஆண்டிற்காக அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பிடப்பட்ட அரசிறையில் பத்து சதவீதத்திற்கு விஞ்சாததொரு தொகையினை மத்திய வங்கி தற்காலிக முற்பணமாக அரசாங்கத்திற்கு வழங்குகிறது. இம்முற்பணத்தினை அரசாங்கம் சுழலும் கொடுகடன் வசதியாகப் பயன்படுத்தப்படுவதுடன் இதனை ஆறு மாதங்களை விஞ்சாததொரு காலப்பகுதியில் மீளச்செலுத்தவும் வேண்டும். 2021இன் தொடக்கத்தில் தற்காலிக முற்பணங்களின் வரையறை 2021ஆம் ஆண்டிற்கான அரசிறை மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ.43.7 பில்லியன் முற்பணங்களின் கீழ் பயன்படுத்தத்தக்க உயர்ந்தபட்சத் தொகை ரூ.198.4 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. எனினும், 2021 திசெம்பரில் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட திருத்தப்பட்ட அரச வரவு செலவுத்திட்டத்துடன் தற்காலிக முற்பணங்களின் கீழான உயர்ந்தபட்ச பயன்படுத்தல் தொகை ரூ.152.0 பில்லியனுக்கு கீழ் நோக்கித் திருத்தப்பட்டது. இதற்கமைய, 2021 இறுதியிலுள்ளவாறு, தற்காலிக முற்பணங்களின் வெளிநின்ற நிலுவை 2020 இறுதியின் ரூ.154.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.152.0 பில்லியனாக விளங்கியது. 2022ஆம் ஆண்டிற்கான அரச வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கான தற்காலிக முற்பணங்களின் வெளிநின்ற நிலுவை ரூ.225.1 பில்லியனுக்கு அதிகரித்தமை 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூ.73.0 பில்லியன் கொண்ட தற்காலிக மேலதிக முற்பணங்களைத் தோற்றுவித்தது.

## 6.4 ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதியின் ஏற்பாடு

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குவதன் மூலம் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமுகமானதும் வினைத்திறன் மிக்கதுமான தொழிற்பாட்டினை

உறுதிப்படுத்தியது. இவ்வசதியானது, கட்டணமெதுவுமின்றி திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் பிணையுறுதிக்கெதிராக வழங்கப்பட்டதுடன் நாளின் போது சந்தை விலைகளில் ஏற்படும் ஏதேனும் வேறுபாடுகளை ஈர்த்துக் கொள்வதற்கான போதுமான உச்ச வரையறையுடன் அவற்றின் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்டன. இவ்வாண்டுப்பகுதியில் எடுப்பனவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மொத்தப் பெறுமதியும் சராசரி நாளாந்த பெறுமதியும் முறையே ரூ.50,777.0 பில்லியனாகவும் ரூ.215.2 பில்லியனாகவும் காணப்பட்டன. இது ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் பயன்பாடு முன்னைய ஆண்டினை விடக் கணிசமாக அதிகரித்தமையினை எடுத்துக்காட்டியது. இது, முன்னைய ஆண்டின் ரூ.66.9 பில்லியன் கொண்ட நாளாந்தச் சராசரியுடன் ரூ.15,843.0 பில்லியன் கொண்ட மொத்தத் தொகையாகக் காணப்பட்டது.

### 6.5 அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களின் மேற்பார்வை

பணத்தரகர்கள் பணம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் அரச பிணையங்கள் சந்தைகளில் இடையேற்பாட்டாளர்கள் என்ற வகிபாகத்தினை ஆற்றி வருகின்றனர். நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 10(இ)இன் கீழ் விடுக்கப்பட்ட 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகள் (2013 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் விடுக்கப்பட்ட பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளை இரத்துச் செய்ததன் மூலம்) உள்நாட்டுப் பணச் சந்தையில் பணத்தரகர்களின் தொழில்சார் நடத்தைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கையிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களின் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கான அதிகாரங்களை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளருக்கு வழங்கின. 2021 திசெம்பர் இறுதியில், இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஒன்பது கம்பனிகளுக்கு “அதிகாரவளிப்புச் சான்றிதழ்” வழங்கப்பட்டதுடன் அவர்கள் “அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்” எனக் குறித்துரைக்கப்பட்டனர். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2021 காலப்பகுதியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களினதும் வருடாந்த தலத்திலான மேற்பார்வையினை தலத்திற்கு வெளியிலிருந்து மேற்கொண்டது.

## 7. பொருளாதார ஆராய்ச்சி

1949ஆம் ஆண்டின் நாணய விதிச் சட்டத்தின் 25ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணய மற்றும் வங்கித்தொழில் மற்றும் பொது அக்கறைசார் ஏனைய பொருளாதார விடயங்கள் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவேற்றுவதல் மற்றும் பொது மக்களுக்குத் இவை தொடர்பிலான தகவல்களை வழங்குவதற்காக மத்திய வங்கியின் நாணயச் சபை மற்றும் ஆளுநரின் வழிகாட்டலுக்கு தரவுகளை தயாரித்தல் மற்றும் பொருளாதார ஆராய்ச்சிகளை நடாத்தல் போன்ற தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் 2021இல் இலங்கைப் பொருளாதாரத்தின் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்கும் பொருட்டு முக்கிய சமகால பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுகளையும் கொள்கைப் பகுப்பாய்வுகளையும் மேற்கொண்டு முதுநிலை முகாமைத்துவத்திற்கும் நாணயச்சபைக்கும் முற்கூட்டியதும் முன்மதியுடையதுமான கொள்கைப் பரிந்துரைகளை வழங்கி பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது அதன் கடமைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. மேலும், அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் நிதியியல் அலுவல்கள் தொடர்பிலான ஆலோசகராக மத்திய வங்கியின் வகிபாகத்தினைக் கொண்டுநடத்துவதற்கு முதுநிலை முகாமைத்துவம் அரசாங்கத்திற்குஇடைமாற்றீடு செய்ய வேண்டிய காத்திரமான கொள்கை மதியுரைகளைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. இதற்கமைய, மத்திய வங்கியானது தோற்றம்பெற்றுவரும் பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவித்திருந்ததுடன் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறைகளை வலுப்படுத்துவதற்கும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளைத் தொடர்ந்தும் சமர்ப்பித்திதது. அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் காலந்தவறாது நியதிச்சட்ட வெளியீடுகளை வெளியிட்டதுடன் பொது மக்கள் உள்ளடங்கலாக சகல ஆர்வலர்களுடனும் புள்ளிவிபரங்கள் மற்றும் ஏனைய பேரண்டப்பொருளாதாரத் தகவல்களைப் பகிர்ந்துகொண்டதுடன் ஓர் பரந்த கேட்போருடன் அறிவைப் பகிர்ந்துகொள்ளும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தது. மேலும், சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் ஆய்வுக் கலாசாரத்தினையும் அறிவைப் பகிர்வதனையும் விருத்தி செய்யும் நோக்குடன் திணைக்களத்தினுள்ளும் மத்திய வங்கியினுள்ளும் ஆய்வுகளை மேற்கொள்வதனைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் ஊக்குவித்தது. மேலும், வெளிநாட்டுத் தரப்பினருடனும் பன்னாட்டு முகவராண்மைகளுடனும் நெருங்கிய உறவைத் தாபிப்பதிலும் பேணுவதிலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வினையூக்கத்துடனானதொரு வகிபாகத்தினைக் கொண்டிருந்தது.

### 7.1 பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணும் நியதிச்சட்ட நோக்குடன் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் அதேபோன்று உலகளாவிய பொருளாதாரத்தின் நாணய, வெளிநாட்டு, உண்மை மற்றும் இறைத்துறைகளின் போக்குகளையும் அபிவிருத்திகளையும் தொகுத்தல், கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றினைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் முன்னெடுத்த வேளையில், நாணயச்சபையினால் மேற்கொள்ளப்படும் முற்கூட்டிய மற்றும் காலந்தவறாத நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு எறிவுகளையும் எதிர்வுகூறல்களையும் சமர்ப்பித்திருந்தது. நாணயக் கொள்கைச் செயற்குழுவின் செயலகம் என்ற வகையில் ஆண்டு காலப்பகுதியில் மாதிரி அடிப்படையிலமைந்த பேரண்டப்பொருளாதார எறிவுகளினால் ஆதரவளிக்கபட்ட முன்னோக்கிய பார்வையுடனான பகுப்பாய்வுகள் உள்ளடங்கலாக பொருளாதார மற்றும் நாணய நிலைமைகள் தொடர்பிலான விரிவான அறிக்கைகளை வழங்கி எட்டு திட்டமிடப்பட்ட நாணயக் கொள்கைச் செயற்குழுக் கூட்டங்களையும் ஓர் விசேட நாணயக் கொள்கைச் செயற்குழுக் கூட்டத்தினையும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது வசதிப்படுத்தி, மத்திய வங்கியின் பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பில் நாணயச்சபைக்குத் தகவலறிந்த தீர்மானங்களையும் அத்தியாவசியமான பரிந்துரைகளையும் மேற்கொள்வதற்கு நாணயக் கொள்கைச் செயற்குழுவினை இயலச்செய்தது. மத்திய வங்கி பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான குறுங்கால வழிமுறைகளை அறிவித்த 2021 ஒத்தோபரில் வெளியிட்ட பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாத கால வழிகாட்டலின் தயாரிப்பினைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைகளமானது ஒருங்கிணைத்தது. பொருளாதார தாக்கங்களை, குறிப்பாக நாணயத் தாக்கங்களை எடுத்துக்காட்டி அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியினால் முன்மொழியப்பட்ட பல்வேறு கொள்கைசார் வழிமுறைகள் தொடர்பிலான பகுப்பாய்வுகளைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. மேலும், பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை பேணுவதற்கு அவசியமான பொருத்தமான கொள்கை வழிமுறைகள் தொடர்பிலான பகுப்பாய்வுகளையும் அறிக்கைகளையும் முதுநிலை முகாமைத்துவத்திற்குப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது. மேலும், நாணயக் கொள்கைத் தீர்மானமெடுக்கும் செயன்முறைகளை வலுப்படுத்தும் நோக்குடன் பிரபல்யமிக்க தொழில்வாண்மையாளர்கள், கல்வி மற்றும் தனியார் துறை நிபுணர்கள் உள்ளடங்கலாக ஆர்வலர் குழுவொன்றினை

உள்ளடக்கியுள்ள நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவினை ஆண்டு காலப்பகுதியில் எட்டுக் கூட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இவையை தொடர்ந்தும் வசதியளித்தது. மேலும், நாணயக் கொள்கைத் தீர்மானமெடுத்தல் மற்றும் தொடர்பூட்டல் செயன்முறைகளை மேம்படுத்தும் தொடர்ச்சியான முயற்சியின் பகுதியொன்றாக மாதிரி அடிப்படையிலமைந்த எதிர்வுகூறல் மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு முறைமையினை நெறிப்படுத்துவதன் மூலம் உள்ளக மாதிரியுரு மற்றும் எதிர்வுகூறல் இயலளவினைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது தொடர்ந்தும் முன்னேற்றியது. நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கப் பாதையுடன் இசைந்து செல்லும் விதத்தில் பணவீக்க எதிர்பார்க்கைகளை உறுதிநிலைப்படுத்தும் நோககுடன் பொது மக்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்கு மத்தியில் வெளியக தொடர்பூட்டலினை மேம்படுத்தவும் விழிப்புணர்வை அதிகரிக்கவும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாணயச்சபையின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் நாணயக் கொள்கை மீளாய்வு தொர்பிலான எட்டு ஊடக அறிக்கைகளை வெளியிடடதுடன் பத்திரிக்கையாளர் மாநாடு நடவடிக்கைகளை வசதிபடுத்தியது. தொடர்பூட்டல் திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட பத்திரிக்கையாளர் மாநாடுளானவை உண்மை நேர அடிப்படையொன்றில் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டலின் பரந்ததொரு அடைவினை இயலச்செய்யும் பல்வேறு நேரலை மற்றும் சமூக வலைதளங்களினூ டாக நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன. மேலும், நாணயக் கொள்கை அறிவிப்பினைத் தொடர்ந்து பெருந்திரளான கேட்போரை சென்றடையும் பொருட்டு மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்களினால் ஒருங்கிணைக்கப்பட்ட தற்போதைய நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பிலான இணையதள வாயிலான கருத்தரங்குகள், குறிப்பாக சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறுவதனை வசதிப்படுத்துவதற்கான வளவாளர்களை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வழங்கியது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் நாணய மற்றும் வட்டி வீத புள்ளிவிபரங்களின் தொகுப்பினையும் பரவலினையும் மேலும் மேம்படுத்தும் பொருட்டு பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கமைய, தரவு சேகரிப்புச் செயன்முறையினை ஒழுங்குமுறைப்படுத்தும் வேளையில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வசமிருந்த, நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் தொடர்பிலான அளவீடுகளும் 2021 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 7.2 வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினைப் பேணல்

சவால்மிக்கதும் பாதிக்கப்படக்கூடியதுமான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில், குறிப்பாக வெளிநாட்டுத் துறையில், கிரமமானதோர் அடிப்படையில் பன்னாட்டு வர்த்தகம், வெளிநாட்டு நிதி, செலாவணி வீதம் மற்றும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் என்பவற்றுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்களைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் வெளிநாட்டுத் துறை தொடர்பிலான பொருத்தமான மற்றும் காலந்தவறாத மதியுரைகள் மற்றும் பரிந்துரைகளை நாணயக் கொள்கைச் செயற்குழுவிற்கும் நாணயச்சபைக்கும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் செலாவணி வீதம் தொடர்பிலான அழுத்தங்களைக் கிரமமாக மதிப்பீடு செய்ததுடன் வெளிநாட்டுத் துறை பாதிப்படையக்கூடிய தன்மைகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான கொள்கை வழிமுறைகளுடன்கூடிய வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலான முன்னிலைப்படுத்தல்களினையும் சமர்ப்பிப்புக்களினையும் முதுநிலை முகாமைத்துவத்திற்கும் நாணயச் சபைக்கும் தொடர்ந்தும் வழங்கியிருந்தது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 114இன் பிரகாரம், அரசாங்கம் அதன் எதிர்பார்க்கப்பட்ட கடன் பெறுகைகளுக்கு முன்னர் வேண்டப்பட்டவாறு முன்மொழியப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் நாணயத் தாக்கங்களைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ந்தும் மதிப்பீடு செய்திருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் காலாண்டு அடிப்படையில் சென்மதி நிலுவைக் கையேடு 6இன் வடிவிலமைந்த சென்மதி நிலுவை மற்றும் பன்னாட்டு முதலீட்டு நிலைமை தொடர்பிலான புள்ளிவிபரங்களையும் மாதாந்த அடிப்படையில் பன்னாட்டு ஒதுக்குத் தரவு முன்வடிவத்துடன் தொடர்புடைய புள்ளிவிபரங்களையும் தொடர்ந்தும் வெளியிட்ட வேளையில், உலக வங்கிக்கான காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவபரங்கள் மற்றும் ஒருங்கிணைந்த நேரடி முதலீட்டு அளவீட்டிற்கான நேரடி முதலீட்டுத் தரவுகள் என்பவற்றுடன் தொடர்புடைய காலந்தவறாத சமர்ப்பிப்புக்களை மேற்கொண்டது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டு காலப்பகுதியில் தனியார் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான தரவுகளைத் திரட்டுவதற்கான உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள், வருடாந்த பன்னாட்டு முதலீட்டு அளவீடு என்பவற்றுடன் தொடர்புடைய மாதாந்த அளவீடுகளையும் வதிவுள்ள மற்றும் வதிவற்ற வானூர்திகள், கப்பலேற்றும் நிறுவனங்கள், தொலைத்தொடர்பூட்டல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதித் துறைகள் போன்றவற்றினை உள்ளடக்கும் பணிகளிலுள்ள வர்த்தகத்துடன் தொடர்புடைய அளவீடுகள் என்பவற்றினை உள்ளடக்கும் வெளிநாட்டுத் துறை தரவுகளின் துல்லியம் மற்றும் காலந்தவறாமையினை நிச்சயப்படுத்துவதற்கான பல்வேறு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆண்டு காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கீழ் மட்டத்திலான வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்களை திரட்டுவதற்கும் தொகுப்பதற்குமான பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் முறைமை எனும் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புடைய முன்னணிப் பணிகளை முன்னெடுத்தது. பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் முறைமைச் செயற்றிட்டமானது 2022 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துவதிலுள்ள அவசர நிலையினைக் கருத்திற்கொண்டு வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை மேம்படுத்துவதற்கு நிறுவப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை வலுப்படுத்துவதற்கான செயலணியினது செயலகமாகத் தொழிற்பட்டதுடன் அத்தகைய செயலணி சனாதிபதி செயலணிக்கு முன்னேற்றங்களை இற்றைப்படுத்துவதனை வசதிப்படுத்தியது.

### 7.3 முற்கூட்டிய கொள்கை மதியுரைகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் நாணயக் கொள்கை, செலாவணி வீதக் கொள்கை, பன்னாட்டு வர்த்தகம் மற்றும் இறைத்துறையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் நாணயச்சபை, அரசாங்கம் மற்றும் ஏனைய ஆர்வலர்களுக்குக் கொள்கை மதியுரைகளை வழங்குகின்ற அதன் வகிபாகத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டிருந்தது. குறிப்பாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது உலகளாவிய நோய்த்தொற்றினால் சீர்குழைந்த பொருளாதாரத்தினைச் சீர்தூ க்குவதற்கும் உறுதிநிலைப்படுத்துவதற்கும் அதிகாரிகளுக்கு உதவும் பொருட்டு கொள்கைப் பரிந்துரைகளை வழங்குவதில் முனைப்புடன் செயற்பட்டது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 64 மற்றும் 68 இற்கமைய அதன் நியதிச்சட்ட வகிபாகத்தினைப் பேணி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது முறையே நாணய மற்றும் வெளிநாட்டுத் துறைகளில் நிலவுகின்ற மற்றும் எதிர்பார்க்கப்படும் நிலைமைகள் மற்றும் இடர்நேர்வுகள் தொடர்பில் கௌரவ நிதி அமைச்சருக்கு இரகசியமான அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்த வேளையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறை உறுதிநிலைப்படுத்தலை நிச்சயப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்திற்கு அவசியமான கொள்கை வழிமுறைகளை முன்மொழிந்தது. நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 116(1) இற்கேற்ப கொள்கை ஆலோசனைகளுடன்கூடிய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் தோற்றம்பெற்றுவரும் இடர்நேர்வுகள் என்பவற்றினை உள்ளடக்கிய இரகசிய செத்தெம்பர் 15 அறிக்கையினையும்

நியதிச்சட்ட காலவரையறைக்குள் கௌரவ நிதி அமைச்சரிடம் சமா்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதார இடையூறுகளின் ஏதுக்கள், பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பிலான அத்தகைய இடையூறுகளின் சாத்தியமான தாக்கங்கள் மற்றும் அரசாங்கத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் என்பன தொடர்பிலான பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய அத்தியாவசியமானதும் இரகசியமானதுமான அறிக்கைகளை முதுநிலை முகாமைத்துவத்திற்குத் தயார்செய்து சமர்ப்பித்திருந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் நாணயக் கொள்கைச் செயற்குழு, நாணயச்சபை மட்டத்திலான வெளிநாட்டுப் படுகடன் கண்காணிப்புக் குழு, சந்தைத் தொழிற்பாடுகள் குழு, நிதி முறைமை உறுதிப்பாட்டுக் குழு, உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக் குழு, அரச பிணையங்களை வழங்குவதற்கான கேள்வி கோரல் சபைகள், பயிற்சிக் குழு மற்றும் நூலக ஆலோசனைக் குழு போன்றன உள்ளடங்கலாக பல்வேறு உள்ளகக் குழுக்களில் பணியாற்றுவதன் மூலம் அவசியமான கொள்கை மதியுரைகளைத் தொடர்ந்தும் வழங்கியிருந்தார். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் உள்ளக முதலீட்டு மேற்பார்வைக் குழு மற்றும் பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டு மேற்பார்வைக் குழுவில் பார்வையாளராக பணியாற்றினார். அவசியமான நாணய உள்ளீடுகளை வழங்கும் நோக்கில் கிரமமானதோர் அடிப்படையில் நாணயச்சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் வேளையில், பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், பிரச்சினைகள் மற்றும் சமகால கரிசனைசார் விடயங்கள் என்பன தொடர்பில் திணைக்களத்தின் முதுநிலை அலுவலர்களின் ஆதரவுடன் உள்ளீடுகளை வழங்குவதன் மூலம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளரும் ஏனைய கிரமமான மற்றும் சிறப்புக் கூட்டங்கள், ஏனைய உள்ளக குழுக் கூட்டங்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கான கூட்டங்கள் போன்றவற்றில் தமது பங்களிப்பினை வழங்கினார். மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளரும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முதுநிலை அலுவலர்களும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் மற்றும் அதிமேதகு சனாதிபதி மற்றும் அமைச்சரவை அமைச்சர்களினால் நியமிக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் உள்ளடங்கலாக பல்வேறு குழுக்கள் மற்றும் சபைகளில் மத்திய வங்கியினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வெளிவாரியான நிறுவனங்களுக்குத் தமது பணியினை வழங்கியிருந்தனர். ஆனையிறவு உப்பளத்தின் வடபகுதியிலான புனர்வாழ்வு தொடர்பிலான செயற்றிட்டக் குழு, இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் நிதியின் நடைமுறைப்படுத்தல் வழிகாட்டல் தொடர்பிலான வழிகாட்டல் குழு, இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதாரத்திற்கான பகுப்பியலொன்றினை விருத்தி செய்வதற்கான செயற்குழு, அரசாங்க நிதிப் புள்ளிவிபரவியல் ஒருங்கிணைப்புச் செயற்குழு, தீர்வை தீர்மானச் செயற்குழு, வர்த்தக மேம்படுத்தல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தகவல் என்பவற்றின் மீதான ஆலோசனைச் செயற்குழு, சமூகப் பொருளாதார மற்றும் கொள்கைப் பகுப்பாய்விற்கான தேசிய செயற்குழு, உரத்தின் விலையை தீர்மானிக்கும் செயற்குழு, LP எரிவாயு மற்றும் கோதுமை மாவுக்கான விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கான செயற்குழுக்கள், உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கான சிறப்புச் செயற்குழுக்கள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் கொள்வனவு தொடர்பான இணைந்த கடன்செலவுகள் குறித்து பூர்வாங்க ஆய்வினை மேற்கொள்வதற்கான செயற்குழு, 13 வருடங்களுக்கான கட்டாயக் கல்வித் திட்டத்தின் ஆலோசனைக் குழு மற்றும் வாழ்க்கைச் செலவினத்தைப் பேணுவதற்கான செயற்குழு போன்றவற்றில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் மத்திய வங்கியினைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர். அதேவேளை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் அலுவலர்கள் இலங்கையிலுள்ள வெற்றிபெறும் கைத்தொழில்கள், எரிபொருள் விலையிடல் பொறிமுறைகள், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை நடத்தை மற்றும் கொள்கைப் பரிந்துரைகள், சேதன விவசாயத்தினை நோக்கிய மாற்றத்தினால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கங்கள், வலுத்துறைக் கரிசனைகள் மற்றும் கஞ்சா பயிர்ச்செய்கையினை சட்டரீதியாக்குதல் போன்றன உள்ளடங்கலாக சமகால கரிசனைசார் விடயங்கள் தொடர்பிலான பகுப்பாய்வுகளை வினைத்திறனாக மேற்கொண்டனர். மேலும், கொழும்புத் துறைமுக நகரத்தின் பொருளாதாரத் தாக்கங்கள் மற்றும் எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பலின் கடல்சார் பேரழிவின் தாக்க மதிப்பீடு என்பன உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் தொழில்நுட்ப நிபுணத்துவ அறிக்கைகளை வழங்குவதன் மூலம் வெளிவாரியான அதிகாரிகளுக்கான ஆதரவு வழங்கப்பட்டது.

### 7.4 நியதிசட்ட வெளியீடுகள் மற்றும் தரவுகள் மற்றும் தகவல்களைப் பரப்புதல்

மத்திய வங்கி ஏனைய திணைக்களங்களின் உதவியுடன் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் முதன்மையான வெளியீடானதும் நாணய விதிச் சட்டத்தின் கீழான நியதிச்சட்ட தேவைப்பாடொன்றாகவுமுள்ள 2020இற்கான மத்திய வங்கி ஆண்டறிக்கையினை மூன்று மொழிகளிலும் வெளியிட்டது. உலகளாவிய நோய்த்தொற்று மீண்டும் தீவிர நிலையை அடைந்தமையினால் ஏற்பட்ட தொழிற்பாட்டு ரீதியான சிக்கல் தன்மைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியில் ஆண்டறிக்கையானது கௌரவ நிதியமைச்சருக்கு வழங்கப்பட்டு 2021 ஏப்பிறல் இறுதியளவில் பொது மக்களுக்கு வெளியிடப்பட்டது. மத்திய வங்கியின் மற்றுமொரு முக்கிய வருடாந்த வெளியீடான அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் - 2021இன் முக்கிய பண்புகளும் 2022இற்கான வாய்ப்புக்களும் ஏனைய திணைக்களங்களின் ஆதரவுடன் தொகுக்கப்பட்டு 2021 ஒத்தோபரில் வெளியிடப்பட்டது. 2021 ஒத்தோபர் 01ஆந் நாளன்று மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநரினால் அறிவிக்கப்பட்ட ஆறு மாத கால வழிகாட்டலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகளுக்கான இடையூறுகளின் போது, குறிப்பாக பல்வேறு வெளிவாரியான தரப்பினரால் முன்வைக்கப்படும் எதிர்க்கணிய ஊகங்கள் தொடர்பிலான தீர்வுகளை வழங்குவதற்கும் ஒளிபரப்புதல் உள்ளடங்கலாக மரபுசார்ந்த மற்றும் மரபுசாராத வழிகளினூடாக உரிய நேரத்தில் பொது மக்களிடத்தில் துல்லியமான பொருளாதார, நிதியியல் மற்றும் கொள்கைத் தகவல்களைப் பரப்புவதற்குப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது திடசங்கற்பம் பூண்டது. இச்செயன்முறையில் மத்திய வங்கியின் இணையவழி நூலகத்தில் நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த புள்ளிவிபரங்களினதும் நாணயக் கொள்கை மீளாய்வுகள் மற்றும் வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள் தொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கைகளினதும் கிடைப்பனவினைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உறுதிப்படுத்தியிருந்தது. பன்னாட்டு நியமங்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தின் சகல துறைகளையும் உள்ளடக்கும் புள்ளிவிபரங்களைப் பரப்பும் வேளையில், உறுப்பு நாட்டு வெளிப்படைத்தன்மையினையும் திறந்ததன்மையினையும் மேம்படுத்தும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதியத்தினால் வகுக்கப்பட்டுள்ளவாறு சிறப்புத் தரவுப் பரவல் நியமத்தின் தேவைப்பாடுகளைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது தொடர்ச்சியாகப் பின்பற்றியது. மேலும், ஆண்டு காலப்பகுதியில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் சார்க் நிதிய மற்றும் அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணியின் நாணய உள்ளடக்கத் தரவுத்தளங்களிற்கான தரவுகளைத் தொகுத்தது.

### 7.5 கொள்கை ஆராய்ச்சியில் ஈடுபடுதல் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல்

மத்திய வங்கியின் ஆய்வுப் பிரிவாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது திணைக்களத்தினுள்ளும் மத்திய வங்கியினுள்ளும் ஆய்வுக் கலாசாரத்தினைத் தொடர்ந்தும் வளர்ப்பதன் மூலம் சமகால முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளுக்கு ஆதரவளித்தது. ஆராய்ச்சியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான திணைக்களச் செயற்குழுவாகச்

செயற்படும் ஆராய்ச்சி மதியுரைக் குழு அறிவைப் பகிர்ந்துகொள்ளும் கூட்டங்கள் மற்றும் ஆய்வாளர்களை வழிப்படுத்தும் ஏற்பாடுகள் உள்ளடங்கலாக பொருளாதார நடவடிக்கைகளுக்கு முனைப்புடன் பங்களிததது. 2021 ஏப்பிறலில், மத்திய வங்கிகளின் பொருளாதார மாதிரிப்படுத்தல் மற்றும் எதிர்வுகூறும் நடைமுறைகள் தொடர்பிலான சார்க் நிதிய மெய்நிகர் கருத்தரங்கில் நாடு அடிப்படையிலான கட்டுரையொன்றினை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள ஆய்வாளர்கள் முன்வைத்திருந்தனர். சார்க் நாடுகளில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று: கொள்கைப் பதிலிறுப்புக்கள் மற்றும் அதன் தாக்கம் எனும் தொனிப்பொருளில் மற்றுமோர் ஆய்வுக் கற்கை 2021 யூன் மாதத்தில் நடைபெற்ற சார்க் நிதிய ஆராய்ச்சி மாநாட்டில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலரொருவரினால் முன்வைக்கப்பட்டிருந்தது. 2021 செத்தெம்பரில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவகம் மற்றும் ஆசிய பசுபிக் பிரயோகப் பொருளியல் சங்கம் என்பவற்றுடன் இணைந்து பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கான தோற்றம்பெற்றுவரும் பிரச்சினைகள் எனும் தொனிப்பொருளின் கீழ் கூட்டுப் பன்னாட்டு ஆராய்ச்சிப் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்தது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முதுநிலை ஆய்வாளர்கள் ஆசிய பசுபிக் பிரயோகப் பொருளியல் சங்கத்துடன் இணைந்து அவர்களது கூட்டு ஆய்வினை நிகழ்நிலையில் முன்வைத்திருந்ததுடன் இக்கற்கைகள் இறுதியில் வெளியிடப்பட்டன அல்லது புகழ்பெற்ற கல்விசார் பன்னாட்டு சஞ்சிகைகளில் வெளியிடுவது தொடர்பில் தற்போது பரிசீலனைக்குட்பட்டுள்ளன. மேலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுக் கற்கைகள் ஆசிய அபிவிருத்தி வங்கி நிறுவகத்தினால் தொகுத்து வழங்கப்பட்டு 2021 ஒத்தோபர் மற்றும் நவெம்பர் காலப்பகுதியில் நடைபெற்ற மெய்நிகர் மாநாட்டில் முன்வைக்கபடடன. இத்துடன், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் தமது கற்கைகளை உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் அரங்குகளில் தொடர்ந்தும் முன்வைத்து வெளியிட்டனர். அதேவேளை, ஆராய்ச்சி மதியுரைக் குழுவினது வழிகாட்டலின் கீழ் 2021 காலப்பகுதியில் மத்திய வங்கியின் முதன்மை ஆராய்ச்சிச் சஞ்சிகையான அலுவலர் கற்கைகளின் இரண்டு தொகுதிகளை வெளியிடுவதனை பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஒருங்கிணைத்தது. ஆராய்ச்சி மதியுரைக் குழுவினது உறுப்பினர்கள் மத்திய வங்கியின் பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில் செயற்றிட்டத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பட்டப்பின் படிப்பில் ஆர்வம்கொண்டவர்களது ஆய்வு முன்மொழிவுகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் தொடர்ந்தும் மதிப்பீடு செய்த வேளையில், பல்கலைக்கழக முறைமையின் பட்டப்பின் படிப்பினைத் தொடரும் மாணவர்களுக்கான ஆலோசனைப் பணிகளையும் வழங்கியது.

ஆண்டுக் காலப்பகுதியில், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது தொடர்பூட்டல் திணைக்களம், வங்கித் தொழில் கற்கைகளுக்கான நிலையம் மற்றும் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்கள் என்பவற்றின் ஆதரவுடன் மத்திய வங்கியினுள்ளும் மத்திய வங்கிற்கு வெளியிலுமுள்ள ஆர்வங்கொண்ட தரப்பினரின் பொருளாதார அறிவை மேம்படுத்தும் பொருட்டு அதன் நிபுணத்துவத்தினைத் தொடர்ந்தும் வழங்கியது. அத்தகைய கூட்டுச் செயற்றிட்டத்தில் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் அலுவலர்கள் பயன்பெறுநராகவிருந்தனர். மத்திய வங்கி ஆண்டறிக்கையின் வெளியீட்டினைத் தொடர்ந்து மூன்று அரசகரும மொழிகளிலும் நிகழ்நிலையில் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட முக்கியமானதொரு பகிரங்க விரிவுரையாக 2020 ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு இலங்கைப் பொருளாதாரத்தின் நிலை, சவால்கள் மற்றும் தோற்றப்பாடு அமைந்திருந்தது. தனிப்பட்ட விழிப்புணர்வு செயற்றிட்டங்களுக்குப் புறம்பாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் மத்திய வங்கியின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகள், நாணயக்கொள்கை, இறைக்கொள்கை, வெளிநாட்டுத் துறை கொள்கைகள் மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகளள் போன்ற பகுதிகளில் பல்வேறு நிகழ்நிலைக் கல்விசார் அமர்வுகளை நடாத்தினர். அதேசமயம், க.பொ.த. உயர்தர பொருளியல் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறும் பொருட்டு வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வருடாந்த தொலைக்காட்சி கல்விசார் விரிவுரைத் தொடர்களான தக்ஷிலாவ மற்றும் அறிவூற்று நிகழ்ச்சிகளை முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்துவதற்குப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வளவாளர்களை வழங்கியிருந்தது.

### 7.6 பன்னாட்டு உறவுகள்

பல்புடை நிதியியல் அமைப்புக்களுக்கான மத்திய தொடர்பு மையமாகத் திகழும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் சார்பாக பன்னாட்டு நாணய நிதியம், சார்க் நிதியம் மற்றும் தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையம் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து செயற்பட வசதியளித்தது. குறிப்பாக, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களமானது உறுப்புரை ஐஏ ஆலோசனை தொடர்பிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிமனை மற்றும் 2021 யூலையில் பன்னாட்டு நாணய நிதியத்தின் மெய்நிகர் அலுவலர் விஜயம் மற்றும் சார்க் நிதிய ஆளுநர்களின் 41 மற்றும் 42ஆவது மெய்நிகர் குழுக் கூட்டங்கள் என்பவற்றிற்கு வசதியளித்திருந்ததுடன் வருடாந்த தென் கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலைய நிறைவேற்றுக் குழுக்கூட்டம் மற்றும் ஆளுநர் சபைக் கூட்டங்கள் என்பவற்றில் கலந்து சிறப்பித்தது. பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பிலான தகவல்களை வழங்குதல் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் வேளையில், அரசாங்கம் மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற முக்கிய பல்புடை அபிவிருத்தி வங்கிகளுக்கிடையிலான இணைப்பிற்குப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் ஆதரவளித்தது. மேலும், ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் 77ஆவது தொடர் மற்றும் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் 15ஆவது தொடர் என்பவற்றிற்கு நிதியமைச்சரினால் நியமிக்கப்பட்ட தூதுக்குழுவைப் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மேலும், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் முதுநிலை அலுவலர்கள் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற மெய்நிகர் முதலீட்டாளர் கூட்டங்களில் அவசியமான தகவல்களையும் தெளிவுகளையும் வழங்கியதுடன் தரமிடல் முகவராண்மைகள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் வெளிவாரியான ஆர்வலர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடலொன்றினைப் பேணினர்.

## 8. ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம்

ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது (ஊ.சே.நி.திணைக்களம்) ஊழியர் சேமலாப நிதியத்தை நிறுவிய 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அதன் அதிகாரங்களை பிரயோகிப்பதற்கும் கடமைகளை செயற்படுத்துவதற்கும் அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கும் நாணயச் சபைக்கு வசதியளிக்கின்றது. ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக, நிதிய முகாமைத்துவத்தின் அனைத்து அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற வகையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளையில், சட்டத்தின் பொது நிருவாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை சார்பில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ், பங்களிப்புகள், மேலதிகக் கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் அத்துடன் பண முதலீடுகளிலிருந்தான பெறப்பட்ட வருமானங்களாக செலுத்தப்பட்ட

அனைத்து தொகைகளையும் பெற்றுக்கொள்ளவதற்கும், நிதியத்தினுடைய பணத்தின் கட்டுக்காப்பாளராக இருப்பதற்கும், நிதியத்தின் ஒவ்வொரு உறுப்பினர்கள் தொடர்பிலும் வெவ்வேறான கணக்குகளைப் பேணுவதற்கும், சட்டத்தின் கீழ் உரித்துடைய ஆட்களுக்கு தொழில் ஆணையாளரினால் சான்றுபடுத்தப்பட்ட அத்தகைய நன்மைகளைச் செலுத்துவதற்கும், சட்டத்தின் நோக்கத்திற்காக உடனடியாக தேவைப்படுத்தப்படாத நிதியத்தின் பணத்தில் முதலீடுசெய்வதற்கும், நிதியத்துடன் தொடர்புடைய கணக்குகளின் ஏடுகளைப் பேணுவதற்கும், நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்து தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சருக்கான பிரதியுடன் அதனை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் பொறுப்புடையதாகும்.

2021 காலப்பகுதியில், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக மேற்குறித்த நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்த அதேவேளையில், தொழில் ஆணையாளருடன் நெருக்கமான ஒத்துழைப்பினையும் பேணியது. ஆய்விற்குரிய ஆண்டு காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**(அ) பங்களிப்புக்களை பெற்றுக்கொள்ளலும் உரித்துடையவர்களுக்கு நன்மைகளைச் செலுத்துதலும்**

2021இல், மொத்த உறுப்பினர் பங்களிப்புக்கள், முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.150.7 பில்லியனிலிருந்து ரூ.165.7 பில்லியனுக்கு 9.9 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளையில், உறுப்பினர்களுக்கும் அவர்களின் சட்டபூர்வ பின்னுரித்தாளர்களுக்கும் செலுத்தப்பட்ட மொத்த மீளளிப்புக்களும் ரூ.118.2 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது. இது, 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீத அதிகரிப்பொன்றாகக காணப்பட்டது (அட்டவணை II-8). அதற்கிணங்க, 2021இற்கான தேறிய பங்களிப்பானது 2020இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.47.5 பில்லியனுக்கு அதிகரித்திருந்தது.

**அட்டவணை II - 8**
**நிதியத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய தகவல்கள்**

| விடயம் | 2020 | 2021 (அ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ. பில்) | 2,824.3 | 3,166.1 | 12.1 |
| உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு (ரூ. பில்) | 2,767.8 | 3,066.9 | 10.8 |
| உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்) | 19.8 | 19.8 | - |
| பங்களிப்புச் செய்யும் உறுப்பினர் கணக்குகள் (மில்) | 2.6 | 2.3 | (11.5) |
| பங்களிப்புச் செய்யாத உறுப்பினர் கணக்குகள் (மில்) | 17.2 | 17.5 | 1.7 |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 150.7 | 165.7 | 9.9 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்) | 109.7 | 118.2 | 7.7 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 41.0 | 47.5 | 15.9 |
| மீளளிப்புகளின் எண்ணிக்கை | 197,401 | 179,681 | (9.0) |

**நியதிச்சட்ட வெளியீடுகள் :** மத்திய வங்கி ஆண்டறிக்கை 2020, “அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் 2021” என்பவற்றின் “நிதியியல் துறை அபிவிருத்திகள் மற்றும் உறுதிப்பாடு” மீதான அத்தியாயத்தை ஒருங்கிணைத்து தொகுப்பதனூடாக மத்திய வங்கியின் முக்கிய வெளியீடுகளுக்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தது. மேலும், பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதிக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் இரகசிய அறிக்கையொன்றாக காணப்படுகின்ற செத்தெம்பர் 15ஆம் நாள் அறிக்கையின் நிதியியல் முறைமையுடன் தொடர்புடைய பிரிவொன்றை வடிவமைப்பதற்கு பங்களிப்புச் செய்தது. இதற்கு மேலதிகமாக, நிதியியல் துறைத் தரவுகளை தொகுப்பதன் மூலமும் நிதியியல் துறையின் துணைத் துறைகள் தொடர்பில் பகுப்பாய்வுகளை வழங்குவதன் மூலமும் மத்திய வங்கியின் ஏனைய வெளியீடுகளுக்கும் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பங்களிப்புச்செய்தது.

**(உ) நிறுவனத் துறை மற்றும் வீட்டலகுத் துறை பகுப்பாய்வை நடாத்துதல்**

பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் நிதியியல் அல்லாத பட்டியலிடப்பட்ட கம்பனிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத் துறை பாதிக்கப்படும்தன்மைகளின் மதிப்பீட்டை நடாத்தியது. பேரண்டப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் துறை விருத்திகள் என்பன நிறுவனத் துறையின் செயலாற்றத்தையும் ஐந்தொகையையும் பாதிக்கின்றமையால், பொருளாதார வீழ்ச்சிக்கும் நிதியியல் ரீதியான பாதிக்கப்படும் தன்மைகளுக்கும் முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகளாக கருதப்படுகின்ற நிறுவனத் துறையின் இயக்கவாற்றலை இப்பகுப்பாய்வானது மதிப்பீடுசெய்வதன் மீது கவனம் செலுத்துகின்றது. நிதியியல் நிறுவனங்கள் மீதான நிறுவனங்களின் ஐந்தொகைகளினூடான கசிவுத்தாக்கங்களை இனங்காண்பதற்கு நிறுவனங்களின் கடன்தீராற்றல்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டது.

நிதியியல் முறைமையில் தோன்றக்கூடிய முறைமைசார்ந்த இடர்நேர்வுகள் கட்டியெழுப்பப்படுவதனை இனங்காண்பதற்கு வீட்டலகு மற்றும் நிதியியல் துறை படுகடன் மீதான கண்காணிப்பு, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு துறையில் முக்கிய பரப்பொன்றாகும். இப்பகுப்பாய்வு கொடுகடன் தகவல் பணியகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தரவைப் பயன்படுத்தி நிறுவனம் மற்றும் அரச துறை அத்துடன் வீட்டலகுத்துறை பாதிக்கப்படும் தன்மைகள் என்பவற்றை மதிப்பீடு செய்கின்றது. கொடுகடன் தகவல் பணியகமானது ஒட்டுமொத்த அடிப்படையில் வங்கிகளினதும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

துறையினதும் வெளிநின்ற கொடுகடன் மீதான பயன்படுத்தப்படும் காலாண்டுத் தரவுகளை இப்பகுப்பாய்விற்கு வழங்குகின்றது.

**(ஊ) நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீதான குழுக்களின் ஒருங்கிணைப்பு**

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு:** நிதியியல் முறைமை உறுதிபாட்டுக் குழுவின் செயலகமாக பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் தொழிற்பட்டது. இது, நிதியியல் துறையைப் பாதிக்கின்ற இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்காகவும் இடர்நேர்வுகளை தணிப்பதற்கான வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கு வசதியளிப்பதற்கும் அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை ஊக்குவிப்பதற்கான திணைக்களங்களிடையே ஒருங்கிணைப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும் மத்திய வங்கியில் நிறுவப்பட்ட திணைக்களங்களுக்கிடையேயான மன்றமொன்றாகும். 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியியல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் எட்டு கூட்டங்கள் இடம்பெற்றன. பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் உறுப்பினர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக காலாண்டு இடர்நேர்வு மதிப்பீட்டை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் கூட்டங்களில் முன்வைத்ததுடன் நிதியியல் முறைமை உறுதிபாட்டு குழுவின் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட விதந்துரைப்புக்களுடன் சேர்த்து காலாண்டு இடர்நேர்வு மதிப்பீடுகள் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு:** பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் இலங்கையின் நிதியியல் முறைமையில் வெளித் துறைசார் நிறுவனங்களிலிருந்தான முக்கிய ஆளணியை உள்ளடக்குகின்ற நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவிற்கான செயலகப் பணிகளை வழங்குகின்றது. 2021 செத்தெம்பரில் புதிய உறுப்பினர்களை நியமிப்பதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு மீளஉருவாக்கப்பட்டதுடன், உறுப்பினர்களில் சிலர் குழுவிலிருந்து விலகினர். ஆண்டுக் காலப்பகுதியியல் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆலோசனைக் குழுவின் ஆறு கூட்டங்கள் இடம்பெற்றன. நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட கொள்கை ஆலோசனைகள் நாணயச் சபைக்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**நிதியியல் முறைமை மேற்பார்வைச் சபை:** பேரண்டமுன்மதியுடைய விடயங்களை இணைத்து நிதியியல் முறைமை மேற்பார்வை சபையின் விசாரணை நியதிகள் திருத்தப்பட்டமையால் 2021ஆம் ஆண்டின் பிந்திய பகுதிகளில் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்தான ஒழுங்குபடுத்தலுக்கிடையிலான குழுவொன்றாக காணப்படுகின்ற நிதியியல் முறைமை மேற்பார்வைச் சபையின் செயலகத் தொழிற்பாட்டினை பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பொறுப்பேற்றது. அதற்கமைய, பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம், எதிர்காலத்தில் நிதியியல் முறைமை உறுதிப்பாடு சபைக்கு செயலகப் பணிகளை வழங்கும்.

**(எ) பன்னாட்டு முகவராண்மைகளுடனான ஒருங்கிணைத்தல்**

பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களமானது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொத்தணியின் ஒருங்கிணைப்புத் திணைக்களமாக பேரண்டமுன்மதியுடைய அளவீட்டுக்கு பதிலிறுத்துவதில் பன்னாட்டு நாணய நிதியத்துடன் ஈடுபட்டது. மேலும், நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலினை நடைமுறைப்படுத்துவதன் மீதான வழிநடாத்தல் குழுவின் உறுப்பினராக பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் பன்னாட்டு நாணயக் கூட்டுத்தாபனம், உலக வங்கி நிலைபெறத்தக்க வங்கித்தொழில் வலையமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுடன் நிலைபெறத்தக்க நிதி வகைப்பாட்டியலினை உருவாக்குவதன் மீதான முன்முயற்சிகளை ஒருங்கிணைத்தது. 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆர்வலர்கள் கூட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் பசுமை நிதியியல் வினாக்கொத்தின் பதில்களைத் தொகுத்தல் என்பற்றினூடாக ஆர்வலர்களுடனும், நிலைபெறத்தக்க அபிவிருத்தி நிதியியல் நிபுணர்களுடனும் அத்துடன் பசுமை நிதியியல் வகைப்பாட்டியலை அபிவிருத்தி செய்கின்ற தொழில்நுட்ப நிபுணர்களுடனும் உறவைப்பேணுவதற்கு பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம் வசதியளித்தது.

## 22. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது நிதிய மாற்றல்களுக்கான முறைமைகளை நிறுவித் தொழிற்படுத்துவதற்கும், கொடுப்பனவு கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கும், பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முறைமை விதிகளை வழங்குவதற்குமாக மத்திய வங்கிக்கு அதிகாரத்தினை வழங்குகின்ற 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 62அ ஆம் பிரிவின் கீழ் மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது. மேலும், இலங்கையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு, வினைத்திறன், போட்டித்தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பவற்றை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைபடுத்தி, மேற்பார்வை செய்வதற்கும், தேசிய கொடுப்பனவு முறைமைக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் மத்திய வங்கிக்கு பொறுப்பளிக்கப்பட்ட நியதிச்சட்ட பொறுப்பாணையும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளாக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் தொழிற்பாடுகள், நிதியியல் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்குதல், உலகளாவிய வங்கிகளுக்கு இடையேயான நிதித் தொலைத் தொடர்பூட்டல்களுக்கான சமூக (சுவிப்ற்) தொடர்பூட்டல் முறைமையின் முகாமைத்துவம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளித்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல் ஆகியன காணப்பட்டன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினால் செயலாற்றப்பட்ட தொழிற்பாடுகளின் தொகுப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

### 22.1 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைத் தொழிற்பாடுகள்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், பாரிய பெறுமதிகளைக் கொண்ட நேர முக்கியத்துவம் வாய்ந்த பங்கேற்பாளர்களிடையேயான கொடுப்பனவுகளையும் அதேபோன்று வாடிக்கையாளர் கொடுப்பனவுகளையும் அதேநேர மொத்த அடிப்படையில் தீர்ப்பனவு செய்கின்ற அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சீரான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களமானது மேலதிக நிதியைக் கோரிய பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிகளின் வழங்கலுக்கு வசதியளித்து கண்காணித்தது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்கும் நிறுவனங்களாக மத்திய வங்கி, 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், 7 தனியான முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின்

மத்திய வைப்பக முறைமை என்பன காணப்படுகின்றன. 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, ரூ. 294,602 பில்லியன் மொத்தப் பெறுமதி கொண்ட 449,828 கொடுக்கல்வாங்களைத் தீர்ப்பனவுசெய்தது. நாளொன்றுக்குத் தீர்ப்பனவுசெய்யப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்களின் சராசரி அளவும் பெறுமதியும் முறையே 1,867 ஆகவும் ரூ. 1,222 பில்லியனாகவும் காணப்பட்டன. ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதிகளின் தொழிற்பாடுகளைப் பொறுத்தவரையில் சராசரியாக நாளொன்றுக்கு ரூ. 208.5 பில்லியன் கொண்ட தொகை பங்கேற்கும் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டது. சிறந்த பன்னாட்டு நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற விதத்தில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையையும் லங்கா செக்குயர் முறைமையையும் உள்ளடக்குகின்ற லங்காசெட்டில் முறைமையின் கிடைப்பனவுத்தன்மை இவ்வாண்டுப் பகுதியில் சராசரியாக 99.9 சதவீத உயர் மட்டமொன்றில் பேணப்பட்டது.

### 22.2 மத்திய வங்கியின் நிதியியல் கொடுக்கல்வாங்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகளை வழங்கல்

**(அ) வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் மற்றும் நிதியிடல், பணச் சந்தை, நிலையான வருமானப் பிணையங்கள், தங்க வர்த்தகம், ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் மற்றும் மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு என்பவற்றுடன் தொடர்புடைய ஐ.அ.டொலர் 163.05 பில்லியன் தொகை கொண்ட 9,712 கொடுக்கல்வாங்கல்களைக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தீர்ப்பனவுசெய்தது.

**(ஆ) திறந்த சந்தை தொழிற்பாடுகளுக்கான பின்னரங்க அலுவலகப் பணிகள்**

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான மற்றும் முதனிலை வணிகர்களுடனான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவானது சந்தை திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. இதற்கமைய, 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியியல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களமானது ரூ. 1,576.8 பில்லியன் பெறுமதியான 387 மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும், ரூ. 29,297.06 பில்லியன் பெறுமதி கொண்ட 4,961 துணைநில் வைப்பு வசதிக் கொடுக்கல்வாங்கல்களையும், ரூ. 28,892.6 பில்லியன் தொகை கொண்ட 1,797 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களையும், ரூ.14.35 பில்லியன் தொகை கொண்ட 14 உடனடி விற்பனைக் கொடுக்கல்வாங்கல்களையும் செயற்படுத்தி வசதியளித்தது.

### 22.3 சுவிப்ற் தொடர்பூட்டல் வலையமைப்பின் முகாமைத்துவம்

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது ஆளுகை ஏற்பாடுகள், கட்டமைப்புக்கள், செயன்முறைகள், இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்ற சுவிப்ற் தலைமையகத்தினால் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கமைவாக மத்திய வங்கியின் அனைத்துப் பயன்படுத்துநர்களின் சார்பிலும் சுவிப்ற் முறைமையைப் பேணியது. உத்வேகம்மிக்க தொடர்புகையினை (உலகளாவியதும் உள்நாட்டு ரீதியாகவும்) பேணுவதற்காகவும் வினைத்திறனும் பாதுகாப்பும் மிக்க நிதியியல்சார் செய்தி அனுப்பல் பணிகளை வழங்குவதற்காகவும் இலங்கை மத்திய வங்கி, லங்கா பினான்சியல் சேர்விஸ் பியூரோ லிமிடெட் ஊடாக சுவிப்ற் வலையமைப்புக்கான தொடர்புகையினைப் பெற்றுள்ளது. 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சுவிப்ற் இடைமுகத்தை வலுப்படுத்துவதற்கும் சுவிப்ற் பணி மூலம் வழங்கப்படுகின்ற வசதிகளுக்காக பன்னாட்டு நியமங்களுக்கு ஏற்ற விதத்தில் சுவிப்ற் பயன்பாட்டாளர்களுக்காக உயர்ந்தளவு பாதுகாப்பினையும் அதிக வினைற்றிறன்மிக்க சேவையையும் வழங்குவதற்காகவும் புதிய கட்டாய மற்றும் பாதுகாப்பு இற்றைப்படுத்தல்கள் வருடாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. மேலும், செய்தி வடிவங்களை எம்.ரி வகைப்படுத்தலிருந்து எம்.எக்ஸ் வகைப்படுத்தலுக்கு மாற்றுவதற்கு ஐஎஸ்ஓ 20022 தரநியமங்களின் கட்டாயத் தேவைப்பாட்டை கடைப்பிடிக்கின்ற செயன்முறையில் சுவிப்ற் முன்னெடுக்கின்றது.

### 22.4 ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தல்

2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது பல்புடை தேறிய அடிப்படையொன்றில் தொடர்புடைய மத்திய வங்கிகளூடாக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய தகைமையுடைய கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவிற்குத் தொடர்ந்தும் வசதியளித்தது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 6,307 ஆகவும் கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூ. 714.4 பில்லியனாகவும் காணப்பட்டது. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் பெறுமதி ரூ. 581.9 பில்லியனாகக் காணப்பட்டது. இந்திய ரிசேர்வ் வங்கி மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 49ஆவது கூட்டம் மற்றும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் துணைநில் தொழில்நுட்பக் குழுவின் கூட்டம் என்பன 2021ஆம் ஆண்டின் மேயில் மெய்நிகர் வழியாக இடம்பெற்றன.

### 22.5 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல்

இலத்திரனியல் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்தவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் புதிய கொடுப்பனவுத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதுடன் அதன் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைசெய்தல் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. அதற்கமைய, 2021ஆம் அண்டுக் காலப்பகுதியில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

(அ) சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான “லங்காகியூஆர்” முறைமையின் நடைமுறைப்படுத்தலை ஊக்குவிக்கும் பொருட்டு, நாடாளவிய ரீதியில் ஆரம்பகட்டப் பிரச்சாரமொன்று 2021 ஒத்தோபர் 25 அன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, லங்காகியூஆர் பயன்பாட்டை பிரபல்யப்படுத்துவதற்கு நிதியியல் நிறுவனங்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வுகளில் பங்குபற்றியது. லங்காகியூஆர் முன்முயற்சியில் அதிகமான வணிகர்கள் இணைவதை ஊக்குவிக்கும் தேவையினைக் கருத்திற் கொண்டு, உயர்ந்தபட்ச வணிகர் கழிவு வீதம் 0.5 சதவீதமான குறைக்கப்பட்டமை 2021 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

(ஆ) லங்கா கிளியர் (பிறைவட்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் குறைந்த பெறுமதியைக் கொண்ட கொடுப்பனவுகளுக்காக செல்லிட செயலியை அடிப்படையாகக் கொண்ட தீர்வாகக் காணப்படும் ஜஸ்ட்பே முறைமையின் கொடுக்கல்வாங்கலொன்றுக்கான உயர்ந்தபட்ச பெறுமதி 2021 பெப்புருவரி 01ஆம் நாளன்று செயற்பாட்டுக்கு வரும் விதத்தில் ரூ 50,000 வரை அதிகரிக்கப்பட்டது.

(இ) 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிட கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குநர்களாக பற்று அட்டைகளை வழங்குவதற்கு இரண்டு நிதியியல் நிறுவனங்களின் விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்டு உரிமங்கள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, செல்லிடத்

தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் பண முறைமைகளின் உரிமம்பெற்ற தொழிற்படுத்துநர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு உற்பத்தி மேம்பாட்டுகளுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக்கொண்ட இலத்திரனியல் பண முறைமைகளின் நம்பகத்தன்மையையும் சீரான தொழிற்பாட்டையும் உறுதிசெய்வதற்கு சொல்லப்பட்ட முறைமைகளின் உரிமம்பெற்ற தொழிற்படுதுநர்கள் மீது தளத்திலான மேற்பார்வையையும் தளத்திற்கு வெளியேயான மேற்பார்வையையும் நடாத்தப்பட்டது.

(ஈ) டிஜிட்டல் பேரேட்டுச் செயன்முறையை அடிப்படையிலமைந்து பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் தீர்வுக்கான சாத்தியப்பாட்டு எண்ணக்கருக்களை உருவாக்குதலை நிறைவுசெய்ததுடன் சாத்தியப்பாட்டு எண்ணக்கருவை பரிசோதிப்பதில் இணைவதற்கு ஆர்வம் கொண்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான பரிசோதனை வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. இறுதி அறிக்கை 2021 ஒத்தோபரில் ஆளுநருக்குச் சமர்பிக்கப்பட்டது.

(உ) டிஜிட்டல் வங்கித்தொழில், செயற்கை நுண்ணறிவு மற்றும் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் என்பன பற்றி ஆய்வுசெய்வதற்காக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தினுள் நியமிக்கப்பட்ட உள்ளகக் குழு, அதன் ஆய்வுகளை பூர்த்திசெய்து அதன் அறிக்கைகளை ஆளுநருக்குச் சமர்ப்பித்தது.

(ஊ) பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்குவிதி வரைவு செய்யப்பட்டு நாணயச் சபை ஒப்புதலளிக்கப்பட்ட ஒழுங்குவிதி அமைச்சரின் கையொப்பத்திற்காக நிதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

(எ) நிதியியல் சந்தை உட்கட்டமைப்பிற்கான கோட்பாடுகளுடன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் இணங்குவிப்பை மதிப்பீடு செய்வதற்கு சுய மதிப்பீடு நடாத்தப்பட்டு சுயாதீன மதிப்பீட்டிற்காக அவ்வறிக்கை உலக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

(ஏ) எதிர்பாரா நிலைமையொன்றில் தொடர்ச்சியாக வியாபாரத் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான அவர்களின் இயலுமையை உறுதிசெய்யும் பொருட்டு, லங்காசெட்டில் பங்கேற்பாளர்கள் மற்றும் லங்கா கிளியர் பிறைவட் லிமிடெட் என்பவற்றின் தொழில் தொடர்ச்சித் வியாபாரத் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

### 22.6 தேசிய கொடுப்பனவுகள் சபை

கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான ஆலோசனை மற்றும் கண்காணிப்பு குழுவாக விளங்கும் தேசிய கொடுப்பனவுகள் சபையானது 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஆறு கூட்டங்களை நடாத்தியதுடன் தேசிய கொடுப்பனவுகள் சபையினது செயலகமாக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் தொழிற்பட்டது. 2021இல் தேசிய கொடுப்பனவுச் சபையானது 2020-2022 ஆம் ஆண்டுகாலப்பகுதிக்கான வழிகாட்டலை நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தையும் டிஜிட்டல் கொடுப்பனவு தளம், மெய்நிகர் நாணயங்கள், திறந்த வங்கித்தொழில் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் எண்ணக்கருக்கள் மீது கவனம் செலுத்துவதற்கும் "டிஜிட்டல் ஆண்டு" நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோக்கிய பாதையைத் தீர்மானிப்பதற்கும் நியமிக்கப்பட்ட குழுக்களின் முன்னேற்றத்தையும் கண்காணித்தது. மெய்நிகர் நாணயங்கள் மற்றும் திறந்த வங்கித்தொழில் என்பவற்றை ஆய்வுசெய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுக்கள், அறிக்கைகளைத் தேசிய கொடுப்பனவுகள் சபைக்கு சமர்ப்பித்தன. டிஜிட்டல் கொடுப்பனவு அமைப்பு முறைமையில் நிதியியல் கம்பனிகளின் அதிகரித்த ஈடுபாட்டை பரிசீலனையிற் கொண்டு, தேசிய கொடுப்பனவுச் சபையில் வங்கியல்லா நிதியியல் துறையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக, வங்கியல்லா நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்துநராக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளர் தேசிய கொடுப்பனவுச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

### 22.7 பொதுமக்கள் விழிப்புணர்வு

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம், நாட்டில் தொழிற்படுகின்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பற்றிய தகவல்களையும் புள்ளிவிபரங்களையும் பரப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் "கொடுப்பனவுச் செய்தித் திரட்டு" என்ற காலாண்டு வெளியீட்டை தொடர்ந்தும் வெளியீட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக, கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களமானது கொடுப்பனவு முறைமைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி பொதுமக்களுக்கும் வங்கித்தொழில் சமூகத்திற்கும் அறிவூட்டுவதற்கு தேவையின் அடிப்படையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன் ஊடக அறிக்கைகளை வெளியிட்டது.

## 23. கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் மையக் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான திணைக்களம்சார் செயற்பாடுகளை அணிசேர்த்து இலங்கை மத்திய வங்கியின் உபாயத் திட்டமிடல் செயன்முறையை வசதிப்படுத்துகின்றது. அதற்கிணங்க, கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது வங்கி முழுவதுமான உபாய முன்னுரிமைகள் மற்றும் திணைக்களம்சார் நடவடிக்கைத் திட்டங்களை வகுப்பதுடன் எதிர்வருகின்ற ஆண்டிற்கான உபாய மற்றும் நடவடிக்கைத் திட்டங்களை தொகுக்கின்றது. இத்திட்டமானது உள்ளக அலுவலர்களின் தகவலுக்காக இலத்திரனியல் ஆவணமாக கிடைக்கப்பெறச் செய்யப்படுகின்றது. திட்ட நடைமுறைப்படுத்தலிற்கான முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு காலாந்தர மீளாய்வுகள் நடாத்தப்படுகின்றன. இது தொடர்பில், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது வருடாந்த உபாயத் திட்டமிடல் மீளாய்வுக் கூட்டம் மற்றும் திணைக்களம்சார் நடவடிக்கைத் திட்டங்கள் தொடர்பான காலாண்டு மீளாய்வுகள் ஆகியவற்றை ஒவ்வொரு திணைக்களத்துடனும் நடாத்துகின்றது. தனிப்பட்ட திணைக்களம்சார் நடவடிக்கைத் திட்டங்களின் முன்னேற்றமானது அதன் மீளாய்விற்காக நிறுவன முகாமைத்துவக் குழுவிற்கும் அதனைத் தொடர்ந்து தேவையான வழிகாட்டுதலுக்காக நாணயச் சபைக்கும் அறிக்கையிடப்படுகின்றது.

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது நடைமுறை சிக்கல்களின் முக்கியத்துவம் அத்துடன்/அல்லது நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் வினைத்திறனை ஆராய்வதற்கு முகாமைத்துவத்தினால் ஒதுக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகள் தொடர்பான ஏதேனும் வேறு விடயப்பரப்பில் கொள்கை ஆய்வுகளை/அளவீடுகளை சுயாதீன முறையொன்றில் நடாத்துகின்றது.

### 23.1 இலங்கை மத்திய வங்கியின் உபாய மற்றும் நடவடிக்கைத் திட்டம் 2021

2021இற்கான வருடாந்த இலக்குகளை உள்ளடக்கிய இலங்கை மத்திய வங்கியின் உபாய மற்றும் நடவடிக்கைத் திட்டமானது 2021 சனவரி 01 அன்று நடைபெற்ற புத்தாண்டு பணி தொடங்கும் வைபவத்தில் ஆளுநரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### 23.2 முன்னேற்ற கண்காணிப்பும் மீளாய்வும்

2021 காலப்பகுதியில் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது ஒவ்வொரு முக்கிய செயலாற்ற குறிகாட்டியின் கீழும் காலாண்டு அடிப்படையில் திட்டமிடப்பட்ட வெளிவருவிளைவுகளின் அடைதல் மட்டம் தொடர்பிலான திணைக்களம்சார் நடவடிக்கை

திட்டங்களின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு காலாண்டு அடிப்படையிலான மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தி முகாமைத்துவத்திற்கும் நாணயச்சபைக்கும் அறிக்கையிட்டது.

### 23.3 கொள்கை மீளாய்வு

ஆண்டு காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியினால் நோய்த்தொற்றின் போது கையாளப்பட்ட வீட்டிலிருந்து பணி புரியும் ஏற்பாட்டின் வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்கும் இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடைவதனை நோக்காக கொண்ட மத்திய அறிவு மையமாகிய நூலகம் மற்றும் தகவல் நிலையத்தின் வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்கும் இரு கொள்கை ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

### 23.4 "சவாலான நேரங்களில் மத்திய வங்கியியல்" தொடர்பான மெய்நிகர் குழு கலந்துரையாடல்

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம், பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்துடன் இணைந்து சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற மூன்று தொழில்சார் நிபுணர் குழு உறுப்பினர்களுடன் "சவாலான நேரங்களில் மத்திய வங்கியியல்" பற்றிய மெய்நிகர் குழு கலந்துரையாடலொன்றை ஒழுங்கமைத்தது. தலைப்புக்கள் காலத்திற்கு பொருத்தமானதும் மத்திய வங்கிகளின் பொது ஆர்வமொன்றுடனான அதாவது நோய்த்தொற்று காலப்பகுதியில் அவற்றுடன் தொடர்புடைய பொருளாதாரங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு நிதியிடலின் மத்திய வங்கியின் வகிபாகம் மற்றும் அதன் வரையறைகள், பாரிய நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான தேவை, புதிய தொழில்நுட்பங்களை விரைவான பின்பற்றுதல் மற்றும் நோய்த்தொற்றுக் காலப்பகுதியின்போது பன்னாட்டு நிதியியல் அமைப்புக்களின் வகிபாகம் போன்றவை கலந்துரையாடலில் கலந்தாராயப்பட்டன. செலாவணி வீத உறுதிப்பாடு, வெளிநாட்டு ஒதுக்குகள், குறைந்த வட்டிவீதங்கள் மற்றும் குறைந்த பணவீக்கங்களை பேணுதல் என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

### 23.5 இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்புடைய நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அடைதலினை வசதிப்படுத்தல்

கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நடவடிக்கைகளை/குறிகாட்டிகளை அடையாளம் காணலில் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை ஒழுங்கமைப்பதற்கும் கண்காணிப்பதற்கும் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுவுக்கு வசதியளித்தது. நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்கு குறிகாட்டிகள் தொடர்பான தகவல்கள் நிலைபெறத்தக்க அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டது. 2021 காலப்பகுதியில் இலங்கை ஆர்வலர்கள் ஆலோசனை செயலமர்வில் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்கு நடைமுறைப்படுத்தல் தொடர்பான தன்னார்வ தேசிய மீளாய்விலும் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் பிரதிநிதித்துவப்படுத்தியது.

## 24. பொதுப்படுகடன் திணைக்களம்

பொதுப்படுகடன் திணைக்களம், நாணய விதிச் சட்டத்தின் 113ஆவது பிரிவின் நியதிகளில், பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான அரசின் முகவராக, மத்திய வங்கியின் நியதிச்சட்ட கடப்பாடுகளை ஆற்றுவதற்குப் பொறுப்பாக இருக்கின்றது. இதன்படி, மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட வேளையான 1950 ஒகத்து 28ஆம் நாளன்று பொதுப்படுகடன் திணைக்களம் நிறுவப்பட்டது. பொதுப்படுகடன் திணைக்களத்தின் உபாய முன்னுரிமை யாதெனில், இடர்நேர்வின் முன்மதியுடைய அளவு, அரச பிணையங்கள் சந்தையின் மிகச் சிறந்த நடைமுறைகளின் நியமங்களைப் பின்பற்றுதல் என்பனவற்றுடன் இணங்கிச் செல்கின்ற விதத்தில் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலப்பகுதிக்குள் சாத்தியமானளவிற்கு மிகக் குறைந்த செலவில் அரசாங்கத்தின் நிதியியல் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதேயாகும்.

இவ்வுபாய முன்னுரிமையினை அடைந்து கொள்ளும் விதத்தில் பொதுப் படுகடன் திணைக்களத்தின் தெழிற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றதெனினும் இதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை.

i. அரசாங்கத்தின் படுகடன் தோற்றப்பாட்டினை மேம்படுத்துவதற்காக ஆற்றல் வாய்ந்த படுகடன் முகாமைத்துவ உபாயங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

ii. ஒதுக்கீட்டுச்சட்டம் அல்லது ஏனைய தொடர்பான சட்டவாக்கங்கள்/ அதிகாரவளிப்புக்களின்படி அரசாங்கத்தின் மொத்தக் கடன்பாட்டுத் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதிகளைத் திரட்டுதல், தூண்டுதலளிக்கும் சந்தை நிலைமைகள் மற்றும் நிதி அமைச்சின் சம்மதத்தின் அடிப்படையில் பிணையங்களை வழங்குவதனூடாக உள்நாட்டுச் சந்தை மற்றும் பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுதல்.

iii. படுகடனைத் துல்லியமாகவும் சரியான நேரத்திலும் தீர்ப்பனவு செய்வதன் மூலம் அரசாங்கத்தின் கறைபடியாத படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு பதிவேட்டினைப் பேணுதல்.

iv. அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தைகளை ஆழமாக்கி அகலப்படுத்துவதன் மூலம் அரச பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்தல். இதன் மூலம் அரசாங்கப் பிணையங்களுக்கான கேள்வியினை அதிகரித்தல்.

v. அரச பிணையங்களின் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவுகளினது சுமுகமான தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் அரச பிணையங்களின் உரித்துப் பதிவுகளை மேற்கொள்கின்ற லங்கா செகுயர் முறைமையினைப் பேணுதல்.

vi. மத்திய அரசாங்கத்தின் படுகடன் சொத்துப்பட்டியலின் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்காக படுகடன் இயக்கவாற்றல் தொடர்பில் பகுப்பாய்வினை மேற்கொள்ளுதல் மற்றும் அதனைப் பொருத்தமான விதத்தில் ஆர்வலர்களுக்கு தொடர்பூட்டுதல்.

### 24.1 அரசாங்கத்தின் மொத்த கடன்பாட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதிகளைத் திரட்டுதல்

அ) 2021இல் அரசாங்கத்தின் கடன்பாட்டுத் தேவைப்பாடுகள் முக்கியமாக திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் அபிவிருத்தி முறிகளின் வழங்கலூடாக முக்கியமாகப் பூர்த்தி செய்யப்பட்டன.

ஆ) முதலீட்டாளர்களின் முன்னுரிமைகள் குறுங்காலப் பிணையங்களை நோக்கி நகர்ந்தமை காசுப்பாய்ச்சல் தளம்பல் காணப்பட்ட நேரத்தில் அரசாங்கத்தின் நாட்டம் திறைசேரி உண்டியல்களின் வழங்கலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தமை மற்றும் ஒப்பீட்டு ரீதியில் குறுங்கால திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அனைத்து மூன்று சாதனங்களினதும் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் சிறிதளவால் வீழ்ச்சியடைய வழிவகுத்தது.

இ) 2021இல் பொதுப்படுகடன் திணைக்களம், வெளிநாட்டுப் படுகடனைப் படிப்படியாக கட்டம் கட்டமாக அகற்றுவதற்காக 2020 உடன் ஒப்பிடுகையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல்களை இரட்டிப்பாக்கக் கூடியதாக இருந்தது.

ஈ) சவால் நிறைந்த சந்தை நிலைமைகள் மற்றும் உயர்ந்த திறைசேரி உண்டியல் வழங்கல்களின் தாக்கத்தினை எதிரீடு செய்யும் நிலைமை என்பனவற்றிற்கிடையிலும் பொதுப்படுகடன்

திணைக்களம் கணிசமானளவு நிதியினைத் திரட்டுவதற்காக மிகுந்த கவனத்துடன் திறைசேரி முறிகளை வழங்கியதன் மூலம் 2021இல் முதிர்ச்சிக்கான சராசரிக் காலத்தினை திருப்திகரமான மட்டத்தில் பேணக்கூடியதாக இருந்தது.

உ) நிதியத்தின் ஒவ்வொரு மூலங்களின் கீழுமான நடவடிக்கைகளின் சுருக்கம் அட்டவணை 11-16இல் கீழே தரப்படுகிறது.

### 24.2 அரச படுகடன் தீர்ப்பனவு

2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.1,590.1 பில்லியன் கொண்ட உள்நாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவினையும் ரூ.785.5 பில்லியன் கொண்ட வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய ரூ.2,375.6 பில்லியன் கொண்ட மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கப்பட்டது.

உள்நாட்டு நாணய படுகடனை தீர்ப்பனவு செய்கையில், நறுக்கு மற்றும் முதிர்ச்சி கொடுப்பனவுகளாக 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 224 பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டன. இவற்றுடன் ஒப்பீடு செய்கையில் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் 215 பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டன. அதேபோன்று, வெளிநாட்டு நாணய படுகடனை தீர்ப்பனவு செய்கையில், 2020ஆம் ஆண்டில் செயன்முறைப்படுத்தப்பட்ட 1,894 வெளிநாட்டு கடன்களுடன் ஒப்பீடு செய்கையில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் 1,836 வெளிநாட்டு கடன்கள் செயன்முறைப்படுத்தப்பட்டன.

### 24.3 அரச பிணையங்களின் உரித்துப் பதிவினைப் பேணுதல்

அரச பிணையங்களின் பாதுகாப்பு பேணப்படுவதனை உறுதிப்படுத்துகின்ற பத்திரங்களற்ற அரச பிணையங்களின் உரித்துப் பதிவானது மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. 2021 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு பத்திரங்களற்ற பிணையங்களினது உடமைகளின் மொத்த எண்ணிக்கை முகப்புப் பெறுமதியில் ரூ.9,238.6 பில்லியனாகக் காணப்பட்டது. இது, ரூ.2,270.7 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்களையும் ரூ.6,967.9 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. 2021 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட மத்திய வைப்பக முறைமைக் கணக்குகள் உடமையாளர்களின் எண்ணிக்கை 96,825 ஆகப் பதிவுசெய்யப்பட்டது.

மத்திய வைப்பக முறைமை கணக்குடமையாளர்களுக்கு அவர்களது உடமைகள், கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான காலாந்தரக் கூற்றுக்கள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன. பொதுப்படுகடன் திணைக்களம் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வைப்பக முறைமையிலுள்ள கணக்குடமையாளர்களுக்கு இலத்திரனியல் வடிவில் 1,458 கூற்றுக்களையும் 15,270 உடமைகளின் அரையாண்டுக் கூற்றுக்களையும் 35,452 கொடுக்கல்வாங்கல் தொடர்பிலான மாதாந்தக் கூற்றுக்களையும் 14,320 கொடுப்பனவுக் கூற்றுக்களையும் அஞ்சல் மூலமும் அனுப்பி வைத்திருக்கிறது.

2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட மத்திய வைப்பக முறைமையின் கணக்குடமையாளர்களுக்கான அதேநேர அறிவித்தல் வசதியின் கீழ், ஒவ்வொரு பிணையங்கள் கணக்கிலும் மேற்கொள்ளப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் ஒவ்வொரு பற்று மற்றும் வரவுகளுக்கான அதேநேர அறிவித்தல்கள், அத்தகைய மத்திய வைப்பக முறைமைக் கணக்குடமையாளர்களினால் தெரிவுசெய்யப்பட்ட முறைக்கிணங்க குறுஞ்செய்திச் பணியினூடாக அல்லது/ அத்துடன் மின்னஞ்சல் எச்சரிக்கை வாயிலாக விநியோகிக்கப்பட்டன. இவ்வாண்டுப்பகுதியில் லங்கா செகுயர் 2020இன் முறையே 129,941 மின்னஞ்சல்களுடனும் 40,063 குறுங்செய்திப் பணிகளுடனும் ஒப்பிடுகையில் 2021இல் முறையே 147,744 மின்னஞ்சல்களையும் 47,561 குறுஞ்செய்திப் பணிகளையும் அதேநேர அறிவித்தல்களாக அனுப்பி வைத்தது.

மேலும், அரச பிணையங்கள் முதலீடுகளின் பாதுகாப்புப் பண்புகளை அதிகரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய வசதிகளிடையே, மத்திய வைப்பக முறைமைக் கணக்குடமையாளர்களுக்கு அவர்களது கணக்கு விபரங்களை இணைவழியில் பார்வையிடுவதற்கான வசதியும் வழங்கப்பட்டது.

**அட்டவணை II-16**
**சாதனங்கள் மற்றும் வழங்கல் செயலாற்றம் 2020 மற்றும் 2021**

| சாதனம் | 2020 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கல்கள் ரூ. பில். | நி.ச.வி.வீ % | மு.ச.கா. (ஆண்டுகள்) | ஏலங்களின் எண் | வழங்கல்கள் ரூ. பில். | நி.ச.வி.வீ % | மு.ச.கா. (ஆண்டுகள்) | ஏலங்களின் எண் |
| திறைசேரி உண்டியல்கள்(அ) | 2,590.5 | 5.8 | 0.6 | 52 | 3,821.4 | 6.1 | 0.5 | 53 |
| திறைசேரி முறிகள் | 1,332.1 | 7.4 | 5.3 | 15 | 1,762.0 | 8.7 | 5.1 | 22 |
| | வழங்கல்கள் ஐ.அ.டொ. மில். | நி.ச.வி.வீ % | மு.ச.கா. (ஆண்டுகள்) | ஏலங்களின் எண்ணிக்கை | வழங்கல்கள் ஐ.அ.டொலர் மில். | நி.ச.வி.வீ % | மு.ச.கா. (ஆண்டுகள்) | ஏலங்களின் எண் |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 507.0 | 6.2 [4.2] | 1.7 | 7 | 1,041.3 | 7.3 | 1.5 | 5 |

நி.ச.வி.வீ: நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்/ கிரயம்; மு.ச.கா: முதிர்ச்சிக்கான சராசரிக் காலம்
(அ) மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் உட்பட மொத்த திறைசேரி உண்டியல் வழங்கல்
(ஆ) [ ] இல் உள்ள பெறுமதிகள் இலங்கை அபிவிருத்தி முறிகளின் மிதக்கும் வீதத்திற்கான இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்திற்கு மேலான வீச்சின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினைக் காட்டுகிறது. 2021இல் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கு மிதக்கவிடும் வீதம் இல்லை.

### 24.4 அரச பிணையங்களின் தீர்ப்பனவிற்கு வசதியளித்தல்

மத்திய வைப்பக முறைமையுடன் சேர்ந்த பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினை உள்ளடக்குகின்ற லங்காசெகுயர் முறைமை பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகிறது. பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்ப்பனவு வசதிகளை வழங்குகிறது. லங்காசெகுயர் முறைமையின் தடங்கலற்ற அதேநேரத் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துகின்றமையின் மூலம் அரச பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிப்பதில் பொதுப்படுகடன் திணைக்களம் பிரதான வகிபாகத்தினை ஆற்றுகிறது.

லங்காசெகுயர் முறைமையானது தங்கள் சார்பில் மற்றும் தங்களின் வாடிக்கையாளர்களாக இருக்கக்கூடிய ஏனைய முதலீட்டாளர்கள் சார்பில் கணக்குகளை வைத்துள்ள 31 வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களையும் (24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 7 முதனிலை வணிகர் கம்பனிகள்) மற்றும் தங்களது சார்பில் மட்டும் கணக்குகளை

வைத்திருக்கும் 3 நேரடிப் பங்கேற்பாளர்களையும் (இலங்கை மத்திய வங்கி, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, ஊழியர் சேம நிதியம்) உள்ளடக்கியுள்ளது.

### 24.5 படுகடன் முகாமைத்துவ முன்முயற்சிகள் மற்றும் சந்தை அபிவிருத்திகள்

வினைத்திறன், காத்திரமானதன்மை மற்றும் வெளிப்படையான தன்மை என்பனவற்றை அதிகரிக்கும் பொருட்டும், அதேவேளையில் அரசாங்கத்தின் பிணையங்கள் சந்தையினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பொருத்தமான மூலங்களினூடாக தேவையான மூலவளங்களைத் திரட்டிக் கொள்வதற்காகவும் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் பின்வரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**அ) முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவ உபாயம்**

உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் முக்கியமான அரச தீர்ப்பனவுகளின் சுமுகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் விதத்தில் அரசாங்கத்தின் அதிகரித்த காசுத் தேவைப்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்களில் கூடியளவிற்கு தங்கியிருக்கும் விதத்தில் 2021இல் ஓராண்டிற்கும் உள்ளான படுகடன் முதிர்ச்சியின் பங்கு சிறிதளவால் அதிகரிக்கப்பட்ட வேளையில் படுகடன் கடப்பாடுகள் உரிய நேரத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான அரசாங்கத்தின் முகவர் என்ற முறையில் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் குறிப்பாக, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவதில் காணப்பட்ட சாதகமற்ற தன்மை, அபிவிருத்தியடைந்து வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களினால் வழங்கப்பட்ட பிணையங்களுக்கான குறைந்த திரவத்தன்மை, தரமிடல்கள் குறைக்கப்பட்டமை, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் உயர்வடைந்தமை மற்றும் சந்தை நிலைமைகள் முன்னேற்றம் அடையும் வரை சாத்தியமான வழிமுறைகள் மற்றும் மூலங்களில் தங்கியிருப்பது தொடர்பில் கொள்கை அதிகாரிகளின் எச்சரிக்கையினைப் பேணுதல் என்பனவற்றைக் கவனத்தில் கொண்டு நடுத்தர காலத்தில் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் தொடர்பில் குறிப்பாக படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்வதில் அதிகரித்துவரும் சவால்களைப் பற்றி தொடர்புபட்ட அரச மற்றும் கொள்கை வகுக்கும் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துகின்ற விதத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இவ்வாண்டுப்பகுதியில் உள்நாட்டு மூலங்களுடன் ஒப்பிடுகையில், அரச நிதியிடலுக்கு வெளிநாட்டு நிதியிடலில் தங்கியிருந்தமை குறைவடைந்தமையானது 2021 இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடனின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் 2020 இறுதியுடன் ஒப்பிடுகையில் மேம்பாடடைவதற்கு வழிவகுத்த வேளையில், சவால் நிறைந்த சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் 2021 காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயப் படுகடன் இடர்நேர்விற்குள்ளாகும் தன்மை குறைவடைந்தது.

**ஆ) வர்த்தக அறிக்கையிடலின் அறிமுகம்**

இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளை உயர்த்திப் பலப்படுத்துவதற்காகவும் அரச பிணையங்களின் வர்த்தக நடவடிக்கைகளின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் அதேபோன்று முதலீட்டாளர்களின் பாதுகாப்பினையும் நம்பிக்கையினையும் அதிகரிப்பதற்காகவும் வர்த்தகத் திகதியன்றே அரச பிணையங்களின் அனைத்து இரண்டாந்தரச் சந்தை வர்த்தகங்களையும் பதிவுசெய்வதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன. இதற்கமைய, லங்காசெட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களும் வர்த்தகத் திகதியன்று வர்த்தகம் தொடர்பான அனைத்து விபரங்களையும் 2021 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**இ) திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் உயர்ந்தபட்ச விளைவு வீதம் வெளியிடுவதனை நிறுத்துதல்**

பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகின்ற தாழ்ந்த வட்டி வீதங்களைப் பேணுகின்ற மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் கடன்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கென அரச கொள்கைக்கு வசதியளிக்கின்ற விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் நாணயச் சபையின் சம்மதத்துடன் 2020 மே 06ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி ஏலங்களில் முன்வைக்கப்பட்ட அனைத்து முதிர்ச்சிகளுக்குமான ஏற்றுக்கொள்ளத்தக்க உயர்ந்தபட்ச விளைவு வீதத்தை அறிமுகப்படுத்தியது. எனினும், விளைவு வீதங்கள் கீழேயிருந்து மேல் நோக்கி அதிகரிப்பதனையும் முதலாந்தர ஏலங்களில் உயர்த்தப்பட்ட விளைவு வீதங்களுக்கிடையில் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டமையினையும் கருத்திற்கொண்டு திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற உயர்ந்தபட்ச விளைவு வீதம் வெளியிடப்படுவது 2021 செத்தெம்பர் 22ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிறுத்தப்பட்டது. முதலீடு மீதான நேர்க்கணிய உண்மை வருவாயுடன் தேவையான நிதிகளைத் திரட்டிக் கொள்ளுதல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகளை படிப்படியாக அகற்றுவதற்காக இவ்வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஈ) கட்டம் III இல் உள்ள கட்டாய ஒதுக்கினைத் தூண்டுகின்ற திறைசேரி முறி வழங்கல் முறைமையின் கட்டம் I இல் குறைந்தபட்ச ஏற்புத்தன்மையினை அதிகரித்துக் கொள்ளுதல்**

திறைசேரி முறி முதலாந்தர ஏலங்களில், கட்டம் I மற்றும் கட்டம் II முடிவடைந்த பின்னரும் வழங்கப்பட்ட குறிப்பிட்ட தொடரின் கீழ் காணப்படும் ஏதேனும் பற்றாக்குறையினை முதனிலை வணிகர்களிடையே கட்டாய அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய விதிக்கப்படும் கட்டம் IIIஆனது ஏற்றுக்கொள்ளத்தக்கவற்றின் உயர்ந்தபட்ச விளைவு வீத வெளியீட்டின் ஆரம்பத்துடன் இடைநிறுத்தப்பட்டது. ஏற்றுக்கொள்ளத்தக்க ஏற்பாடுகளின் உயர்ந்தபட்ச விளைவு வீதம் நிறுத்தப்பட்டமையுடன் இது மீளச் சட்டமாக்கப்பட்ட போதும் கட்டம் III இனைத் தூண்டுகின்ற கட்டம் I இன் குறைந்தபட்ச ஏற்றுக்கொள்ளல் தேவைப்பாடு 70 சதவீதத்திலிருந்து 80 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. கட்டம் III இல் முதனிலை வணிகர்களிடையேயான நியாயமான கட்டாய ஒதுக்கிற்கான தெளிவான சந்தை விலை/ விளைவொன்றின் நிறுவுதலானது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

**உ) முதலாந்தர ஏலங்களில் கட்டம் IIIஇனை செயற்படுத்தல் உயர்ந்தபட்சம் 5 ஆண்டுகளைக்கொண்ட எஞ்சிய முதிர்ச்சியுடன் கூடிய திறைசேரி முறிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது**

அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தைக்கு இயக்கவாற்றலும் உத்வேகமும் கொண்ட வசதிப்படுத்தலை மேலும் வழங்கும் பொருட்டு, முதலாந்தர ஏலங்களில் கட்டம் III இனைச் செயற்படுத்துவது 5 ஆண்டுகளுக்கும் குறைவான எஞ்சிய முதிர்ச்சிகளுடன் கூடிய திறைசேரி முறிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வேற்பாடு, இரண்டாந்தரச் சந்தையில் நீண்ட கால முதிர்ச்சிக்கான சந்தைக் கேள்வியில் கணிசமான பெயர்வு காணப்படும் நேரத்தில், கட்டம் III இல்

கட்டாய ஒதுக்குகளினூடாக ஒதுக்கப்பட்ட நீண்ட கால முதிர்ச்சி வர்த்தகத்திற்கான சந்தைப் பங்கேற்பாளர்களின் கரிசனைகளைக் கட்டுப்படுத்தும் என எதிர்பார்க்கிறது.

**ஊ) திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்காக நேரடி வழங்கல் நிலையங்களை நிறுவுதல்**

முதலாந்தர ஏலங்களில் பொதுத் திறைசேரியின் நிதியிடல் தேவைப்பாடுகளை முழுமையாக வசதிப்படுத்தப்படுவதனை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன் திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான நேரடி வழங்கல் நிலையங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2021 யூலை 29இல் நடைபெற்ற திறைசேரி முறி ஏலங்களிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில், கட்டம் I இல் முழுமையாக ஒதுக்கப்பட்ட திறைசேரி முறித் தொடர்புகளுக்கு மாத்திரம் திறைசேரி முறிகளுக்கான நேரடி வழங்கல் நிலையம் கட்டம் I இல் தீர்மானிக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் கிடைக்கச் செய்யப்பட்டது. திறைசேரி முறிகளுக்கான நேரடி வழங்கல் நிலையமூடாக வழங்கப்பட்ட தொகை ஏலங்களில் வழங்கப்பட்ட ஒவ்வொரு திறைசேரி முறிகளுக்குமாக வழங்கப்பட்ட தொகைக்குப் புறம்பானதாகக் காணப்பட்டதுடன் தொடர்பான திறைசேரி முறி தொடர்களுக்காக வழங்கப்பட்ட தொகையில் 20 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்படுகிறது. 2021 சனவரி 15 இலிருந்து 19 வரை நடைபெற்ற இலங்கை அபிவிருத்தி முறி ஏலங்களிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நேரடி வழங்கல் நிலையம் ஏலங்களுக்குப் பின்னர் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்காக தொடர்பான ஏலங்களில் தொடர்பான முதிர்ச்சிகளுக்காகத் தீர்மானிக்கப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி நிலையான வீதத்தில், ஏல அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட கூட்டுத்தொகை வரை நிர்ணயிக்கப்பட்டது.

**எ) இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான முதலீட்டு நிலையமொன்றினை நிறுவுதல்**

பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்றவர்களுக்கும் வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர் உட்பட ஏனைய வெளிநாட்டு நாணய உடமையாளர்களுக்கும் வசதியளிப்பதற்காக முதலீட்டு நிலையமொன்று 2021 திசெம்பர் 23 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிறுவப்பட்டது. வெளிநாட்டு நாணய உழைப்பாளர்களுக்கான முதலீட்டு வழிகளை விரிவுபடுத்துவதற்கு மேலதிகமாக இவ்வழிமுறைகள் உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டு நாணய இயக்கவாற்றலை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட அண்மைய வழிமுறைகளுக்கு வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏ) திறைசேரி முகாமைத்துவ முறைக்குப் பதிலாக ஒதுக்கு அல்லாத முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது**

தற்போதைய திறைசேரி முகாமைத்துவ முறைமைக்குப் பதிலாக, ஒதுக்கு அல்லாத முகாமைத்துவ முறைமையின் கீழ் புதிய வெளிநாட்டுப் படுகடன் முறைமையினை நிறுவுவதற்கான செய்முறைகள் முன்னெடுக்கப்பட்டன. இம்முறைமையின் முக்கிய நோக்கம் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுச் செய்முறையின் வினைத்திறனை அதிகரிப்பதாகும். இது 2022 சனவரி 01 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**ஐ) மூலதனச் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம்**

தற்போது இடம்பெற்றுவரும் மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் அதிநவீனத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்பின் உத்தேச நடைமுறைப்படுத்தலானது இலங்கையில் ஒட்டுமொத்த முதலீட்டு நடத்தையினை வர்த்தகப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு தொடர்பான அதன் தோற்றப்பாட்டின் மீது பெயர்ச்சியொன்றினை ஏற்படுத்துவதன் மூலம் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் தன்மையினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய இராச்சியத்தின் பிரிஜ கொன்சல்டிங் லிமிடெட் இச்செயற்றிட்டத்திற்கான ஆலோசனைகளை வழங்குகிறது. மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டம், மத்திய இணைத்தரப்பு ஏற்பாட்டுடன் இலத்திரனியல் வர்த்தகத் தளமொன்றினையும் தீர்வகமொன்றினையும் நடைமுறைப்படுத்தவும் மத்திய பிணையங்கள் வைப்பகம் மற்றும் சந்தை கண்காணிப்பு முறைமையினை தரமுயர்த்தவும் எதிர்பார்க்கிறது. 2021இல் உட்கட்டமைப்பின் தொழிற்பாட்டு மாதிரி, மாதிரிகளில் தொழில்நுட்ப விளக்கங்கள் மற்றும் தேவையான சட்ட சீர்திருத்தங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன.

### 24.6 நாட்டிற்கான தரமிடல் மீளாய்வுப் பணிகளை ஒருங்கிணைத்தல்

2021இல் பொதுப்படுகடன் திணைக்களம் பன்னாட்டு தரமிடல் முகவர்களுக்கு (பிட்ஜ் றேட்டிங், மூடிஸ் இன்வெஸ்டர் சேர்விஸ், எஸ் அன்ட் பி குளோபல் றேட்டிங்) அவற்றின் வருடாந்த தரப்படுத்தல் மீளாய்வினை மேற்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது. மேலும், தரமிடல் அறிவுறுத்தல்கள் மத்திய வங்கியிலுள்ள தொடர்பான திணைக்களங்களினதும் நிதியமைச்சினதும் ஒத்துழைப்புடன் மிகக் கவனமாக மீளாய்வு செய்யப்பட்டதுடன் தரமிடல் நடவடிக்கைகளிலிருந்து தோன்றுகின்ற மோசமான தாக்கங்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு காலாந்தர அறிவித்தல்கள் மூலம் மீண்டும் மீண்டும் அடிக்கடி தெரிவிக்கப்பட்டன.

## 25. பிரதேச அபிவிருத்தி

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு காலத்துக்கு காலம் வழங்கப்பட்ட கடன் சட்ட இசைவுத்தாமத வசதிகளின் அறவீட்டு முன்னெடுப்புகளை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை சலுகை வட்டி வீதங்களில் கடன்வழங்கல் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதிலும், பொதுமக்கள் உள்ளடங்கலாக பல்வேறு ஆர்வலர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதிலும் தொடர்ந்தும் ஈடுபட்டமையினால் 2021ஆம் ஆண்டானது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பிந்திய தாக்கத்துடன் கூடிய சவால்மிக்கதொரு ஆண்டாகவிருந்தது. திணைக்களத்தின் வழமையான தொழிற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு, பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது அனைத்து பொருளாதார துறைகளின் சுயதொழில்புரியும் தனிநபர்கள் உள்ளடங்கலாக நாட்டில் நிலவிய சாவல்மிக்க சூழலில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு புதிய உபாயங்கள், முன்னெடுப்புகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை தொடர்ந்தும் உருவாக்கியது. இது தொடர்பில், மத்திய வங்கியின் ஆறு பிரதேச அலுவலகங்களும் மத்திய வங்கியை பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மேலதிகமாக முக்கிய பங்காற்றின.

"சிறந்த வாழ்க்கைக்கான சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்" என்ற தொலைநோக்கு அபிலாசையுடன் நாட்டின் முதலாவது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தை தொடங்கிய முன்னணி தொழிற்பாட்டாளர் என்ற ரீதியில் 2021ஆம் ஆண்டானது பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மேலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக விளங்கியது. அதேவேளை, நாட்டில் நிலைபேறான சந்தை அடிப்படையிலான பெறுமதிச் சங்கிலி எண்ணக்கருவை நிறுவும் குறிக்கோளுடன், பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிக் கட்டத்தை நடைமுறைப்படுத்தியதுடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கிய கடன்களுக்கு எதிரான உத்தரவாதத் திட்டங்களூடாக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கொடுகடன்

இடர்நேர்வை பகிர்வதன் மூலம் அந்நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது. இதற்கு மேலதிகமாக, ஆண்டுகாலப்பகுதியில், மீள்நிதியிடல் மற்றும் வட்டி உதவுதொகைக்கான பல புதிய கொடுகடன் திட்டங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது.

இத்தகைய மேம்படுத்தல்களுடன் ஒருங்கிணைந்து, உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலையின் கீழ் நேரடியான சந்திப்புக்களை கட்டுப்படுத்தும் நோக்குடன், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் உதவியுடன் நிதியியல் வசதிக்குட்படுத்தல், தொழில்முயற்சி அபிவிருத்தி அத்துடன் செயற்றிட்ட நிதி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு பொதுமக்கள் உள்ளடங்கலாக ஆர்வலர்களுடன் தொடர்பூட்டுவதற்கான இலத்திரனியல் ஊடகத்தின் பயன்பாட்டை அதிகரித்தது.

### 25.1 சலுகை ரீதியிலான கொடுகடன் வசதிகளை விரிவுப்படுத்தல்

2021 ஆண்டுகாலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் கொடைமுகவராண்மைகள் நிதியிடப்பட்ட 20 மீள் நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் தொழிற்படுத்தப்பட்டன. இத்திட்டங்கள் பற்றிய தொகுப்பு அட்டவணை 11-17இல் தரப்பட்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 2021ஆண்டுகாலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக, 14 மீள்நிதியிடல் மற்றும் 6 வட்டி உதவுதொகை அத்துடன்/அல்லது கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களூடாக 80,899 பயன்பெறுநர்களை உள்ளடக்கி ரூ.27,268.13 மில்லியனை விடுவித்தது. வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில், 57.6 சதவீதமானது மீள்நிதியிடல் திட்டங்களூடாக வழங்கப்பட்ட அதேவேளை மீதி 42.4 சதவீதம் வட்டி உதவுதொகை அத்துடன்/அல்லது கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் நிதியிடல் மூலங்களின் அடிப்படையில், வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையின் 48.6 சதவீதத்தை அரசாங்கம் வழங்கிய அதேவேளை மத்திய வங்கி மற்றும் கொடை முகவராண்மைகள் முறையே 49.4 சதவீதத்திற்கும் 2.0 சதவீதத்திற்கும் நிதியளித்தன.

#### 25.1.1 அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

அரசாங்கத்தின் முகவராக பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், 7 மீள் நிதியிடல் திட்டங்கள் மற்றும் 4 வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை உள்ளடக்குகின்ற அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட 11 திட்டங்களை முன்னெடுத்தது. இத்தகைய திட்டங்கள் ஊடாக திணைக்களம், 2021 ஆண்டுகாலப்பகுதியில் 68,613 பயன்பெறுபவர்களுக்கு பகிர்ந்தளிக்கின்ற வகையில் ரூபா 13,263.52 மில்லியனை (அதாவது பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த கடன்தொகையில் 48.6 சதவீதம்) வழங்கியது.

##### அ) அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்

ஆண்டுகாலப்பகுதியில், வட்டி உதவுதொகை திட்டம் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டமான "சருசார" என்ற புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டமானது 34 குறுங்கால பயிர் உற்பத்திகளுக்காக 61,397 வேளாண்மையாளர்களுக்கு அவர்களின் குறுங்கால தொழிற்படு மூலதனத் தேவையினை நிறைவேற்றுவதற்கு ஆதரவளித்தது. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பகிர்ந்தளிப்புக்களின் 72.2 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மொத்தமாக ரூபா 9,576.68 மில்லியன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்டது. திட்டத்தின் வட்டி உதவுதொகையை ஈடுசெய்வதற்கு, அரசாங்கமானது ஆண்டுகாலப்பகுதியில் ரூ.207.9 மில்லியனை வழங்கியது.

அதேவளை, பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவுடன் கூட்டிணைந்து சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி 485 பயன்பெறுநர்களிடையே ரூ.107.82 மில்லியனை பகிர்ந்தளித்தது. ஆரம்பக்கட்ட சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் திட்டத்தை 2021 ஒத்தோபர் 31இல் நிறைவுசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், பயன்பெறுநர்களுக்கான திட்டத்தைத் தொடர்வதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, செயற்றிட்டக் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், இலங்கையில் இறால் வளர்ப்பு உற்பத்தியை படிப்படியாக இருமடங்காக அதிகரிக்கும் நோக்குடன், 2021 திசெம்பரில் புதிய வட்டி உதவுதொகை திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

##### ஆ) அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட மீள் நிதியிடல் திட்டங்கள்

2021 ஆண்டுகாலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது வறுமை ஒழிப்பு நுண்நிதிக் கருத்திட்டம் - சுழலும் நிதியம், சுயதொழில் ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டம் கட்டம் II சுவசக்தி கடன் திட்டம், வழங்கல் சங்கிலி மீள் வலுவூட்டல் கடன் திட்டம் மற்றும் சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் அரசாங்கம் நிதியளித்த கூறின் கீழான சுழலும் நிதியம் வருமான ஈட்டல் கடன் திட்டம், மீள் நிதியிடல் வேளாண்வியாபார கடன் திட்டம் மற்றும் சுழலும் நிதியம் இளையோர் கடன் திட்டம் போன்ற 07 மீள் நிதியிடல் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்தது.

#### 25.1.2 மத்திய வங்கியினால் நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் நிதியியல் ரீதியான சென்றடைவை விரிவுபடுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது 2021 ஆண்டுகாலப்பகுதியில் பல்வேறு கொடுகடன் திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. நிலவுகின்ற கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் கீழ் ஆரோக்கியமான வியாபாரச் சூழலைப் பேணுதலின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, சுற்றுலாத்துறை தொடர்பில் விசேட கவனம் செலுத்திய அதேவேளையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான கடன் சட்ட இசைவுத் தாமதம் வழங்கப்பட்டது.

பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 2021 காலப்பகுதியில் சௌபாக்யா (சுபீட்சம்) கடன் திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி 5,660 பயன்பெறுநர்களிடையே ரூ. 5,008.50 மில்லியனை பகிர்ந்தளித்தது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள்வலுப்படுத்தும் பொருட்டு தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்கு மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூ.10,000 மில்லியன் ஒதுக்கீட்டின் மூலம் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதிக் கட்டம் IV அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன்வழங்குகின்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கடன்வழங்கலின் கொடுகடன் இடர்நேர்வை தாங்கிக்கொள்ளும் நோக்குடன், 2021 ஆண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் நெல் கொள்வனவு தொடர்பில் தோன்றுகின்ற அவர்களின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களை இத்திட்டம் உள்ளடக்குகின்றது. இத்திட்டத்தின் கீழ் தகைமையுடைய கடன்பாட்டாளரொருவர், ரூ.750 மில்லியனை

விட குறைவான வருடாந்த புரள்வொன்றை கொண்டிருப்பதற்கு தேவைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் அனைத்தையுமுள்ளடக்கிய சந்தை அடிப்படையிலான பெறுமதிச் சங்கிலி முறைமையை உருவாக்குவதற்கான இடைவெளிகள் மற்றும் வாய்ப்புகளை இனங்காண்பதற்கு 2021இல் உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடிக் கட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது காய்கறி, பால் மற்றும் வாசனைத்திரவியங்கள் போன்ற மூன்று பெறுமதிச் சங்கிலிகளை உள்ளடக்குகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு மத்திய வங்கி ரூ. 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்தது.

### 25.1.3 கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

2021ஆம் ஆண்டுகாலப்பகுதியில் சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டத்தின் கொடையாளர் நிதியிடப்பட்ட கூறு அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் இக்கூறிற்கு நிதியிடப்பட்ட அதேவேளை திட்டமானது அரச - தனியார் - உற்பத்தியாளர் - பங்குடைமை (4பி), வேளாண்வியாபாரம் மற்றும் 4பி இளைஞர் கடன் திட்டங்கள் மற்றும் நிதியியல் இடையீட்டாளர் மொத்த கடன் திட்டம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டங்கள், 2021 ஆண்டுகாலப்பகுதியில் 2,431 பயன்பெறுநர்களுக்கிடையில் ரூ.550.1 மில்லியனை பகிர்ந்தளித்துள்ளன.

வேளாண்மையாளர்கள், வேளாண்மையாளர் குழுக்கள் மற்றும் வேளாண்மை பெறுமதிச் சங்கிலியில் பங்கேற்கும் இளம் தொழில்முயற்சியாளர்கள் போன்றோர் மத்தியில் நிதிக்கான அணுகுவழியை மேம்படுத்துவதை முக்கியமாக மையப்படுத்தி வேளாண்மை பெறுமதிச் சங்கிலி நிதியிடல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் தொழிற்படுகின்றது.

## 25.2. நிதியியல் வசதிக்குட்படுத்தல்: இலங்கையில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்

தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் வறுமையிலிருந்து தாமாக விடுபட்டு அனைவரும் சமபங்கு வகிக்கின்ற பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளித்து பெரும்பாலான அரசாங்க முன்னெடுப்புக்களின் முன்னுரிமையொன்றாக நிதியியல் வசிதிக்குட்படுத்தல் தோற்றம்பெற்றுள்ளது. இலங்கையில் மேலும் முன்னேற்றகரமான நிதியியல் வசிதிக்குட்படுத்தலை முன்னெடுப்பதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் ஒருங்கிணைந்த முயற்சியின் தேவையினை இனங்கண்டு, மத்திய வங்கியானது ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களுடன் இணைந்து நாட்டின் முதலாவது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தை உருவாக்கி 2021 மாச்சு 3 அன்று தொடங்கிவைத்தது.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைத் திட்டம், டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிதி, வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் நிதியியல் அறிவு அத்துடன் திறன் விருத்தி ஆகிய நான்கு விடயம்சார் துறைகளில் கவனம் செலுத்தி நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களுடன் கூட்டிணைந்து முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் அனைத்து கொள்கை தூண்களுக்குமான முன்னுரிமை நடவடிக்கையொன்றாக நிதிசார் கல்வியை மேம்படுத்தும் தேவையை இனங்கண்டு, 2021 காலப்பகுதியில் நாடளாவிய ரீதியிலான நிதியியல் அறிவு அளவீடு, வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. அளவீட்டின் பெறுபேறு நாட்டின் நிதியியல் அறிவு மட்டத்தை அதிகரிப்பதற்கு பொருத்தமான கொள்கை பதிலிறுப்புக்களை வடிவமைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிதிசார் கல்வியை தரம் 6 தொடக்கம் 11 வரையான தரங்களுக்கான கட்டாயப் பாடமாக பாடசாலை பாடவிதானத்தில் இணைக்கும் பொருட்டு, மத்திய வங்கி மற்றும் ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களுடன் ஒன்றிணைந்து கல்வி அமைச்சினால் பாடத்தொகுதி மற்றும் கல்விசார் பொருட்கள் என்பன உருவாக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களை தொடர்ச்சியாக ஒருங்கிணைத்து ஆதரவளிக்கும் அதேவேளையில் உபாயத்தின் நடவடிக்கைத் திட்டத்தின் தற்போதைய முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்திற்கான செயலகம் தாபிக்கப்பட்டது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைகளின் அடைவை உறுதிசெய்யும் பொருட்டு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் சபை, முகாமைத்துவக் குழு மற்றும் தொழிற்பாட்டு குழுக்களை உள்ளடக்கி தெளிவான ஆளுகைக் கட்டமைப்பொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

## 25.3. நிதியியல் அறிவு

பொது மக்களிடையே நிதியியல் அறிவு மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்தும் அபிலாஷையுடன், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் 2021இல் நிதியியல் அறிவு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நேரடியாகவும் இணையவழியின் மூலமாகவும் தொடர்ந்தும் மேற்கொண்டன. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் தொகுப்பு அட்டவணை II-18 இல் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II - 17
### பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்களின் தொகுப்பு

| நிதி மூலம் | பெயர் | குறிக்கோள் | மீள்நிதியிடல் / வட்டி உதவுதொகை | 2021இல் பகிர்ந்தளிக் கப்பட்ட நிதிகள் | இறுதியிலுள்ள கடன்பாட்டாளர் களுக்கான வட்டி வீதம் - ஆண்டு இறுதியில் (ஆ. வீ.) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டவை | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிக் கருத்திட்டம் - சுழலும் நிதியம் | வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஊக்குவித்தலூடாக வறுமையை ஒழித்தலும் முறையான வங்கித்தொழில் முறைமையுடன் குறைந்த வருமானக் குழுக்களை இணைப்பதற்கு அவர்களை ஒழுங்கமைத்தலும் | மீள்நிதியிடல் | 31.20 | 12.00 | |
| | சுவசக்தி கடன் திட்டம் | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி துறைகளில் வருமானம் ஈட்டுகின்ற நடவடிக்கைகள் புதிதாக வருகின்றவர்களுக்கும் ஏற்கனவே ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் | மீள்நிதியிடல் | 1,433.50 | 5.50 | |
| | சுய-தொழில் ஊக்குவிப்பு தொடக்க முயற்சி கடன் திட்டம் கட்டம் II | அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்களினால் பயிற்றப்பட்ட இளையோருக்கு தமது சொந்த சுயதொழில் கருத்திட்டங்களைத் தாபிப்பதற்காக நிதியுதவியினை வழங்குதல். | மீள்நிதியிடல் | 5.35 | 7.00 | |
| | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதியம் வருமானம் ஈட்டும் கடன் திட்டம் | வேளாண்மை உற்பத்தியின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டலை அதிகரித்தல் | மீள்நிதியிடல் | 34.64 | 6.50 | |
| | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதிய வேளாண்வியாபாரகடன் திட்டம் | | மீள்நிதியிடல் | 11.98 | 6.50 | |
| | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதிய இளையோருக்கான கடன் திட்டம் | | மீள்நிதியிடல் | 132.26 | 6.50 | |
| | வழங்கல் சங்கிலி மீள் வலுவூட்டல் கடன் திட்டம் | ஏற்கனவே காணப்படுகின்ற தேயிலைத் தயாரிப்பாளர்களுக்கு அவர்களது வியாபாரங்களை சீரமைப்பதற்கு உதவுவதன் மூலம் தேயிலை வழங்கல் சங்கிலியினை மீள் வலுவூட்டுதல் | மீள்நிதியிடல் | 39.00 | 3.50 | |
| | புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | நெல் மற்றும் குறுகிய கால பயிற்செய்கையில் ஈடுபட்டுள்ள நுண்பாக மற்றும் சிறியளவிலான வேளாண்மையாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை உயர்த்துதல். | வட்டி உதவுதொகை | 9,576.68 | 4.00 | பங்கேற்கின்ற நிதி நிறுவனங்களின் சொந்த நிதியங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வட்டி உதவுதொகை |
| | இலங்கையில் இறால் வளர்ப்பை அதிகரிப்பதற்கான வட்டி உதவுதொகை கடன்திட்டம் | இறால் வளர்ப்பில் ஈடுபடும் வேளாண்மையாளர்களின் பண்ணைகளை தரமுயர்த்துவதற்கு உதவுதல் | வட்டி உதவுதொகை | | முதல் 18 மாதங்கள் - 4.50<br>அடுத்த 6 மாதங்கள் - 8.50 | பங்கேற்கின்ற நிதி நிறுவனங்களின் சொந்த நிதியங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வட்டி உதவுதொகை |
| | சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம் | மீள்நடுகை செய்யப்பட்ட மற்றும் புதிதாக நடுகை செய்யப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களிலிருந்து வருமானம் ஈட்டுவதில் தாமதத்தை எதிர்கொள்கின்ற சிறு உடமையாளர் தேயிலை மற்றும் இறப்பர் புத்துயிரளித்தல் கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறு உடமையாளர் வேளாண்மையாளர்களுக்கு அவர்களது மீள்நடுகை செய்யப்பட்ட அல்லது புதிதாக நடுகைசெய்யப்பட்ட தோட்டங்களிலிருந்து வருமானம் ஈட்டுகின்ற அத்தகைய காலம் வரை சுயதொழிலொன்றினை அல்லது குறுகிய கால வருமானமீட்டும் செயற்பாடொன்றினை நிறுவுவதற்கு அவர்களுக்கு உதவுவதன் மூலம் சலுகை கொடுகடன் வசதிகளை வழங்குதல் | வட்டி உதவுதொகை | 107.82 | 6.50 | பங்கேற்கின்ற நிதி நிறுவனங்களின் சொந்த நிதியங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வட்டி உதவுதொகை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை மத்திய வங்கி | சௌபாக்யா கடன் திட்டம் | ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை அல்லது அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியினை தொடங்குவதற்கான அல்லது விரிவுபடுத்துவதற்கானது. | மீள்நிதியிடல் | 5,008.50 | 6.00 | |
| | கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியாளர்களுக்கான மீள்நிதியிடல் திட்டம் - சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் IV | தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நியதிச்சட்ட கடப்பாடுகளை அமைத்தல் | மீள்நிதியிடல் | - | 4.00 | |
| | உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் -முன்னோடிக் கட்டம் | உள்நாட்டு வேளாண்மை துறையை அபிவிருத்தி செய்து வேளாண்மை ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் | மீள்நிதியிடல் | - | <ரூ.1 மில்லியன் - 4.00<br>>ரூ.1 மில்லியன் முதல் ரூ.25 மில்லியன் - 5.00 | |
| | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் I | கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் பொருளாதார மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளித்தல் | மீள்நிதியிடல் | 5,029.11 | 4.00 | |
| | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் II | | மீள்நிதியிடல் | 3,416.90 | 4.00 | |
| | சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் III | | வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதம் | 1,891.09 | 4.00 | |
| | இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் | நெல் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக திட்டத்தின் கீழ் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு கடன்களை வழங்குகின்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத்தை வழங்குதல். | கொடுகடன் உத்தரவாதம் | - | நிலவுகின்ற சந்தை வீதம் | இலங்கை மத்திய வங்கி - கொடுகடன் திட்டம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் - கடன் நிதியிடல் |
| கொடையாளி நிதியளிக்கப்பட்டவை | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- 4பி வேளாண்வியாபார கடன் திட்டம் | வேளாண்மை உற்பத்தியின் உற்பத்தி, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதி கூட்டலை அதிகரித்தல். | மீள்நிதியிடல் | 234.92 | 6.50 | வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்டது. |
| | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- 4பி இளையோர் கடன் திட்டம் | | | 256.33 | 6.50 | |
| | சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- நிதியியல் இடையீட்டாளர் மொத்த கடன் | | | 58.85 | 6.50 | |

**அட்டவணை II -18**

**2021ஆம் ஆண்டுப்பகுதியில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| நிகழ்ச்சித்திட்டத்தின் வகை | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிதியியல் அறிவு, தொழில்முயற்சி மற்றும் திறன் அபிவிருத்தி | 334 |
| பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி கலந்துரையாடல்கள் | 08 |
| தொலைக்காட்சி மற்றும் வானொலி | 17 |
| அறிவினைப் பகிர்ந்துகொள்ளல் | 07 |
| **மொத்தம்** | **366** |

### 25.4. பிரதேச மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தல்

பிரதேச மட்டத்தில் மத்திய வங்கியைப் பிரதேச அலுவலகங்கள் பிரதிநித்துவப்படுத்திய அதேவேளை, நாட்டில் பின்தங்கிய வகுப்பினர்களை இனங்காணுதல், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், கொடுகடன் முகாம்கள், வர்த்தக சந்தைகள் போன்ற நோக்கங்களுக்கு வசதியளித்தது. ஆறு பிரதேச அலுவலகங்கள், 2021 ஆண்டுகாலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புபட்ட 86,800 இற்கும் மேற்பட்ட வினவல்களையும், 434 பொது மக்களின் குறைகளையும் நேரடியாகக் கையாண்டன. இதற்கு மேலதிகமாக, நாட்டில் வேறுபட்ட மாவட்டங்களில் உள்ள 731 மாதிரிகளை உள்ளடக்கி 2021இல் மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களினால் நடாத்தப்பட்ட பல்வேறு அளவீடுகளை வசதிப்படுத்துவதில் இவ் அலுவலகங்கள் ஈடுபட்டன. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் தொழிலாளர்

பணவனுப்பல்களை முறையான வழிகள் வாயிலாக அனுப்புவதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்கான மத்திய வங்கியின் முயற்சிகளுக்கு இணங்க, 2021 திசெம்பரில் பிராந்திய அலுவலகங்கள் மூலம் தொடர்ச்சியான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன, இதில் 3,000இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய 27 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 25.5. ஏனைய தொடக்க முயற்சிகள்

#### 25.5.1 பசுமை கிராமிய நிகழ்ச்சித்திட்டம்

பசுமை முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் வீட்டுத்துறையினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் சுற்றுச்சூழல் சீர்குலைவை குறைத்து பசுமை உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் இயற்கை வளங்களை வினைத்திறன்மிக்க மற்றும் காத்திரமான வகையில் பயன்படுத்துவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் விதத்தில் 2021இல் பசுமை கிராமிய நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்திய அதேவேளை பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது உள்நாட்டு சமூகங்களுக்கிடையில் "பசுமையை நோக்கி பயணிப்போம்" என்ற எண்ணப்பாங்கை அறிமுகப்படுத்தியது.

#### 25.5.2 பன்னாட்டு இணைப்புகள்

நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் கொடுகடன் குறைநிரப்புதல் என்பன தொடர்புடைய பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதினூடாக 2021இல் பன்னாட்டு அமைப்புக்களுடனான உறவை தொடர்ந்தும் முன்னெடுத்தது. நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் அதன் பிந்திய கொள்கை மட்டத்திலான அபிவிருத்திகளை மேம்படுத்துவதில் மத்திய வங்கியின் ஊழியர்களிடையே அறிவைப் பகிர்வதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு, மத்திய வங்கி உறுப்பினராகவுள்ள நிதியியல் வசதிகளுக்குட்படுத்தல் அணி, ஆசிய கொடுகடன் குறைநிரப்பு நிறுவனக் கூட்டமைப்பு மற்றும் ஆசிய-பசுபிக் கிராமிய மற்றும் வேளாண்மைக் கொடுகடன் அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் நடாத்தியது.

### 25.6. மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களுடன் பிரதேச அபவிருத்தித் திணைக்களத்தின் நிதியங்களை ஒருங்கிணைத்தல்

மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தையும் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தையும் ஒருங்கிணைத்ததன் வாயிலாக 2021இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தாபிக்கப்பட்டது. இரு தசாப்த காலத்திற்கும் மேலாக, பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது சுயதொழில்புரிபவர்கள் தங்களின் வருமானத்தை ஈட்டுகின்ற நடவடிக்கைகளை மேம்படுத்துவது உள்ளடங்கலாக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் அதேவேளை பிரதேச மட்டத்திலான ஏற்றத்தாழ்வுகளை குறைத்து நாட்டில் தொழில்வாய்ப்பை அதிகரிப்பதற்கு ஆதரவளிக்கும் பொருட்டு பல கொடுகடன் திட்டங்களை பேணிவருகின்றது. இக்காலப்பகுதியில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் மூலம் நிதியிடப்பட்ட திட்டங்களுக்கிடையில் கொடுகடன் திட்டங்களை பரந்தளவில் தனியாக்குவதன் மூலம் வெவ்வேறான செயற்றிட்ட கணக்குகளை தொடர்ந்தும் பேணியது. பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் பேணப்படும் நிதியியல் கூற்றுக்களை மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுகளுக்குள் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு, அரசாங்கத்தினால் கோரப்பட்ட ஏனைய நிதியங்களைத் தவிர பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து திட்டங்களின் நிதியங்களும் 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களுக்குள் உள்ளீர்க்கப்பட்டன. இதனால் அத்தகைய வெளிநின்ற நிலுவைகள், பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கொடுகடன் தொழிற்பாடுகள் ஊடாக உருவாக்கப்பட்ட மத்திய வங்கியின் ஒன்றுதிரண்ட வருமானமாக இனங்காணப்பட்டன. மத்திய வங்கியின் கணக்கேட்டில் உள்ளீர்க்கப்பட்ட கடன் திட்டங்களின் தொகுப்பு அட்டவணை 11-19 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை II-19**
**மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கீழ் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டிணைக்கப்பட்ட நிலுவைகள்**

| மூலம் | தொகை ரூ. மில்லியன் |
|---|---|
| முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | 5,380 |
| பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மீள்நிதியிடல்[1] | 9,144 |
| காசு மீதிகள்[2] | 1,954 |

1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கிடைக்கவுள்ள மீள்நிதியிடலின் பெரும் பகுதியானது சௌபாக்யா கடன் திட்டத்துடன் தொடர்பான நிலுவையை கொண்டுள்ளது. சௌபாக்யா கடன் திட்டமானது பின்வரும் பல்வேறு கொடுகடன் திட்டங்களிலிருந்து மாற்றப்பட்ட நிலுவைகளைக் கொண்டுள்ளது. அவையாவன: இரண்டாவது நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம், சப்ரகமுவ மாகாணத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட சுழலும் செயற்றிட்டம், மாத்தளை பிரதேச பொருளாதார மேம்படுத்தல் செயற்றிட்டம், பெருந்தோட்டத்துறை மறுசீரமைப்புச் செயற்றிட்டம், சுறத்துரா, சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் கொடுகடன் நிதியம், சிறிய மற்றும் நடுத்தர துணை தொழில்முயற்சிகள் செயற்றிட்டம், பேருந்துக் கொள்வனவு கடனுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம், இரண்டாவது நீண்ட கால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் செயற்றிட்டம், தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டம், சிறு உடமையாளர் தேயிலை அபவிருத்திச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டம், தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதிய கொடுகடன் திட்டம், உலர் வலய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடைமை நிகழ்ச்சித்திட்ட கடன் திட்டம், உலர் வலய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடைமை சுழலும் நிதிய கடன் திட்டம், ஐரோப்பிய முதலீட்டு வங்கி ஒப்பந்த பீ கடன் திட்டம், மாத்தளை பிரதேச பொருளாதார மேம்படுத்தல் செயற்றிட்ட சுழலும் நிதியக் கடன் திட்டம், க்ருஷி நவோதயா தவணைக் கடன் திட்டம், நிர்மாணத்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறு உடமையாளர் பெருந்தோட்ட தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திச் செயற்றிட்டம், கொள்கை தூண்டல் நிதியம், வட மாகாண கடன் திட்டத்தில் பொருளாதார நடவடிக்கைகளின் மீள்தொடக்கத்திற்கான சுழலும் நிதியம், இலங்கை போக்குரத்து சபைக்கான கடன் வழங்கலிற்கான சுழலும் நிதியம், சப்ரகமுவ மாகாணத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம் II இற்கான கடன் திட்டம், சுய வேலைவாய்ப்பிற்கான ஊக்குவிப்பு முன்னெடுப்பு கடன் திட்டம், சுனாமிக்கு பின்னரான கரையோர புனரமைத்தல் மற்றும் வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம், வடக்கின் வசந்தம் கடன் திட்டம் - சுழலும் நிதியம் கட்டம் II கடன் திட்டம் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளின் திருத்தம் போன்ற கொடுகடன் திட்டங்களாகும்.

2 காசு மீதிகள் பின்வரும் செயற்றிட்டங்களைப் பிரதிபலிக்கின்றன : வேளாண்மை துறை அபிவிருத்திக் கடன் திட்டம் - விஸ்காம் இற்கான விசேட கடன் திட்டம், வட மற்றும் கிழக்கில் சேதமடைந்த வீடுகளின் திருத்தம் மற்றும் கிழக்கு மீள்நிதியிடல் கடன் திட்டம், கொள்கை தூண்டல் நிதியம், சௌபாக்யா கடன் திட்டம், நாட்டின் நடுப்பகுதியின் நீண்டகால பயிர் அபிவிருத்திச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதம், வேளாண்மை புனரமைப்புச் செயற்றிட்டம், பெருந்தோட்டத் துறை மறுசீரமைப்புச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதம், சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் கொடுகடன் உத்தரவாதம், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியின் துணைச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதம், பேருந்து கொள்வனவு கடனுக்காக கொடுகடன் உத்தரவாதத் திட்டம், மற்றும் அடைவு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் போன்றனவாகும்.

## 26. தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்

இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தை வினைத்திறனாக முகாமை செய்தல், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ)ஆம் பிரிவின் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மீது விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தீர்மானக் கட்டமைப்பை உருவாக்குதல் என்பவற்றின் மூலம் மத்திய வங்கியின் இரு பிரதான குறிக்கோள்களில் ஒன்றான "நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுதல்" எனும் குறிக்கோளை அடைவதற்கு தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் பங்களிப்புச் செய்துள்ளது.

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் தொகுப்பொன்று கீழே வழங்கப்பட்டுள்ளது.

### 26.1 இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தை நிர்வகித்தல்

ஆண்டு காலப்பகுதியில், இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்திற்கு ஏற்புடையதான இரு ஒழுங்குவிதிகள் பின்வருகின்றனவாறு விடுக்கப்பட்டன.

i. 2021.04.01ஆம் திகதிக்கு முன்னர் உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் உள்ளடங்கலாக அங்கத்துவ நிறுவனங்களுடைய வைப்பாளர்கள் தொடர்பில் செலுத்தத்தக்க உயர்ந்தபட்ச இழப்பீட்டுத் தொகையை ரூ.600,000 இலிருந்து ரூ.1,100,000 ஆக அதிகரிப்பதற்கு 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன.

ii. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் தற்போதுள்ள ஒழுங்குவிதிகளை நீக்கி அதற்கு பதிலாக 2021.08.06 அன்றிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் 2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. திட்டம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து அதன் செயற்பாட்டின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையிலும் மற்றும் ஏற்புடையதான சர்வதேச ரீதியிலான சிறந்த நடைமுறைகளுக்கு இசைவாகவும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தினுடைய நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவத்தின் மேம்படுத்தலை இம்மாற்றம் இலக்காகக் கொண்டிருந்தது.

**அட்டவணை II - 20**
**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் நிதியியல் சிறப்பம்சங்கள்**

| விடயம் | தொகை (ரூ.மில்) | |
|---|---|---|
| | 2020.12.31இல் உள்ளவாறு | 2021.12.31இல் உள்ளவாறு |
| நிதியத்தின் அளவு | 51,322.1 | 67,887.3 |
| மொத்த வருமானம் | 20,814.0 | 19,298.9 |
| மொத்தச் செலவினம் | 31,964.4 | 96.6 |
| ஆண்டுக்கான மிகை (வரிக்கு முன்னர்) | (11,150.4) | 19,202.3 |
| மொத்தச் சொத்துக்கள் | 73,559.1 | 74,443.9 |
| அரச பிணையங்களில் முதலீடுகள் | 67,877.8 | 69,529.2 |
| கடன்களும் பெறத்தக்கவையும் (தேறிய ஏற்பாடுகள்) | 682.1 | 381.9 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமான ஒதுக்கம் | 7,778.2 | (2,103.0) |

2021 இறுதியிலுள்ளவாறு, ஏறத்தாழ ரூ.67.9 பில்லியன் மொத்த நிதித் தொகையுடன் அறுபத்தொன்பது (69) உறுப்பினர் நிறுவனங்களை இத்திட்டம் உள்ளடக்குகின்றது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் நிதியியல் சிறப்பம்சங்கள் அட்டவணை II-20 இல் வழங்கப்பட்டுள்ளன.

### 26.2 நிதி இடர்பாட்டு நிலையிலுள்ள நிதியியல் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில், இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவாக, உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகளைத் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. சென்ரல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்டான்ரட் க்ரடிட் பினான்ஸ் லிமிடெட் மற்றும் டீகேஸெ பினான்ஸ் லிமிடெட் ஆகிய கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் உள்முகமாக உருவாக்கப்பட்ட கொடுப்பனவு பொறிமுறையுடன் இசைந்து செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டதுடன் த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈடிஐ பினான்ஸ் லிமிடெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்வீஸ் பிஎல்சி ஆகிய கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மக்கள் வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட முகவராண்மை வங்கித்தொழில் உடன்படிக்கையின் கீழ் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

2021.12.31இல் உள்ளவாறாக உரிமம் இரத்துச்செய்யப்பட்டதும் மற்றும் இடைநிறுத்தப்பட்டதுமான அனைத்து (ஆறு) கம்பனிகளின் 70,827 வைப்பாளர்களுக்கு ரூ.29.2 மில்லியனுக்கு தொகையிடப்பட்ட இழப்பீட்டை இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் செலுத்தக்கூடியாதாக இருந்ததுடன் அத்தகைய கம்பனிகளின் விபரங்கள் கீழே அட்டவணை II-21 இல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை II - 21**
**2021.12.31இல் உள்ளவாறாக, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை**

| கம்பனியின் பெயர் | செலுத்தப்பட்ட வைப்பாளர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) |
|---|---|---|
| சென்ரல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 3,451 | 1,802.2 |
| த ஸ்டான்ரட் க்ரடிட் பினான்ஸ் லிமிடெட் | 2,509 | 1,193.7 |
| டீகேஸெ பினான்ஸ் லிமிடெட் | 1,788 | 964.5 |
| த பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 34,192 | 12,029.8 |
| ஈடிஐ பினான்ஸ் லிமிடெட் | 26,280 | 12,212.8 |
| சுவர்ணமஹால் பினான்சியல் சேர்வீஸ் பிஎல்சி | 2,607 | 1,048.6 |
| **மொத்தம்** | **70,827** | **29,251.6** |

### 26.3 விசாரணை நடவடிக்கைகள்

தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களமானது, பிரதானமாக சமூக ஊடகம், எழுத்துமூலமான முறைப்பாடுகள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகம் மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட

தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பிலான குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான விசாரணைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது. பூர்வாங்க படிநிலையாக, வங்கிச் சட்டத்தின 83(இ) பிரிவின் ஏற்பாடுகளை மீறி தடைசெய்யப்பட்ட திட்டங்களை இயக்குவதாக குற்றஞ்சாட்டப்பட்ட நிறுவனங்களை அடையாளப்படுத்துவதற்கு முதற்பார்வை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஸ்தாபிக்கப்பட்ட முதற்பார்வை விசாரணை விடயங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும், தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களமானது சட்டம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் உதவியுடன், வழக்குகளுக்காக சட்டமா அதிபருக்கு ஏற்கனவே குறிப்பீடுசெய்யப்பட்ட விசாரணைகளை ஒருங்கிணைத்து பின்தொடர்ந்தது. பாதுகாப்பு வழிமுறையொன்றாக, தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களின் பல்வேறு பிரிவினருக்குக் கற்பிப்பதற்காகவும் அவர்களின் நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்காகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் ஏனைய திணைக்களங்களின் ஒருங்கிணைப்புடன் இணைந்து மேற்கொண்டது.

### 26.4 இலங்கை மத்திய வங்கியின் தீர்மானமெடுத்தல் கட்டமைப்பை உருவாக்குதல்

தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பினுள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தீர்மானக் கட்டமைப்பு உருவாக்கத்தை தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது.

## 27. இடர் மேலாண்மைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கியானது தனது கொள்கை நோக்கங்களை செயற்படுத்தும் போது நிதி மற்றும் நிதி சாராத பல்வேறு இடர்களை எதிர்கொள்ளும் தன்மையுடையது. இந்த அபாயங்களில் ஏதேனும் இடம் பெறுவது நோக்கங்களை அடைதல், நிதி நிலை மற்றும் வங்கியின் நற்பெயருக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், முறையாக வடிவமைக்கப்பட்ட இடர் மேலாண்மை கட்டமைப்பைக் கொண்டிருப்பது மிகவும் அத்தியாவசியமானது.

இடர் மேலாண்மைத் திணைக்களமானது இடர் மேலாண்மை கட்டமைப்பிற்கிணங்க உருவாக்கப்பட்ட இடர் மேலாண்மை கொள்கைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வங்கி முழுமைக்குமான இடர் மேலாண்மையை செயற்படுத்துவதற்கான கொள்கைகளை வகுக்கின்றது. இந்த செயற்பாட்டில், இலங்கை மத்திய வங்கியானது இடர்களை நிர்வகிப்பதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் உத்தம நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற அதே நேரத்தில், இடர் உரிமையையும் இடர் மேலாண்மையையும் வெவ்வேறு பங்குதாரர்களிடையே தெளிவான பொறுப்புக்கூறலுடன் ஒப்படைக்கிறது.

### 27.1 செயற்பாட்டு இடர்கள்

இடர் கண்டறிதல் செயற்பாட்டை இற்றைப்படுத்துவதற்காகவும், செயற்பாடுகளுடன் தொடர்புடைய இடர்களைத் திறம்பட மேலாண்மை செய்வதற்காகவும் இடர் மேலாண்மைத் திணைக்களம் 2021 காலப் பகுதியில் செயற்பாட்டு இடர் வகைபிரிப்பை மீளாய்வு செய்து, தேவையான திருத்தங்களையும் மேற்கொண்டது.

திணைக்கள இடர் மதிப்பீடுகளுக்கு வழங்கப்பட்ட வசதிகளின் தொடர்ச்சியாக, இடர் மேலாண்மைத் திணைக்களமானது இடர் பதிவேடுகளை உருவாக்க உதவும் பொருட்டு மற்றைய திணைக்களங்களுடன் இணைந்து பணியாற்றியது.

வங்கியில் இடர் மேலாண்மை கலாச்சாரத்தை மேம்படுத்தும் வகையில், இடர் மேலாண்மைத் திணைக்களமானது ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்கான இடர் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தியது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் இடர் கலாச்சாரத்தை மேம்படுத்துதல் மற்றும் தற்போது பயன்பாட்டில் உள்ள செயற்பாட்டு இடர் மேலாண்மை பொறிமுறையை மேலும் மேம்படுத்தும் நோக்கில், தற்போதுள்ள செயற்பாட்டு இடர் மேலாண்மை பொறிமுறையைப் பற்றிய விழிப்புணர்வின் அளவை தீர்மானிக்கும் பொருட்டு, செயற்பாட்டு அபாயங்கள் குறித்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் கணக்கெடுப்பை இடர் மேலாண்மைத் திணைக்களம் நடத்தியது.

இடர் மேலாண்மைத் திணைக்களமானது தொடர்ச்சியாக சம்பவ அறிக்கை முறைமை மூலம் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் நிர்வகிப்பை தொடர்ந்ததுடன் சம்பவங்களின் தரவு மையத்தை உருவாக்குவதற்கு மற்றும் சம்பவங்களின் திருத்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் வழிவகுத்தது. இந்த முறைமையின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் சாத்தியமான இடர் போக்குகள் மற்றும் பாதிப்புகளின் பகுதிகளை அடையாளம் காணவும் தொடர்புடைய இடர் சீர்ப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

### 27.2 நிதி சார்ந்த இடர்கள்

இடர் மேலாண்மைத் திணைக்களமானது, இரண்டாம் கட்ட பாதுகாப்பு நடவடிக்கையாக, கடன், சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்களை உள்ளடக்கிய நிதி இடர்களை சுயாதீனமாக கண்காணித்து, பகுப்பாய்ந்து, மதிப்பீடு செய்து அறிக்கையிடுகிறது. மேலும், இடர் மேலாண்மைக் கொள்கைக் கூற்றுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட பன்னாட்டு ஒதுக்குகள், உள்ளக முதலீட்டு நிதியங்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் (இது அரசாங்கத்திற்கான ஒரு முகவர் செயல்பாடாக மேற்கொள்ளப்படுகிறது) என்பவற்றின் முதலீட்டுக் கொள்கைக் கூற்று (Investment Policy Statement), மூலோபாய சொத்து ஒதுக்கீடு (Strategic Asset Allocation) மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்கள் (Investment Guidelines) ஆகியவற்றுடன் இணக்கப்பாட்டினை இது உறுதி செய்கிறது.

இடர் மேலாண்மைத் திணைக்களமானது உள்ளக முதலீட்டு நிதியங்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான முதலீட்டு வழிகாட்டுதல்கள், பன்னாட்டு ஒதுக்குகளுக்கான மூலோபாய சொத்து ஒதுக்கீடு மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான முதலீட்டு கொள்கை கூற்று என்பவற்றினை தேவையான திருத்தங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்தது. இடர் மேலாண்மைத் திணைக்களமானது பாசல்-III (Basel- III) இன் கடன் இடர் மேலாண்மைக்கான தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையை அடிப்படையாக கொண்ட வழங்குநர் மற்றும் இணைத்தரப்பு வெளிப்பாடு வரையறை அளவீடுகளுக்கான ஒரு புதிய முறைமையை அறிமுகப்படுத்தி இணைத்தரப்பு கடன் இடர் மேலாண்மை வழிகாட்டுதல்களை (Counterparty Credit Risk Management Guidelines) மீளாய்வு செய்தது. இந்த மீளாய்வு செய்யப்பட்ட வழிகாட்டுதல்கள் தொடர்புடைய முதலீட்டு வழிகாட்டல்களில் சேர்க்கப்பட்டது. இடர் மேலாண்மைத் திணைக்களமானது தொடர்புடைய இடர் குறிகாட்டிகளை அடிக்கடி பகுப்பாய்வு செய்வதன் மூலம் சந்தை அபாயங்கள் மற்றும் கடன் அபாயங்களை மதிப்பிட்டதுடன் பன்னாட்டு ஒதுக்குகள், உள்ளக முதலீட்டு நிதியங்கள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றிற்கான மூலோபாய சொத்து ஒதுக்கீடு (Strategic Asset Allocation), முதலீட்டுக் கொள்கை கூற்றுகள், முதலீட்டு வழிகாட்டுதல்கள் ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ள வரையறை கட்டமைப்புகள் கடைப்பிடிக்கப்படுவதையும் கண்காணித்தது. இந்த இடர் மதிப்பீடுகள் மற்றும் இணக்க மீறல்கள் அனைத்தும் தொடர்புடைய மாதாந்த முதலீட்டு மேற்பார்வைக் குழு ஒற்றுகூடல்களில் தெரியப்படுத்தப்பட்டன.

இடர் மேலாண்மை திணைக்களமானது இக்காலப்பகுதியில் பன்னாட்டு ஒதுக்குகளுக்கான புதிய ஒதுக்குகள் மேலாண்மை முறைமை (Reserve Management System) ஒன்றினை நடைமுறைப்படுத்தும் செயல்முறையிலும் ஈடுபட்டது. அதன்படி, சந்தை மற்றும் கடன் இடர்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கு மேலாண்மையின் இணக்கப்பாடுகளின் கண்காணிப்பு போன்ற இடர் மேலாண்மை திணைக்களத்தின் சில செயற்பாடுகள் தானியக்கமாக்கப்பட்டன.

செயற்பாடுகள் மற்றும் நிதி மேலாண்மை நடவடிக்கைகள் தொடர்பான இடர்களைத் திறம்பட முகாமைத்துவம் செய்யும் நோக்கத்தில், செயற்பாட்டு இடர் தொடர்பாக நிதி அல்லாத இடர் மேலாண்மைக் குழுவிற்கு காலாண்டு அறிக்கையிடலும், செயற்பாட்டு இடர் மற்றும் நிதி இடர் தொடர்பாக சபை இடர் மேற்பார்வைக் குழு மற்றும் நாணயச் சபைக்கு காலாண்டு அறிக்கையிடலும் இடர் மேலாண்மைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

## 28. செயலகத் திணைக்களம்

மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நிறுவப்பட்ட சில திணைக்களங்களில் செயலகத் திணைக்களமும் ஒன்றாகும். செயலகத் திணைக்களம் ஈடுபடுகின்ற முக்கிய தொழிற்பாடுகளாவன: இலங்கை மத்திய வங்கியின் ஒட்டுமொத்த நிறுவனத்தையும் நிருவாகித்தல், பெறுகை முகாமைத்துவம், ஓய்வூதிய நிதியங்களைத் நிருவாகித்தல், வெளிநாட்டு கற்கைகளுக்கும் பயிற்சிகளுக்கும் வசதியளித்தல், சொத்துக்களை கையுதிர்த்தல், முகாமைத்துவத்திற்கான அளவீட்டுச் சபையை நடாத்துதல், ஆளுநருக்குச் செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்குதல் என்பனவாகும்.

### (அ) ஒட்டுமொத்த நிறுவனத்தையும் நிருவாகித்தல்

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஒட்டுமொத்த நிறுவனத்தினதும் நிருவாகமானது ஆளுகை ஒழுங்குவிதிகள், பொறுப்புக்கூறல், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் சிறந்த ஆளுகையின் ஏனைய பிரதான பண்புக் கூறுகள் என்பவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொள்வதில், ஆண்டுகாலப்பகுதியில் செயலகத் திணைக்களம், மத்திய வங்கியின் ஆதனங்கள் தொடர்பில் அளவீடொன்றை நடாத்தி, இடர்நேர்வு விடயப்பரப்புக்களை இனங்கண்டு, மத்திய வங்கியின் அனைத்து ஆதனங்களையும் உள்ளடக்குகின்ற கூட்டுக் காப்புறுதியொன்றை பெற்றுக்கொண்டதுடன் அதன் அஞ்சல் முகாமைத்துவ பணியின் மூலம் மத்திய வங்கிக்கு உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் அஞ்சல் பணிகளுக்கு வசதியளித்தது. மேலும், காகிதாதி களஞ்சிய முகாமைத்துவம் வினைத்திறனாகவும் சிக்கனமாகவும் நடாத்தப்படுவதை உறுதிசெய்தது. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கிக்கான பலதரப்பட்ட நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்துடன் பணி வழங்குநர்களுடன் பல உடன்படிக்கைகளை நாணயச் சபை சார்பில் கைச்சாத்திட்டது.

### (ஆ) பெறுகை முகாமைத்துவம்

நாணயச் சபை மூலம் ஒப்புதலளிக்கப்பட்ட மத்திய வங்கியின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்திற்கு அமைவாக, செயலகத் திணைக்களமானது 2021 ஆண்டுக்காலப்பகுதியில் வங்கிக்குத் தேவைப்படுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் பெறுகையை முன்னெடுத்தது. தேசியப் பெறுகை வழிகாட்டல்களுடன் பரந்தளவில் இணங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பெறுகை நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் விலைக்கோரல் நடைமுறைகளூடாகவும் அதேபோன்று விலைகோரல் அல்லாத நடைமுறைகளூடாகவும் பெறுகைகள் மேற்கோள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, செயலகத் திணைக்களம் பல அவசரகால தேவைக்கேற்ற பெறுகைகளில் உடனடியாக ஈடுபட்டது. மேலும், செயலகத் திணைக்களம், உலக வங்கியின் நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ், பொருட்கள் மற்றும் பணிகளின் பெறுகைக்கும் பங்களிப்புச்செய்தது.

### (இ) ஓய்வூதிய நிதியங்களை நிருவகித்தல்

செயலகத் திணைக்களமானது 2,312 பயனாளிகளை ஈடுபடுத்துகின்ற இலங்கை மத்திய வங்கியின் ஓய்வூதிய நிதியங்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளின் நிருவாகியாக தொடர்ந்தும் செயற்பட்டது. அதற்கமைய, பணிக் கொடைகள், திரட்டிய ஓய்வூதியங்களைக் கொடுப்பனவு செய்தல், சேமலாப நிதிய நிலுவைகளை விடுவித்தல், அத்துடன் மாதாந்த ஓய்வூதியங்கள், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள், விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்றவற்றை மேற்கொள்கின்ற செயற்பாட்டில் செயலகத் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. மேலும், இலங்கை மத்திய வங்கியின் கைநூலில் குறித்துரைக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளுக்கமைய உயிர் வாழ்வுச் சான்றிதழ்களைச் சேகரித்தல் உள்ளடங்கலாக அவர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு பயனாளிகளுடன் தொடர்புடைய பல்வேறு தொடர்புகளை செயலகத் திணைக்களம் கையாண்டது.

### (ஈ) வெளிநாட்டு கற்கைகளுக்கும் பயிற்சிகளுக்கும் வசதியளித்தல்

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயலகத் திணைக்களமானது, ஊழியர்களுக்கான பட்டப்பின்படிப்பு கற்கைகளையும் மூத்த முகாமைத்துவ அலுவலர்களுக்காக கடமைசார்ந்த வெளிநாட்டுப் பயணங்களையும் வசதிப்படுத்தியது. இது தொடர்பில், செயலகத் திணைக்களம் பல்கலைக்கழகங்களுடனும் மேற்குறித்த நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணிக்கின்ற அலவலர்களுடனும் தொடர்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டது. இதற்கு மேலதிகமாக, வீசா பெற்றுக்கொள்வதனை இயலச்செய்வதற்கு செயலகத் திணைக்களம் வீசாக் கடிதங்களையும் சேமநிதிய நிலுவை உறுதிப்படுத்தல் கடிதங்களையும் வழங்கியதுடன் விமானப் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கும் பயணக் காப்புறுதியைப் பெறுவதற்கும் வசதியளித்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக இவ்வாண்டில் அத்தகைய வெளிநாட்டுப் பயணங்களுக்கான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை குறைந்தளவான மட்டத்தில் காணப்பட்டது.

### (உ) அளவீட்டுச் சபையினை நடாத்துதல்

அளவீட்டுச் சபை என்பது வங்கியின் நிலையான சொத்துக்களை கையுதிர்ப்பதற்காக மத்திய வங்கி மூலம் ஈடுபடுத்தப்படும் முறையொன்றாகும். அதற்கமைய, வழக்கற்றுப்போன, சேதத்துக்குள்ளான, திருத்தம் செய்யவியலாத, இழப்பீடுவழங்கவியலாத சொத்துக்களை இனங்காண்பதற்கு அளவீடொன்று ஆண்டுக் காலப்பகுதியில் பூர்த்திசெய்யப்பட்டது.

### (ஊ) ஆளுநருக்குச் செயலக மற்றும் உபசரணை உதவிகளை வழங்குதல்

2021.09.23 அன்று ஆளுநரின் செயலகத் திணைக்களம் தாபிக்கப்படும் வரை ஆண்டுகாலப்பகுதியில் ஆளுநருக்கான செயலக மற்றும் உபசரணை உதவிகளை செயலகத் திணைக்களத்தின் ஆளுநரின் செயலகப் பிரிவு வழங்கியது. சந்திப்புக்களையும் கூட்டங்களையும் அட்டவணைப்படுத்துதல், ஆளுநருக்காக எடுத்துரைப்புக்களையும் உரைகளையும் தயாரித்தல் மற்றும் தொகுத்தல், ஆளுநரின் உள்நாட்டு பயணங்களை ஒருங்கிணைத்து ஏற்பாடுசெய்தல், ஆளுநரால் விருந்தளிக்கப்பட்ட அலுவல்சார் நிகழ்வுகளை ஏற்பாடுசெய்தல் அத்துடன் ஆளுநரினதும் மத்திய வங்கியினதும் விசேட அதிதி வருகைதருநர்களுக்கு வழங்கப்பட்ட உபசரணைச் சேவைகள் ஆகியவற்றை செயலக மற்றும் உபசரணை உதவிகள் உள்ளடக்கியிருந்தன.

## 29. பாதுகாப்புப் பணிகள்

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது கொவிட்-19 உலகளாவிய நோயத்தொற்றின் விளைவாக ஆண்டு காலப்பகுதியில் தோன்றிய பல்வேறு

சவால்களுக்கு மத்தியிலும் பிரதேச அலுவலகங்கள் மற்றும் ஏனைய தாபனங்கள் உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்கள், வருகைதருநர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. நிறுவனத்தின் முன்னுரிமைகளாக கொண்டுசெல்கின்ற நாணயத்திற்கு இலங்கை பொலிஸாருடன் ஒருங்கிணைந்து விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது வங்கியின் அனைத்து வியாபார தொடர்ச்சி ஒத்திகைகளுக்கும் முனைப்புடன் பங்களித்தது.

**(அ) முறைமை மேம்பாடுகள்**

தலைமை அலுவலகம் மற்றும் ஏனைய வளாகங்களில் அமைந்துள்ள அனைத்து தீயணைப்பு உபகரணங்களினதும் செயற்பாட்டுத் தகுதியானது ஆண்டு காலப்பகுதியில் கிரமமான அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு மற்றும் பதிலீடு செய்யப்பட்டன. பொதி ஸ்கேனர்கள், சரக்கு ஸ்கேனர்கள் உள்ளடங்கலாக அனைத்து ஏனைய பாதுகாப்பு உபகரணங்களினதும் பராமரிப்புப் பணிகள் தொடர்புடைய பணி வழங்குநர்களுடனான பணி ஒப்பந்தங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது புலனாய்வுத் தகவல்களுடன் தொடர்ச்சியாக அதனை இற்றைப்படுத்திக் கொண்டதுடன் தொடர்புடைய அதிகாரிகளுடனான உறவுகளையும் பேணியிருந்தது.

**(ஆ) கண்காணிப்பு நடவடிக்கைகள்**

பாதுகாப்பு பணிகள் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு வருகைத்தந்த 13,478 வருகைதருநர்களையும் பிரதேச அலுவலகங்களுக்கு வருகைத்தந்த அனைத்து வருகைதருநர்களையும் பரிசோதித்து வசதியளித்திருந்தது. ஆண்டு முழுவதும் 28,309 கொண்டுசெல்லப்பட்ட நாணயப் பெட்டிகளை பரிசோதித்திருந்தது.

**(இ) கொவிட்-19 பரவலைத் தடுத்தல்**

சுகாதார அதிகாரிகளால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுக்கமைவாக பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது அலுவலர்கள், வருகைதருநர்கள் போன்றோரின் வெப்பநிலையை கண்காணித்திருந்ததுடன் இவர்கள் வளாகத்திற்கு உள்நுழைவதற்கு முன்னர் வருகைதருநர் முகாமைத்துவ முறைமையின் ஊடாக அனைத்து வருகைதருநர்களையும் பரிசோதித்தல் மற்றும் பதிவுசெய்தல் போன்ற தடுப்பு வழிமுறைகளையும் மேற்கொண்டிருந்தது. உலகளாவிய நோய்த்தொற்று நிலைமையின் காரணமாக அலுவலர்களின் பணிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த அனைத்து திணைக்களங்களினதும் ஆவணப்படுத்தல் மற்றும் அஞ்சல் முகாமைத்துவ முறைமைகள் என்பவற்றுக்கு பாதுகாப்பு பணிகள் திணைக்களம் ஆதரவளித்தது. வங்கி வளாகங்களினுள் மனித தொடர்பினைக் குறைப்பதற்கு புதிய கடமைச் சுழற்சி முறைமையொன்றினையும் பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் அறிமுகப்படுத்தியது.

**(ஈ) பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை மதிப்பிடல்**

பாதுகாப்புக் கட்டுப்பாட்டு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவற்றினை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்புத் திட்டம் இற்றைப்படுத்தப்பட்டதுடன் அதற்கிணங்க வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்திற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குமென இரு பொதி ஸ்கேனர்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மேற்குறித்த மதிப்பீட்டின் நோக்கில், பாதுகாப்புப் பணிகள் திணைக்களத்தின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தும் பொருட்டு நடமாடும் தொடர்பூட்டல் முறைமையை ஒத்திசை முறைமையிலிருந்து டிஜிட்டல் முறைமைக்கு மாற்றீடு செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இலங்கை மத்திய வங்கியின் பயன்பாட்டிற்காக வெடிபொருள் கண்டுபிடிப்புக் கருவிகள் இரண்டைக் கொள்வனவு செய்வதற்கான செயன்முறையினை பாதுகாப்புப் பணிகள் திணைக்களம் முன்னெடுக்கின்றது.

**(உ) மனித மூலதனத்தை வலுப்படுத்தலும் திறனை கட்டியெழுப்புதலும்**

பாதுகாப்புப் பணிகள் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்புக் கடமைகளில் அதிகரித்துவருகின்ற தேவையினை நிறைவுசெய்வதற்காக உதவி பாதுகாப்பு அலுவலர்களை ஆட்சேர்ப்புசெய்வதற்கான செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. நவீன தொழில்நுட்பம் தொடர்பான திறன்களை விருத்திசெய்யும் நோக்கில் புதிதாக நிறுவப்பட்ட இணைய நெறிமுறையை அடிப்படையாகக் கொண்ட சிசிரிவி தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட பாதுகாப்பு அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது.

## 30. அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கிக்கென வினைத்திறன்மிக்க, ஆரோக்கியமான மற்றும் திருப்திகரமான தொழிற்படையை உறுதிசெய்து இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் நலனோம்புகைக்கு வசதிப்படுத்துவதே அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் வகிபாகமாகும். ஆகவே, அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் நலன்புரி வசதிகள் இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சிறந்த உடல் உள ஆரோக்கியத்தை பேணிவளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதனூடாக இலங்கை மத்திய வங்கியில் ஆரோக்கியமான பணிச் சூழலொன்று ஊக்குவிக்கப்படுகின்றது. அலுவலர் வீடமைப்பு (ஈட்டு) கடன் திட்டம், சேமலாப நிதியக் கடன் திட்டம் மற்றும் அலுவலர் நலத் திட்டம் என்பவற்றின் கீழ் கடன்களை வழங்குதல், தொழில்தருநர் பங்களிப்பு மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் மருத்துவச் செலவுகளை மீளளித்தல், அலுவலர்களுக்கான மருத்துவ வசதிகளை வழங்குதல், உணவக வசதிகள் மற்றும் ஏனைய நலன்புரி பணிகளை வழங்குதல் என்பன திணைக்களத்தின் முக்கிய பணிகளாகும். ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் மற்றும் உயர்வான வினைத்திறன் மட்டத்துடன் பணியாற்றக்கூடிய நிறைவானதும் ஊக்கமளிக்கப்பட்டதுமான தொழிற்படையை வசதிப்படுத்துவதற்கு உதவுகின்ற அலுவலர்களின் வீடமைப்பு, வாகன, மருத்துவ மற்றும் ஏனைய நலன்புரி தேவைகளை இப்பணிகள் உள்ளடக்குகின்றன. மேலும், இலங்கை மத்திய வங்கி அலுவலர்களின் தங்கிவாழ்வோர் மற்றும் ஓய்வுபெற்றவர்களின் மருத்துவத் தேவைகளும் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் கரிசனையிற் கொள்ளப்படுகின்றன.

கொவிட்-19 நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட சவால்மிக்க சூழலுக்கு மத்தியில், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம், 2021 ஆண்டு காலப்பகுதியில் அனைத்து நன்மைபெறுநர்களுக்கும் நலன்புரி வசதிகளை விரிவுபடுத்துவதை தொடர்ந்தும் மேற்கொண்டது. கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் நோய்த்தொற்றின் காரணமாக அலுவலர்களினால் கோரப்படுகின்ற புதிய பணிகளுக்கு வசதியளித்தல் தொடர்பாக சுகாதார அதிகாரிகளினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கியொழுகுவதற்காக விசேட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களமானது மூன்று தனியார் வைத்தியசாலைகளின் ஒத்துழைப்புடன் இலங்கை மத்திய வங்கியின் வளாகத்தில் 08 பீசிஆர் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்திருந்தது. இதற்கு மேலதிகமாக, அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களமானது கொவிட்-19 நோய்த்தொற்றுக்கெதிராக அதன் ஊழியர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு மூன்று குறித்துரைக்கப்பட்ட தடுப்பூசியேற்றல் நிலையங்களில் ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் 2021 திசெம்பரில், இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலக வளாகத்தில் கொவிட்-19 இற்கான செயலூக்கி தடுப்பூசி வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தையும் ஏற்பாடு செய்திருந்தது. அலுவலர் பணிகள்

முகாமைத்துவத் திணைக்களமானது ஆண்டு காலப்பகுதியில் அலுவலர்களுக்கான வீடமைப்பு மற்றும் ஏனைய நலன்புரிக் கடன்களை தொடர்ந்தும் பகிர்ந்தளித்ததுடன் மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நன்மைபெறுநர்களினாலும் உறப்பட்ட மருத்துவச் செலவுகளையும் மீளளித்தது. 2021ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ஊழியர்கள், ஓய்வுபெற்றவர்கள் மற்றும் அவர்களின் பதிவுசெய்யப்பட்ட தங்கிவாழ்வோருடன் சேர்த்து விதவைகள்/தபுதாரர்களை உள்ளடக்கிய மருத்துவ நன்மைகள் திட்டத்தின் கீழ் பயன்பெறுநர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 10,837 ஆகக் காணப்பட்டது. மேலும், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களமானது அலுவலக நேரத்தில் மருத்துவ நிலையத்தினூடாக அலுவலர்களுக்கு நியாயமான கட்டணத்தில் மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆய்வுகூட சேவைகளுடன்கூடிய மருத்துவ வசதிகளை வழங்கியது. 2021 ஏப்பிறலில், "அழகான மற்றும் ரம்மியமான இல்லம்" என்ற தலைப்பில் பட்டயக் கட்டட வடிவமைப்பாளரினால் கட்டடக்கலை தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் நடாத்தியது.

வெளியக பணி வழங்குநரூடாக வேலை நேரத்தில் அலுவலர்களுக்கு உணவகப் வசதிகள் வழங்கப்பட்டன. தரமான உணவு மற்றும் குடிபானங்களை நியாயமான விலையில் அலுவலர்களுக்கு வழங்குவதை உறுதிசெய்வதற்காக உணவகத்தின் தொழிற்பாடுகளை அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம் கண்காணித்தது.

## 31. புள்ளிவிபரவியல்

புள்ளிவிபரவியல் திணைக்களம் அதன் திணைக்களம் சார்ந்த தொழிற்பாடுகளில் காத்திரமான முறையில் ஈடுபட்டு வருவதன் மூலம் "பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்" மற்றும் "நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுதல்" ஆகிய மத்திய வங்கியின் குறிக்கோள்களை எய்துவதற்கான அதன் பங்களிப்பினைத் தொடர்ந்தும் வழங்கியது. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக பயணங்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் காணப்பட்ட சவால் நிறைந்த வேலைச் சூழல் என்பனவற்றிற்கு மத்தியிலும் திணைக்களம் நவீன தொழில்நுட்பவியல்களைப் பயன்படுத்தி திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

### 31.1 அளவீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சுட்டெண்களைத் தொகுத்தல்

#### அ. வியாபார அளவீடுகள்

இவ்வாண்டுப்பகுதியில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகள் மாதாந்த அடிப்படையில் நடத்தப்பட்டன. கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடானது தயாரிப்பு, கட்டுமானம் மற்றும் பணிகள் நடவடிக்கைகளை உள்ளடக்கிய, மேல் மாகாணத்தில் குவிந்து காணப்படும் முனைப்புமிக்க பாரிய கம்பனிகளை இலக்காகக் கொண்டிருந்தது.

பெறுபேறுகள் பொருளாதாரத்தின் தொடர்பான துறைகளின் மாதத்திற்கு மாத அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்கும் குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உற்பத்தி எதிர்வுகூறல் செய்முறையிலுள்ள உயர் தாக்கமுள்ள முன்னணி குறிகாட்டிகளாகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும், அளவீட்டில் கண்டறிப்பட்டவற்றின் அடிப்படையில் செய்யப்பட்ட மதிப்பீடுகள் கொள்கை வகுப்பு நோக்கங்களுக்காக நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் அறிக்கையிடப்பட்டன. தயாரிப்பு மற்றும் பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களின் பெறுபேறுகள் கைத்தொழில் பகுப்பாய்வாளர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பத்திரிகை அறிவித்தல்களாக வெளியிடப்பட்டன. அளவீட்டில் கண்டறியப்பட்ட இவ்விடயங்கள் கைத்தொழில் மற்றும் பொருளாதார நிலைமைகளை மதிப்பிடுகின்ற விதத்தில் வியாபார தொழில்சார் நிபுணர்கள் பொருளாதார பகுப்பாய்வாளர்கள் மற்றும் கொள்கை வகுப்போரினால் பரந்தளவிற்கு பயன்படுத்தப்படுகின்றன.

கம்பனித் துறையின் கண்ணோட்டத்திலிருந்து பொருளாதாரத்தின் நடப்பு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளை அறிந்து கொள்வதற்காக 2021ஆம் ஆண்டுப்பகுதியில் வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீடு காலாண்டு அடிப்படையில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வளவீட்டின் இலக்கிடப்பட்ட குடித்தொகையாக பொருளாதாரத்தின் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பாரியளவு தொழில்முயற்சிகள் காணப்பட்டன. ஒட்டுமொத்த பெறுபேறுகளும் முக்கியமான உள்ளக விடயங்களும் நாணயக் கொள்கைக் குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில், பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்கள், புள்ளிவிபரவியல் முறையியல்களைப் பயன்படுத்தி அளவீடுகளில் கண்டறியப்பட்ட அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. மேலும், முக்கியமான சுட்டெண்களுடன் சேர்த்து நிறைவேற்றுச் சுருக்கமொன்று வெளிவாரிப் பயன்படுத்துநர்களின் தகவல்களுக்காக காலாண்டு ரீதியாக மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

கொடுகடன் சந்தை நடவடிக்கைகளின் கேள்வி மற்றும் வழங்கல்பக்க அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்கின்ற கொடுகடன் கேள்வி அளவீடு மற்றும் கொடுகடன் வழங்கல் அளவீடு என அழைக்கப்படும் கொடுகடன் நிலைமைகளின் அளவீடு 2021ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. கொடுகடன் கேள்வி அளவீடு பொருளாதாரத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை இலக்காகக் கொண்டிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் வருடாந்த அளவீடொன்றாகத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. 2021இல் கொடுகடன் கேள்வி அளவீடு குறிப்பாக, உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் தேவைகளுக்கு நிதியிடும் விதத்தில் கொடுகடனுடன் தொடர்பான அபிவிருத்திகளையும் சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளினால் அனுபவிக்கப்பட்ட பிரச்சனைகளையும் அடையாளம் காணும் விதத்தில் வடிவமைக்கப்பட்டது. மறுபுறத்தில் கொடுகடன் நடவடிக்கைகள் மீதான அண்மைக்கால அபிவிருத்திகளையும் கொடுகடன் வழங்கலுடன் தொடர்பான நடவடிக்கைகளையும் காலாண்டு அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட கொடுகடன் வழங்கல் அளவீடானது இலங்கையிலுள்ள அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்குகின்றது. கொடுகடன் கேள்வி அளவீடு மற்றும் கொடுகடன் வழங்கல் அளவீடு இரண்டினதும் பெறுபேறுகள் மத்திய வங்கியின் கொள்கை வடிவமைப்பு செய்முறைகளில் பயன்படுத்தப்பட்ட வேளையில் கொடுகடன் வழங்கல் அளவீட்டின் பெறுபேறுகள் பொதுமக்களின் நலன்கருதி மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன.

சில்லறைத் துறையின் பொதுவான வர்த்தகம் மற்றும் நவீன வர்த்தகப் பிரிவுகளிலுள்ள அபிவிருத்திகளை விளங்கிக் கொள்வதற்காக சில்லறை விற்பனைகள் அளவு அளவீடு மற்றும் சிறப்பு அங்காடிகள் சில்லறை வர்த்தக அளவீடு என்பன முறையே மாதாந்த மற்றும் காலாண்டு இடைவெளிகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இவ்வளவீடுகளில் கண்டறியப்பட்டவைகளின் அடிப்படையில் சில்லறை வர்த்தகம் அளவுகளில் ஏற்படக்கூடிய தளம்பல்கள் நேரகாலத்துடன் அடையாளம் காணப்பட்டன. போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்காக தரைப் போக்குவரத்து, வான் போக்குவரத்து, துறைமுகம் மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற

போக்குவரத்துப் பணிகள் மீதான அளவீடு 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மாதாந்த அளவீடொன்றாகத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் வியாபாரச் செய்முறை முகாமைத்துவ துறை தொடர்பில் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் இடம்பெற்ற அபிவிருத்திகளையும் 2022ஆம் ஆண்டிற்கான வாய்ப்புக்களையும் அடையாளம் காண்பதற்காக அளவீடொன்று முன்னெடுக்கப்பட்டது. இவ்வளவீடுகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் மத்திய வங்கியின் உள்ளகப் பொருளாதாரப் பகுப்பாய்வுகளுக்கு, குறிப்பாக, பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல் செய்முறையில் பயன்படுத்தப்பட்டன.

புள்ளிவிபரவியல் திணைக்களம், ஆறு மாதங்களுக்கு முன்னர் நிலவிய பொருளாதார நிலைமை, தொழில் கிடைப்பனவு, குடும்ப வருமானம், குடும்பச் செலவினம் மற்றும் சேமிப்பு மட்டம் என்பனவற்றையும் இனிவரும் ஆறுமாத காலப்பகுதியில் அவை தொடர்பான எதிர்பார்ப்புக்களையும் ஒப்பிடுகின்ற விதத்தில் அவை தொடர்பான வீட்டுத்துறையினரின் மனோபாவத்தினைக் கண்டறிந்து கொள்வதற்காக இணையவழி அளவீடொன்றினை முன்னெடுத்தது. பதிலிறுப்பவர்களின் மாதிரியானது இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட பல்வேறுபட்ட இணையவழி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பதிவுசெய்யப்பட்ட தொகுதியொன்றிலிருந்து எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் சராசரியாக 100 பதிலிறுப்புக்கள் மாதாந்த அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டன. இணையவழி அளவீட்டின் பெறுபேறுகளைப் பயன்படுத்தி, பன்னாட்டு ரீதியாகப் பின்பற்றப்படுகின்ற முறையியல்களைப் பயன்படுத்தி மாதாந்த அடிப்படையில் நுகர்வோர் நம்பிக்கைச் சுட்டெண் தொகுக்கப்பட்டது. நுகர்வோர் நம்பிக்கைச் சுட்டெண் மீதான சுருக்கமான அறிக்கையொன்று முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் வீட்டுத்துறையினரின் மனோபாவங்கள் தொடர்பில் ஈடுபாடு கொண்டுள்ள பல்வேறுபட்ட ஆர்வலர் குழுக்களின் நன்மை கருதி எதிர்காலத்தில் காலாண்டு ரீதியாக நுகர்வோர் நம்பிக்கைச் சுட்டெண்ணினை வெளியிடுவதற்கு புள்ளிவிபரவியல் திணைக்களம் எண்ணுகிறது.

காணி மதிப்பீட்டு குறிகாட்டி தொகுக்கப்பட்டதுடன் கூட்டு ஆதன தொடர்மாடிமனைகளின் சந்தை அளவீடொன்று நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குறிகாட்டிகளின்படி உண்மைச் சொத்து ஆதனச் சந்தையின் அபிவிருத்திகளை மதிப்பிடுவதற்காக 2021ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு மாவட்டத்திற்கான காணி மதிப்பீட்டுக் குறிகாட்டி அரையாண்டு அடிப்படையில் தொடர்ந்தும் தொகுக்கப்பட்டதுடன் இது வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற துணைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் குறிப்பிட்ட மூன்று வகைக் காணிகளின் கீழும் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்பட்ட பேர்ச் ஒன்றிற்கான வெற்றுக் காணி விலை மதிப்பீடுகளின் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பொதுமக்களின் தகவல்களுக்காக 2021இல் காணி மதிப்பீட்டு குறிகாட்டி தொடர்பில் இரண்டு பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

கூட்டு ஆதன தொடர்மாடிமனைத் துறையின் அபிவிருத்திகள் மீதான தரவுகளை சேகரிக்கின்ற குறிக்கோளுடன் கூட்டு ஆதன தொடர்மாடிமனைகளின் சந்தை அளவீடு முன்னெடுக்கப்பட்டதுடன் உண்மையான விற்பனை விலைகள், கேள்வி, விலை மாற்றங்களுக்கான காரணங்கள் தற்போதைய மற்றும் இனிவரவிருக்கும் வீடமைப்பு அலகுகளின் எண்ணிக்கை, எறிவு, தங்கல் மட்டங்கள் மற்றும் முக்கிய கூட்டு ஆதன தொடர்மாடிமனை அபிவிருத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் வாங்குநர் சொத்துப்பட்டியல் விபரங்கள் மீதான தகவல்களைத் திரட்டுவதற்காக காலாண்டு அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான மோசமான நிலைமைகளின் தோற்றம் காரணமாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வகுப்புச் செயன்முறையினை உயர்வடையச் செய்யக்கூடிய துறையின் எதிர்கால உத்வேகத்தினை சிறந்த முறையில் கிரகித்துக் கொள்வதற்கு அபிவிருத்தியாளர்களிடமிருந்து முன்னோக்கிய அபிப்பிராயங்கள் எதிர்பார்க்கப்பட்டன. அளவீட்டில் கண்டறியப்பட்டவற்றின் சுருக்கமான அறிக்கையொன்று இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் காலாண்டு அடிப்படையில் தொடர்ச்சியாக வெளியிடப்படுவதாக இருந்தது.

கூட்டு ஆதன தொடர்மாடிமனைச் சந்தை அளவீட்டு தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, முதலாந்தர கூட்டு ஆதன தொடர்மாடிமனைச் சந்தையில் ஏற்படும் விலை மாற்றங்களை கண்காணிப்பதற்காக காலாண்டு ரீதியான விலைச் சுட்டெண்ணொன்று தொகுக்கப்பட்டது. இதற்கு இசைவான விதத்தில் இரண்டாந்தர கூட்டு ஆதன தொடர்மாடிமனைச் சந்தைக்கான சொத்து விலைச் சுட்டெண்ணானது பகிரங்கமாக கிடைக்கத்தக்கதாகவுள்ள சொத்து விளம்பரத் தரவுகளைப் பயன்படுத்தி மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டது. செயன்முறையானது காணி மற்றும் வீடுகளுக்கான சொத்து விலைச் சுட்டெண்களைத் திரட்டுவதற்கு ஏற்றவிதத்தில் விரிவாக்கப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இச்சொத்து விலைச்சுட்டெண்கள் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மேலும் மேம்படுத்தப்பட்டன.

### ஆ. பணவீக்க எதிர்பார்ப்புக்கள் அளவீடு

இரண்டு முக்கிய பொருளாதார முகவர்களான கம்பனித்துறை மற்றும் வீட்டுத் துறை ஆகிய வகைகளின் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மீதான தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்காக மாதாந்த அடிப்படையில் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் அளவீடு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் கம்பனித் துறை அளவீடுகள் மின்னஞ்சல் அடிப்படையிலான அளவீடுகளாக தொடரப்பட்ட வேளையில், வீட்டுத் துறையின் அளவீடுகள் மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி அடிப்படையிலான முறைகளுக்கு மேலதிகமாக, மெய்நிகர் முறையிலும் நடத்தப்பட்டன. இம்மெய்நிகர் அளவீடுகள், இலங்கை மத்திய வங்கியின் மாத்தளை, அனுராதபுரம், கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் நுவரெலியா பிரதேச அலுவலகங்களுக்கு அணித்தாக அமையப்பெற்றுள்ள தெரிவுசெய்யப்பட்ட அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்காக தொடர்பான பிரதேச அலுவலகங்களின் உதவியுடன் நடத்தப்பட்டன. மேலும், பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மீதான வீட்டுத் துறையின் அறிவினை உயர்த்துவதற்காக விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்பட்ட வேளையில், இவ்வளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. வீட்டுத் துறை அளவீடுகளின் பதிலிறுப்புக்கள் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் ஆசிரிய பரீட்சகர்களிடமிருந்து மாதாந்த அடிப்படையில் சேகரிக்கப்பட்டன. அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்கள் கொள்கை வகுப்புச் செய்முறையில் பரிசீலனையில் கொள்வதற்காக நாணயக் கொள்கை குழுவிற்கும் நாணயச் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

### இ. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமை

நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் தொழிற்பாடுகள் உலகளாவிய பெருந்தொற்றிற்கு மத்தியிலும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் வேளாண்மைப் பண்டங்களினதும் கட்டட மூலப் பொருட்களினதும் உற்பத்தியாளர் விலைகள்; முறைசாராத் துறை வேலையாட்களின் நாளாந்த கூலிகள்; பணவீக்க எதிர்பார்ப்புகள்; மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள், வகைகளின் சில்லறை விற்பனை விலைகளைச் சேகரிக்கும் பொருட்டு 53 ஆசிரிய பரீட்சகர்களின் ஈடுபாட்டுடன் சரியான நேரத்தில் அளவீடுகள் மேற்கொண்டமையின் மூலம் மத்திய வங்கியின் உள்ளகக்

கொள்கை வகுப்புச் செயன்முறைகளுக்கான உள்ளீடுகளை சரியான நேரத்தில் வழங்கமுடிந்தது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் தொழிற்பாடுகளைத் தரமுயர்த்துவதற்காக, அறிக்கைகளை தயாரிப்பதற்கு நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமைக்கு அட்டவணை மென்பொருளொன்று இணைக்கப்பட்டது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையினூடாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் தரவு சேகரிப்புக்களின் தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன. தரவு சேகரிப்பு செய்முறையின் போது ஆசிரிய பரீட்சகர்களினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகள் பற்றியும் அது பற்றிய பரிகார நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக 2021இல் மெய்நிகர் முறையில் வருடாந்த ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன. மேலும், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் கோரிக்கைக்கிணங்க, நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையிலிருந்து குறிப்பிட்ட தரவுகள் வாராந்த அடிப்படையில் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

மேலும், இன்றியமையாத உணவுப் பொருட்களின் நடைமுறை விலை அசைவுகள் மீதான முகாமைத்துவத் தகவல் முறையினை வலுப்படுத்திக் கொள்வதற்காகவும் எதிர்வுகூறல் நோக்கங்களுக்காகவும் புறக்கோட்டைச் சந்தை, மரந்தகமுல்ல அரிசிச் சந்தை, தம்புள்ள, மற்றும் நாரஹென்பிட்டி சிறப்பு பொருளாதார மையங்கள் மற்றும் நீர்கொழும்பு மற்றும் பேலியகொட மீன் சந்தை என்பனவற்றிலிருந்து நாளாந்த அடிப்படையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விலைகள் மீதான தரவுகளை/ தகவல்களை சேகரிப்பதற்காக ஆசிரியரல்லாத தரவுப் பரீட்சகர்களின் பணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் விலைத் தரவுகளின் சுருக்கமொன்று, நாளாந்த அடிப்படையில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டது. தலத்திலான மேற்பார்வைகளை நடத்துவதனூடாகவும் ஆசிரியரல்லாத பரீட்சகர்களினால் வழங்கப்பட்ட தரவுகளை தொடர்ச்சியாக கண்காணித்து வருவதன் மூலமாகவும் தரவு சேகரிப்பின் தரமும் சரியான நேரமும் உறுதிப்படுத்தப்பட்டது. தரவுசேகரிப்புச் செயன்முறைகள் கொவிட்-19 பெருந்தொற்றுக் காலப்பகுதியிலும்கூட தடங்கலெதுவுமின்றி பேணப்பட்டது.

மூன்று முன்னணி சிறப்பு அங்காடிகளின் வெப்தளத்தில் கிடைக்கத்தக்கதாகவிருந்த உணவு விலைகளைப் பயன்படுத்தி திரட்டப்பட்ட முன்னணி குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொண்டு புள்ளிவிபரத் திணைக்களம் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வேர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக்கொண்ட பணவீக்க எதிர்வுகூறல்களை தொடர்ந்தும் மேம்படுத்தி வருகின்றது. இது தொடர்பில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையிலுள்ள அனைத்து உணவுப் பொருட்களினதும் விலைகள், தொடர்புடைய சிறப்பு அங்காடிகளில் நாளாந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதன்பின்னர் உணவுக்கூடையிலுள்ள அனைத்து உணவுப் பொருட்களினதும் மாதத்திற்கு மாத மாற்றங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட பணவீக்க எதிர்வுகூறலுக்கு முன்னணிக் குறிகாட்டியாகப் பயன்படுத்தப்பட்டது.

### ஈ. அரச துறை தொழில்நிலை அளவீடு மற்றும் தொழிற்படைத் தகவல்கள்

அரச துறை தொழில்நிலையில் காணப்படும் முன்னேற்றங்களை மதிப்பிடுவதற்காக, 2021இல் அனைத்து அரச துறை நிறுவனங்களையும் அதாவது, மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்களை உள்ளடக்கி வருடாந்த அரச துறை தொழில்நிலை அளவீடு தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், தொழில் திணைக்களம் மற்றும் ஏனைய தரவு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் தொழிற்படை, தொழில்நிலை, தொழிலின்மை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிற்சந்தை சீர்திருத்தங்கள் என்பன தொடர்பில் ஒட்டுமொத்த தொழிலாளர் சந்தைத் தரவுப் பகுப்பாய்வொன்று புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதாரத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் அசைவுகளை மதிப்பிடுவதற்காக, புள்ளிவிபரவியல் திணைக்களம் அரச, முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார் துறைகளுக்காக கூலிவீதச் சுட்டெண்களைத் தொகுத்தது. மேலும், அரச, முறைசார்ந்த தனியார், மற்றும் முறைசாரா தனியார் துறைகளின் கூலி அசைவுகள் வெவ்வேறாக பகுப்பாய்வு செய்யப்பட்டன. காலத்திற்குக் காலம் விடுக்கப்பட்ட பொது நிருவாகத்தின் சம்பளச் சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அரச துறைக்கான பெயரளவு மற்றும் உண்மைக் கூலிவீதச் சுட்டெண்கள் மாதாந்த அடிப்படையில் தொகுக்கப்பட்டன. முறைசார்ந்த தனியார் துறையினை பொறுத்தவரை, உண்மைக் கூலிவீதச் சுட்டெண்கள் தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கூலி நிர்ணயச் சபை வர்த்தகங்களிலுள்ள ஊழியர்களுக்கான பெயரளவு கூலிவீதச் சுட்டெண்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டன. முறைசாரா தனியார் துறை கூலிகளின் அசைவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் பயன்படுத்தப்படும் முறைசாரா தனியார் துறை கூலிவீதச் சுட்டெண் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது. கூலிவீதச் சுட்டெண்கள் 2021இலும் விசேட தரவு பரப்பல் முறைமைக்கு மாதாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டன.

### 31.2 குறுங்கால பணவீக்கம் மற்றம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை எதிர்வுகூறல்

புள்ளிவிபரவியல் திணைக்களமானது குறுங்கால பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்வுகூறல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றமையின் மூலம் மத்திய வங்கியின் எதிர்வுகூறல் மற்றும் கொள்கை பகுப்பாய்வு முறைமைக்கு தொடர்ந்தும் பங்களித்தது. இதற்கமைய, பல்வேறு மூலங்களிலிருந்து தொடர்பான உள்ளீடுகளைப் பயன்படுத்தி, மாதிரியை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களும் குறிகாட்டியை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்களும் தயாரிக்கப்பட்டன. மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட எதிர்வுகூறல்கள், அண்மைக்கால மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்வுகூறல்களை உருவாக்குவதற்காக வியாபார தோற்றப்பாட்டு அளவீட்டின் துணைச் சுட்டெண்களுக்காக பிரதான கூறுப்பகுப்பாய்வு அணுகுமுறையினைப் பயன்படுத்தியதன் மூலம் இவ்வாண்டுப்பகுதியில் மேலும் வலுப்படுத்தப்பட்டன. இறுதிப்படுத்தப்பட்ட எதிர்வுகூறல்கள் விபரப்படுத்தப்பட்டு கிரமமான நாணயக் கொள்கை வட்டாரத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வசதியளிக்கின்ற விதத்தில் நாணயச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

பிந்திய விலைப்போக்குகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விலை அசைவுகள் என்பன சந்தை அபிவிருத்திகளுடன் இணைந்து காணப்பட்டதுடன் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட குறுங்கால பணவீக்க எதிர்வுகூறல்களுக்காக பொருளியலளவை நுணுக்கங்கள் பயன்படுத்தப்பட்டன. பணவீக்க எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதற்காக திணைக்களம் பணவீக்கத்தின் மீதான நிரம்பல் மற்றும் கேள்விப்பக்க

தாக்கங்கள் இரண்டினையும் பிரதிபலிக்கின்ற புதிய மாறிகளையும் தரவு மூலங்களையும் கண்டறிந்தது. இதற்குப் புறம்பாக, புள்ளிவிபரவியல் திணைக்களம் காலத்தொடர் மற்றும் எந்திர முறை நுணுக்கங்களைப் பயன்படுத்தி பொருத்தமான பணவீக்க எதிர்வுகூறல் மாதிரிகளின் அடையாள முறைகளை தொடர்ந்தும் கண்டறிந்து வருகின்றது.

### 31.3 பிரதேச புள்ளிவிபரங்களைத் தொகுத்தல்

#### அ. இலங்கை சுபீட்சச் சுட்டெண்

இலங்கை சுபீட்சச் சுட்டெண் என்பது சமூக, பொருளாதார அம்சங்களில் நாட்டின் செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட பல்பரிமாண குறிகாட்டியாகும். இது, பொருளாதார வியாபாரச் சூழல், மக்கள் நலனோம்புகை மற்றும் சமூக பொருளாதார உட்கட்டமைப்பு ஆகிய மூன்று துணைச் சுட்டெண்கள் தொடர்பில் பொருத்தமான மாகாண ரீதியான குறிகாட்டிகளைப் பயன்படுத்தி வருடாந்தம் தொகுக்கப்படுகிறது. 2021 திசெம்பரில், புள்ளிவிபரவியல் திணைக்களம் 41 பிரதிநிதித்துவ மாறிகளைப் பயன்படுத்தி 2020ஆம் ஆண்டிற்கான இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணினை தொகுத்ததுடன் ஊடக அறிக்கையொன்றினையும் வெளியிட்டது.

#### ஆ. மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

புள்ளிவிபரவியல் திணைக்களம் மேலிருந்து கீழான முறைமையின் அடிப்படையில், பெயரளவு நியதிகளில் 2020ஆம் ஆண்டிற்கான மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியை தொகுத்ததுடன் இச்செயன்முறையில் வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகளுடன் தொடர்பான நடவடிக்கைகளை உள்ளடக்கிய தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தேசிய கணக்கு மதிப்பீடுகள் பொருத்தமான மாற்றங்களைப் பயன்படுத்தி மாகாணங்களிடையே பிரிக்கப்பட்டன. தரவு சேகரிப்பில் பெருந்தொற்று தொடர்பாக சில வரையறைகள் காணப்பட்ட போதும் திணைக்களம் பிந்திய மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு மதிப்பீடுகளை 2021 திசெம்பரில் வெளியிடக்கூடியதாக இருந்தது. இம்மதிப்பீடுகள் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஒவ்வொரு மாகாணத்தினதும் பங்களிப்புப் பற்றிய தகவல்களை எடுத்துக்காட்டியதுடன் இது மாகாணங்களிடையே மூலவளங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு அரச அதிகாரிகளுக்கு பயன்மிக்கதாக விளங்குகிறது.

### 31.4 உலகளாவிய தரமிடல்களில் இலங்கையின் நிலையினை உயர்த்துதல்

#### அ. "வியாபாரம் செய்தலை இலகுபடுத்தல்" தரமிடல்

"இலங்கையில் வியாபாரம் செய்வதற்கு படிப்படியானதொரு வழிகாட்டல்" என்ற நூல் ஒன்பதாவது பதிப்பாக வெளியிடப்பட்டிருக்கிறது. இது வியாபார சமூகத்தினர், வாய்ப்புக்களைக் கொண்டுள்ள தொழில் முயற்சியாண்மையாளர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், முதலீட்டு ஊக்குவிப்பு முகவராண்மைகள் ஆகியோருக்குப் பயனளிக்கும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய விதத்தில் 2021இல் வெளியிடப்பட்டது. இவ்வெளியீடானது வியாபாரத்தினை தொடங்குவதற்கான வழிகாட்டும் தகவல்கள், கட்டுமானத்திற்கான அனுமதிப்பத்திரங்களைக் கையாளுதல், மின்வலுவினைப் பெற்றுக்கொள்ளுதல், சொத்துக்களைப் பதிவுசெய்தல், கொடுகடனைப் பெற்றுக்கொள்ளுதல், சிறிய முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல், வரிகளைச் செலுத்துதல், நாடு கடந்த வர்த்தகம், ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல், கடன் தீராற்றலற்ற தன்மையினைத் தீர்த்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருப்பதுடன் இவை, வியாபாரம் செய்யுங்கள் தரமிடலை இலகுபடுத்துவதற்கும் பயன்மிக்கதொன்றாகக் காணப்படுகின்றது.

### 31.5 தகவலைப் பரப்புதல்

சவால்மிக்க நிலைமைகள் காணப்பட்டமைக்கு மத்தியிலும், புள்ளிவிபரத் திணைக்களம் 2021இல் அலுவல்சார் புள்ளிவிபரங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரு முறைகளிலும் தொடர்ந்தும் வெளியிட்டது. வருடாந்த புள்ளிவிபரவியல் வெளியீடுகளான "இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக புள்ளிவிபரவியல் 2021 தொகுதி XLIII" மற்றும் "இலங்கை சமூக பொருளாதார தரவு 2021 - தொகுதி XLIV" என்பன அனைத்து மூன்று மொழிகளிலும் முறையே 2021 யூலையிலும் செத்தெம்பரிலும் வெளியிடப்பட்டன. திணைக்களம் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்தி அறிக்கை என்பனவற்றின் இரண்டு அத்தியாயங்களுக்குப் பங்களித்த வேளையில், மத்திய வங்கியின் மாதாந்த செய்தித்திரட்டிற்கான தரவுகளையும் தொடர்ந்தும் வழங்கியது.

புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கிரமமான வெளியீடுகள், செலாவணி வீதங்கள், பணச் சந்தை வீதங்கள், பங்குச்சந்தை மற்றும் வலுத்துறை புள்ளிவிபரங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய உயர்தாக்கம் மிக்க தரவுகளைக் கொண்ட நாளாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் நாளாந்த விலை அறிக்கை, வாராந்த மற்றும் நாளாந்த பொருளாதார குறிகாட்டிகள், என்பன ஆண்டு முழுவதும் சரியான நேரத்தில் மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டன. மேலும், ஊடக வெளியீடுகளூடாக பொதுமக்களுக்கு பல்வேறுபட்ட மற்றைய தகவல்கள் பரப்பப்பட்ட வேளையில், மத்திய வங்கியின் இணையவழி தரவுத்தளமான "தரவு நூலகம்" இற்றைப்படுத்தப்பட்டு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் தரவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் பேணப்பட்டது.

## 32. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு முறையே 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் (நிதித்தொழில் சட்டம்), 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம் (நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம்) மற்றும் 2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் என்பவற்றினை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்யும் பொறுப்பாணை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் ஏற்பாடுகளின் கீழ் வங்கியல்லாத் துறை முதனிலை வணிகர் கம்பனிகளினையும் மேற்பார்வை செய்கிறது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், தனது தொழிற்பாடுகளாக உரிமம்பெற்ற/பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களையும் (தளத்திலான மேற்பார்வை) தொடர்ச்சியான கண்காணிப்பினையும் (தளத்திற்கு வெளியேயான மேற்பார்வை) நடாத்தும் வேளையில் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளான உரிமங்களை/பதிவுகளை வழங்குதல், முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்குதல், அதிகாரமின்றி நிதித்தொழிலை மேற்கொள்கின்ற கம்பனிகள் பற்றி புலனாய்வை மேற்கொள்ளுதல் என்பனவற்றுடனும் ஈடுபட்டுள்ளது. முக்கிய தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் இத்துறையின் இயலாற்றலை கட்டியெழுப்புதல், நீதிமன்ற வழக்காடல்களுக்கு வசதியளித்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் போன்ற பல நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

2021 இறுதியில், திணைக்களத்தின் அதிகார வரம்பிற்குள் 39 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும், 3 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும், 4 உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும், 7 முதனிலை வணிகர் கம்பனிகளும் காணப்பட்டன. மேலும், 3 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உட்பட 58 பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழ் உரிமங்களை தன்னகத்தே கொண்டு காணப்பட்டன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள் மற்றும் முதனிலை வணிகர்களின் பெயர்கள் இப்பிரிவின் இறுதியில் தரப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டுப் பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய தொழிற்பாடுகளினதும் நடவடிக்கைகளினதும் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

### 32.1 கொள்கை வழிமுறைகள்

இந்த ஆண்டில் தற்போதைய சந்தை மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கேற்ப வங்கியல்லா நிதி நிறுவனங்களின் தற்போதைய ஒழுங்குமுறை கட்டமைப்பை சீரமைக்க பல்வேறு முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் வங்கியல்லா நிதிநிறுவனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து விடுக்கப்பட்டன. கொவிட்-19 பரவலைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட அசாதாரண நடவடிக்கைகள் உட்பட உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக்கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளுக்கு 2021இல் விடுக்கப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன. முக்கிய முன்மதியுடைய வழிமுறைகளின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

(அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் அசையாச் சொத்துக்களை மதிப்பீடுசெய்தல் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கு திருத்தமொன்று விடுக்கப்பட்டது.

(இ) பயணிகள் போக்குவரத்துப் பணிகளில் ஈடுபடுகின்ற கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கு சலுகைகளை வழங்குமாறு கோரி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(ஈ) 2020 செத்தெம்பர் 30 அன்று விடுக்கப்பட்ட 2020ஆம் ஆண்டின் 09ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழ் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்பட்ட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தை நீடிக்குமாறு கோரி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(உ) கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீதான 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கப் பணிப்புரையின் நடைமுறைப்படுத்தலை பிற்போடுதல் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

(ஊ) 2020 செத்தெம்பர் 30 அன்று விடுக்கப்பட்ட திரவச் சொத்துக்கள் மீதான பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட தளர்த்தல் 2021 யூன் 30 வரை மூன்று மாத காலபகுதிக்கு மேலும் நீடிக்கப்பட்டது.

(எ) வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு பணிப்புரையொன்று விடுக்கப்பட்டது.

(ஏ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மூலம் முன்னர் விடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகள் மீதான பணிப்புரைகளுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு நாணய கடன்பெறுகைகளுக்கு வசதியளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளதென உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

(ஐ) கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான சலுகைகள் மீது சுற்றறிக்கையொன்று விடுக்கப்பட்டது.

(ஒ) உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் கொடுகடன் வசதிகள் மீதான உந்து ஊர்திகளை பறிமுதல்செய்தல் மற்றும் மீள்உடமையாக்கம் செய்தல் கட்டளைகளை நிறுத்துமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டன.

(ஓ) 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித் தொழில் சட்டப் (கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்) பணிப்புரையின் நடைமுறைக்குவரும் திகதி மேலும் பிற்போடப்பட்டது.

(ஔ) குறைந்தபட்ச தேவைப்பாடு மீதான பணிப்புரையொன்று முதனிலை வணிகர் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(க) கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான சலுகைகளை மேலும் நீடிக்குமாறு கோருகின்ற 2021 யூன் 09ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கான திருத்தமொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ங) கொடுகடன் தரமிடல் முகவராண்மையொன்றாக லங்கா தரமிடல் ஏஜென்சி லிமிடெட் நிறுவனம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்ற சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ச) கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்காக 2022 மாச்சு 31 வரை சலுகைகளை நீடிப்பதற்கும் அறவிடல் நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கும் கோருகின்ற சுற்றறிக்கையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ஞ) அதிக தொழிலாளர் பணவனுப்பல்களை ஊக்குவிக்கின்ற குறிக்கோளொன்றுடன் உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீது மேலதிக ஊக்கத்தொகையினை செலுத்துவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கோரப்பட்டன.

(ட) தற்போது நிலவுகின்ற 2,3 மற்றும் 5 கால வைப்புக்களின் வட்டி எல்லைகள், அதிகரிக்கின்ற திறைசேரி உண்டியல் வீதங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் திருத்தப்பட்டன.

(ண) நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் கீழ் அரச பிணையங்களிலுள்ள முதலீடுகள் உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளின் திரவச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டது.

(த) முக்கிய பொறுப்புடைய ஆட்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியுடைமையை மதிப்பிடுதல் மீதான பணிப்புரையொன்று உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ந) நிறுவன ஆளுகை மீதான பணிப்புரையொன்று உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது.

(ப) மூத்த பிரசைகளுக்கான முதலீடுகள் மீது அதிகரித்த வருவாய்களை வழங்கும் நோக்குடன் 5 வருட கால வைப்புக்கள் மற்றும் 5 வருட படுகடன் சாதனங்களின் தற்போது நிலவுகின்ற வட்டி எல்லை திருத்தப்பட்டது.

**32.2 உரிமம்பெற்ற நிறுவனங்களின் மேற்பார்வை**

**(அ) நியதிச்சட்ட (தளத்திலான) பரீட்சிப்புக்களை நடத்துதல்**

(i) 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் 18 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் 3 முதனிலை வணிகர் கம்பனிகள் தொடர்பில் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை நடத்தியது. சொத்துக்களின் தரத்தில் சீர்குலைவு, உயர்ந்தளவில் திரட்சிப்படுத்தப்பட்ட கடன் சொத்துப்பட்டியல் இடர்நேர்வு, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கள் உட்பட ஆளுகைக் கட்டமைப்பு பலவீனம், இடர்நேர்வு முகாமைத்துவக் குறைபாடுகள், உள்ளக கணக்காய்வு மற்றும் இணங்குவித்தல் தொழிற்பாடுகள், ஒழுங்குமுறைபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்காமை, நிதியியல் இடையீட்டிலுள்ள குறைவான தொழிற்பாட்டு வினைத்திறன் போன்றவற்றை பரீட்சிப்புக்களில் முக்கியமாக கண்டறியப்பட்டவை உள்ளடக்கியிருந்தன.

(ii) 15 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/முதனிலை வணிகர் கம்பனிகளின் பரீட்சிப்புக்களின் போது அடையாளங்காணப்பட்ட மேற்பார்வை கரிசனைகளை சீர்திருத்துவதற்கான விதந்தரைப்புக்கள் உள்ளடங்கலாக கால வரையறை செய்யப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களுக்கு நாணயச் சபை ஒப்புதலளித்ததுடன் இவை பணிப்பாளர் சபையின் கவனத்திற்காக தொடர்பான கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டன.

(iii) மேலும், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மூன்றாம் தரப்பினர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் ஒழுங்கீனங்களை விசாரணைசெய்வதற்கும் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட விசேட பணிப்புரைகளின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தினை மீளாய்வதற்கும் 3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் அதே இடத்திலான பரீட்சிப்புக்களை நடாத்தியது.

**(ஆ) தொடர்ச்சியான (தளத்திற்கு வெளியேயான) கண்காணிப்பை நடத்துதல்**

(i) அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளும் முதனிலை வணிகர் கம்பனிகளும் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட பின்-நெற் முறைமையினூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்/முதனிலை வணிகர் கம்பனிகள் மூலம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட காலாந்தர நிதியியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் உட்பட ஏனைய நிதியியல் தகவல்களையும் இத்திணைக்களம் மீளாய்வுசெய்தது. இம்மீளாய்வுகள் மூலதனம், திரவத்தன்மை ஒதுக்கங்கள் ஆகிய துறைகள் மீதான முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் மற்றும் உள்ளகத் தரமிடல் முறைமை என்பவற்றினூடாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளின் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் கண்டதுடன் தேவைப்படும் போது அத்தியாவசியமான விதந்துரைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) மேலும், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் தொடர்ந்தும் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றன. அதேபோன்று கணக்காய்வாளர் அறிக்கைகள், முகாமைத்துவக் கடிதங்கள், வெளிவாரித் தரமிடல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் உட்பட ஏனைய நிதியியல் தகவல்களும் திணைக்களத்தின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

(iii) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது மதிப்பீடுகள் மற்றும் கண்டறியப்பட்டவற்றின் தீவிரத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் தெளிவாக குறித்துரைக்கப்பட்ட காலவரையறையொன்றினுள் துறையின் மேற்பார்வை கரிசனைகளை சீர்செய்வதற்கு உடனடியாக சீராக்கும் நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், துறையில் காணப்படுகின்ற மூத்த முகாமைத்துவத்திற்கு சமீபத்திய அறிவித்தல்களை அறிந்திருக்கும் நோக்கில், துறையின் செயலாற்றம் காலாண்டு அடிப்படையில் நாணயச் சபைக்கு அறிக்கையிடப்பட்டது.

(iv) வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், படுகடன் சாதனங்களை வழங்குதல், பங்குமூலதனத்தினை அதிகரித்தல், புதிய முதலீட்டாளர்களின் மூலதன உள்ளீடுகள், அமைப்பு அகவிதிகளைத் திருத்துதல், துணைக் கம்பனிகளை உருவாக்குதல், வெளியாளரிடமிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல், புதிய பணிப்பாளர்களையும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை செயலாற்றுகின்ற அலுவலர்களையும் நியமித்தல், சொத்துரிமை மாற்றல்கள் என்பன தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது.

(v) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் துறையிலுள்ள பலவீனத்தையும் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையையும் தீர்க்கும் பொருட்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையை ஒன்றிணைப்பதற்கான முதன்மைத் திட்டம் 2020இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2021ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட 13 உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் உரிய விழிப்புக்கவனம், தகவல் விஞ்ஞாபனம் மற்றும் மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆர்வமுள்ள தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அதேபோல பேச்சுவார்த்தைகளுக்கு தேவையான ஏற்பாடுகளை வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வை திணைக்களம் ஏற்பாடு செய்தது. மேலும் 2021ஆம் ஆண்டில் முதன்மைத் திட்டத்தின் கீழ் நாணயச் சபையிடமிருந்து 6 பரிவர்த்தனைகளுக்கு பூர்வாங்க அனுமதிகள் பெறப்பட்டன.

(vi) மேலும், 2021ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சியுடன் ஒன்றிணைக்கப்பட்டது. எனவே, ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சிக்கு வழங்கப்பட்ட நிதித்தொழில் மற்றும் நிதியியல் குத்தகைக்குவிடும் உரிமம் இரத்துச்செய்யப்பட்டது.

(vii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பிலும் பெரும்பாலும், கொள்கைசார்ந்த கருமங்கள் தொடர்பில், உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் தொழிற்பாடுகள் தொடர்பிலும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளுக்குத் தீர்வுகாண வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மத்தியஸ்தம் வகித்தது.

**(இ) தீர்மான நடவடிக்கைகள்**

2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் முக்கிய கவனம், கடந்த பல ஆண்டுகளாக நீண்டகால திரவத்தன்மை நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துவருகின்ற கடன் தீராற்றலற்ற தன்மையின் காரணமாக உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட கம்பனிகள் மீது துரிதமாக ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை மேலும் நடைமுறைப்படுத்துவதன் மீது இருந்தது. அதற்கமைய, இது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(i) த பினான்ஸ் கம்பனி பிஎல்சியை முடிவுறுத்தும் விண்ணப்பங்கள் 2021.02.16 அன்று கொழும்பு வர்த்தக மேல் நீதி மன்றத்தில் கோவைப்படுத்தப்பட்டது.

(ii) சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட இடைநிறுத்தக் கட்டளையானது மீதமுள்ள வைப்புக்களின் 50 சதவீதத்தை மீளச்செலுத்துவதை வசதியளிப்பதற்கு 2021.01.13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மூன்று மாத காலப்பகுதிக்கு அகற்றப்பட்டது. மீதமுள்ள வைப்புக்களின் 50 சதவீதத்தை மீளச்செலுத்துதல் நிறைவடைந்தமையினைத் தொடர்ந்து, சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி வியாபாரம் 2021.04.12 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மீண்டும் இடைநிறுத்தப்பட்டது. அதன்பின்னர், கம்பனியை முதன்மைத் திட்டத்திற்குள் ஈர்த்துக்கொள்கின்ற சாத்தியப்பாட்டை கண்டறிவதற்கு சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சி வியாபாரம் 2021.10.13 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட ஆறு மாத காலப்பகுதிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. முதன்மைத் திட்டத்தின் கீழ் சுவர்ணமஹால் பினான்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் 3 முதலீட்டு சொத்துக்களை எஸ் எம் பி லீசிங் பீஎல்சிக்கு விற்க 2021.12.08 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூறப்பட்ட பரிவர்த்தனைகள் முடிந்தவுடன், மீதமுள்ள வைப்புத் தொகையை சுவர்ணமஹால் பினான்சியல் பிஎல்சி முழுமையாக திரும்பிச்செலுத்தும் நிலையில் இருக்கும்.

(iii) 2021ஆம் ஆண்டின் காலப்பகுதியில், பேப்பச்சுவல் ரெசரீஸ் லிமிடெட் வியாபாரத்தின் இடைநிறுத்தம், 2021.01.05 மற்றும் 2021.07.05 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இரு தடவைகள் நீடிக்கப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் மூலம் நடாத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளைத் தொடரும் பொருட்டு 2022.01.05 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மேலும் ஆறுமாத காலபகுதிக்கு தொடர்ந்தும் அமுலில் காணப்பட்டது.

(iv) முதன்மைத் திட்டத்திற்கமைவான பல்வேறு ஒன்றிணைக்கும் முன்மொழிவுகள் மூலதன தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டன.

(v) உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட/இடைநிறுத்தப்பட்ட கம்பனிகளில் தற்போது நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மூத்த முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவக் குழுக்களுடன் கூட்டங்களும் நடைபெற்றன.

**(ஈ) பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் இயலளவு விருத்தி**

**(i) பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்**

முன்மதியுடைய மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்காமையினைச் சுட்டிக்காட்டியும் அவ்வாறு ஏதும் காணப்படின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளுக்கு உட்படும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் பெயர்கள் இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டன. மேலும், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் முன்னெடுப்புக்களை வெளிப்படுத்துவதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் ஊடக அறிவித்தல்களை வெளியிட்டது.

**(ii) இயலளவு விருத்தி**

திணைக்களத்தின் மூத்த அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளின் ஆய்வுநிலையத்தில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் உட்பட பயிற்சி அமர்வுகளில் வளவாளர்களாகத் தொடர்ந்து பணியாற்றினர்.

**(iii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் மற்றும் வேறு ஆர்வலர்களுடனான கூட்டங்கள்**

பொருளாதாரம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்திகள் தொடர்பான விடயங்களில் இலங்கை மத்திய வங்கிக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குமிடையில் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் குறிக்கோளுடன் ஆளுநர் தலைமையில் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின்/ சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடன் மூன்று கூட்டங்களை நடத்தியது. மேலும், தனிப்பட்ட உரிமம்பெற்ற நிறுவனங்கள்/ஒட்டுமொத்தமாக துறை தொடர்பிலான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கும் சீராக்க நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், நிதி நிறுவனங்களின் அமைப்பு, குத்தகைக்குவிடும் அமைப்புக்கள் வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் மற்றும் பன்னாட்டு முகவர்கள் போன்ற நிறுவனங்களுடன் தொடர்ந்தும் கூட்டங்களை நடத்தியது.

**(iv) பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்**

தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் மற்றும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் போன்ற ஏனைய திணைக்களங்களின் கோரிக்கையின் பேரிலும் வேண்டப்பட்ட போதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் அத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு உதவிகளை வழங்கியது. பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் ஊடக அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

### 32.3 அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் தொடர்பான புலனாய்வு

அதிகாரமளிக்கப்படாது வைப்பு ஏற்றல் மற்றும் நிதித்தொழில்கள் மீதான புலனாய்வுத் தொழிற்பாட்டை 2020 யூலையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு குறித்தொதுக்கிய பின்னர், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டு 2021ஆம் ஆண்டின் இறுதியில் திணைக்களம் 97 புலானாய்வுகளைத் தொடங்கியது. ஆளுநரினூடாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையில் அடிப்படையில் அதிகாரமளிக்கப்படாது வைப்பை ஏற்றல் மற்றும் நிதித்தொழில்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு உதவுவதற்காக இலங்கைப் பொலிஸின் நிதியியல் மற்றும் வர்த்தகக் குற்றப் புலனாய்வுகள் பிரிவில் விசேட பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் உள்ள புலனாய்வுகளுக்குட்பட்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மூன்று தடைக் கட்டளைகளை தரப்பினர்களுக்கு வழங்கியதுடன் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினுடைய கோரிக்கைகளுக்கு அமைவாக, உயர் நீதி மன்றத்தினால் இத்தடைக் கட்டளைகள் உறுதிபடுத்தப்பட்டு நீடிக்கப்பட்டன. மேலும், பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், 2020இல் வழங்கப்பட்ட தடைக் கட்டளைகள் மீது உயர் நீதிமன்றத்திடமிருந்து நீடிப்புக்களைப் பெற்றது. புலனாய்வுகளுக்குட்பட்டு மூன்று நிறுவனங்களின் தொடர்புடைய தரப்பினர்கள் வெளிநாடுகளுக்கு பயணிப்பதை தடுப்பதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் நீதிமன்ற கட்டளைகளைப் பெற்றுக்கொண்டது.

**இணைப்பு II - 4**

**அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் (2021 இறுதியிலுள்ளவாறு)**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி (அ) | 22. | மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 2. | அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 23. | மல்ரி பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 3. | ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 24. | நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 4. | ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி | 25. | ஓறியன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 5. | அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி(அ)(ஆ) | 26. | பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 6. | பிம்புத் பினான்ஸ் பிஎல்சி(அ) | 27. | பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி |
| 7. | சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 28. | பிறைம் பினான்ஸ் பிஎல்சி (அ) |
| 8. | சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி | 29. | றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் |
| 9. | கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 30. | சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்(ஊ) |
| 10. | கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 31. | செங்கடகல பினான்ஸ் பிஎல்சி |
| 11. | டயலொக் பினான்ஸ் பிஎல்சி | 32. | சிபீசி பினான்ஸ் லிமிடெட் |
| 12. | ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்(இ) | 33. | சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி(அ) |
| 13. | பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட் | 34. | சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி |
| 14. | எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி | 35. | சியப்பதா பினான்ஸ் பிஎல்சி |
| 15. | ஐடியல் பினான்ஸ் லிமிடெட்(ஈ) | 36. | சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி |
| 16. | கன்றிச் பினான்ஸ் லிமிடெட்(அ) | 37. | சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி(அ) |
| 17. | லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்(உ) | 38. | யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட் |
| 18. | எல்பீ பினான்ஸ் பிஎல்சி | 39. | வெலிபல் பினான்ஸ் பிஎல்சி |
| 19. | எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி | | |
| 20. | எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி | | |
| 21. | மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | | |

**பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | (ஆ) | **உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்** |
| 1. | அமானா வங்கி பிஎல்சி | 1. | இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி |
| 2. | இலங்கை வங்கி | 2. | பிரதேசிய சங்வர்தன பாங்க் |
| 3. | கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 3. | சணச டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி |
| 4. | டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி | 4. | சிறிலங்கா சேர்விங்ஸ் பாங்க் லிமிடெட் |
| 5. | அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி | | |
| 6. | எம்சிபி பாங்க் லிமிடெட் | | |

7. நசனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
8. நேசன்ஸ் ட்ரஸ்ட் பாங்க் பிஎல்சி
9. பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. செலான் பாங்க் பிஎல்சி
12. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி

**(இ) சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

1. அசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
2. கோபரேடிவ் லீசிங் கம்பனி லிமிடெட்
3. எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி

**(ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்**

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி(அ)
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
5. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி(அ)(ஆ)
6. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி(அ)
7. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
8. சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
9. கொமர்சல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
10. கொமர்சல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. டயலொக் பினான்ஸ் பிஎல்சி
12. ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் (இ)
13. பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்
14. எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி
15. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்(ஈ)
16. கன்றிச் பினான்ஸ் லிமிடெட் (அ) (எ)
17. லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்(உ)
18. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
19. எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி
20. எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
21. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
22. மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி
23. மல்ரி பினான்ஸ் பிஎல்சி(அ)
24. நேசன் லங்கா பினான்ஸ் பிஎல்சி(அ)
25. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
26. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
27. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
28. பிறைம் பினான்ஸ் பிஎல்சி(அ)
29. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்
30. சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்(ஊ)
31. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
32. சிபீசி பினான்ஸ் லிமிடெட்
33. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி (அ)(எ)
34. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
35. சியப்பதா பினான்ஸ் பிஎல்சி
36. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி
37. சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி(அ)
38. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
39. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

**உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்**

1. பெரண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மன்ட் கம்பனி லிமிடெட்
2. லக் ஜெயா மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
3. தும்பர மைக்ரோ கிரடிட் லிமிடெட்
4. செஜய மைக்ரோ கிரடிட் லிமிடெட்

**முதனிலை வணிகர் கம்பனிகள்**

1. அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட்
2. கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட்
3. என்ட்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி(ஏ)
4. பர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி
5. என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட்
6. பேப்பச்சுவல் ரெசரீஸ் லிமிடெட்(ஐ)
7. வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்

(அ) 2021.12.31இல் உள்ளவாறு குறைந்தபட்ச மூலதனப் போதுமை தேவைப்படுத்தலுடன் அல்லது 2022.01.01இல் உள்ளவாறு குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாட்டுடன் இணங்காமை. அக்கம்பனிகள் தரப்பட்ட கால வரையறையொன்றினுள் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலதன மறுசீரமைப்புத் திட்டம் அல்லது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட முதன்மைத் திட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுக வேண்டும்.

(ஆ) ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி 2021.04.01ஆம் திகதி நடைமுறைக்குவரும் வகையில் அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சியுடன் இணைக்கப்பட்டது.

(இ) நாணயச் சபை மூலம் 2020.07.13 அன்று வியாபாரத் தொழிற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன. 2021.01.01 அன்று, முடிவுறுத்துவதற்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில் விண்ணப்பமொன்றினை மேற்கொள்வதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளருக்கு நாணயச் சபை அறிவுறுத்தியது.

(ஈ) ஐடியல் பினான்ஸ் லிமிடெட் நிறுவனம் 2022.01.28 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மகேந்திரா ஐடியல் பினான்ஸ் லிமிடெட் என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(உ) முதன்மைத் திட்டத்தின் கீழ் பட்டியல் தேவையின் காரணமாக லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட் நிறுவனம் 2022.01.22 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ஊ) முதன்மைத் திட்டத்தின் கீழ் பட்டியல் தேவையின் காரணமாக சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட் நிறுவனம் 2022.01.06 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் பிஎல்சி என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(எ) புதிய குத்தகைக்குவிடும் வியாபாரத்தினை நடாத்துவதன் மீது நாணயச் சபையினால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

(ஏ) அரச பிணையங்களின் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பது 2017.07.24 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் தவிர்க்கப்பட்டது.

(ஐ) 2017.07.06ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் முதனிலை வணிகர் வியாபாரம் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வது இடைநிறுத்தப்பட்டதுடன் நடப்பு இடைநிறுத்தம் 2022.07.05 வரை செயற்பாட்டிலிருக்கும்.